உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# தத்துவஞானாநுபவ விளக்கம்

## சிவாநந்தசாரம்

## பரசிவதோத்திரம்

## பூரணமணிமாலைக் கண்ணி

இவை

திரிசிரபுரம் ஸ்ரீமத் பரப்பிரஹ்ம அம்பலவாண சுவாமிகள்
மாணாக்கரிலொருவராகிய
சிவயோகி
ஸ்ரீலஸ்ரீ மீனாக்ஷிசுந்தரசுவாமிகளாலியற்றப்பட்டு

ஷை குருபரம்பரை ஆதீனத்திலொருவரும், ஸ்ரீமத்
தாயுமான சுவாமிகளின் மடாலயத் தொண்டு
செய்பவருமாகிய அறந்தாங்கிமாநகரம்
ஸ்ரீ விசேஷ சுவாமிகளால் பார்வையிடப்பட்டு

சென்னை
கோமளேசுவரன்பேட்டை
சச்சிதாநந்த அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டன.

1916

விலை] Copy-right [அணா பன்னிரண்டு.

8/2-16
...THE REGISTRA...

209
181.48

R
N16

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட
மாதம் 1983 வருடம்
செப்பனிட்டு முடித்த
மாதம் 1983 வருடம்
ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்

MADRAS

## சாற்றுக்கவிகள்.

திரிசிரபுரம் ஸ்ரீமத் பரப்பிரஹ்ம அம்பலவாணசுவாமிகளின்
ஆதீனத்திற்குரியவரும் ஸ்ரீ தாயுமான சுவாமிகளின்
மடாலயத் தொண்டு செய்பவருமாகிய
அறந்தாங்கிமாநகரம் சிவயோகி
ஸ்ரீ விசேஷ சுவாமிகள் இயற்றிய
(நேரிசை யாசிரியப்பா)

சீர்வளர் பரசிவம் சின்மயப் பூரணம்
ஏர்வளர் மோனத் திலங்குறு தற்பரம்
பதிபசு விதியெனப் படுபொரு ளெவற்றினும்
நிதியுறத் தானுய் நிறைந்தொளிர் சித்து
தானே தானுய்த் தனித்திடு மொருமுதல்
நானுபேத நாடகம் நடித்துத்
தோன்றிய பல்லுயிர்த் தொகுதியா மாந்தரை
ஊன்றிய பவந்தீய்த் தொளிதரு பராபரம்
ஒருவரு மறியா வொருமுதற் கடவுள்
அருவுருவற்ற வருட்பெருஞ் சுயம்பு
இத்தகை யிலங்குறு மெழில்சிவ முகத்தில்
நத்தியே தோன்றிய நானு விதமதில்
திருவளர் பதியாம் திரிசிரபுரத்தில்
அருணிறை சுத்த சைதன்ய மான
அம்பல வாணப்பெ ரருட்குரு பதத்தைத்
தம்முடி யதனிற் தாங்கிமெய் யறிவால்
முற்றுணர் மீனுக்ஷி சுந்தர னெனப்பேர்
பெற்றமெய்ஞ் ஞான பேரின் புடையோன்
தன்னனு பவத்திற் றரும்அருட் பொருளை
நன்மையா யுலகோர் நயம்பெறும் பொருட்டு
ஆன்றோர் சொல்பழஞ் சுருதிகோட் பாட்டைச்
சான்று யமைத்துத் தந்தன னிதனைத்
துன்புறு பவக்கடல் தொலைத்தருள் விளங்க
இன்புறு மறிவுடை யெவர்களு மினிது
கற்றனு பவித்துக் களிதிருச்
சிற்றம் பலத்திற் சேர்வர்க டாமே.

இதுவுமது

வேறு.

நலந்தருமொண் டத்துவஞா னுனுபவ விளக்கமெனிவ் வரிய நூலைப், பலந்தருமென் றெண்ணினவர் பரசிவத்தோ டுறையவழிப் படுவ ரென்றும், நிலந்தரு திரிசிரபுர மீனாட்சி சுந்தரப்பேர் நிம லன் சொன்னான், புலந்தருமெய் யறிவுடைய பக்குவர்கள் தெளி ந்துமுத்தி பெறுவர் மாதோ.

வேறு.

நிந்தைசெய் மாயாதி யானதீ வினையினால் நேயம்விட் டுழலு மனதிற், பந்தமாய் வருபாச பந்தமு மகன்றிடப் பகர்ந்தநற் சுருதி யிதனைச், சொந்தமா யனுதினமு மனுஷ்டித்த பேருட் சோதி யிற்றோய்ந்துஞான, சிந்தைபெற் றிருவினையின் நிந்தையற் றருள் பெருகி சிவமாகி வாழ்வர்தாமே.

வேறு.

உடுக்கும் புவனங் கடந்துநின்ற வொருவன் றிருவுள் ளத் தினிலே, படுக்கா விளக்கையேற்றிநிற்கப்பருதி கதிர்போற் சிவந் தோன்றத், தொடுக்கும் மேலாம் பழம்பாடற் றொடரை யூன்றிச் சொன்னவிந்நூல், கொடுக்கும் பரமா நந்தசுகம் குணமுற் றிதனை யுணர்வோர்க்கே.

நன்னிலம்-கூத்தநல்லூர்

ஸ்ரீமத் - அ - கோவிந்தசாமிபிள்ளை யவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சத்துறுசி வரநந்த சாரமொடு பரசிவதோத்
திரந்தா வற்ற
புத்தமுத மானபூ ரணமணிமா லைக்கண்ணி
பொதிந்த தெய்வத்
தத்துவஞா னுனுபவ விளக்கமெனுந் தருமொருநூல்
சாற்றி னானல்
ஒத்ததிரி சிரபுரமீ னாட்சிசுந்த ரப்பெரியோ
னுவந்து மாதோ.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

ஸ்ரீ அகண்ட பரிபூரண சச்சிதாநந்தமாய் விளங்கா நின்ற பராபரப் பிரஹ்மத்தினின்றும் ஆகாஸாதி கிரமமாகப் படைக்கப்பட்டு நாமரூப விகாரத்தோடு காணப்படுகின்ற இந்த உலகத்தின்கண் ஆன்மகோடிக ளனைத்தும் உய்யும் பொருட்டுச் சுயம் பிரகாச வடிவினவாகிய நான்கு வேதங்களை ஈசுவரன் வெளிப்படுத்தினர். அவற்றினின்றும் ஆக்மசாஸ்திர புராணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவை கர்மகாண்டம் ஞானகாண்டம் என இரண்டு வகைகளாக வகுக்கப்பட்டுள்ளன. இவை அற்ப சுருதி வாக்கியம் பிரபல சுருதிவாக்கியம் என இரண்டு வகையாயிருக்கும். இவற்றுள் அற்பசுருதி வாக்கியம் கர்மகாண்டத்தையும் பிரபல சுருதிவாக்கியம் ஞானகாண்டத்தையும் சொல்லும். இந்த ஞானகாண்டத்தைச் சொல்லாநின்ற பிரபல சுருதிவாக்கியத்தை மகாவாக்கிய மென்றும் வேதாந்த சித்தாந்தமென்றும் சொல்லப்படும்.

ஆயினும் கர்மகாண்ட விஷய தோஷங்களை யொழித்து நிரதிசயானந்தமாகிய பரமசுகத்தைக் கொடுக்கக்கூடியது ஞானகாண்டமாகிய வேதாந்த சித்தாந்த சாத்திரங்களாம். வேதாந்தமென்பது கைவல்ய நவநீதம், ஞானவாசிஷ்டம் முதலிய சாத்திரங்களாம். சிவஞானபோதம் சிவஞான சித்தியார் முதலியன சித்தாந்த சாத்திரங்களாம்.

நிற்க—ஆத்மலாபத்தை யடையவேண்டிய அதிகாரிகள் இவ்வேதாந்த சித்தாந்த சாஸ்திரங்களனைத்தையும் குரு முன்னிலையில் ஆராய்ந்தறிந்தாலன்றி அவைஅமையா. அங்ஙனம்ஆராய்ந்தறியச் சக்தியில்லாத மந்தவதிகாரி முதலானவர்கள் எளிதி லாத்மலாபத்தை யடையும் பொருட்டுப் பரமார்த்திக நிலையையுடைய வான்றோர்கள் பலவித வுபாயங்களாலே பல சாஸ்திரங்களை விரித்தும் விளக்கியும் ஏற்படுத்தியு மிருக்கிறார்கள். அங்ஙனமிருக்க இவ்வரியஞான சாஸ்திரமும் மப்பெற்றியதே.

இந்நூலாசிரியர் திரிசிரபுரத்தில் சுத்த சைதன்ய சொரூபானந்தமயமா யெழுந்தருளியிருந்த ஸ்ரீமத் பரப்பிரஹ்ம அம்பல

வாணப் பரதேசியென்கிற குரவரின் மாணாக்கரிலொருவராகிய சிவயோகி ஸ்ரீ மீனாட்சிசுந்தர வடியாரென்பவர். இவர் மேற்படி குரவரிடத்து ஞானசாதகத்தைப் பெற்று அநேக வேதாந்த சித்தாந்த சாஸ்திரங்களை யக்குரவரிடத்திற்றானே யாராய்ந்தறிந்து இளமையிற் றுறவுபூண்டு சொரூபானந்த சமாதியுடையவராயுலாவுகையில் மேற்படி ஸ்ரீமத் பரப்பிரஹ்ம அம்பலவாண பரதேசிகளின் ஆதீனத்தவரும் இந்நூலாசிரியர் மாணாக்கரி லொருவரும், வேதாந்தப் பலதிரட்டு, நன்மஹாராஜன், சந்யாஸ முதலிய வரியபெரிய சாஸ்திரங்களை யியற்றியுள்ளவரும் அறந்தாங்கி மாநகரவாசியருமாகிய மு. சேஷாசலம் பிள்ளையென்னு மியற்பெயரையுடைய சிவயோகி விசேஷ சுவாமிகளாலும், சென்னை மதுராந்தகம் பெரும்பேறு லோகநாத முதலியாரவர்கள் குமாரர் திருவேங்கட முதலியாரவர்களாலும், திருவாவின் குடியென்ற பழனிஸ்தலம் வேங்கட ராஜு அவர்கள் குமாரர் ரங்கசாமி ராஜு அவர்களாலும் இன்னுமநேக வடியார்களாலும் மேற்படி சுவாமிகளைக் கேட்டுக்கொண்டவாறு ஐதிரயோபநிடதம், தைத்திரயோபநிடதம், சாந்தோக்யோபநிடதம், கடோபநிடத முதலிய வுபநிடதங்களினின்றும் கைவல்யம், சிவதருமோத்திரம், சிவஞானசித்தியார், சிவானந்தமாலை, சிவநெறிப் பிரகாசம், சிவஞானபோதம், பகவற்கீதை, பிரமகீதை, பிரபுலிங்கலீலை, ஞானவாசிட்டம், ஒழிவிலொடுக்கம், மெய்ஞ்ஞான விளக்கம், குறுந்திரட்டு, பெருந்திரட்டு, தாயுமானவர், பட்டினத்தார், சிவவாக்கியர், குணங்குடியார், அவிரோதவுந்தியார், வைராக்கிய சதகம், வைராக்கியதீபம், எம்பிரான் சதகம், நெஞ்சறி விளக்கம், உடலறிவிளக்கம், பரமானந்த தீபம், மகாராஜா துறவு, திருமந்திரம், திருவாசகம், திருவம்மானை, தேவார முதலிய இன்னுமநேக வேதாந்த சித்தாந்த சாத்திரங்களின் பிரமாணங்களைக் கொண்டும், எளிய நடையில் இச்சுருதியை வரைந்தும், சிவானந்தசாரம், பரசிவதோத்திரம், பூரணமணி மாலைக்கண்ணி இவைகளைச் செய்யுளாகப்பாடியும் இது பரியந்தம் ஒருவரும் இயற்றியிராத சுத்த அத்துவித வேதாந்த தத்துவநிலை என்னும் படமும் நூதனமாயியற்றியும் பக்குவர்கள் உணர்ந்துய்யும் பொருட்டு அருளிச்செய்தனர். இவை வேதாந்த சித்தவிருத்தியை யுடையவர்களுக்கு இன்றியமையாத பதத்தைத் தருமென்பதற் கையமில்லை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தத்துவ ஞானானுபோக விளக்கம்.

---

## விநாயக ஸ்தோத்திரம்.

கிம்ப நிழற்பா—லும்பன் முகத்தார்
செம்பது மத்தா—ணம்பு கருத்தே.

## நேரிசை வெண்பா.

தத்துவஞா னானுபவ சத்தாம் பரநெறியைச்
சுத்தமுறும் வாசகத்தாற் சொல்வதற்கே—முத்திதருஞ்
சிற்பரனே யைங்கரனே செஞ்சடையோன் சேகரனே
தற்பரனே நின்றாள் சரண்.

## அடியார் வணக்கம்.

### எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

திருவருண் ஞானச் செல்வர்க டமக்குஞ்
சிற்சுக யோகிக டமக்கும்
மருவிய ரசசு தமசுக ளகன்ற
மாதவ நிலையுடை யவர்க்கும்
இருவினைச் சார்பை யொழித்தவர் தமக்கு
மிகபரத் திச்சையற் றவர்க்கும்
அறிவிலேந் தாழ்ந்தே யவர்களின் றாய
வடிமல ரனுதினந் தொழுவாம்.

சமதம விருத்தி யுடையவர் தமக்குஞ்
சங்கற்ப விகற்பமற் றவர்க்கும்
விமலனல் லடியைப் பிடித்தவர் தமக்கும்
விருப்பொடு வெறுப்பைவென் றவர்க்கும்

அமர்செயும் பந்த மனைதுறந் தவர்க்கு
மரனடி தினநினைப் பவர்க்கும்
அமைதியாய்ச் சிறியே மவர்களின் றூய
வடிமல ரனுதினந் தொழுவாம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தத்துவத்தி னிலையுணர்ந்த பெரியோர்க டிருவடியைத் தலைமேற் கொண்டோர், அத்தனது திருவருளாற் பிறவியிலா தானந்த மாவ ரென்று, முத்திதரு மாகமங்கள் சாத்திரங்கள் வேதங்கள் முழக்க லாலே, பத்தியுடன் நாமுமவர் திருவடியை யெப்பொழுதும் பணிதல் செய்வாம்.

நேரிசை வெண்பா.

பொங்குஞ் சிவஞான பூரண முத்தர்தம்
சிங்காரப் பாதஞ் சிரங்கொண்டு—மங்காதிங்
கேற்றிப் புகழ்ந்தன்பா லிந்நூலென் புன்சொல்லால்
சாற்றத் துணிந்தேன் சரண்.

அவை யடக்கம்.

செய்ய மனந்துணிந்தேன் சீர்தத்வ ஞானநூ
லய்யமற வோத வருள்புரியைங்—கையரென்றன்
முன்னிற்பா ரென்று மொழிந்தேன்மெய் கற்றுணர்ந்தோர்
மன்னிப்பா ரென்று மனு.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

கல்வியு மறியேன் கேள்வியு மறியேன்
கற்றுணர் பெரியர்சார் பறியேன்
அல்லல்செய் மாயை யிருவினைப் பிணக்கை
யறுத்தவர் பதந்தொழு தறியேன்
வில்லியல் தத்துவ ஞானனு போக
விளக்கத்தைச் சொற்றன னென்று
புல்லறி வகற்றி வாழ்பவர் பிழையைப்
பொறுத்தரு டந்திடல் கடனே.

குருவணக்கம்.

அத்விதா நந்த சொரூபனு மெங்க
ளம்பல வாணப்பா தேசி

யத்தன தருளைப் பெறும்பெருமாள் தாச
ரவர்திரு வடிமல ரகத்திற்
பத்திசெய் சண்முக சுவாமியிப் புவியிற்
பவாகி தார்ப்பித னாக
முத்திசா தனத்தை யறிவிலேற் களித்த
முனிவனை யகத்தினில் வைப்பாம்.

வேதவா கமங்கள் சாத்திர மெவையும்
விரிதருங் கருத்தினா லுணர்ந்து
மாதவத் துரியோ ரேத்திடு மனாதி
மகத்துவை யகத்தினி விருத்திப்
பூதல மீதில் மானிட வுருவைப்
பூண்டெனை யாண்டமெய்ப் பொருளை
நீதமா யடிமைக் கருள்மிக வளித்த
நிமலனைக் கருத்தினிற் றுதிப்பாம்.

எனையொன்று மறியா விளம்பருவத்தே
யெனையுவந் தாண்டெளி யேற்கே
வினையினா லெடுக்குஞ் சடமிது சித்து
விரிபந்த மிதென்றுநன் குணர்த்தி
மனமக முகமாய்ச் சிரந்தொளிர் சமாதி
மார்க்கத்தின் விருத்திஞா னத்தால்
அனைத்துந்தன் மயமாய் நிறைந்தொளி கொழிக்கு
மமலனைக் கருத்தினிற் றுதிப்பாம்.

சொன்னது கேட்குந் திடமிலேன் றன்னைத்
துரிசுறு மனத்தினேன் றன்னைத்
தன்னது கருணை யென்னும்பே ரருளாற்
றடுத்துக்கை யணைத்தெனை யாண்டோன்
பின்னிய கோச பாசமா மாயைப்
பிணக்கினைத் துறந்தருள் கொழிக்கும்
சின்மயா னந்த ஞானதே சிகனைச்
சிந்தையில் நிலைபெற நினைவாம்.

அல்லல்செய் மாயை யெனுங்கரு விபினா
லழிவுறும் பிரபஞ்சத் தேகித்

தொல்லையாம் பிறவி யிருவினை யலையுட்
சுழலுறும் பாவியேன் றனக்கே
வெல்லுதற் கரிதாஞ் சகலமே வலத்தை
வென்றகத் திருளையு மாற்ற
வல்லதற் பரமாய் நிறைந்தரு ளாசான்
மலர்ப்பதஞ் சிரத்தின்மேல் கொள்வாம்.

### கலிவிருத்தம்.

தாயினு மிரங்கிவந் தென்னை யாண்டருள்
தூயவன் பாதமே சுமக்க வென்றலை
வாய்துதி செயக்கர மலர்க டூய்த்தொழ
நேயமோ டனுதின நினைக் நெஞ்சமே.

சங்கை யறத்தெளி வித்தெனை யாண்டருள்
துங்கவன் பாதமே சுமக்க வென்றலை
மங்கள துதிசெய மலர்க டூய்த்தொழப்
பங்கிலா தனுதினம் பகர்க நெஞ்சமே.

விந்தையா மாயைசெய் விபத்தை நீக்கிய
எந்தையின் பாதமே யேற்க வென்றலை
உந்துவாய் துதிசெய வுவந்து கைதொழத்
சொந்தமோ டனுதினஞ் சேர்க நெஞ்சமே.

சொன்னது கேட்டிடுந் திடமி லேன்றனைத்
தன்னது கருணையால் தடுத்திங் காண்டவன்
புண்ணிய பாதமே பொறுக்க வென்றலை
நன்மையோ டனுதின நவில்க நெஞ்சமே.

தடைகளா மூன்றையுஞ் சார்ந்து கேடுறும்
திடமிலாப் பேதையைச் செவ்வே யாண்டவன்
படணமார் பாதமே பற்ற வென்றலை
தடையிலா தனுதினஞ் சார்க நெஞ்சமே.

ஆர்கலி யுலகிலெ னவித்தை நீக்கியோன்
சீர்பதந் தன்னையே சேர்க வென்றலை
வீர்துதி செயக்கர மென்று மேதொழ
நேர்மையோ டனுதின நினைக நெஞ்சமே.

திரிசிய மாயையாந் திரையைப் போக்கிநல்
வரிசையால் ஞானத்தின் மாட்சி காட்டிய
குரவனுர் பாதமே கொள்க வென்றலே
சரசமோ டனுதினம் சார்க நெஞ்சமே.

கருதுறு முக்குணங் கழன்று நித்யமா
மருவுறு சோதிநீ யென்ற மாதவன்
பொருவிலாப் பாதமே பொறுக்க வென்றலே
பெருமையா யனுதினம் பேச நெஞ்சமே.

இந்தநீ தொம்பதத் திலக்ய மென்றவன்
சந்தத மொளிர்பதஞ் சார்க வென்றலே
உந்துவாய் துதியினை யுவந்து செய்திடச்
சிந்தைபற் றனுதினஞ் சேர்க நெஞ்சமே.

நித்தமா நீயது வதுநீ யாமெனும்
அர்த்தமு மகண்டமென் றன்பிற் காட்டிய
வித்தகன் பாதமே விரும்ப வென்றலே
பத்தியோ டனுதினம் பற்ற நெஞ்சமே.

## பொருள் வணக்கம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆதியு முடிவு நடுவுமாய் நின்ற
வமலனை ஞானகற் பகத்தைச்
சோதியு மாகி யிலங்கிடு மணியைத்
தூயனைச் சிற்பர சிவத்தை
நீதியா யெங்கு நிறைந்ததன் மயத்தை
நிமலனை நின்மல வடிவை
வாதியாஞ் சமய வழியின றியா
வதீதனை வணங்கியே நிற்பாம்.

நித்திய நிர்மல வகண்டா கார
நிர்க்குண நிஷ்கள நிரஞ்சன
தத்துவ ஞா ன வனுபவா னந்த
சத்வார்த்த வமலதற் பரமாய்ச்

சத்தொடு சித்தா யானந்த மயமாய்த்
தானன்றி வேறொன்று மிலதாய்
முத்தியாய் நின்ற மௌனசு யம்புவை
முதல்வனை யிறைஞ்சியே நிற்பாம்.

நித்தன் மலரடி—நெஞ்சி னிறுத்துவோர்
முத்தியைப் பெற்று—முதல்வனு மாவர்,

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

தன்மயமாய் நிறைதத்வ ஞானானு போகவிளக் கந்தான் சான்றாய், மன்முகவா சானியல்பு மற்றையனு சானியல்பும் வகுத்துக் காட்டிப், பின்னியபூ தாதிவரு முறைகாட்டிக் குருவருளும் பெருகக் காட்டி, இன்னலிலாச் சிவபோகங் காட்டியன்பர் சீர் பெறுமா றியம்பு மாதோ.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பரமபதி துணை.

ஆதி யந்த மிலாத வனாதியைத்
தீது றும்பவந் தீப்படு பஞ்சுபோல்
மோது றும்படி முப்பொறி யொத்துறக்
காத லாகக் கருத்திற் கருதுவாம்.

# நூல்.

## முதலாவது அத்தியாயம்.

## இருக்கு வேதத்தைச்சார்ந்த ஐதரேயோபநிடதம்.

### முதற் காண்டம்.

1. நாமரூபங்களாக விகாரப்பட்டுக் காணப்படுகின்ற இந்த உலகம், சிருஷ்டிக்குமுன் ஒரே ஆத்மாவாக விருந்தது; அப்படிப் பட்ட ஒரே ஆத்மாவாகிய அதனையன்றி வேறொன்றுமில்லை. ஆத்மா லோகங்களைச் சிருஷ்டிப்போமென்று ஆலோசித்தது.

2. ஆத்மா இங்ஙனம் ஆலோசித்து இந்த உலகங்களைச் சிருஷ்டித்தது. அவையாவன:—சுவர்க்கலோகமுதல் அதன்மேலுள்ள லோசங்கள் ; ஜலசம்பந்தமான பூமிக்குக் கீழ்ப்பட்ட உலகங்கள். ஆத்மா இந்த உலகங்களை ஜலத்தைப் பிரதானமாகவுடைய பஞ்சபூதங்களைக் கொண்டு சிருஷ்டித்தது;

3. இப்பொழுது என்னால் சிருஷ்டிக்கப்பட்ட உலகக்கள் பரிபாலிக்கப்படாவிடில் நாசமுறும்; ஆதலால் லோகபாலகர்களைச் சிருஷ்டிப்போமென்று மீண்டுமாலோசித்தது ; அங்ஙனம் யோசித்து மேற்கூறிப்போந்த பஞ்சபூதங்களினின்றும் ஒரு புருஷாகாரத்தைத்திரட்டி அதைப் பிண்டமாக வாக்கியது;

4. அப்பிண்டத்தைக் குறித்துச்சங்கற்பம் செய்தது (இது இவ்விதமாக வாகட்டுமென்றுகருதினது). அதினின்றும் முகமுண்டாயிற்று; (பக்ஷியின் அண்டம்போன்ற) அம்முகத்தினின்றும் வாக் இந்திரியம் உண்டாயிற்று; அதினின்றும் அக்கினி தேவதை யுண்டாயிற்று; பிறகு நாசிகள் உண்டாயின; அவற்றினின்றுங் கிராணேந்திரியம் உண்டாயிற்று; அதினின்றும் எங்குமுள்ளவாயு தேவதை யுண்டாயிற்று.

5. பிறகு கண்கள். அவற்றினின்றும் சக்ஷுரிந்திரியம் உண்டாயிற்று; அதினின்றும் ஆதித்த தேவதை யுண்டாயிற்று. பிறகு காதுகள். அவைகளினின்றும் ச்ரோத்திரேந்திரியம் உண்டாயிற்று; அதினின்றும் திக்தேவதை. பிறகுதோல். அதினின்றும் லோமங்களாகிய ஸ்பரிசேந்திரியம் உண்டாயிற்று; அதினின்றும் ஓஷதி முதலியவற்றின் அதிஷ்டான தேவதையாகிய வாயுதேவதையுண்டாயிற்று. பிறகு அந்தக் கரணத்திற்கு அதிஷ்டானமாயிருக்கின்ற(ஹிருதயகமலம்). அதினின்றும் மன இந்திரியம்; அதினின்றும் சந்த்ரதேவதை உண்டாயிற்று. பிறகு (கொப்பூழ்). அதினின்றும் பாயுதேவதை யுண்டாயிற்று. அஃதாவது பாயுவிந்திரியத்தினின்றும் மிருத்யு தேவதையுண்டாயிற்று. (பிறகு சிச்னம்). அதினின்றும் ரேதஸாகிய உபஸ்த இந்திரியம் உண்டாயிற்று; அதினின்றும் அப்பு தேவதை யுண்டாயிற்று (வ்ருணன்). இங்ஙனம் அது லோகபாலகர்களைச் சிருஷ்டித்தது.

முதற் காண்டம் முற்றிற்று.

## இரண்டாவது காண்டம்.

1. இங்ஙனம் சிருஷ்டிக்கப்பட்ட அக்கினி முதலிய தேவதைகள் கொடிதாகிய மகத்தான இந்தச் சம்சார சாகரத்தில் விழுந்தார்கள். (சமுத்திரலக்ஷணம்:—) அஃது அவித்தியாகாமகர்மங்களாலுண்டான துக்கமாகிய ஜலத்தால் நிரம்பப்பட்டுள்ளது; ரோகம் ஜரை மரணம்முதலிய பெரிய முதலைகள் சூழ்ந்தது; (அநாதி); முடிவற்றது; கரையற்றது; பிடிப்பில்லாதது; (விஷயேந்திரியங்களாலுண்டாகும் சுகலேசத்தால் க்ஷணகாலம் ஆறுதலுள்ளது); ஐந்துஇந்திரியம் ஆசை அர்த்தம் என்னும் காற்றினாலசைக்கப்பட்டு அவைகளினின்றும் உண்டான அநேக அனர்த்தங்களாகிய அலைகளையுடையது; மகா ரௌரவாதி பற்பல நரகங்களில் வீழ்ந்து உழல்கின்றவர்களுடையவிசனத்தாலுண்டானரோதனங்களாகிய பெருங்கூச்சலையுடையது; சத்தியம், நேர்வழி, தானம், தயை, அஹிம்சை, சமம், தமம், உபரதி, திதீக்ஷ, சமாதானம், சிரத்தை முதலிய ஆத்மகுணங்களாகிய கட்டமுதினால் நிறைந்த ஞானமாகிய ஓடத்தைக்கொண்டே கடக்கத்தக்கது; ஸத்ஸங்கம் சர்வத்தியாகமாகிய அக்கரை யென்னும் மார்க்கமுள்ளது (மோக்ஷமாகிய அக்கரையையுடையது).

(2) மேற்கூறியபிரகாரம் அது முதலில் சிருஷ்டித்த புருஷ பிண்டத்தைப் பசிதாகங்களுடன் சேர்த்துவைத்தது; அதனால் மேற்படி பிண்டத்தினின்றும் வெளிப்பட்ட தேவதைகளுக்கும் பசிதாகம் உண்டாயின. அப்பொழுது நாங்கள் எவ்விடத்திலிருந்து அன்னஞ்சாப்பிடுவோமோ அவ்விடத்தை எங்களுக்கு ஏற்படுத்தவேண்டுமே யென்று அத்தேவதைகள் பிரமத்தைநோக்கி வினாவினார்கள்.

(3) அதற்கு ஈசுவரன் பசுவின் உருவைப்போல் ஒரு பிண்டத்தைச் சிருஷ்டித்து நீங்கள் இதிலிருங்களென்று காண்பித்தார். தேவதைகள் இஃது எங்களுக்குப் போதியதல்லவென்று சொன்னார்கள்; பிறகவர் ஒருகுதிரையைச் சிருஷ்டித்து அதனைக் காண்பித்தார்; அவர்கள் அதுவும் போதியதல்ல வென்றார்கள்; அதன்பிறகவர் ஒரு புருஷனைச்சுட்டினார்; அவர்கள் இது போதுமென்று ஒப்பினார்கள். அவர் ஆனால், நீங்கள் அதனுள் பிரவேசியுங்களென்று சொன்னார்.

(4) அக்கினி வாக் ரூபமாக முகத்திலும், வாயு கிராண இந்திரியமாக மூக்கிலும், ஆதித்தன் சக்ஷுவிந்திரியமாகக் கண்களிலும், திக்குகள் சுரோத்திரேந்திரியமாகக் காதுகளிலும், ஓஷதி வனஸ்பதிகள் ஸ்பரிசேந்திரியமாகத் தோலிலும், சந்திரன் மனஸாக இருதயத்திலும், மிருத்தியு பாயுவிந்திரியமாகக் குதத்திலும், ஜலம் உபஸ்தேந்திரியமாக உபஸ்தத்திலும் அப்புருஷனுள்ளே பிரவேசித்தார்கள்.

பசிதாகமென்னுமிவ்விரண்டும் எங்களுக்கு இருப்பிடம் ஏற்படுத்தவேண்டுமென்று ஈசவரனைக்கேட்டன; அதற்கவர் நீங்கள் இந்தத் தேவதைகளிடமாயிருங்கள்; அவர்கட்குக் கிடைக்கும் ஆகாரத்தில் உங்களுக்கும் பங்குண்டென்றார். அதனால் அத்தேவதைகளுக்கு ஹவிஸ்கொடுக்கப்படினும் அதில் பசிதாகம் என்னும் இவ்விரண்டிற்கும் பாகமுண்டு; அஃதாவது பசிதாகமிருப்பதால் இந்திரிய தேவதைகளும் அன்னத்தைக் கிரகிக்கிறார்கள். ஜீவனுக்கே போக்திருத்துவமுண்டு; இந்திரிய தேவதைகளுக்கும் பசிதாகங்களுக்கும் போக்திருத்துவம் இல்லையென்று சொல்லப்படினும், அது தோஷமாகாது. உண்மையாகவே பிரம்ம சொரூபமாகிய ஜீவனுக்குப்போக்திருத்துவம் இல்லாவிடினும், இந்திரியதேவதை

கள் பசிதாகம் என்னும் உபாதிகளால் ஜீவனுக்குப் போக்திருத்துவம் சொல்லப்பட்டது.

இரண்டாவது காண்டம் முற்றிற்று.

## மூன்றாவது காண்டம்.

(1) இவ்விதம் நம்மால் சிருஷ்டிக்கப் பட்டிருக்கின்ற உலகங்களுக்கும் உலகபாலகர்களுக்கும் பசிதாகத்தை யேற்படுத்தியிருப்பதால், அவர்கட்கு அன்னத்தைச் சிருஷ்டிப்போமென்று ஈசுவரன் பரியாலோசித்தார்; ஜலத்தை விளித்துச் சங்கற்பம் செய்தார். அதினின்றும் ஒருருவம் உண்டாயிற்று; அது கனரூபமாயும் கரங்களால் எடுக்கத்தக்கதாயும் சராசர லக்ஷண மமைந்ததாயுமிருந்தது. அன்னம் – ஆகாரத்திற்குத்தக்க வஸ்துக்கள் (சரம்—அசைவது; அசரம்—அசையாதது).

(2) இங்ஙனம் சிருஷ்டிக்கப்பட்ட அன்னம் பின்பற்றியோடத் தொடங்கியது; அஃதாவது தேவதைகளால் உண்ணப்படாமலிருந்தது. அப்பொழுது ஆதியில் சிருஷ்டிக்கப்பட்ட மேற்கண்ட புருஷன் பேசுவதால் அன்னத்தைக்கிரகிக்க உத்தேசித்தான்; அது பயன்படவில்லை; அங்ஙனமாயின், ஒருவன் அன்னத்தைப் பற்றிப் பேசுவதினால் திருப்தியடைவான். அஃது அஸம்பாவிதமாம்.

(3) பிறகவன் கிராண இந்திரியத்தால் அன்னத்தைக்கிரகிக்க இச்சித்தான்; அதுவும் பயன்படவில்லை; அவ்விதமானால், ஒருவன் முகர்வதினாலேயே திருப்திமை யடைவான். அதுவும் அசம்பாவிதமாம்.

(4) பிறகவன் சக்ஷுரிந்திரியத்தால் அன்னத்தைக் கிரகிக்க விரும்பினான்; அதுவும் பயன்படவில்லை; அவ்விதமானால், ஒருவன் பார்ப்பதினாலேயே திருப்தியடைவான். அதுவும்அசம்பாவிதமாம்

(5) அப்பாலவன் சுரோத்திரேந்திரியத்தால் கேட்பதினாலும்

(6) ஸ்பரிஸேந்திரியத்தால் தொடுவதினாலும்

(7) மனத்தாலும் (நினைப்பதினாலும்)

(8) சிஸ்னத்தாலும் (விசர்ஜனத்தினாலும்)

(9). அன்னத்தைக்கிரகிக்க இச்சித்தான்; அவற்றாலும் அன்னத்தைக் கிரகிக்க முடியவில்லை.

(10) பிறகு அவன் அபானவாயுவினல் அன்னத்தைக்கிரகிக்க இச்சித்தான்; அதனல் அதனைக்கிரகித்தல் முடிந்தது. இந்தவாயுவே அன்னத்தைக் கிரகிக்கத்தகுந்தது. இந்தவாயு அன்னத்தைக் கொண்டு ஜீவித்திருக்கின்றதென்பது பிரசித்தம்.

(11) வாக்கால் பேசப்படினும், கிராணத்தால் முகரப்படினும், கண்களால் காணப்படினும், சுரோத்திரத்தால் கேட்கப்படினும், துவக்கால் தொடப்படினும், மனத்தால் தியானிக்கப்படினும், அபானத்தால் கிரகிக்கப்படினும், சிஸ்னத்தால் விசர்ஜனஞ் செய்யப்படினும் இந்தக்காரியகாரணக் கூட்டங்களானவை என்னையன்றி எவ்விதம் நிலைபெற்றிருக்கும்; நான் எவ்வித ஸ்வரூபனுக விருக்கிறேன் (அஃதாவது இவற்றை நான் ஏவாவிடில் இவை தத்தம் தொழில்களை எவ்வாறு நடத்தும்? ஒருபொழுதும் நடத்தல் முடியாது); ஆதல்பற்றி இவைகளுள் நாம்பிரவேசிக்க வேண்டும்; தலைகால் என்னும் இவ்விரண்டு மார்க்கங்களில் எம் மார்க்கமாகப்பிரவேசிப்போமென்று ஈசுவரன் ஆலோசித்தார்.

(12) இந்த மூர்த்தாவைப் பிளந்து அவர் அதன் வாயிலாகப் பிரவேசித்தார். இதற்கு விதிருதி (பிளப்பு - துவாரம்) என்று பெயராம். (இஃது ஆநந்தமயமான துவாரம்). இவ்வழியாக உட்புகுந்த அவர்க்கு மூன்றிருப்பிடங்களுண்டு.

1 – ஜாக்கிராவஸ்தையில் வலக் கண்; 2 – சுவப்பனுவஸ்தையில் மனது; 3 – சுழுப்தியவஸ்தையில் இருதயாகாசம். இம் மூன்றும் சுவப்பனமாம் (அஃதாவது ஜாக்கிர சுவப்பன சுழுப்தி ஆகிய இம்மூன்றும் நசுவரமாயிருத்தலின், சுவப்பன மென்று கூறப்பட்டன).

(13) இவ்விதமுண்டான (இவ்விதம் காரிய காரணக் கூட்டங்களாலாகிய உபாதியுடன் சேர்ந்த) ஜீவன் அகங்கார மடைந்து இச்சரீரத்தில் வேறு யாது இருக்கிறது; எல்லாம் நாம் என்று அபிமானங்கொண்டு ஆரோபித்துக் கொள்ளுகிறுன்; இவ்விதம் வெகு காலம் அறியாமையால் உறக்கமுற்று, பிறகு ஒரு சமயம் பரம கிருபாநிதியாகிய ஆசாரியருடைய உபதேசத்தால் விழித்துக்கொண்டு, மேற்கூறிய புருஷனைப்பார்க்கின்றுன் (அஃதாவது (பிரஹ்மத்தைத் தன்னிடத்தில் தானுகவே பார்க்கிறுன்.)

(14) ஆதலால், இந்தப் புருஷனுக்கு இந்திரனென்று பெயராம். அவன் இந்த அபரோக்ஷமாயிருக்கின்ற சரீரத்தில் இருப்பதாகத்தோன்றும் ஆத்மாவையே பார்க்கிறான் (அஃதாவது பிரத்தியகாத்மாவாகவே யிருக்கிறான்). அவனைப்பெரியோர் இந்திரனென்று பரோக்ஷமாகக் கூறுகின்றார்கள். (பூஜ்யர்களின் பெயரை நேரில் கூறுவதைக் காட்டிலும் பரோக்ஷமாகக் கூறுவது மரியாதையாம்; பூஜ்யர்களுக்கெல்லாம் பூஜ்யராயிருக்கின்ற ஈசுவரனை அங்ஙனங்கூறத் தடையாதாம்)?

இவ்வத்தியாயத்தின் முக்கிய தாற்பரியம்.

ஜகத் உத்பத்தி ஸ்திதி லயகிருத், அஸம்சாரீ, சர்வக்ஞன், சர்வசத்தன், சர்வவித்தி யாகிய பரமாத்மா சர்வ ஜகத்தையும் யாதொரு உபாதானகாரணமுமின்றி ஆகாசாதி கிரம்மாகத்தானே சிருஷ்டித்தது. அது தனதாத்மாவைத் தானே அறிந்துகொள்ளும் பொருட்டுச் சகல பிராணிகளின் சரீரத்திலும் தானே பிரவேசித்துத் தனதாத்மாவைப் பிரஹ்மம் நானாகவே இருக்கிறேனென்று அறிந்துகொள்ளுகின்றது. ஆதலால், எல்லாச் சரீரங்களிலும் ஒரே ஆத்மா தவிர வேறில்லை என்பது இதன் தாத்பரியம்.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

எம்பிரான் சதகம்.

பண்ணியிடும் பணிபலவே பொன்னொன் றேயாம்
　பாண்டத்தின் பெயர்பலவே-மண்ணொன் றேயாம்,
வண்ணமிகும் பசுப்பலவே பாலொன் றேயாம்
　வகைப்பேற்றி னுடல்பலவே ஜீவ னொன்றாம்,
நண்ணுமறு சமயங்கட் பேர்வே றல்லால்
　நாதநீ யொருவனே யவர்க டம்மை,
எண்ணியே செயுந்தொண்டர் பூசைக் கெல்லாம்
　இரங்கிவரந் தருகின்ற யெம்பி ரானே.

பகவத் கீதை.

யாவனொருவ னென்னையெல்லா வுயிர்களிடையு மென்னிடையே
　மேவவெல்லா வுயிர்களையும் வேறாகாமே மெய்காண்பான்

தேவர்பகைமுன் செகுத்தேனே யிவன்யாதேனுஞ் செய்திடி
மாவவனு கின்றேன்யான் யாதுநீயிங் கையுறேல். [னு

## ஞானவாசிட்டம்.

கிஞ்சிலாதி விரிந்துசெகத் திரளாய்க் கிளைத்த விவையெல்லா
விஞ்சுபிரம மேயறிவு பிரம மிம்மே தினிபிரமம் [ம்
பஞ்சபூதம் பிரமம்நாம் பிரமம் நமது பகைபிரமம்
தஞ்சநட்புக் கிளைபிரமஞ் சங்க ராதி நிச்சயமே.

## பிரமகீதை.

உலகம் யாவும் உயிர்பலவும் நானே சிறிதும் வேறில்லை
யலகி லறிவா லாய்ந்திடினு மாயா விடத்து மருத்தமிதே
திலக மாய மறைதுணிந்து திகழ்த்து பொருளு மிதுவென்ற
னிலகுந் தன்மை யநுபவமு மிதிலோ ரைய முளதன்றால்.

## திருமந்திரம்.

தானே கடல்மலை யாதியு மாய்நிற்கும்
தானே திசையெட்டுத் தேவரு மாய்நிற்கும்
தானே யுடலுயிர் தத்துவ மாய்நிற்கும்
தானே யுலகிற் றலைவனு மாமே.
எங்குந் திருமேனி எங்குஞ் சிவஞ்சத்தி
எங்குஞ் சிதம்பரம் எங்குந் திருநட்டம்
எங்குஞ் சிவமா யிருத்தலா லெங்கெங்கும்
தங்குஞ் சிவனருட் டன்விளை யாட்டே.

## திருவாய்மொழி.

துன்பமு மின்பமு மாகிய செய்வினை யாவுல கங்களுமா
யின்பமில் வெந்நர காகி யினிய வான்சுவர்க் கங்களுமாய்
மன்பல் லுயிர்களு மாகிப் பலபல மாயா மயக்குகளா
யின்புறு மிவ்விளை யாட்டுடை யானைப்பெற் றேதுமல்ல லில
[னே.

## திருவம்மானை.

பார்த்த விடமெல்லாம் பரமேகா ணம்மானை
பாராம லிந்நாளும் பாழ்பட்டே னம்மானை.

திருவாசகம்—திருவம்மானை.

ஊனா யுயிரா யுணர்வாயென் னுட்கலந்து
தேனா யமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோ ரறியா வழியெமக்குத் தந்தருளும்
தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார் சீரொளிசே
ரானா வறிவா யளவிறந்த பல்லுயிர்க்குங்
கோனாகி நின்றவா கூறுதுங்கா ணம்மானாய்.

சிருஷ்டிக் கிரமம் அநேக விஷயத்தில் அசம்பாவிதமா யிருக்கிறதென்னும் ஆக்ஷேபத்திற்கு இரண்டு சமாதானம் சொல்லப்படுகின்றன.

சிருஷ்டிக் கிரமவாக்கியங்கள் அர்த்தவாதமாம். அஃதாவது இந்த ஜகத்தின் லக்ஷணத்தை எளிதில் போதிப்பிக்க வேண்டிய நிமித்தம் அஃது உலக வியவகாரம்போல ஒரு கட்டுக் கதையாகக் கூறப்பட்டது.

ஆத்மாவை யறியவேண்டியது முக்கியமே தவிர, சிருஷ்டிக் கிரமத்தைத் தெரிந்துகொள்வதில் யாதொரு பயனுமில்லை.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

கைவல்ய நவநீதம்.

ஞானங் காரண வறிவுகாண் காரியம் நாமரூ பப்பேய்கள்
ஆன தெப்படி யழிந்ததெப் படியென வாய்குதல் பலனன்றே
மான மைந்தனே தீர்க்கசொப் பனசெகம் வந்ததும் பாராமல்
போன துங்கினை யாமலுன் போதமாய்ப் பூர்ணமா யிருப்பாயே.

திருமந்திரம்.

தன்னை யறிவ தறிவா மதுவன்றிப்
பின்னை யறிவது பேயறி வாமே.

அங்ஙன மில்லாவிடினும், மாயாவியா யிருக்கின்ற ஈசுவரனுக்கு யாதுதான் செய்வ தியலாது. மாயைக்கு யாதும் அசம்பாவிதம் இல்லை; யாவும் கூடும். ஆத்மாவை யறிவதற்குச் சாஸ்திரோபதேசமே விதியாம்; வேறொன்று மன்றாம்.

எவன் எதுவரையில் தன்னாத்மாவை யறியாம லிருக்கின்றானோ அவன் அதுவரையில் அவித்தையினா லுண்டான உபாதி

கர்மங்களைத் தனதென்று கருதி, பிர்மாமுதல் ஸ்தம்பப்பூச்சியிருயுள்ள தேவதிரியக்காதி ஜன்மங்களை மீண்டு மீண்டுமெடுத்து அவித்தியா காம கர்ம வசத்தல் சம்சரிக்கின்றான். இவ்விதம் அவன் ஒவ்வொரு தடவையிலும் தான் அடைந்த தேகேந்திரியக் கூட்டத்தை விட்டொழிகின்றான்; பிறகு வேறு கூட்டத்தை யடைகின்றான். இவ்விதம் அவன் அடிக்கடி ஜனன மரணத் துக்கத்துள் அகப்பட்டு உழலுகின்றான். இத்தன்மை வாய்ந்தவன் எத்தன்மை வாய்ந்த அவஸ்தைகளுடன் இருக்கிறானென்பதை மேலே கூறுவாம். (அடுத்த அத்தியாயத்தில் கூறுவோம்.)

முதலாவது அத்தியாயம்

முற்றிற்று.

நித்தன் மலரடி நெஞ்சி னிறுத்துவோர்
உத்தம முத்தியை யுறுவது திணமே.

## இரண்டாவது அத்தியாயம்.

### பக்குவாபக்குவ ரியல்பு.

நேரிசை வெண்பா.

[போம்

போகம்போம் போக்கியம்போம் புன்மைபோம் போஜனம்
மோகம்போம் மூர்க்கம்போம் மோசம்போம்—தாகம்போம்
வேதமுத லாகமங்கண் மேலான தென்றுபல்கால்
ஓதுபிர மத்துற்றக் கால்.

(1) எவன் எதுவரையில் தன்னாத்மாவை யறியாமலிருக்கின்றானோ அவன் அதுவரையில் அஃதாவது அறிவினால் ஆராய்ந்தறியும் ஆத்மாவைப் பிரஹ்மமென்றறியுமட்டும் ஜனன மரண வாதனைக்குட்பட்டு அவித்தியா காம கர்ம வசத்தால் கால சக்கரத்தினது சுழலிலகப்பட்டுச் சுழலுகின்றானென்பது நிச்சயமாம்.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

கைவல்லிய நவநீதம்.

வாராயென் மகனே தன்னை மறந்தவன் பிறந்திறந்து
தீராத சுழற்காற் றுற்ற செத்தைபோற் சுற்றிச்சுற்றிப்

போத காலநேமிப் பிரமையிற் றிரிவன் போதம்
ஆராயுந் தன்னைத் தானென் றறியுமவ் வளவுந்தானே.

(2) மேற் சொல்லிய ஜனன மரண வாதனையினு லுண்டாகும் துன்பத்தை யளவிட்டுச் சொல்வது முடியாததாம். அஃதொருவாறு சொல்லப்படுகின்றது:—

அஃதாவது ஜனன காலத்திலுண்டாகும் துன்பமாவது தாயினது கருப்பத்திலிருக்கும் பொழுது கருப்பாசயப்பை யுறுத்துதல், அதில் ஜலம் பூரித்தல், உதராக்கினி சுடுதல், பிரசூத வாயு முறித்துத் தள்ளுல், யோனித் துவாரத்தில் நெருக்குண்டல் என்னும் இவ்வைந்துமாம்.

(1) இவற்றுள், கருப்பாசயப்பை யுறுத்துவது மலைபிறுத்திக் கொண்டதுபோல்வதாம்.

(2) அதில் ஜலம் பூரித்தல் கடலின்கண் வீழ்த்தி மிதித்தற்போல்வதாம்.

(3) உதராக்கினி சுடுவது இருப்புக்கடத்தில் அடைத்து வைத்து நெருப்பாற் சுடுவது போல்வதாம்.

(4) பிரசூதவாயு முறுத்துத்தள்ளுதல் மலைமேல் நின்றவனைத் தலைகீழாகத் தள்ளுதற்போல்வதாம்.

(5) யோனித்துவாரத்தில் நெருக்குண்ணுதல் ஆலையிலிட்ட கரும்பு போல்வதாம்.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

சிவதருமோத்திரம்.

என்றென் றெண்ணி யிருக்குமுயி ரிடர்ப்பட் டழியு மெழில் வரைக்கீ, ழொன்று மொருவன் றனைப்போலக் கருப்பா சயப்பை யுறுத்துதலான், மன்ற வுததி மறிந்தாழ்வான் வருத்த மென்ன வருந்தியிடு, நின்ற கருப்பா சயவுதக வெள்ளங் கொள்ள நிறை யழிந்தே.

அங்கி யதனிற் றங்கியிடு மயோம யத்த கும்பத்திற்
றங்கு மொருவன் றபனம்போற் றபன மெய்துக் தாயுதரத்
தங்கி சுடவே யழலனைய சூசி யதனு லாகத்தைப்
பங்கித் திடவே படுமிடரி னிருநாற் குணிதம் பட்டுழுங்கும்.

"கருப்பா சயமே கட்டமதா மதனி னதிகங் கடுங்காலு
முருக்கமிகவு மோகமுற முன்னையுணர்வு மங்கிலையே
மரிக்க வாலைக் கரும்பெனவே யோனி வழியின் வலிதொலைய
நெருக்கப் பட்டு நிலமிசையே தோன்று முயிரு நிலையுடனே."

(1) மரணகாலத்தில் உண்டாகும் துன்பத்தை நாம் அள விட்டுச் சொல்வதாமோ? இதனைக் கடவுளேயறிவர். ஜனனகாலத் திலுண்டாகும் துன்பத்தைக் காட்டிலும் மரணகாலத்திலுண்டா கும் துன்பம் எட்டுப்பங்கு அதிகமாமென்று பெரியோர்களால் சொல்லப்பட் டிருக்கின்றது.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

குறுந்திரட்டு.

"பரண மாகிய பெண்டிருஞ் சுற்றமும் பண்டுதங் கையிற்றந்த
விரண மானவை கொண்டிட விவரைவிட் டியம்பிடா திவணேகு
மரண வேதனை யாவரா லறியலா மயங்கியைம் புலனந்தக்
கரணம் யாவையுங் கலங்கிட வருந்துன்பங் கடவுளே யறிகிற்பார்."

மகாராஜா துறவு.

"அரந்தை யதனை யொழுங்காக வறையக் கேணீ, யவனி யெலாம், பரந்த சிருட்டி திதியொடுக்கம் பண்பாய் நிகழுஞ் சிருட்டிதனிற், பொருந்தும் பெரிய துன்பைந்தும் போய்மாண் டுறில தெண்மடங்கே, இருந்த திதியு ளிரண்டாகு மிளமை யென்றும் மூப்பென்றும்."

சிவதருமோத்திரம்.

"தனத்தினை மனைதனைத் தானி யந்தனை
நினைத்தினி யெவரனு பவிப்பர் நீங்குநா
ளெனக்கிவை யன்னிய மாகு மேயெனு
மனத்துயர் மலியவே மாயு மாவியே".

மெய்ஞ்ஞான விளக்கம்.

"வந்திடும் மரணத் துன்பம் வகுத்துரை செய்யப் போமோ
உந்திமே லையம்பித்து முணர்வொடு பொறிக லங்கி
நந்திடா விருளே மூடி நாவுலர்ந் தலமந் தென்னை
யிந்தமா விறப்பிற் றுன்பம் பவத்துன்பத் தெண்ம டங்கே"

(2) ஜனனமரண காலத்திற் றுன்பமுண்டென்றால், இவைக

ளுக்கு இடையிலுள்ள வாழ்நாட்களிலாயினும் இன்பமுண்டோ வெனின், அக்காலங்களிலும் கிடையாது; அஃதெங்ஙனமெனின், அக்காலங்களிலும் நரை திரைமூப்பு இவைகளாற் றுன்பமாம்; அம் மூப்பில்லாத வாலைப்பருவத்திலும் அறியாமையாற் றுன்பமாம்; அறிவுதயமாகிய குமார பருவத்திலும் வாதபித்த சிலேத்துமம் முதலிய நாநாவித வியாதிகளினுற் றுன்பமாம்; அவ்வியாதியில்லா விடினும் சதா தன்னைவிட்டு நீங்காது மாறிமாறிவரும் பசி காம மென்னும்கொடிய வியாதிகளினுற் றுன்பமாம்; அவ்வியாதிவரும் போது அருந்தல்பொருந்தலாகியமருந்தினைப்புசித்துத் தணித்துக் கொண்டாலும் இதற்குத்துணைக்காரணமாகிய பொருளைச் சம்பா திப்பதினுற் றுன்பமாம்; அத்திரவியம் பொருந்தி யிருக்குமாகு லும் அதனைச் சோரபயத்தினின்றும் காப்பாற்றிக்கொள்வதனுல் துன்பமாம்; இதனைக்காப்பாற்றவல்ல அரசனுயிருந்தாலும், தன க்குமேலான ராஜனுல் துன்பமாம்; அம்மகாராஜனுக்கும் எந்தக் கணத்திற்றேக நாசத்திற்காக நமன் வருவானே, மறுமையின்கண் ணே யாதுவருமோ வென்னுந் துன்பமாம்.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

மெய்ஞ்ஞான விளக்கம்.

"பிணியினுல் வலியுங் கெடாம் பிணியினு லழகும் போகும் [யும்
துணிவெலாம் பிணியாற் குன்றுந் தொலைவில்லே தனையைச் செய்
தணிவிலா துன்பே நின்று சாலவு மொருக்கும் பொல்லாப்
பிணியதே யொக்குந் துன்பம் பேசிடிற் பிறிது முண்டோ."

"நலமிலா மூப்புத் துன்பம் நடைதளர்ந் துரைத ழுத்துச்
சலமதே மிகவுந் தோன்றித் தண்டுகண் ணுகிச் சித்தக்
கனலமே பிறந்து கண்டார் கசிந்தங்கே யுமிழும் வண்ணம்
மலெவலாஞ் செய்யு மூப்பின் வருந்துவ ரந்தோ பாராய்."

மகாராஜா துறவு.

"விருத்த பருவ மிகத்துன்பம் விளங்கு மிளமை யிரண்டவையின்
வருத்து பிணியின் மிகத்துன்பம் வளமை யிளமை மூன்றுகுங்
கருத்த தறியாக் குழந்தையென்றுங் குமாரமென்றுங் காளையெ
மருத்த மறியா ததிற்றுன்ப மடையும் பாலப் பருவத்தில்". [ன்று

"தந்தை தாய ராசிரியர் தாங்கண் முனித றனக்கஞ்சிச்
சிந்தை கலங்குங் கெளமாரஞ் சிறந்த காளைப் பருவத்தில்
முந்து பசிநோய் காமநோய் முடுகித் தணிக்கப் பொருடேட
விந்தப் புவனத் திரவுபக லிடைய ருத தொழிற்றுன்பம்".

"பொருளுண் டாகிற் காப்பதனாற் பொருந்துந் துன்ப மாசாகி னொருகம் மிகுத்த வரசரா லுதவுந் துன்ப மொருகுடைக்கீழ் நிருப னாகில் நோய்மரண நேரு மென்னும் பயத்தானும் வருவ தெனையோ மறுமையினி லென்றும் வாடித் துன்புறுமே".

வைராக்கிய தீபம்.

"இளமையிற் பிணியற் றொருகுடை நிழற்கீ ழிருநில முழுவ தும் புரக்கும், வளமைபெற் றுடைய மகற்குமெப் பொழுது வருங் கொல்கூற் றெனும்பயத் தானும், உளமிகப் பறைநின் றறையு மேற் புவிமீ துடையரோ மற்றைய ரின்பங், களிமிகுத் திருப்பர் தெளிவிலா மையின்மேற் காரியங் கருதுறு நரே."

முதலாவது அனுவாகம் முற்றிற்று.

## பக்குவாபக்குவரியல்பு.

## இரண்டாவது அனுவாகம்.

மேற்சொல்லிய ஜனனமரண வாதனைகள் தனதாத்ம சொரூபத்தையறிவதாலொழிவனவாம்; அவ்வறிவு பரமகிருபா நிதியாகிய ஞானசாரியர் மூலமாக வருவதாம்; அந்த ஞானசிரியரைத் தேடியடையவேண்டும்; அங்ஙனம் அடையும் பக்குவனிவ்வித மாயிருக்க வேண்டுமென்பது இங்குச் சொல்லப்படுகின்றது.

(1) மேற்சொல்லிய ஜனனமரண வாதனைகளை யொழிப்பது தனதாத்ம சொரூபத்தை யறிவதாலன்றி மற்றொன்றாலாகா தாகவின், பரமகிருபாநிதியாகிய ஞானசாரியரைத்தேடியடைந்து அவர் கிருபாநோக்கத்தாற் சிற்சடபேதங்களைப் பகுத்தறிந்துணர வேண்டும்; அஃதாவது தத்துவமின்னது, தத்துவ சொரூபமாகிய ஞானமின்னது, அதனைபடையும் சாதனமின்னது என்று குருவருளா லுணரவேண்டும்; இச்சாதனத்தைப் பெற்ற புண்ணிய சீலர்களாகியபக்குவர்களுக்கே ஆத்மதரிசனம் உண்டாகும் (அஃதாவது சிவஞானனுபோகம்கிடைக்கும்); அஃதில்லாதவர்க்கு (அஃதாவது ஞானசாரியரைத் தேடியடையும் பக்குவமில்லாது அஞ்ஞானிகளாய்ச் சம்சாரசாகரத்தி லழுந்திக்கிடப்பவர்களுக்கு) எங்ஙனம் பேரின்பச் செல்வங்கிடைக்கும்

(சம்சாரசாகரத்தின் லக்ஷணத்தை முந்திய அத்தியாயத்தில். கண்டுணர்க).

(2) குடும்பசாகரத்தில் விஷயேந்திரியங்களாற சிறிது இன்பமுண்டாகின்றது; அதுவும் நிலைபெறாமல் அழிந்துபோவதாய்அள

விறந்த துன்பங்களைக்கொண்டு வந்து கொடுப்பதாயிருப்பது யாவர்க்கும் அனுபவமாய்த் தெரிந்த விஷயமாதலால், அதுபற்றிவிரிவாய்ச்சொல்ல வேண்டியதின்றாயிற்று.

(3) ஆதலால், இத்தகைய சம்சார துன்பங்களுக்கு ஆற்றாத பக்குவ விசேடர்களே அவை நீங்குமாறு விரைந்து ஞானசாரியரைத்தேடியடைந்து, அவர்கிருபாநோக்கத்தாற் சாதனசதுட்டயத்தைப் பிரத்தியட்சமாகப் பெற்று, சிவஞானனுபோகத்தைப் பெறுவார்கள் (அஃதாவது தனதாத்ம சொரூபத்தை யறிந்து ஆநந்தமாயிருப்பார்கள்); இஃதன்றிச் சிவபுண்ணிய மேலீட்டால் அஃதாவது முன் ஜனனங்களில் செய்து வந்த சத்கரும் பரிபாகத்தால், செல்வம் இளமை உடம்பு முதலிய பிரபஞ்சங்களெல்லாம் அனித்தியமென்றும், இவைதனக்கன்னியமென்றுமறியும் பக்குவ நிலைகிடைத்ததாயிருப்பினும் மேற்சொல்லிய ஜனனமரணவாதனையை யொழித்துக்கொள்வதற்கும், சதா நோய் வறுமை முதலிய துன்பங்களைக் கொடுக்கத்தக்க தேகவாதனையை மாற்றிக்கொள்வதற்கும், இவைகளை மாற்றித் தனதாத்ம சொரூபத்தை யறிந்து கொள்வதற்கும் ஞானசிரியர் கிருபைவேண்டும்; இன்றேல், அவை யொழியா.

(4) அஃதெங்ஙனமெனின்,

(5) ஒரு பேதைப்பெண் பக்குவ தசையையடைந்திருந்தாலன்றி, ஆடவர்களின் நோக்கம் அப்பெண்மீது படாது; அது போல, தேகாதிப் பிரபஞ்சங்களெல்லாம் பொய்யென்னும் ஞான பக்குவத்தை ஒருவன் அடைந்திருந்தாலன்றி, பரமகிருபாநிதியாகிய ஞானசாரியரின் கிருபாநோக்கம் அவன் மீது உண்டாகாது. ஆகவே அவள் பக்குவதசையையடைந்த பெண்ணாயிருப்பினும் ஆடவன்கூடி யின்பங்கொடுத்தாலன்றி அவளுக்குச் சிற்றின்பசுகமின்னதென்று தெரியுமா? தெரியாது. அதுபோல, ஒருவன் பக்குவங்களெல்லாம் முதிர்ந்த அதி தீவிரபக்குவனாயிருந்தபோதினும் பரமகிருபா நிதியாகிய ஞானசாரியர் இவன் பக்குவவறிவோடுங்கூடி இரண்டறக் கலந்தாலன்றி இவனுக்குப் பேரின்பசுகமின்னதென்று தெரியாது.

ஒரு பெண்ணுக்கு இவள்பதினாறு மக்களைப்பெறுவாளென்று சாதக லக்ஷணம் இருந்தபோதினும், புருஷனில்லாமல் அவளுக்கு எவ்வாறு கர்ப்பமுண்டாகும். அதுபோல, ஒருவர்க்குத்

தேகாதிப் பிரபஞ்சங்களெல்லாம் பொய்யென்றும், அவை தமக் கன்னியமென்றுமறியும், தீர்ந்த பக்குவ விசேடமிருப்பினும், பரம கிருபாநிதியாகிய ஞானசாரியனென்னும் புருஷனைத் தேடியடைந்து அவனருள் பெற்றாலன்றி அவர்க்கு முத்தி சாதனமென்னும் கர்ப்பமுண்டாகாது என்பது திண்ணமாம்.

(6) சர்வஜீவாத்துமாக்களும் தேகாதிப் பிரபஞ்சங்களெல்லாம் நிஜமென்றும், இவை அநித்தியமல்லவென்றும், கருதி, அவன், அவள், அது என்னும் சம்சாரசாகரத்தில் அழுந்திக்கிடக்கும்பொழுது, மூன் சன்னனங்களில் தொன்று தொட்டுச்செய்து வந்த சிவபுண்ணிய மேலீட்டால் சிலர்க்கு வேதாகம சாஸ்திரங்களைப் பயிலும்படி வரும்.

"நாலுவகை யோனியிலு மெழுவகையின் றோற்றத்து நளின மாக; மேலுகந்த மானிடந்தா னெடுப்பதுமே யருமையாமெய்ய னாகிப், பால்போல மனமுடைத்தாய்ப் புண்ணியமே மிகுந்துபவங் கெழாத் தள்ளி, நூலுணர்வ கருமை நெஞ்சே யிருவினையி லொருவினையை நொருக்கித் தாமே".

என்றபடி நம்மனோர் இங்ஙனம் மிகுதியான வேதாந்த சாஸ்திரங்களை யுணர்ந்தாலன்றி ஞானசாரியரைக்கூடும் பக்குவதசையையடைய மாட்டார்கள். பக்குவதசை யென்றாலென்ன? அநித்திய வஸ்து வின்னது, அனித்திய வஸ்து வின்னது என்று தெரிந்துகொண்டு அனித்தியத்தைத் தள்ளி நித்திய வஸ்துவை யடைய நித்தக்க சாதனங்களைக் கைப்பற்றி நிற்பதுதான். அங்ஙனம் நித்தியாநித்திய வஸ்துக்களை யுணர்வதற்கு மிகுதியான வேதாந்த சாஸ்திரங்களின் உணர்ச்சி வேண்டுமென்பது கருத்து.

இரண்டாவது அநுவாகம் முற்றிற்று.

மூன்றாவது அனுவாகம்.

(1) எவனொருவன் எக்கணத்தில் நித்திய வஸ்துவின்னது அனித்தியவஸ்துவின்னதுஎன்று தெரிந்து கொண்டானோ, அவன் அக்கணமே அனித்தியத்தைத்தள்ளி நித்தியத்தையடைய முயற்சிப்பான்; அஃதாவது அனித்தியமாகிய விடயசுக போகங்களையொடுக்கி நித்தியவஸ்துவை யடைதற்கேதுவாகிய சாதனங்களைக் கைக்கொள்ளுவான்; நித்தியவஸ்துவின் மீது பேராசையுற்றவனுக்குக் கர்மகாண்டவிதியின் பயனாய விடய சுகபோகங்கள் துன்பமாய்த்தோன்றும்.

(2) அஃதெங்ஙனமெனின், கர்மத்திற்கு ஹேது காமம்; இச்சையே கர்மத்தைச்செய்யும்படி (அஃதாவது கர்மகாண்ட விதிப்படி கர்மத்தைச் செய்யும்படி) தூண்டிவிடுகிறது; இச்சையில்லாதவனுக்குப் பிரவிர்த்தியில்லை. அஃதாவது நித்திய சுகதாகமுடையவனுக்கு அநித்திய சுகம் சுருங்கும்.

அன்றியும், ஒருவன் கள்ளமின்றி நித்திய சுகத்தை விரும்புவானாயின், அநித்தியத்தை முற்றிலுங் கைவிட்டுவிடுவான்; அனித்திய சுகபோகங்களில் இச்சையற்றவனுக்கு நித்திய சுகங்கிடைப்பதற்கு என்னதடையிருக்கின்றது?

(3) ஆகவே, இத்தகைய கல்விவல்லபத்தைப்பெற்றவனுக்கு நித்தியசுகத்தைப்பெறுவது இயலாது; நூலுணர்வைக்கொண்டுபக்குவ நிலையையுணரலாமே யல்லது நித்திய சுகத்தைப்பெறுவது முடியாது. அஃதாவது அவன் ஆத்மாவாகிய தன்னையறிந்தானந்தமாயிருப்பது முடியாது.

(4) மேலும், ஒருவன் வேதாந்தசாஸ்திரங்களைமிகுதியாகக் கற்றுக்கொண்டால் மாத்திரம்போதுமா? அவன் பக்குவியாவானா? ஆகான்.

கற்றபடி மனதை நிறுத்தவல்லவனேபக்குவியாவான்; வேதாந்தசாத்திரங்கள் சொல்லியநெறிப்படிசாதிக்கவல்லவனே பக்குவ நிலையைப்பெறுவான்.

(5) மேலும், பரமகிருபாநிதியாகிய பரமேஸ்வரன் மானிடர்களுக்கு நன்மையைச் செய்யும் பொருட்டு அருளிச்செய்திருக்கின்ற சுருதிமார்க்கங்களில் மனதைநிறுத்தி, சாதுக்கள் பின்னே திரிந்து, அவர்களுக்கு மனமொழிமெய்களால்குற்றமற்றதொண்டு புரிந்து, முன்னர் அறியாமையாற் செய்த காமக்குரோதாதிகளை நீக்கி, நித்தியாநித்தியங்களை யுணர்ந்தவனாகியும், இகலோக பரலோகங்களில் உண்டாகின்ற புண்ணிய பாவப்பயன்களையுணர்ந்தவனாகியும், அருந்தல் பொருந்தல் முதலியவற்றில் இச்சையற்றவனாகியும், ஆன்மா இன்னது அனான்மா இன்னது என்றுசிற்சடபேதங்களைப் பகுத்தறியும் விவேகத்தை யுடையவனாகியும் இருந்து, கற்பனையாகக் கட்டையிற்கள்ளனைப்போலத் தோன்றியதேகாதிப் பிரபஞ்சங்களை நீக்கி, பரமகிருபாநிதியாகிய சற்குருகடாக்ஷத்தால் விலக்ஷணமான சிவஞானத்தைப் பெற்றவனே பிறப்பின் கட்டையொழித்துப் பேரின்ப வீட்டைப்பெறுவான். அஃதாவது ஞானு

சாரியரைத்தேடியடைந்து, அவர் கிருபா நோக்கத்தாற் சாதன சதுஷ்டயத்தைப் பூரணமாகப்பெற்று, ஆத்மாவாகியதன்னையுணர்ந்தவர்களுக்கே மேற்சொல்லிய ஜனனமரணவாதனைகளும் இவை கட்கு இடையில் வரும் தேகவாதனைகளுமொழியும் என்பதாம். அவர்கள் தாம் நித்திய சுகமாகிய சிவஞானுனுபோகத்தைப்பெற்றிருப்பவர்.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

கைவல்லிய நவநீதம்.

ஒன்று சேண்மகனேபுமான் முபற்சியா லுறைத்துமா னுடர்க்கீசன், நன்று செய்பமேவ காட்டிய நூல்வழி நடந்து நல்லவர்பினனே, சென்று துட்டவா தனைவிட்டு விவேகராய் ஜெனித்தமா யையைத்தள்ளி, நின்று ஞானத்தை யடைந்தவர் பவங்கள்போம் நிச்சய மிதுதானே.

திருவாய்மொழி.

நன்றாய் ஞானங் கடந்துபோய் நல்லிந்திரிய மெல்லாமீர்த்
தொன்றாய்க் கிடந்த வரும்பெரும்பா ழுலப்பி லதனை யுணர்ந் [துணர்ந்து
சென்றாங் கின்ப துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றா
லன்றே யப்போ தேவீடு மதுவே வீடு வீடாமே.

சிவஞான சித்தியார்.

மிக்கதொரு பக்குவத்தின் மிகுசத்தினி பாத மேவுதலு ஞானமிவைந் தோர்குருவி னருளாற், புக்கனுட்டித் தேநிட்டை புரிந்து ளோர்கள் பூதலத்திற் புகழ்சிவன் முத்த ராகித், தக்கபிரி யாப்பிரியமின்றி யோட்டிற் றமனியத்திற் சமபுத்தி பண்ணிச் சங்கரனை, டொக்கவுறைந் திவனவனே யவனிவனே விடாதே யுடந்தையாச் சிவத்தோற்ற மொன்றுமே காண்பார்.

சிவநெறிப் பிரகாசம்.

"ஆதரவுஞ் சாந்தியுநற் பொறுமைதானு மசத்தியமில்லாவுரையு மாசாரந் தவமும், தீதான செபன்மறந்து நன்றியறிந்திடலுஞ் சிவாகமத்தைக் கேட்டவுடன் தெளித லானும், போத லறைப் பொறிவழியில் நிற்ற லாதி புகன்றுடைய நற்குணங்கள் பொருந்தி மேலும்".

"கூசிடா திட்டபணி செய்தாகுரு பக்தி குறை விலாய் நம்பினராய்த் துரோகமிலராகி, மாசிலராய் மனவாக்குக்காயத்தாற் குருவின் வாக்ய பரி பாலனஞ்செய் மதிமானு வாயே."

சிவானந்தமாலை.

மித்தையுடன் கட்டறுத்து மெய்யருளான் மெய்யொழிக்குந்
தத்துவமுங் கேவலமுஞ் சார்வகற்றிச்—சுத்தத்
தனியாகித் தானும்போய்த் தற்பரமாய் விட்டாற்
சனியா திதுநிச் சயம்.

ஒழிவிலொடுக்கம்.

தன்னிழப்பை யென்னகற்றுச் சாதிப்பான் சற்குருவா
மன்னுபெருஞ் சிய மதயானை—தன்னடைமேற்
சொற்பனத்தே தோன்றித் துடிப்பற்றுக் கேவலமாய்
நிற்பதுபோற் பாரா னெனின்.

ஆதல்பற்றி எத்தகைய கல்வி வல்லப முதலியன விருப்பி னும், அவசியம் பரமகிருபா நிதியாகிய ஞானசாரியரைத் தேடி யடையவேண்டுமென்பது இவ்வனுவாகத்தின் முக்கிய தாத்பரிய மாம்.

மூன்றாவது அனுவாகம் முற்றிற்று.

நான்காவது அனுவாகம்.

(1) மேற்சொல்லிய பரமகிருபாநிதியாகிய ஞானசாரியரைத் தேடியடையும் பக்குவர்களாகிய புண்ணியர்களுக்கு உண்டாகும் அனுபவநிலை இங்குச் சொல்லப்படுகின்றது.

முதிர்வேனிற் காலத்தில் வனவேட்டையாடிக்களைத்து, தாக விடாய் மேலிட்டு, இத்தாகத்தைத் தவிர்த்துக் கொள்வதற்குத் தண்ணீர் எங்குளதோ வென்று தேடுவோர்களைப் போலவும், காலையிலும் மாலையிலும் தன்தாயைத் தேடுங்கன்றைப் போலவும் அதிகாரி புருஷர்கள் சற்குருவைத் தேடுவார்கள்.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

ஒழிவிலொடுக்கம்.

குன்றழலி னைந்துநீர் தேடுங் குருடரைப்போற்
கன்றுபசு வைப்பார்க்குங் காலம்போ—லொன்றொன்றில்
வேட்டவதி மோகி விடயம்போற் சற்குருவைத்
தேட்டமதி பக்குவமாய்த் தேர்.

ஒருவன் தேகாதிப் பிரபஞ்சங்களெல்லாம் மெய்யென்றும், வனிதையாதி விடயசுகபோகங்களைத் தவிர வேறு இன்பமில்லை யென்றும், ஒருகாலவிசேஷத்தில் மனோராச்சியம் செய்துகொண்டு திரியும் பொழுது, அவனுக்கு முந்திச் செய்த சிவபுண்ணிய மே

லீட்டால் தேகாதிப்பிரபஞ்சம் பொய்யென்றும், இவ்வயின்பமாகா வென்றும், இவை தனக்கன்னியமென்றும் தோன்றும்; அஃதாவது இருவினையொப்பு மல பரிபாகத்தால் மேற்சொல்லியவைகளனைத்தும் துன்பமாய்த்தோன்றும்.

(2) அங்ஙனம் தோன்றவே இதனைக் கெடுத்து அதனைக் கொடுக்கத்தக்க ஆசாரியரைத் தேடும்படிவரும், அஃதாவது இத் துன்பங்களை நீக்கி எப்போது பேரின்பத்தையடைவோமென்னும் விசாரமுண்டாகும்.

அஃதாவது விடயசுக போகங்கள் துன்பமாய்த்தோன்றின வர்களுக்கே நித்திய சுகமாகிய சிவஞானத்தைப் பெறவேண்டு மென்னும் ஆவல் உண்டாகும். அஃதாவது சாதனசதுட்டயத் துக்குரிய குணங்களைக் கைப்பற்றுதலுண்டாகும்.

மற்றைபர்க் கங்ஙனமாகா. அஃதாவது ஒருவன் வனிதை யாதிவிடய, சுகபோகங்களை விரும்பி யனுபவிப்பதாம் அஃது எதுபோலுமெனின்,

(3) ஒரு நாயானது வாள்வாயிற்றடவிய நெய்யை விரும்பி நக்கும்பொழுது அதனல் அதற்குச் சிறிது சுகம் தோன்றுவது போலாம்.

ஒருவன் விடங்கலந்த பாயசத்தைச் சுவையாயிருக்கிற தென்று புசிக்கும்பொழுது அதனாலவனுக்குச் சிறிது இன்பமுண் டாவது போலவாம்;

விட்டிற் பூச்சியானது தீபப்பிரகாசத்தைக்கண்டு மதிமயங்கி யதனுள் வீழ்ந்திறப்பது போலவும் என்கினுமாம்.

(4) இத்திருஷ்டாந்தத்தைப்போலமீன்பிடிப்பவன் தூண்டில் முள்ளின்மேலே சிறிது இரையைக்கோத்துத் தண்ணீரில் போட வும், மீன்களெல்லாம் அதன் எதார்த்தந் தெரியாது அவ்விரையை அதிவேகமா யோடிவந்து கவ்வவும், உடனே தூண்டிற்காரனுக்கு மிதப்பின்பேசில் கண் என்றபடி வெடுக்கென்று தூண்டிலை இழுக்கவும் யதார்த்தந் தெரியாது சிறிது இரைக்கு ஆசைப்பட்டுத் திடீரென்று உயிரை யிழந்து விடும் மீன்களைப்போல.

(5) வனிதையாதி விடயசுகபோகங்கள் புறத்தில் சிறிது இன்பத்தைக்காட்டி, உள்ளே தூண்டில்முள்ளைப்போல அபாயம்

உண்டாக்குமென்னும் (அதாவது நாரியெனுந் தூண்டிலில் மச்சமாகாதவணம் நானேறவருள்புரியவும் என்றபடி). யதார்த்தத்தை யுணர்ந்த புண்ணியர்களுக்கு மேற்சொல்லிய வனிதையாதி விடயசுகபோகங்கள் துன்பமாய்த்தோன்றும்.

இதற்குப் பிரமாணம் - கண்ணுடையவள்ளல்.

“ நாயலகை நெய்விரும்பி நக்குவது நஞ்சிட்ட
பாயசமு மெய்ப்பரிசப் பாவைமிகச்—சாயாநீர்
வேட்கை யசுணமிபம் விட்டின்மீன் வண்டிவைபின்
சாட்சியைக்கண் டார்துறவா தார்.”

இவ்வாறு பல பிரமாணங்களுண்டு.

நான்காம் அனுவாகம் முற்றிற்று.

ஐந்தாவது அனுவாகம்.

(1) அனித்தியசுகந் துன்பமாய்த்தோன்ற நித்தியசுகத்திற்குக் காரணமாகிய சிவஞானத்தைப் பெறவேண்டிப் பரமகிருபாநிதியாகிய ஞானசாரியரைத் தேடியடைந்து, அவரருள்பெறும் புண்ணியர்களுக் குண்டாகும் அனுபவ குணங்களாவன.

இத்தேகம் நாளைக்கிருப்பது நிச்சயமல்லவே; திடீரென்று நழுவிவிடுமே; அதற்குள் ஞானசாரியரை யடைவமோ, எப்பொழுது கிடைக்குமோ என்ற விசாரத்தால் (அஃதாவது தேகவுறவு துன்பமாய்த் தோன்றுவதால்) உள்ளமும் உடலும் நடுங்கும்; நித்யசுகத்தை நினைக்குந்தோறும் ரோமஞ்சிலிர்க்கும், உடற்கண் வேர்வை யுண்டாகும்; கண்களில் ஆநந்தபாஷ்பம் ததும்பும்; தேகாதிப் பிரபஞ்சங்களை மெய்யென்று கருதிக்கொண் டுழல்பவர்களைக் காணுந்தோறும் பயமுண்டாகும்; ஞானசாரியரை நினைக்குந்தோறும் பெருமூச்சுண்டாம். அன்னவரை மனம் விரைந்து நாடும்; மேகம்போலுள்ளே குமுறும்; உள்ளமெல்லாம் வெதும்பும்; இத்தகைய குணங்களெல்லாம் மேற்சொல்லிய புண்ணியர்களுக்கு உண்டாகும்.

(2) இக்குணங்களுடையவர்கள் பரமகிருபாநிதியாகிய ஞானசாரியரைத் தேடித்திரியும்பொழுது, அவ்வாசாரியர் கிடைத்திலராயினும் அப்பொழுது அவர்க்குண்டாகும் குணங்களாவன எப்பொழுது ஞானசாரியரை யடைவோமென்னுஞ் சிந்தனையும், மனம் ஜெகமுகத்தைவிட்டு அகமுகமாய் நிற்றலால் அருக்கிய

சோகமும், பரமகிருபாநிதியாகிய ஆசாரியனை நினைக்குந்தோறும் பெருமூச்செறிதலும்,

அந்நினைவு மேலும்மேலும் விளைதலாற் பிறராலறியக்கூடாத சுரம் உண்டாதலும், அச்சுரமேலிட்டால் ஊணுறக்க முதலியவற்றைத் துறத்தலும்,

இம்மர்மத்தைப் பிறர்க்குச்சொல்லலாமென்ற நினைவும் பிறகு யாதொன்றுஞ் சொல்லுதல் கூடாதென்னும் வெட்கமும் இந்த வெட்கத்தால் ஒருவரோடும் வார்த்தையாடாதிருக்கும் மவுனமும்,

இவ்விசாரமேலீட்டால் பித்தமேறலும், இவ்வவத்தைகள் படுங்காலத்தில் தாம்தேடிய ஞானாசாரிய ரெதிர்ப்படாராயின் மூர்ச்சித்தலுமாம்.

இக்குணங்களெல்லாம் மேற்சொல்லிய புண்ணியர்களுக்குப் பரமகிருபாநிதியாகிய ஞானாசாரியனைத் தேடியபோது அவரெதிர்ப்பட வில்லையே என்னும் விசாரமேலீட்டா லுண்டாகக்கூடியவைகளாம்.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

தாயுமானவர் சுகவாரி.

என்பெலா நெக்குடைய ரோமஞ்சி லிர்ப்பவுட
 லிளகமன தழலின் மெழுகா
யிடையறா துருகவரு மழைபோ லிரங்கியே
 யிருவிழிக ணீரி றைப்ப,
அன்பினான் மூர்ச்சித்த வன்பருக் கங்ஙனே
 வமிர்தசஞ் சீவி போல்வந்
தானந்த மழைபொழிவை யுள்ளன்பி லாதவெனை
 யார்க்காக வடிமை கொண்டாய்
புன்புலால் மயிர்த்தோல் நரம்பென்பு மொய்த்திடும்
 புலைக்குடிலி லருவ ருப்புப்
பொய்யல்ல வேயிதனை மெய்யென்று நம்பியென்
 புந்திசலு மோபா ழிலே,
துன்பமா யலைபவோ வுலகநடை யையவொரு
 சொப்பனத் திலும்வேண் டிலேன்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
 சோதியே சுகவா ரியே.

## கருணாகரக் கடவுள்.

பக்குவவி சேடராய் நெக்குநெக் குருகிப் பணிந்தெழுந் திருகைகூப்பிக், கண்ணீறு கரைபுரள நின்றவன் பறையெலாங் கைவிடாக் காட்சியுறவே, கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு கருணாக ரக்கடவுளே.

## ஓழிவி லோடுக்கம்.

"வேர்க்குங்கண் ணீர்த்ததும்புங் கம்பிக்கு மெய்ந்நடுங்கும்
வார்த்தை நழுவு மனம்பதறுங்—கார்க்கதமாய்க்
காந்து முரோமாஞ் சலியாகுங் காதலித்தார்க்
கேய்ந்தகுணங் காணிவையெட் டும்."

"அரைகோட்டஞ் சிந்தை பெருமூச் சறியாச்
சுரமூட்ட மெல்லாந் துறத்த—லுரைதோற்று
யான மவுனம் விகள மறவைசா
வானவிவை பத்துமவத் தை."

## அருள்வாக்கியர் அகவல்.

"சித்தியும் முத்தியுஞ் சிறந்தருள் கொழிக்கு
நித்திய நிரஞ்சன நிராலம்ப நிறைவைப்
பாடியு நாடியும் பணிந்தெழுந் தன்பா
லாடியு மறற்றியு மகங்குழை வெய்தியு
முடலங் குழைய வுரோமஞ் சிலிர்ப்பப்
படபடன் றுள்ளம் பதைத்துப் பதைத்துப்
பாங்குறுநெட் டுயிர்ப் பரிகிப் பரதவித்
தேங்கியேங்கி யிரங்கி யிரங்கி
யோய்ந்தபம் பரம்போ லொடுங்கிச் சிறிது
மேய்ந்த விழிக ளிமைப்பது மின்றிச்
சேர்ந்து சேர்ந்து துவண்டு துவண்டுமெய்
பாய்ந்த வன்போ டவசமுற் றடிக்கடி
யுண்ணடுக் குறவே யுருகியே சுற்றித்
தண்ணமர் பொழியுந் தழுதழுத் திடவே
யுள்ளும் புறம்பு மொருமித் துருகி
வெள்ளநீர் போல விழிநீர் பெருகிக்

கன்று பசுவைக் கதறிக் கதறிச்
சென்றுசென் றோடித் திகைப்பதுபோல
வென்புநெக் குடைய விருகரங் குவித்துப்
புன்புலா லாக்கை பொருந்தா தினியென."

இன்னுமிவ்வாறு பல பிரமாணங்களுண்டு.

ஐந்தாவது அனுவாகம் முற்றிற்று.

## ஆறுவது அனுவாகம்.

(1) அதிகாரி புருஷன் அங்ஙனம் விடையாநந்தத்தைத் துறந்து பேராநந்தத்தைப் பெறுதற் கேதுவாகிய சிவஞானத்தைப் பெறவேண்டுமென்று மேற்சொல்லிய குணங்களில் இரண்டொன்றைப்பெற்றுப் பரமகிருபா நிதியாகிய ஞானசாரியரைத் தேடியடையவேண்டுமென்று கருதிநிற்கும் பொழுது, அவ்வாசாரியர் கிடைத்திலராயினும் மீண்டும் அக்குணங்களைக் கைவிட்டுவிடாது அவ்வாசாரியரையே பெறநாடி நிற்றல்வேண்டுமே யல்லாது அவற்றைத் துறந்து விடையாநந்தங்களை மறுபடியும் இச்சிக்கலாகாது(அஃதாவது சித்தஞ் சலித்து வயிராக்கியத்தை நழுவவிட்டு விடலாகாது).

(2) அன்றியும் ஒருவன்வயிறும்மனமுமுவந்து புசித்த அறுசுவைப் பதார்த்தங்களை மீண்டும் கக்கிவிடுவானாயின் அவன் தனக்கு அவை அருவருப்பாவனவாம். அஃதாவது அவன் தன் மனமுவந்து புசித்த பண்டபலாதிகளே நஞ்சைப்போலத் தோற்றுவனவாம். இதனால் முன்னர் அனுபவித்து விட்ட விடையபோகங்களை நஞ்செனத் தள்ளி நிற்றல்வேண்டுமென்பதாயிற்று.

(3) அன்றியும் அவன்"தாக்கு மிடிவந்தாற் சலியாதே"என்றபடி நாடியபொருளிலேயே நாடிநிற்க வேண்டுமேயல்லாது துறந்தவிடைய சுகபோகங்களில் மனதை மெள்ள நழுவவிடலாகாது. நழுவவிட்டு விடுவானாயின்

"ஆசையெனும் பெருங்காற்றூ டிலவம்பஞ் செனவுமன மலையுங் காலை, மோசம்வரு மிதனாலே கற்றதுங்கேட் டதுந்தூர்ந்து முத்திக் கான, நேசமுநல் வாசமும்போய்ப் புலனாயிற் கொடுமைபற்றி நிர்ப்ப ரந்தோ, தேசுபழுத் தருள்பழுத்த பராபரமே நிராசையின்றேற் றெய்வ முண்டோ."

என்றபடி மேற்சொல்லிய குணங்களிலிரண்டொன்று கிடைத்ததும் போய்விடும்; அஃதாவது பேரின்பத்தில் வைத்திருந்த அன்பையுமிழந்து அவித்தியா காமகர்மவசத்திற்சிக்கியுழலவேண்டுமென்பதாயிற்று.

(4) இஃதன்றியும், ஆணும் பெண்ணுமாகக்கூடிச் சுகிக்கும் காமசுகம் ஒரு தலைக்காமமெனவும் இருதலைக்காமமெனவும் இருவகையாகச் சொல்லப்படும். இவற்றுள் ஒருவர் பால் மிகுந்தும் ஒருவர் பால்குறைந்தும் மனமொவ்வாதிருக்க இருவரும் கூடுவது ஒரு தலைக்காமமாம்; இருவரும்மனமொத்துக் கூடுவது இருதலைக் காமமாம். இங்ஙனங் கூறியவற்றுள், புருஷன் விழையாதிருப்பினும் மனைவி விழைந்து பற்றிப் புணரும் ஒருதலைக் காமத்தைப் போல, வனிதையாதி விடய சுகபோகங்களைத் துறந்து பேரானந்த சிவஞானம்பெறவேண்டுமென்று விரும்பியவன் தனக்கு அதனைக் கொடுக்கவல்ல ஞானசாரியர் கிடைத்திலாராயினும் மேற்சொல்லிய குணங்களில் கிடைத்தவைகளைக் கைவிடாது (அஃதாவது சித்தஞ் சலியாதுபற்றி நிற்கவேண்டுமென்பதாயிற்று).

(5) மேற்சொல்லிய மனைவியுடன் தலைவன் கூடியின்பங்கொடாதிருப்பினும் அம்மனைவி அப்புருடனைத் தவிரப் பிற புருடனையிச்சிக்காது அவனையே நாடிநிற்பாளாயின் (அஃதாவது கற்புநிலை கெடாது நிற்பாளாயின்), மேற்சொல்லிய புருடன் இவள் கற்பு நிலையைக்கண்டு நமது மனைவி நம்மைத் தவிர மற்றொருவரையும் நாடாதிருக்கின்றனளே என்று மிகுந்த அன்போடும் அவளுடன் கூடியின்பங்கொடுப்பானன்றோ; அதுபோல,

தான் விடயானந்தத்தைத் துறந்து மீட்டுமனதை யதிற்செல்லவொட்டாதுதடுத்து அந்நிலைமையிலேயே தவ கற்பாகிய வயிராக்கியங் கெடாது நிற்பானாயின் சிவம் இவன் நிலைமையைக் கண்டு தனது பேரானந்தத்தைத் தவிர மற்றொன்றையும் நாடாதிருக்கின்றானென்றும் கருணைகூர்ந்து தானே தனது பேரானந்தத்தைக் கொடுக்கவல்ல ஆசாரியராய்த்தோன்றி இரக்ஷிக்குமென்பதாம்.

(6) அவன் அங்ஙனமின்றி வயிராக்கியத்தை நழுவவிட்டுவிடுவானாயின் மேற்கூறிய மனைவி தன் கணவன் தன்னைக் கூடி யின்பங்கொடுக்கவில்லையே யென்று கற்பு நிலையைத் தவறவிட்டு விடுவாளாயின் அவளது கற்பினை நோக்கிக்கொண்டு வந்த கணவனு

க்கு இவனுடன் ஏகதேசமாய்க் கூடலாமென்று எண்ணமுதித்த தாயிருப்பினும் மாறிவிடுவது போல.

இவனுடைய தவக்கற்பைக் கண்டு சிவம்காருண்யத்தால்மேற் சொல்லிய சத்தாவத்தைக்குரிய குணங்களைக் கொடுத்திருந்த போதிலும் அவை யொழிந்து போகக் கால சக்கரத்தின் சுழற்சியிற் சஞ்சரிக்கும்படி நேரிடும்.

(1) அன்றியும் ஒருவன் யான் முப்பத்தாறடி தூரம் தாண்டுவேனென்று பந்தயங் கட்டிக்கொண்டு தாண்டும் பொழுதில் அம் முப்பத்தாறடியில் ஓரடி குறைந்து முப்பத்தைந்தாம் அடியில் விழுந்தானாயினும், பந்தயம் தோற்றுப்போம்; ஆனபோதிலும்,

அவன் தலைமுதலிய உறுப்புக்கள் முப்பத்தாறாமடியிலேயே விழும்; அதுபோல,

வனிதையாதி விடயசுகபோகங்களைத் தாண்டிப் பேரானந்தமாகிய சிவஞானத்தையடைய வேண்டுமென்று விருதுகட்டிக் கொண்டு அதனையடையத் தக்க குணங்களை (அஃதாவது சாதன சதுட்டயங்களைக்கைப்பற்றி நிற்கும்பொழுது பரமகிருபா நிதியாகிய ஞானசாரியர் கிடைத்திலராயினும்,

செத்தாலும் வைத்தவடி பின்வாங்காமல் (அஃதாவது தவக்கற்பாகிய வயிராக்கியம்கெடாது) அப்பேரானந்தத்தையே பெற நாடி நிற்பின் எவ்விதத்திலும் சிவம் கருணை கூர்ந்து தனது பேரானந்தத்தைக்கொடுக்க வல்ல ஞானசாரியராய்த் தோன்றி அவனை இரக்ஷிக்கும்.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

ஒழிவி லொடுக்கம்.

"கரைபடுக்க வந்தாற் றிரையலைக்குங் கப்பல்
பொருளடுத்தாற் றோன்றும்பொய்ப்போதம்—விருதினவன்
வெற்றிக் குதிகுதித்தோன் போல்வேண்டும் விட்டதுபின்
பற்றுமதிற் சிக்கெனநிற் பாய்."

இவ்வாறு பல பிரமாணங்களுண்டு.

ஆறாவது அநுவாகம் முற்றிற்று.

## ஏழாவது அனுவாகம்.

(1) இவ்வனுவாகத்தில் மேற்சொல்லிய பக்குவ நிலையில் நிற்கும் புண்ணியர்களை அபக்குவிகளாகிய பிரபஞ்சிகள் அறியாரென்பதும் அவர்களுக்கு இவர்கள் மிகவும் தாழ்வையுடையவர்களென்பதுஞ் சொல்லப்படும்.

மனதில் உண்மையைப் படைத்து உத்தமபக்குவராய புண்ணியர்கள் தமக்குப் பகையுள்ளதும், பொய்யுறவாயுள்ளதும், சதா துன்பத்தையே தரத்தக்கதுமான இவ்வுடலுக்குளன்னகருசி விடயானந்தத்தை யனுபவிப்பது என்றும், அல்லாமலும் இந்த உடலே தம்மைப் பிறவியாகிய நரகேழிலும் இழுத்துக்கொண்டு போய்விட்டு அவற்றின் புசிப்பாகிய துன்பங்களையுண்ணச் செய்யுமென்று பயந்து, உடலைத் தானென்றறிவதில்லாது நடக்கக்கூடியவைகளெல்லாம் பிராரத்துவமென்று அநுபவித்து, போதாநந்தத்தையே பெறநாடி அதனையடையத்தக்க குணங்களைக் கைவிடாது அந்நிலைமையிலேயே நிற்பார்கள்.

பிரபஞ்சிகள் அக்குணங்களில்லாதவர் அஃதாவது அபக்குவர்களாய்ச் சகலவேதாகம சாத்திரங்களையும் கற்றுணர்ந்தாலும் பிறருக்கு அவற்றினருத்தமெல்லாம் குற்றமறக் கூறினாலும் தாம் கற்றபடி மனதை நிறுத்தி அருளைப் பெறாது,

தமக்கன்னியமாகிய உடலைத் தானென்று தூக்கிக்கொண்டு சதாவதனையே பூசிக்கவும் அதற்காகவே பாடுபடவும் தேடவும் உண்ணவும் உறங்கவுமெண்ணி விடயானந்தத்தையே புசித்து முடிவில் எமன்வாய்க்கிரையாவார்கள்.

(2) இக்குற்றம் நீங்கிய உத்தமநிலையையுடைய புண்ணியர்கள் வேதாகமசாஸ்திரங்களனைத்தையும் தெளிவுறக்கற்றுணர்ந்து, அவைகூறிய நெறிப்படிமனதை நிறுத்தி ஞானசாரியரைத் தேடியடைந்து, அவர் கிருபாநோக்கத்தாற் சிவஞானத்தைப்பெற்று போதாநந்தத்தை யனுபவித்து பிறவித்துன்பத்தை யொழிப்பார்கள்.

அஞ்ஞானிகளாகிய அபக்குவர்கள் கற்றபடி மனதை நிறுத்தவறியார்கள். அஃதெங்ஙனமெனின்,

பசுமாட்டினது விம்பிச் சுரந்த முலையில் கடித்த உண்ணியானது அம்முலையிற் சுரந்திருக்கும் அமுர்தத்தைப் புசிக்கவறியாது உதிரத்தைப் புசிப்பது போல்வதாம், வேதாந்தசாஸ்திரங்களைக் கற்றுணர்ந்து அவைகூறிய நெறிப்படி மனதை நிறுத்தி அதிற் சுரந்திருக்கும் சிவஞானப்பாலைப் புசித்துப் பிறவித்துன்பத்தை யொழிக்க வறியாதாரது செய்கை.

இஃதன்றியும், தாம் கற்றநூலின் கருத்தையெல்லாம் பிறர்க்குத் தெளிவுறச்சொல்லிக் காட்டுபவர்கள் கற்றபடி மனதை நிறுத்தியபுண்ணியர்களைப்போலஇடம்ப நிமித்தமாக அபிமானித்துப் பேசுவார்கள்.

மேலும், அவர்கள் வெறிகொண்ட நாய் நல்லார்பொல்லாரென்று சிறிதுமறியாது விழுந்து கடிப்பதுபோல, சாதன சதுட்டயங்களைக் கைப்பற்றிநிற்கும் புண்ணியர்களைக் கண்டால் வலிய அவர்களிடத்தில் வந்து வாக்குவாதப் பேசி உண்டென்பதை யில்லையென்றும் இல்லையென்பதை யுண்டென்றும் தர்க்கம் பேசித் தாம் நாசமடைவதுமன்றிச் சிறிதும் மனங்கலங்கா திருக்கும் புண்ணியர்களின் மனதைப் புண்படுத்தி முடிவில் எமதண்டனைக் குட்பட்டுப் பிறவிச் சாகரத்தில் விழுந்துழலுவார்கள்.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

தாயுமானவர்.

"கற்றதுங் கேட்டதுந் தானே யேதுக்காகக்
கடபடமென் றுருட்டுதற்கோ கல்லா லெம்மான்
குற்றமறக் கைகாட்டுங் கருத்தைக் கொண்டு
குணங்குறியற் றின்பநிஷ்டை கூட வன்றோ."

பாயப்புலி.

கற்றும் பலபல கேள்விகள் கேட்டுங் கறங்கெனவே
சுற்றுந் தொழில்கற்றுச் சிற்றின்பத் தூடு சுழலிலென்னாங்
குற்றங் குறைந்து குணமே விடுமன்பர் கூட்டத்தையே
முற்றுந் துணையென நம்புகண் டாய்சுத்த மூடநெஞ்சே."

கண்ணுடைய வள்ளல்.

முலையுண்ணி நீருண்ணு மோட்டெருமை மூடர்
சலமின்றிச் சந்துரைப்பார் தர்க்கர்—பலதாரை

வட்டிலே போனுமவர் மாயோக வாசகத்தைக்
கிட்டி னரகக் கிடீர்.''

இவ்வாறு பல பிரமாணங்களுண்டு.

(3) மேலும், கல்விச்செல்வம் பொருட்செல்வமென்னும் இவ்விரண்டும் நல்லோர்பால் வரின் மென்மேலும் நன்மையையும், தீயோர்பால்வரின் மென்மேலும் தீமையையும் விளைவிக்குமென்பது கருத்து.

(4) இஃதன்றியும், அகத்தில் மெய்யைப்படைத்த உத்கமர்களாகிய புண்ணியர்கள் தேகாதிப் பிரபஞ்சங்களெல்லாம் பொய்யென்றும் கானனீர் சொப்பனம் போல்வனவா மென்றும் குற்றமறத் தெளிந்திருப்பார்கள்.

அபக்குவர்களோ மேற்கூறிய வற்றை மெய்யென்றும் இவற்றைத் தவிர வேறு சுகமில்லையென்றும் கருதி, இவையனைத்திற்கும் சிறந்த காரணமாகிய பொன்னையே தேடியுழன்று அல்ப ஆனந்தத்தை யனுபவித்து மடிவார்கள்.

அன்றியும்,அஞ்ஞானிகள் நாடும் நகரும், தாயுந் தந்தையும், வீடும் மனைவியும், நட்பும் மக்களுஞ், சுற்றமும் மாடும், சாதியும் திரவியமு முதலிய அனித்தியவஸ்துவை நித்தியவஸ்துவென்று கருதிக்கொண்டு, நீ நான் எனது என்னும் மும்மலக் கயிற்றால் கட்டுண்டு கிடப்பார்கள்.

மேற்சொல்லியவைகளுள், ஏதேனுமொன்று நழுவிவிட்டாலோ மிகுந்த துக்க சாகரத்தி லழுந்துவார்கள்.

(5) இக்குற்றம் நீங்கிய புண்ணியர்கள் மேற்கூறிய அநித்தியவஸ்துக்களைத்தமக்கன்னியமென்றும், இவற்றில் சொற்ப இன்பத்தை அனுபவித்தால், பின்னர் அளவிறந்த துன்பத்தை அனுபவிக்கவேண்டுமென்றுங்கண்டு, இவைகளுக்கெல்லாம் காரணம் உடலைத் தானென்று கருதுவதென்று பிழையற வுணர்ந்து, இவை நீங்கிப் பேரானந்தத்தையே பெறநாடி, வைராக்கியங் கெடாது நிற்பார்கள்.

அபக்குவர்களாகிய அஞ்ஞானிகளுக்கோ அனித்திய வஸ்துவில் ஒன்றைப் பெறுவது பெருமையாய்த் தோன்றும்.

உத்தமபக்குவர்களாகிய புண்ணியர்களுக்கோ அனித்திய வஸ்துவில் ஒன்றையிழப்பது பெருமையாய்த் தோன்றும்.

(6) இஃதல்லாமலும், அபக்குவ நிலையையுடைய அஞ்ஞானிகள் (அஃதாவது பிரபஞ்சிகள்) இம்மைக்கண்ணே துன்பங்களையெல்லாம் ஏற்றுக்கொள்வதாய கப்பல் போன்றவராயும், மறுமைக்கண்ணே எழுவகைப் பிறவிக்கேதுவாகிய எழுவகை நரகங்களையும் உண்டாக்குவதாகிய பெருமையை யுடையவர்களாகியும் உள்ளவராவர்; அல்லாமலும், மனை சுதர் முதலியபந்தங்கள் இகத்திலும் பரத்திலும் துன்பத்தைக் கொடுக்கக்கூடியவைகளென்றறியாதிருக்கின்றனர். ஆயினும், அவர்கள்மேல் சிறிதுங் குற்றமில்லை; அங்ஙனம் அறியவொட்டாது மறைத்தது ஆணவமலமாம்.

(7) இவ்வாணவ மலக்குற்றம் நீங்க மூபலும் புண்ணியர்கள் மேற்கூறியவற்றை (அஃதாவது வனிதையாதிவிட்ய சுகபோகங்களை) நினைக்கிலும் பார்க்கிலும் உள்ளம் வெருவி நடுக்குற்று என்றைக்கோ பேரானந்தமாகிய சிவஞானத்தை யடைவோமென்று விசாரஞான மெய்தி நிற்பார்கள்.

இஃதன்றியும், உத்தம நிலையையுடைய புண்ணியர்கள் பிரபஞ்ச உறவிற்கு மிகவும் நெஞ்சமஞ்சுவார்கள்.

அபக்குவர்களாகிய அஞ்ஞானிகள் பிரபஞ்சவுறவைச் சிறிதும் விட்டுவிடுவதற்கு மிகவும் நெஞ்சமஞ்சுவார்கள்.

மேலும், பக்குவமுதிர்ந்த புண்ணியர்கள் தேகாபிமானத்தை வென்றவர்கள்.

அபக்குவர்களாகிய அஞ்ஞானிகள் தேகாபிமானத்தை வெல்ல வழியறியார்கள்.

இங்ஙனம் பலதாரதம்மியம் இவ்விருவர்கட்கும் இருக்கின்றன. இதுகாறும் சாதனசதுட்டயத்தைப் பெற்றுச் சுத்தாவத்தையில் நிற்கும் பெரியோர்களுக்கு மும்மலச்செருக்கால் விடயானந்தத்தழுந்திக் கிடக்கும் பிரபஞ்சிகள் மிகுந்த தாழ்வையுடையவர் என்பது சொல்லப்பட்டது.

இரண்டாவது அத்தியாயம்

முற்றிற்று.

மூன்றாவது அத்தியாயம்.

நித்தன்மலரடி-நெஞ்சில் நிறுத்துவோர்
முத்தியைப் பெற்று-முதல்வனுமாவர்.
ஆனைமுக னாறுமுக னம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுண் ணுடு.

## ஆசாரிய ரனுசாரிய ரியல்பு.

### முதல் அனுவாகம்.

நேரிசை வெண்பா.

"தந்தைதா யாவானுஞ் சார்கதியிங் காவானு
மந்தமிலா வின்பநமக் காவானும்—எந்தனுயிர்
தானாகு வானுஞ் சரணாகு வானுமருட்
கோனாகு வானுங் குரு."

இவ்வத்தியாயத்துள் மேற்கூறிய பரமகிருபாநிதியாகிய ஞானசாரியரிலக்கணமும், அனுசாரியரிலக்கணமும் கூறப்படுகின்றன.

(1) சைகையினால் உண்மைஞானங் கற்பிக்கக்கூடியவராகியும் அஃதாவது சின்முத்திரை மோனமுத்திரை முதலிய பஞ்சமுத்திரைகளைக்கொண்டு பிரமோபதேசக்கிருபை பாலிக்கக் கூடியவராயும்,

வேதாந்த ரகசியப் பொருள்களை வெகு சுலபமாய்ப் பக்குவர்களுக்கு அறிவிக்கக் கூடியவராகியும்,

பக்குவர்களின் மனநிலைமையைக் கண்டு வலியதடுத்தாட்கொள்ளும் அருள்வல்லபமுடையவராகியும் உள்ளவர் பரமகிருபாநிதியாகிய ஞானசாரியராவர்.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

தாயுமானவர்.

"கல்லாலி னீழறனி லொருநால் வர்க்குங்
கடவுணீ யுணர்த்துவதுங் கைகாட் டென்றால்
சொல்லாலே சொலப்படுமோ சொல்லுந் தன்மை
துரும்புபற்றிக் கடல்கடக்குந் துணிபேயன்றோ"

"பன்முத் திரைச்சமயம் பாழ்படக்கல் லாலடிவாழ்
சின்முத் திரையரசைச் சேர்வேனே பைங்கிளியே"

சிவாநந்தபோதம்.

"சாயுச்சிய முத்திரையை யடுத்துக் காத்துச் சங்கையறத் திருவுளத்துப் பாங்குக் கொத்தல், நீயுச்சிய மாகவென்று கிருபை நோக்கில் நேரான முத்தொழிலும் வல்ல தாகும், மாயுச்சிய மாகவே யப்பலத்தான் மலரடிக்கே யன்பாகச் செய்வாய் நீதான், பாயுச்சிய மாகவே பெற்றோ ருண்டு பராபரத்தை யடைந்ததின் பண்பிதுவ தாமே."

" சன்யாசி யானதிலும் மூடருண்டு சம்சாரம் செய்வதிலும் ஞானி யுண்டு, முன்னமேல யேதுவாம் பிராரத் துவங்கள் மூட்டி விட்ட ஞானிக்கு முறைதப் பாது, பின்னமேல யிருவினையும் தொடாச் செய்து பெற்றிடுவா ராசான்றன் கிருபையாலே, பின்ன பின் னங்களா லென்றெ ணுதே பெருஞ்சோதி முத்திரையைப் பேணிக் கூடே."

ஒழிவி லோடுக்கம்.

"வேதாக மப்பவுரி வீசுங்க் ளாசநிலை
யாதார வெற்பி லபிடேகம்—போதத்
திருளிலெழு பானு வெனதொழிவி லின்பக்
கருணைபொழி வானெடுத்த கை."

பட்டணத்தார்.

" கல்வியல்ல கேள்வியல்ல கைகாட்டுங் காரணங்காண்
எல்லையள வற்றதடி யெங்கும் நிறைந்ததடி."

(2) ஒருதாயானவள் தன் குழந்தைக்கு வானத்தின்கண் உள்ள சந்திரனைக்காட்டும் பொருட்டு முந்திப்பூமியின்கண் உள்ள ஒருசிறிய தருவைக்காண்பித்து, அதிலுள்ள இலை காய் கனிகளைக் காண்பித்து, அவற்றில் அக்குழந்தையின் மனதைச் சற்றுநிறுத்தி, பின்னர்தினுஞ்சற்று உயரமாயுள்ள ஒரு மரத்தைக்காண்பித்து, அம்மரத்திலுள்ள வஸ்துக்களைக் காண்பித்து, அவற்றிற் சற்றுமனதை நிறுத்தி, பின்னரதினும் உயரமாயுள்ள ஒருபெரிய ஆலவிருக்ஷத்தைக் காண்பித்து, அதிற்சற்றுமனதை நிறுத்தி, மீண்டு மக்குழந்தையின் மனதைக் கீழ்நோக்கவிடாது

ஆகாயத்தைக்காண்பித்து, அதிலுள்ள நட்சத்திரங்களைக் காண்பித்து, பின்தான் காட்டவேண்டிய சந்திரனைக் காட்டுவாள்; அதுபோல,

தம்மையடைந்த பக்குவர்களுக்கு முன்னர்ச் சடமாயுள்ள தத்துவங்களையெல்லாம் அடி தொடங்கி வேறுவேறாய்த் தரிசனம் பண்ணும்படி செய்து (அஃதாவது ஆரோபவிலக்கணத்தால்நியதிகளைந்து), பின்னர் அபவாதவிலக்கணத்தால் தாஞகிய சித்தை அஃதாவது தனதாத்மாவைத் தரிசிக்கும்படி செய்யக் கூடியவராயும்,

பறவையானது தனதுமுட்டைகளைச் செட்டையால் பரிசித்தாற்போல மாணுக்கன் பிராரத்துவமாய்வந்த பௌதிகவடிவம் நீங்கி நித்தியாநந்தமாக விளங்க அவனுக்கு, தமது பரிபூரணுனந்தமாக வியாபித்துக் கரசரணங்களாற் பரிசிக்கக் கூடியவராயும்,

ஆமையானது கரையிலிருந்த தனது முட்டைகளைத் தன் மனதிற் பாவிப்பதுபோல மாணுக்கன் விஷயத்தை நினைக்கும் ஆகாமியவினையைக்கெடுத்து அறிவை யுணரும்படி சிந்திக்கக் கூடியவராயும்,

மீனானது தனது சினையைப்பார்ப்பதுபோல மாணுக்கனுக்கு முன்பந்தப்பட்டிருந்த சஞ்சிதவினையொழியும் பொருட்டு அவனைத் தமது கிருபாநோக்கத்தாற் பார்க்கக்கூடியவராயும் இருப்பவர் ஆசாரியராவர்.

ஆசாரியர் இவ்விதமாக மாணுக்கனுடைய ஆணவமலம் மாயாமலம் கன்மமலமாகிய மும்மலங்களையும் மேற்சொல்லிய தீக்கைகளால் நீக்கியருள்வாரென்க.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

கைவல்லிய நவநீதம்.

"தாலத்தின் மரங்கள் காட்டித் தனிப்பிறை காட்டுவார்போல்
ஆலத்தி னுடுக்கள் காட்டி யருந்ததி காட்டு வார்போல்
தூலத்தை முன்பு காட்டிச் சூக்கும சொரூபமான
மூலத்தைப் பின்பு காட்ட முனிவரர் தொடங்கினரே."

"அன்னைதன் சிசுவை யைய னுமைமீன் பறவை போலத்
தன்னகங் கருதி நோக்கித் தடவிச்சன் னதியி ருத்தி
உன்னது பிறவிமாற்று முபாயமொன் றுண்டு சொல்வேன்
சொன்னது கேட்பா யாகிற் றொடர்பவந் தொலையு மென்றார்."

ஒழிவி லொடுக்கம்.

பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துமல மாயை
கருமத்தை யெல்லாங் கழற்றிச்—சரிதாதி
வாதனையாம் போத மயக்கத்தை வாக்காலே
போதைசெய்து போக்கிவிடப் போம்.

இங்ஙனம் பிராரத்தகன்மம் ஆகாமியகன்மம் சஞ்சிதகன்ம மென்று மூன்றுவகையாகச் சொல்லப்பட்டவையாவன:—

(a) சஞ்சிதமென்றது சென்ற ஜனனங்களிற் செய்யப் பட்டுப் பலனனுபவிக்காமற்பாக்கியாயுள்ளகர்மம். (b) பிராரத்துவ மென்றது சென்ற ஜனனங்களிற் செய்யப்பட்டு நிகழ்காலத்தில் அனுபவிக்கவேண்டிய கன்மம் (c) ஆகாமியமென்றது நிகழ்காலத் திற் செய்யப்படுகிறவினைக்குத் தக்கபடி மறு ஜன்மத்திற் கேது வாகிய கன்மம்.

(3) இஃதன்றியும், குண்டமண்டல வேதிகாதிகளைக் கூறும் தந்திரகலைகளும், மந்திரயோகாதியாகங்களைக் கூறும் மந்திரகலை களும், ஆன்மாவை மென்மேலும் மலச்சார்போடழுந்தப்பண்ணு மாகையால் இம்மந்திர தந்திர கிரியாபாவனைகளாற் செய்யும் சரிதையாதிகளை நீக்குதற் பொருட்டு இவை நீங்கற்கேதுவாகிய (அஃதாவது தற்போதங் கெடற்பொருட்டு) உபதேச மொழிகளைத் தமது திருவாக்கால் போதிக்கக்கூடியவராயும்,

(4) அல்லாமலும், தம்மைத்தேடியடைந்த பக்குவர்கள் பக்கு வத்தேர்ச்சியில்லாதவர்களாயிருப்பினும் தமது போநந்தத்தைக் கொடுக்கும்பொருட்டு அவர்களின்மனதைச் சிறிதும் வருத்தப் படுத்தாது நானாவிதவுபாயங்களினாலும் பலவிதத் திருஷ்டாந்தங் களினாலும் அவரைக்கொண்டே அவராக்கவல்ல கிருபையை யுடையவராயும்,

(5) அன்றியும், தமதுயிருள்ளிருந்து தெரியாது தாம்தேடிக் கொண்டிருந்த தேட்டமாகிய போநந்த அருளேவடிவுகொண் டெழுந்தருளியுள்ளவராயும்,

(6) மேலும், தம்மையடைந்த பக்குவர் அறியாமையாற் செய்யும் (அஃதாவது ஆணவமலத்தால் தவறிச்செய்யும்) குற்றங்களை யெல்லாம் குணமாக்கொள்ளும் கிருபாகடாக்ஷமுள்ளவராயும்,

(7) அன்றியும் தாம், உபதேசிக்கும் ஞானத்திற்குத் தடையாயுள்ள அஞ்ஞான விபரீதசந்தேகங்களை யப்போதைக் கப்போதே தீர்த்து, தேகமல்லாது அதனுள்ளிருக்கும் தேகியையுணரும்படி செய்யக்கூடியவராயும், (அஃதாவது கூடஸ்தனைத் தரிசிக்கும்படி கிருபைபாலிக்கக்கூடியவராயும்)

(8) இஃதல்லாமலும், நால்வகையாய பக்குவங்களில் அவரவர்களுக்குத் தக்கபடி அருளைத்தராத்தக்கவராயும் (அஃதாவது பக்குவங்கண்டறிவிக்கும் பான்மையுடையவராயும்),

(9) அன்றியும், பேராநந்தமாகிய சிவஞானத்தை விரும்பி யதனையடையத்தக்க குணங்களைக் கைக்கொண்டு (அஃதாவது சாதனசதுட்டயங்களைப் பெற்று),

சதாகாலமும் ஒரு புருடனைவிட்டு நீங்காத பூவையைப் போலவும் தன்கணவனைத் தவிர மற்றொருவனையும் தன்மனதிற் பாவிக்காதபதிவிரதையைப்போலவும் தம்மையடுத்துள்ள பக்குவர்களைச் சிசுவைப்போலவும், கன்றைப்போலவும் பாவித்து அருட்கண்சாற்றி இரக்ஷிக்கக் கூடியவராயும்,

(10) இன்னு மற்றுமுள்ள சர்வ இலக்ஷணங்களு முடையவராயு முள்ளவரே பரமகிருபாநிதியாகிய ஞானசாரியரெனப் படுவர்.

(11) இங்கு நால்வகையாய பக்குவமென்றதாவது மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என்பனவாம். இவற்றுள், தீவிரதரபக்குவர்களுக்குஆசாரியர் ஒரு மொழியுங்கூறாது மோனநந்த நோக்கமாயிருக்க, ஆன்மா தன்மயமாகிவிடும்.

தீவிரபக்குவர்களுக்குகோ தற்போதங்கெடுத்ற் கேது ஒரு மொழியாம். அவர் அதனைச்சஞ்சீவிமருந்துபோ லுட்கொண்டால் ஆன்மா தன்மயமாகிவிடும்.

மந்ததரப்பக்குவர்களுக்கு விட்டிசையா திசைக்கும் தும்பியின் வாக்குப்போலச் சிற்சில ஞானசாஸ்திரங்களைக் கொண்டறிவிக்க ஆத்மசுத்தியாம். மந்தபக்குவர்களுக்கு நாநாவித வுபாயங்களினலும் பலவிதசாஸ்திரங்களினலும் இடையரு தறிவிக்க ஆன்மசுத்தியாம்.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

கண்ணுடைய வள்ளல்.

" சும்மாதே பார்த்திருக்கச் சுத்தியா முத்தமர்க்கு
தம்மாய்வார்க் கோருரையே சஞ்சீவி—மென்மேலு
மாற்றஞ் சகுணப்புள் வாக்கு மதுவுண்ட
போறும்பி யின்வாக்குப் போல். "

(12) ஆகவே, எத்தனை யதிதீவிர பக்குவர்களாயிருப்பினும் மேற்சொல்லிய பாமகிருபாநிதியாகிய ஞானசாரியரைத் தேடியடைந்தவர்களே முத்திவீட்டை யுணர்வார் (அஃதாவது தம தாத்ம சொரூபத்தைத் தாமே யுணர்ந்துகொள்ளுவார்) என்பது இவ்வனுவாகத்தின் தாற்பரியமாம்.

மூன்றாவது அத்தியாயம்

முதல் அனுவாகம் முற்றிற்று.

காரிய மன்றுநீ காரண மாமென
ஆரியன் மகிழ்வோ டடிமைக் குரைத்தது.

இரண்டாம் அநுவாகம்.

(1) இவ்வனுவாகத்தில் மேற்சொல்லிய பரமகிருபா நிதியாகிய ஞானசிரியரை யடைந்த புண்ணியர்கள் அன்னவரை இம்முறையாக வணங்கி உபதேசம்பெற்றுக் கொள்வார்களென்பதும், அங்ஙனம் பெற்றுக்கொண்ட உபதேசப் பொருளை இம்முறையாக வேற்றுக்கொள்வார்க ளென்பதும், அங்ஙனமேற்றுக் கொண்டபின் இம்முறையாக மனதையடக்கிச் சொரூபாநந்தம் பெறுவார்களென்பதும் சொல்லப்படுகின்றன.

அண்டஜம் உற்பீஜம் சராயுஜம் சுவேதஜமென்னும் நால்வகைப் பிறவிகளிலும் எழுவகைத் தோற்றங்களிலும் எண்பத்து நான்கு நூறுயிர யோனிபேதங்களிலும் அநந்த உருக்கொண்டு மாறிமாறிச்சுழன்று (அஃதாவது செத்துப்பிறந்து செத்துப் பிறந்து) ஈசுரகடாக்ஷத்தால் இம்மானிட வுருவெடுத்து,

"எழுவகையின் றோற்றமாய்க் கடந்தோறும் பலவிதமாயின்ப முற்றே, பழுதறவே தேகம்வரும் பேய்மனமே நீசெய்த பண்பி னாலே".

என்கிறபடி அம்மானிட வுருவிலும் அநந்தங் கோடியில் சிவபுண்ணியஞ் செய்யும்படி நேரிட்டு, அச்சிவபுண்ணிய மேலீட்டால் சிவத்தொண்டுபூண்டு (அஃதாவது அடியாருக்கடிமை செய்து)முன் விட்டகுறை தொட்டகுறையால் இருவினை யொப்பு மலபரிபாகம் பிறந்து, உயிர்ச்சார்பு பொருட்சார்பு முதலியவைகளைத் துரிசறவிடுத்து, மேற்கூறிய குணங்களைக் கைக்கொண்டு, வைராக்கியங் கெடாது சுத்தநிலைமையில் நிற்கும் புண்ணியர்களுக்கு மேற்குறித்த பரமகிருபாநிதியாகிய ஞானசாரியர் எதிர்ப்படுவர்; அவர் எதிர்ப்பட்ட மாத்திரத்தில், அப்புண்ணியர்கள் அன்பெனுமாறு கரைபுரண்டு பெருக அவ்வாசாரியரைப் பலதரம் வலமிட மிடம்வலமாக வணங்கி, பின்பெழுந்து, அஞ்சலியத்தராய்க் கண்களில் ஆநந்தக் கண்ணீர் ஒழுக, அநேகதோத்திரம் பண்ணி, எமதாண்டவரே! எமது குலதெய்வமே! அடியேங்களைத் துன்பக்கடலினின்றும் கரையேற்றி யின்பக்கடலில் அமிழ்த்தவேண்டி யிம்மானிட வுருக்கொண்டெழுந்தருளிய குரு சுவாமியே! எமதப்பனே! எமதப்பனே! என்று பின்னு மனேகவிதமாகத் தோத்திரம்பண்ணி, மிகுந்தபயபக்தியுடன் வணங்கி, எமதாண்டவரே! அடியேங்கட் கிவ்வுடல்வந்தவாறு யாது? இத்தேகத்தினுள் இருக்கும் யாம் யாவர்? எமக்குமுதலாயுள்ள பதி யாது? என்று கேட்டுக்கொள்வார்கள்.

(2) இவ்வாறு மிகுந்த பயபக்தியுடன் வணங்கிக் கேட்டுக்கொண்ட பக்குவர்களின்மீது ஆசாரியர் கிருபை மிகுந்து, அவர்களை முறைப்படி பரிசோதித்து, வேதாகம விதிப்படி அவர்பண்ணுந் தீக்கை அகத்தீக்கை புறத்தீக்கை யென்றிருவகையாம். இவற்றுள், அகத்தீக்கை மூன்றும்; புறத்தீக்கை மூன்றும். அகத்தீக்கை (1) பரிசம், (2) வாக்கு, (3) யோகம் என்பனவாம்.

(3) சிஷ்யர்கள் ஆசாரியர் செய்யும் உபதேசப்பொருளை இம்முறையாக ஏற்றுக்கொள்வார்களென்பது வருமாறு:—

ஞானசாரியர் செய்யும் உபதேசப் பொருள் பக்குவ ரியல்பினுக் கேற்றபடி அஞ்ஞானவிபரீத சந்தேகங்களால் மறைபட்டிருக்கக் கூடியதாகையால், அவர்கள் அக்காலங்களில் தெரியாதிருந்து (அஃதாவது ஆசாரியர் அனுக்கிரகிக்கும் காலங்களில் 'தெரியாதிருந்து) சிலநாளைக்குப்பின் தெரிந்துகொள்ளுவார்கள் (அஃதாவது தடைகளாகிய அஞ்ஞான சந்தேக விபரீதங்களைக் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் என்னும் சிரவணமனன நிதித்தியாசனங்களைக்கொண்டு கெடுத்து, ஆசாரியர் உபதேசப் பொருளின்னதென்று உணர்ந்துகொள்ளுவார்கள்),

(4) இஃதன்றியும், ஞானசாரியர் தமது மனந்தெளியும் பொருட்டுக் கொடுத்த நூலின் கருத்தை அக்காலங்களில் தெரியாதிருந்து மற்றோர் நூலில் உணர்ந்துகொள்வார்கள்; அன்றியும், தாம் கற்றநூலின் கருத்தைத் தம்மைப்போலுங் கற்றவர்களோடு பழகியுந் தெரிந்து கொள்ளுவார்கள் (அஃதாவது தம்மைப் போலும் சாதனசதுட்டயத்தைப் பெற்ற புண்ணியர்களோடு பழகித் தெரிந்துகொள்ளுவார்கள்).

(5) மேலும், அன்னப்பக்ஷியானது பாலோடுகலந்த நீரை நீக்கிப் பாலைப்புசிக்கும் முறைமையைப்போல, மாணக்கனை எவ்விதத்திலும் தன்மயமாக்கவேண்டி ஆசாரியர் நாநாவித வுபாயங்களினாலும் பலவித்த் திருஷ்டாந்தங்களினாலும் உபதேசிக்கும் பொழுது, அவர்கள் அவற்றுள் அபரமாயுள்ளவைகளை நீக்கிப் பரமா யுள்ளவைகளைப் பயன்படுத்திக் கொள்ளுவார்கள்.

(6) அன்றியும், கொக்கானது மடைத்தலையில் (வாய்க்கால் துறையின்கண்) அசைவற்றிருந்து மீன்வருந்தோறும் அதனைக் கவர்ந்து கொள்வதைப்போல, ஆசாரியர் திருவாக்கிற ஏகிரிவாக்குப் பேசவறியாதவர்களாய்ச் சித்திரப் பாவையைப்போல அசைவற்றிருந்து, தமக்குப் பயன்தரு மொழி வருந்தோறும் அதனை உட்கொண்டு பயன்படுத்திக் கொள்ளுவார்கள்.

(7) அல்லாமலும், சமுத்திரத்தினுள் கிடக்கும் முத்துச்சிப்பியானது மின்னல் மழைகளுக்குக் காத்திருந்து ஒரு துளி விழுந்தமாத்திரத்தில் அதனை யுட்கொண்டு வாயைமூடிக்கொண்டு

மவுனமா யிருத்தல்போல, ஆசாரியர் எப்போது திருவாய்மலர்ந்து கூறுவாரோ என்று மனதைப் பகிர்முகத்தில் செல்லவிடாது அகமுகமாய் நின்று காத்துக்கொண்டிருந்து அம்மொழி வந்தவுடன் அதனை யுட்கொண்டு மீட்டும் வெளிவிடாது பயன்படுத்திக் கொள்வார்கள்.

(8) அன்றியும், பழுக்கக்காய்ச்சின இரும்பானது தான் குளிரவேண்டித் தனக்குவேண்டிய நீரைமாத்திரம் ஏற்றுக்கொண்டு மீட்டுமதனை வெளிவிடாமைபோல, மனம் மவுனப் பிரகாசமாய் வியாபிக்கும்பொருட்டு ஆசாரியர் திருவாக்கினின்று வெளிவருஞ் சொற்களுள் தனக்கு வேண்டியவைகளை ஏற்றுக்கொண்டு மீட்டுமவற்றை வெளிவிடாது பயன்படுத்திக் கொள்ளுவார்கள்.

(9) இஃதன்றியும், கட்கூர்மையுடையார் மின்னலொளியிற் பணம் பார்ப்பதுபோல, அதிசீக்கிரத்தில் ஆசாரியர் உபதேசமொழிகளின் அர்த்தமெல்லா முணர்ந்துகொள்ளுவார்கள்.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

ஒழிவி லொடுக்கம்.

"காலமறை தேசமறை கன்மறைபோற் காண்பாரும்
பாலனுண்ணும் புள்ளிப்பி பக்கித்தீக்—காலு
மிருப்பிநீர் மின்னலிலே யேற்றபணம் பார்ப்பார்
தரும்பொருளைக் கொள்ளுவார் தாம்."

(10) ஞானசாரியர் மாணக்கனது பக்குவகாலமறிந்து கூறும்போது அதனைக் கேட்கவேண்டுமே யன்றி மாணக்கன் வலியக் கேட்கலாகாது.

அன்றியும், உயிரானது உடம்பைத் தானுக அபிமானித்துக் கொண்டு அதற்குத் துன்பந்துடைத்தல் ஒப்பனைசெய்தல் முதலிய வுபசாரங்களைச் செய்வதுபோல, ஆசாரியர் திருமேனியைத் தம்மேனியாகப் பாவித்து அவர்க்குச் செய்யவேண்டிய உபசாரமெல்லாம் செய்யவேண்டும். ஊசி சென்றவிடந்தோறும் சரடு பின் செல்லுதல்போலும், மர்க்கட நியாயம்போலும் (அஃதாவது குரங்குக்குட்டியானது தன் தாய்க் குரங்குஎங்கே தாவினும் தானும் அதனை விடாதுபற்றி நிற்றல்போலும்) ஆசாரியரைக் கணப்

பொழுதாயினும் விட்டு நீங்காது நின்று, அவர் திருவுள்ளக்குறிப் பின்படியே சென்று வழிபாடு செய்தல் வேண்டும் அவ்வாறு வழிபாடுசெய்யும் புண்ணியர்களுக்கே சிவஞான சொரூபாநந்தம் கிடைக்கும்; (அஃதாவது ஆத்மாவாகிய தன்னை யறிந்து ஆநந்தமா யிருப்பார்கள்).

(11) அங்ஙனம் ஞானசாரியரை வழிபாடு செய்ய மாட்டா தார்க்கு எங்ஙனம் சிவஞானனுபோகம் கிடைக்கும்; ஒருபோதும் கிடைக்காது.

(12) மேலும், குருவருளாற் சாதனத்தைப் பெற்றனுபவிக் கும் புண்ணியர்கள் ஞானசாரியர் உபதேசப் பொருளை யுட்கொ ண்ட மாத்திரத்தில் தனது நாயகன் இறந்துபோய்விட்டானென்று சொல்லக்கேட்ட வக்கணமே அவன்மீது வைத்திருந்த அதி மோகத்தினால் தானுமவன் கூட யிறக்க அக்கினிப் பிரவேசம் செய்யும் கற்புடையாளைப்போல, தற்போதமொழிந்து (அஃதா வது தன்னை யொழியாதொழிந்துச்) சிவமாய் விளங்குவார்கள்.

(13) அங்ஙனமுள்ள பரம கிருபாநிதியாகிய ஞானசாரிய ரின் கிருபாவசனத்திற் குவமை சொல்லுமிடத்து, அவர்கள்

ஆவேசமேறினார் தஞ்செயலின்றிக் கூறுவதைப்போல, மாணாக்கனது மனம் வாக்குக் காயமென்னும் முப்பொறிகளையு முள்ளடக்கிக்கொண்டு கூறுவாரென்றும்,

சுத்தவீரர்கள் தம்மிடத்து எதிர்த்தவர்களைக் கொல்லுவதே கருத்தாய்க் கூறுவதுபோலத் தமதறிவுக்கு எதிரிடாய்த் தோன் றுவனவற்றை யெல்லாம் ஞானவாளால் தாக்கி வெற்றிபெறுவதே கருத்தாய்க் கூறுவரென்றும்,

உலகமெல்லாம் ஒரு குடைக்கீழாளு மரசர்சொற்படி நடப்ப வர்க்கு அஃது இம்மையிற் பயன்தருவதுபோல, இவர் மொழிப் படி வழிபடும் புண்ணியர்களுக்கு அது மறுமையிற் பயன்தரு மென்றும்,

அன்றியும், மடலாளர் பிறமாதர்களைக் கூறாது தாம் நச்சிய மாதினையே புகழ்ந்துபேசுவதுபோல, சரியையாதிகளைக் கூறாது தமது ஞானநந்தத்தையே புகழ்ந்துகூறுவாரென்றும்,

அன்றியும், சாவாநந்தர் தாம் சாவதையே யின்பமாய்க் கூறுவதுபோல, தற்போத வொழிவையே யின்பமாய்க் கூறுவாரென்றும் அறியவேண்டும்.

அன்றியும், அவர்கள் ஆவேசமேறினுர், மாவீராயினுர், உலகை ஒரு குடைக்கீழாளு மரசர், மடலாளர், தாஞ்சாவ தின்பமாய்க் கருதினேர் முதலியவர்களுடைய மொழிகளுக்குச் சமானமாகவும், இன்னுமநேக உபமான உபமேயங்களாகவும், பரம கிருபா நிதியாகிய ஞானசாரிபருடைய அமுர்த சஞ்சீவிபோன்ற கிருபாவசனத்தைப் புகழ்ந்து பேசுவாரென்று வேதாந்த சித்தாந்த நூல்கள் கூறுகின்றன.

மூன்ருவது அத்தியாயம்

இரண்டாம் அனுவாகம்

முற்றிற்று.

## மூன்றும் அனுவாகம்.

இனி ஆசாரியர்க்குரிய குறிகுணங்களிலொன்றேனுமில்லாதவாது தன்மை சொல்லப்படுகின்றது.

(1) மேற்சொல்லிய நிலைமையினையுடைய ஆசாரியனைத் தேடி யடையக் கூடிய பக்குவர்களே பிறவிப்பிணியை யொழித்துப் பேரின்ப வீட்டைப் பெறுவார்கள்.

அபரஞானங்களைக் கற்றுக்கொண்டு (அஃதாவது அனுபவ ஞான மென்பது சிறிது மின்றி)வாசக ஞானிகளாய்த் திரியும் பகடிக் கூத்தாடிகளின் போதமயக்கத்தில் அகப்பட்டவர் பேரின்ப வீட்டைப் பெறுவதில்லையாம்.

ஒருவன் உண்மையில் மனம் ஸ்திரப்பட்டுச் சாதன சதுட்டயங்களைப் பெற்ற உத்தமனுயிருப்பினும், அநாசாரியை யடைவானுயின், அவன் அபக்குவி யென்றே சத்துக்களால் குறிக்கப்படுவான். அவன் அங்ஙனம் அபக்குவியென்று குறிக்கப்படுவதுமன்றித் தான் கஷ்டப்பட்டுத் தேடிய சாதன சதுட்டயங்களையு மிழந்து பிறவிச் சாகரத்தில் விழுந்து துன்பப்படுவான்.

(2) அஃதெங்ஙனமெனின், ஓ ரூரில் ஓ ரிடையன் ஓ ராற்றங் கரையோரத்தில் சில ஆடுகளை மேய்த்துக்கொண்டு நின்றான். அங்ஙனமிருக்க, அவ்வாற்றில் வெள்ளப் பெருக்குண்டாயிற்று; அவ்வெள்ளப்பெருக்கில் பல குட்டிகளோடு ஒரு கரடி மிதந்து கொண்டு போயிற்று

இதனை யவ்வாற்றங் கரையில் நின்ற இடையன் கண்டு அவசரப் புத்தி புடையவனும் வெள்ளத்தோடு போகிறது தனது ஆடென்று கருதி, ஆற்றிற்குதித்துக் கரடியைப்பற்றினன்; கரடி இது நதி நீந்தும் பூனையென்று இடையனைப்பற்றியது. அதனால் அது வெள்ளத்தில் முழுகி யிறந்தது; இடையனும் அதில் முழுகி யிறந்தானென்று உலகத்தார் கூறுங் கதையைப்போல,

ஒருவன் ஆணவம் காமியம் மாயை யென்னும் மும்மலப் பைத்தியத்தால் முதிர்ந்தவரை (அஃதாவது மனைவி முதலிய குடும்ப வெள்ளத்தில் மிதந்து திரிகின்ற கரடிக்கொப்பானவரை) ஞானசாரியரென்று கருதிக்கொண்டு,

ஞானோபதேசம் பண்ணும்படி கேட்டுக்கொள்ள, பரஞான மென்பது சிறிது மின்றி வாசகஞானத் தேர்ச்சியையுடைய அவர் இடம்ப நிமித்தம் இவனுக்கு உபதேசிக்க, அவ்வுபதேசத்தால் அவ்விருவரும் சந்தோஷமேலிட்டு விடயாநந்தமாகிய பிறவிச் சாகரத்தில் ஆழ்ந்திப் போவார்கள்.

(3) அவ்விடையன் நதிவெள்ளத்தோடு செல்லுவது ஆடல்ல; நம்மைக் கொன்று தின்னும் கரடியென் றுணர்ந்திருப்பானாயின், நதியிற் குதித்து நாசமடையான்; அதுபோல,

முன் ஜனனங்களிற் செய்துவந்த சிவபுண்ணியமேலீட்டால் இருவினை யொப்பும் மலபரிபாகமும் பிறந்து கிஞ்சிக்ஞவறிவனைத் தேகாதிப் பிரபஞ்சமெல்லாம் பொய்யென்று தோன்ற இவற்றைப் பகுத்தறிந்து நீக்கி, தானின்னனென்றறியவேண்டி இவற்றை யுணர்த்துவதற்குரிய ஞானசாரியரைத் தேடி நிற்கும் பொழுது,

(4) பஞ்சேந்திரியாதி வெள்ளத்தில் அலைமோதித் திரியும் அநாசாரியரைக் கண்டு (அஃதாவது ஆற்றின் வெள்ளத்

தோடு போகிற காடியைக் கண்ட இடையனைப்போல அவசர புத்தியைப் படைத்து) அபக்குவனாகாது இவர் நம்மைத் தடுத்தாட்கொள்ளவல்ல ஆசாரியரா அல்லது நம்மை விடயாநந்தத்தில் ஆழ்ந்தப் பண்ணி நமது கையில் பொருளைப் பறிக்கும் காடி போன்றவராவென் றுணர்ந்து காடிபோன்ற வாசக ஞானிகளின் போதமயக்கத்தில் விழுந்திடாது, சிங்கம்போன்ற ஞானாசாரியரை யடையக்கூடிய புண்ணியர்களே பேரின்ப வீட்டைப் பெறுவார்கள்.

(5) இங்ஙனம் ஞானாசாரியரைச் சிங்கத்திற்கொப்பிட்டுக் கூறியது வருமாறு:—மதம்பொழியும் யானையினது சொப்பனாவஸ்தையின் கண்ணே சிங்கந்தோன்ற, அது தனது மதகர்விதங்களெல்லாங் கெட்டு மருட்கேவலப்பட்டு நிற்கும். அதுபோல, யானையாகிய மாணாக்கனது தேகாதிப் பிரபஞ்சமென்னும் சொப்பனாவஸ்தையின் கண்ணே பரம கிருபாநிதியாகிய ஞானாசாரியர் தோன்றினால், உடனே அச்சீடனது பொய்ப்போதங்கள் யாவுங்கெட்டுப்போம்; அதனால் அவன் மெய்ப்போதமாய்நிற்பான்.

(அஃதாவது சீடன் உட்புறனாய்ச் சீவியா நின்ற போதப் பதைப்பெல்லாங் கேட்டு அருட்கேவலமாய் நிற்பான்).

அன்றியும், ஞாதுரு ஞானஞேயங்களுள் ஒன்றுந் தோற்றாது அருள்வடிவாய்ச் சிவத்திலதீதப்பட்டு நிற்பதும் அவனுக்கு வாய்க்கும்.

ஆதல்பற்றி ஞானாசாரியரைச் சிங்கத்திற்கு ஒப்பிடலாயிற்று.

(6) இஃதன்றியும், வேலை செய்து கூலிவாங்கும் கூலித்தொழிலாளர்கள் போலவும், ஒரு பொருளைக்கொண்டு மற்றொரு பொருளைவிற்கும் வர்த்தகர்கள் போலவும், பிறர்க்கு மந்திரதந்திர கிரியைகளைச் செய்து காட்டியும் உபதேசங்களைக் கூறியும் அவர் கையிலிருந்து அர்த்தம்பறிக்கும் (அஃதாவது ஆடையாபரணாதிகளை வலியவாங்கிக் கொள்ளும்) குருவென்னும் பெயர் வைத்துக்கொண்டு தொழிற்செய்யும் பகடிக்கூத்தாடிகளை ஒருவன் மெய்க்குருவென்று கருதியடைவனாயின், அவன் மேற்கூறிய இடையன்போலக் கெடுவான்.

(7) சிஷ்யன், குருவென்று பேர் வைத்துக்கொண்டு தொழிற் செய்யும் பகடிக் கூத்தாடிகளை ஆசாரியரென்று கருதி யடைவதை விட்டு

யாதொரு கைம்மாறுமின்றிக் காலமறிந்து வருஷிக்கும் மழை போலத் தனது பக்குவ காலமறிந்து பரமாநந்தத்தைக் கொடுக்கும் பரம குருவை யடையவேண்டும்.

பரமகுரு சூக்குமை வாக்கும் தற்போதமுங் கடந்த சிவமாவர். அவர், கதிர்வலம்வருதலாற் கணம் நாழிகை நாள் மாதம் இருது வருடம் யுகம் முதலிய காலபேதங்களும் அக்காலந்தோறும் தோற்றும் பிரபஞ்சங்களும் அநந்தபேதமாய்த் தோற்றவும் தனக்கொரு திரிவுமின்றி யவற்றோடு தாக்கற்றிருந்த காலதத்துவம் போல மாயையிற்றோன்றும் கருவிகளும் இக்கருவிகளாற் காரியப் படுகின்ற தேகாதிப்பிரபஞ்சங்களும் அநந்த பேதமாய்த் திரியவும் தனக்கொரு திரிவுமின்றி அவற்றோடு தாக்கற்றிருந்த திருவருளே வடிவாக வுடையவர். அருளே வடிவாகக் கிருபாநோக்கம் வைத்து மாணாக்கனைச் சுட்டற் றிருக்கும்படி செய்யக் கூடிய அத்தகைய பரம குருவையே சிஷ்யன் அடையவேண்டு மென்பதாம்.

(8) இங்ஙன மின்றி, சிஷ்யன் அபரஞானியை அஃதாவது வாசகஞானியைப் பரஞானி யென்று (கற்றபடி சாதித்தறிந்த அனுபவஞானி யென்று) கருதி யடைந்து அவனிடத்தில் ஆத்ம ஞானோபதேசம் கேட்டுக்கொள்வது ஒருவன் மட்டையைத் தின்கின்றவனைத் தென்னம்பழந் தின்பவனென்று கருதி அவனை யடைந்து நீ யெனக்குத் தென்னம்பழத்தினைக் காட்டி அதனைப் புசிக்கச் செய்யவேண்டு மென்று இரங்கிக் கேட்டுக்கொள்வது போலவாம்.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

மகாராஜா துறவு.

" மனைதனி லாசை பொருந்தியே நின்று
மகிதனில் ஞானியா மெனவே
தனைமிக மதிப்போன் றன்னைவந் தொருவன்
றந்திடு ஞானமென் றிரந்து
வினவன்மட் டையினைப் பருகுவோன் றன்னை
வேண்டித்தென் னம்பழந் தனையே

யினம்பணித் திரிவோன் புத்திபோன் மெனவே
யியம்புவர் முற்றுணர் பெரியோர்."

(9) அங்ஙனம் வேதாந்த சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்தவன் தான் கற்றபடி சாதித்து நிற்றல் வேண்டும்; நிற்காவிட்டால் அவனுக்கு ஆனந்தங் கிட்டாது (அஃதாவது ஞானநுபவம் விளங்காது). தான் கற்றபடி சாதிக்க இயலாதவன் பிறர்க்கு எங்ஙனம் அநுபவஞானத்தை உபதேசித்தல் கூடும்?

மகாராஜா துறவு.

"வேதவா கமஞ்சாத் திரபுரா ணங்கள்
விளங்கவே கற்றுணர்ந் தவற்றைத்
தீதறவெவர்க்குந் தெளிவுற வோதிச்
செப்பிய வந்நெறி யதனிற்
சாதக மில்லாக் குருவினை யொருவன்
தானடைந் தானந்தம் வினவ
லேதமாங் கழுதை தனைக்குங்கு மத்தின்
இயல்புகேட் டிடுதல்போன் மென்றே."

(இ-ள்.) வேதாகம சாஸ்திர புராணங்களை நன்றாகக் கற்றுணர்ந்து அவைகளின் லக்ஷியாலக்ஷியங்களைத் தோஷமில்லாமல் யாவர்க்கும் தெளிவாய்க் கூறி, தான் சொல்லிய அம்மார்க்கத்தில் ஒழுகும் அனுபவமில்லாத அநாசாரியனை ஒருபக்குவியானவன் அடைந்து நான் பிரஹ்மானந்தத்தை யடையும்படி உபதேசித்தருள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுதல் குங்குமத்தினைத் தன் முதுகிற் சுமந்து செல்லுகின்ற தொழிலினை யன்றி, அதன் குணத்தை யெள்ளளவும் அறியாத குற்றம் பொருந்திய கழுதையைக் குங்குமத்தின் தன்மை யெப்படிப்பட்ட தென்று கேட்கும் தன்மையை யொக்கும். (எ-று.)

ஆகவே, அநுபவஞான மென்பது சிறிதுமின்றி வாசகஞானிகளாய்க் குடும்ப ரக்ஷிப்பின் நிமித்தம் பிறர்க்கு உபதேசங்களைக் கூறியும் மந்திர தந்திரங்களைச் செய்து காட்டியும் அவர்கையில் அர்த்தம் பறிக்கும் (அஃதாவது அவர்களை ஏமாற்றிப் பொருள் பறிக்கும்)போலியறிவை யுடைய அநாசாரியனையடையும் அபக்குவனுக்கு முன்சொன்ன இடையன் கதியே கிடைக்குமென்பது திண்ணமாம்.

(10) இஃதல்லாமலும், பிறவி யந்தகனுக்குக் குபேரனென்று பெயர் உண்டுகொலோ?

கருப்பஞ் சாற்றினது சுவையை மோத்தையாடறிந்து கூறுமோ? இவ்விரண்டும் கூடாவன்றோ? அதுபோல, அருள் வடிவமில்லாது மாயாவடிவங் கொண்ட பகடிக் கூத்தாடிகளாகிய அநாசாரியர் தத்துவாதீதமாய் நின்ற பரிபூரண சிவத்தோடு மாணாக்கனை இரண்டறக்கலப்பித்து மௌனமாய் வைக்கக்கூடிய அருளே திருமேனியாகக் கொண்டெழுந்தருளிய பரமகிருபாநிதியாகிய ஆசாரியரைப் போலாவரோ? அல்லாமலும் குருட்டரிப்பனார்க்குக் கைப்பரிசமே யன்றிக் கட்பார்வை யின்மையாற் பொற்பொடியே தோன்றாதே; அங்ஙனமிருக்க அவனையும் செல்வத்தளகேசனென்று கூறுதல்தகுமோ? தகாதன்றோ? அதுபோல அநாசாரியனுக்குக் கிரியைத்தொழில் செய்வதேயன்றி ஞானமென்பது சிறிதுமில்லையே? அங்ஙனமிருக்க, இவனையும் குருவென்று கூறுதல் தகுமோ? தகாது.

(11) இஃதன்றியும், மோத்தையாடானது கொழுந்தாடையைத் தின்பதே யன்றிக் கரும்பைத்தின்ன அறியாது; ஆகையால் அது கரும்பினிரதத்தைத் தானுமறிந்து தனது குட்டிகளுக்கும் காட்டக்கூடுமோ? கூடாது; அதுபோல,

பகடிக் கூத்தாடிகளாகிய அநாசாரியர்கள் ஆகமங்களில் கூறப்பட்டிருக்கின்ற மந்திரகலை தந்திரகலை உபதேசகலையென்னும் இம்மூன்று கலைகளுள் உபதேசகலையைவிட்டு மற்ற இருவகைக் கலைகளையும் ஆராய்ந்தறிந்து அவற்றுட் கூறும் மந்திர தந்திராதிகளைச் செய்து அவற்றால் வரும் விடயாநந்தத்தை அனுபவிப்பரே யன்றிப் பேராநந்தாநுபவம் சிறிது மறியார். அங்ஙனமிருக்க அவர் பிறர்க்குப் பேராநந்தாநுபவத்தைக் கூறுதல் கூடுமோ? கூடாது.

அன்றியும், மோத்தையாடானது கரும்பைவிட்டு அதன் இலையைத் தானுந்தின்று தனது குட்டிகளுக்குங் காட்டும்; அதுபோல அநாசாரியர் மந்திரதந்திர கலைகளைக் கற்றுணர்ந்து தாம் அவற்றின் பயனாகிய விடயாநந்தத்தைப் புசித்துத் தம்மை யடைந்தவர்களுக்கும் அவற்றை உபதேசிப்பார்.

(12) இஃதன்றியும், யானையானது இலையைவிட்டுக் கரும்பைத்தின்று அதனது சுவையைத் தானுமறிந்து தனது குட்டிகளுக்கும் காட்டும்; அதுபோல,

ஞானாசாரியர் மந்திரதந்திர கலைகளைவிட்டு உபதேச கலையை மாத்திரம் ஆராய்ந்தறிந்து அது கூறிய ஞானாநந்தத்தைத் தாமும் பெற்றுத் தம்மையடைந்த உத்தமர்களுக்கும் உபதேசிப்பார்.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

ஒழிவிலொடுக்கம்.

“ குருட்டரிப்ப ஞர்க்குங் குபேர னென்றுபேரோ
கருப்பிரத மோத்தையோ காட்டும்—அருட்டரித்த
வாசானைப் போல்வரோ வாரூறுக் கப்புறத்தே
பேசா திருக்கவல்ல பேர்.”

பிரபுலிங்க லீலை.

புறம்பு காண்குவன் புல்லிய னீசனை
யறிந்த ஞானி யகமுறக் காண்பனு
லெறும்பி காண்குறி லின்கரும் பேகொளுஞ்
செறிந்த வாடிலை தின்பன வென்பவே.”

(13) இஃதன்றியும், தான் ஒருகாலுஞ் சென்றிராத ஓரூருக்குச் செல்லக்கருதிய ஒருவன் அவ்வூரைச் சென்றடையும் வழியெப்படிப் பட்டதென்று தன்னைப்போலச் சென்றறியாத ஒருவனை நோக்கிக், அவ்வூருக்கு வழியெப்படியென்று கேட்க, அவன் அவ்வூருக்குச்சென்றான்போற்காட்டி வழியல்லாவழியைக் கூறினன். அவன் அஃதுண்மையான வழியென்று நம்பி, அவ்வழியைப்பற்றிச் சென்று, தான் முன்னிருந்த ஊரையு மிழந்து பின்னடைய வேண்டிய ஊரையுமிழந்து இடைநடுவில் கஷ்டப் பட்டனன்; அதுபோல முத்திவீட்டை யடையக்கருதிய ஒருவன் (அதனை யடையத் தக்க சாதககுணங்களைக் கைப்பற்றி நிற்கும் பொழுது) அம்முத்திவீட்டின் நெறியறிந்த ஞானாசாரியரை யடைந்து அவர் திருவுள்ளக்குறிப்பின்படி தொண்டுபுரிந்து அவர் குறிக்கும் நன்மார்க்கத்தின் படியேசென்று தானடைய வேண்டிய முத்திவீட்டை யடையவேண்டுமே யல்லது வழியறியாதவனை வழிகேட்டு அவன்கூறிய வழியல்லா வழியே சென்று இடைநடுவில் கஷ்டமடைதல் கூடாது. சிவஞானானுபவ மின்னதென்று சிறிதும் விளங்காத அநாசாரியனை யடைந்து அவன் குறிக்கும் வழியல்லா வழியை இஃதுண்மையான் வழியென்று கருதி, அவ்வழியே சென்று முத்திவீட்டை யடைவோமென்று கருதுகின்றவன் தான் முன்னிருந்த சரியையாதிகளையு மிழந்து பின்னடைய

வேண்டிய முத்திவீட்டையு மிழந்து முடிவில் யமதண்டனைக் குட்பட்டுச் செய்வினைக் கேற்றபடி பிறவிச் சாகரத்தில் விழுந் துழலா நிற்பன். ஒருவனுக்கு முன்விட்ட குறையால்ஞான பக்கு வங் கிடைத்ததா யிருப்பினும், அவன் சரியையாதிகளை யெல் லாம் போக்கி, தற்போதத்தைக் கெடுத்து, சித்தம் பதையாது மௌனமாகவிருக்கும்படி போதிக்கக்கூடிய ஞாநாசாரியரையடை ந்து அவர் கிருபா நோக்கத்தால் முத்தி வீட்டைப் பெறவேண்டு மென்பது இவ்வத்தியாயத்தின் முக்கிய தாத்பரியமாம்.

## மூன்றுவது அத்தியாயம்

### ஆசாரிய ரநாசாரிய ரியல்புமுற்றிற்று.

## நான்காம் அத்தியாயம்

## தத்துவவியல்பு.

### கோச்சகக் கலிப்பா.

சீரார் சிவக்கொழுந்தைத் தெள்ளமுதைச் செந்தேனைப்
பாராதி வான்பொருளைப் பஞ்சவுரு வானவொன்றைப்
போரான விண்ணொளியைப் பேரின்ப வாரிதியை
நேராக வென்னாளு நெஞ்சிருத்தி வாழ்வேனே.

### முதல் அநுவாகம்.

#### தத்துவம் தொண்ணூற்றுறுவன:—

வாயில் (9), பொறி (10), புலன் (10), ஆதாரம் (6), மண்டலம் (3), நாடி (10), வாயு (10), தாது (7), ராகம் (8), கோசம் (5), கரணம் (4), அவத்தை (5), குணம் (3), மலம் (3), வியாதி (3) ஆகத் தத்துவம் (96).

(2) இந்தத் தத்துவம் தொண்ணூற்றுறும் பிருதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களின் காரியங்களாம். அஃதாவது அவை பஞ்சபூதங்களினின்றும் தோன்றியும் விரிந்தும் தத்தம் தொழிலை நடத்தியும் முறையே அடங்கியும் வருவனவாம்.

(3) இவற்றின் விபரம்:—

முதலாவது பிருதிவு - நகாரம்; மண். இதிற் பிறக்கும் தத்துவங்களாவன:—மனம், வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம், மயிர், எலும்பு, தோல், தசை, நரம்பு, சட்சு, சிங்கு

வை, ஆக்கிராணம், தொக்கு, சுரோத்திரம், பைசந்தி, தைசத அகங்காரம் என்பனவாம்.

இரண்டாவது—அப்பு-மகாரம்; நீர். இதிற் பிறக்கும் தத்துவங்களாவன:—இடகலை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, புத்தி, சிங்குவை, அலம்புருடன், சங்கினி, குகு, மச்சை; நீர், உதிரம், மூளை, சுக்கிலம், தாமதம், சூக்குமை, வைகரி என்பனவாம்.

மூன்றுவது தேயு-சிகாரம்; நெருப்பு. இதிற் பிறக்கும் தத்துவங்களாவன- அகங்காரம், வைகரி, சோம்பு, பயம், ஆகாரம், மைதுனம், நித்திரை, சுத்தம், ஈசுரம், சத்தி, சிவம், சாதாக்கியம், ரூபம், பசி என்பனவாம்.

நான்காவது வாயு-வகாரம்; காற்று. இதிற் பிறக்கும் தத்துவங்களாவன:—ஸப்தம், ஸ்பரிஸம்; ரூபம், ரசம், கந்தம், வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம், மத்திமை, பிராணன், அபானன், வியானன், கூர்மன், கிருகரன், தனஞ்சயன், நாகன், உதானன், சமானன், தேவதத்தன், ஓடல், இருத்தல், நடத்தல், படுத்தல், தாண்டல் என்பனவாம்.

ஐந்தாவது ஆகாயம்-யகாரம்; வெளி. இதிற்பிறக்கும் தத்துவங்களாவன:—வித்தை, நியதி, கலை, ராகம், மோகம், புருடன், காலம், மாயை, சித்தம், லோபம், மதம், காமம், குரோதம், ஆச்சரியம் என்பனவாம்.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

உடலறி விளக்கம்.

"புகலரிய நவ்வெழுத்துப் பிருதிவியாகும் புதல்வனே யதிற்பிறக்கும் தத்துவங்க, ளகலரில் மனவாக்குப் பாதம் பாணி யடுத்தவெழிற் பாயுருவென் றுபத்த மேழா, மிக்லுடைய மயிரொலும்பு தோனரம்போ டிரக்ஷிசட்சு சிங்குவைபாக் கிராணந்தொக்கு, சகலவெளிற் சோத்திரம்பை சந்தி ராகந் தைசதவாங் காரமிவை யிருபதாமே."

"போதமெனு மவ்வெழுத்து வப்பதாகும்
புத்திசுழி முனையுமிரு கலைகாந்தாரி
சாதமெனு மத்திசிங்வை யலம்புருடன்
சங்கினியன் குகுமச்சை நீருதிரம்

சூதமெனிம் மூளைசுக்கிலந் தாமதஞ்
சூக்குமைவை காரியோ டிருபதாகும்
நீதமெனுஞ் சிவ்வெழுத்துத் தேய்வாங் காரம்
நீயுமறிபூதாதி யாங்கார மென்றே."

"வைகரியென் பதுசோம்பு பயமாங்காரம் மைதுனமங்கித் திரை சுத்த மீசுரந்தான், மெய்கருது சத்திசிவஞ் சாதாக்கியம் விரும்புகின்ற சாத்துவித மிவைமூ வைந்தும், பையவறி லவ்வெழுத்து வாயு சத்தம் பரிசமுடன் ரூபரச கந்தமாகுந், துய்யவச னங்கள் மனந் தானத்தோடு சொல்விசர்க்க மானந்த மத்திமையு மாமே."

"ஓடுமுயிர் பிராணனுட னபானன் வியான னுற்றகிரு கரனுகன் சமானன் கூர்மன், நீடுதனஞ் சயனுதவு தேவதத்தன் நின்றவுதா னன்கிடத்த விருத்தலோடு,நாடுபுவிதனிவிருத்தனடத் தலோடு நவிபூ மிருபத்தேழு தத்துவங்க, டேடுமினி யகாரமா காசந்தன்னிற் சிறந்தவித்தை நியதிகலை ராகமென்புருடன்."

"காலமெனு மாயைசித்தி லோப மோகங்
காமமெனும் குரோதமதம் பதினலாமே
பாலகனே நாமுரைத்த சிவாய வைந்திற்
பகுத்தவிட மிப்படிநீ பார்த்துக்கொள்வாய்."

(4) ஆகவே, மேற்சொல்லிய தத்துவம் தொண்ணூற்றாறனுள் உள் நிலைக்கருவி முப்பத்தாறும்; புறநிலைக்கருவி அறுபதாம். இவற்றுள்

உள்நிலைக்கருவி முப்பத்தாறுவன:—

(5) பூதங்கள் ஐந்தும், அவற்றின் கூறாகிய ஞானேந்திரியங்கள் (சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம்) ஐந்தும், தன் மாத்திரைகள் (சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம்) ஐந்தும், கன்மேந்திரியங்கள் (வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம்) ஐந்தும், அந்தக் காரணங்கள் (மனம், புத்தி, சித்தம், ஆங்காரம்) நான்கும் ஆக இத்தத்துவம் இருபத்து நான்கும் ஆத்துமதத்துவமென்றும் போக்கியகாண்டமென்றும் சொல்லப்படும்.

வித்தியாதத்துவங்கள் (காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை) ஏழாம். இவை அசுத்தா சுத்த தத்துவமென்றும் போககாண்டமென்றும் சொல்லப்படும்.

சிவதத்துவங்கள் (சுத்தவித்தை, ஈஸ்வரம், சதாக்கியம், சத்தி, சிவம்) ஐந்தாம். இவை பிரேரகாண்டமென்றுஞ் சொல்லப்படும்.

இம்முப்பத்தாறு தத்துவங்களும் உள் நிலைக் கருவிகளெனப் படும்.

புறநிலைக்கருவி அறுபதாவன:—

பிருதிவியின் கூறு: மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை, ஆக 5; அப்புவின்கூறு: ஓடு, நீர், உதிரம், சுக்கிலம், மூளை, மச்சை ஆக 5; தேயுவின் கூறு: ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பு, ஆக 5; வாயுவின்கூறு: ஓடல், நடத்தல், நிற்றல், இருத்தல், கிடத்தல், ஆக 5; ஆகாசத்தின் கூறு: காமம், குரோதம், மோகம், உலோபம், மதம், ஆக 5. ஆகப்பூதகாரியம் 25.

வாயுக்கள்:—பிராணன், அபானன், உதானன், வியானன் சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தனஞ்சயன், தேவதத்தன், ஆக 10.

தசநாடிகள்:—இடைகலை பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சிங்குவை, புருடன், அலம்புடை, குகு, சங்கினி, ஆக 10.

வசனாதிகள்:—வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம், ஆக 5.

வாக்குகள்—சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி, ஆக 4.

குணங்கள்:—சத்துவம், ராசதம், தாமதம், ஆக 3.

அகங்காரங்கள்:—தைசதாகங்காரம், வைகரியகங்காரம், பௌதாதியகங்காரம், ஆக 3.

இவை அறுபதும் புறநிலைக் கருவிகளெனப்படும்.

முதலனுவாகம் முற்றிற்று.

---

## இரண்டாம் அனுவாகம்.

(1) மேற்சொல்லிய தத்துவம் தொண்ணூற்றாறையுமுடையது சரீரமாம். அது தூலசரீரம், சூக்குமசரீரம், காரணசரீரம் என்று மூன்றுவிதமாம்.

(2) இவற்றுள் தூலசரீரம் பிருதிவி பூதத்தினாற் சமைந்த உடல்; சூக்குமசரீரம் சுரோத்திரம், தொக்கு, சட்சு,

சிங்குவை, ஆக்கிராணம் என்னும் ஞானேந்திரியம் 5; வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்னும் கர்மேந்திரியம் 5; மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணம் 4, பிராணவாயு 5, ஆக 19 தத்துவங்களோடும் கூடியது சூட்சும உடலாம். காரணசரீரமானது இவ்விரண்டு சரீரங்களுக்கும் காரணமா யிருப்பதாம்.

(3) இம் மூன்று தேகங்களும் பஞ்சகோசங்களி லடங்கும்.

இதற்குப்பிரமாணம் வருமாறு.

பரமானந்ததீபம்.

"காரணசூக் குமதூல தேகமூன்றுங் கண்டறிபி லன்னியமா யிருக்கை யாலே, காரணசூக் குமதூல தேகமூன்றுங் கண்டறிபி லெங்கோச பாச மாகும், காரணசூக் குமதூல தேகமூன்றுங் கண்டறியில் நீயறிவா யவைநீ யல்ல, காரணசூக் குமதூல தேகமூன்றுங் கண்டறிபி லுயர்சாட்சி நீயாங் காணே".

(4) மேற்சொல்லிய பஞ்சகோசங்கள்:—அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் எனபனவாம்.

(5) இவற்றுள், அன்னமயத்தினாலேயே பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயமென்னு மிந்நான்கு முற்பத்தியாம்; அஃதாவது அன்னரசத்தினால் பிராணமயமும், பிராணமய பலத்தினால் மனோமயமும், அம்மனோமய பலத்தால் விஞ்ஞானமயமும், அவ்விஞ்ஞானமய பலத்தால் வித்தையால் அல்லது கல்வியால் தோற்றும் ஞானத்தால் ஆனந்தமயகோசமு முற்பத்தியாம்.

(6) மூன்று தேகங்களும் பஞ்சகோசத்தில் அடங்கி யிருக்கும் முறையாவது:—அன்னமயத்தில் தூலதேகமும், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயமென்னு மூன்றனுள் சூக்குமசரீரமும், காரணசரீரம் ஆனந்த மயகோசத்திலும் அடங்கி யிருக்கின்றன.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

பரமானந்த தீபம்.

"அன்னமய மென்பதுவே தூலதேகமாகுமினிப் பிராணமய மனோம யத்தோ, டுன்னியவிஞ் ஞானமயத் துடனிம் மூன்று

முற்றதொரு சூக்குமசரீரமாகும், பின்னுமொரு ஆனந்தமய கோசமென்றும் பெருகியகாரணதேகமென்பர் மேலோர், பன்னரிய வுடல்மூன்றுங் கோசமைந்தும் பகுத்தறியு மூயர்சாட்சி நீயாங் காணே."

(7) பஞ்சகோசங்களும் பஞ்சபூதங்களி லடங்கும்.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

பரமானந்த தீபம்.

"கோசமைந்து மோவ்வொன்றுப் பிரித்து வேறுய்க்
குறித்தறிபி லன்னியமா யிருக்கை யாலே
கோசமைந்து மோவ்வொன்றுப் பிரித்து வேறுய்க்
குறித்தறியில் பூதமைந்தின் கூற தாகும்
கோசமைந்து மோவ்வொன்றுப் பிரித்து வேறுய்க்
குறித்தறியில் நீயறிவாய் யவைநீ யல்ல
கோசமைந்து மோவ்வொன்றுப் பிரித்து வேறுய்க்
குறித்தறியி லுயர்சாட்சி நீயாங் காணே."

(8) அன்றியும், மேற்சொல்லிய மூன்று தேகமும், பதினுன்கு லோகங்களும், நால்வகையோனி எழுவகைத்தோற்றம் எண்பத்துநான்கு லக்ஷம் சிவபேதங்களும், இவைகட்குரிய நாமரூப பேதங்களும், மற்று முண்டாகிய மண் மலை கடல் முதலிய பதார்த்தங்களும் பஞ்சபூதங்களி லடங்கும்.

அஃதாவது அவை பஞ்சபூதங்களாலேயே அமையப்பட்டிருக்கின்றன.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

பரமானந்த தீபம்.

"தேகாதி பிரபஞ்ச நாமரூபந் தேர்ந்தறியி லந்நியமா யிருக்கை யாலே, தேகாதி பிரபஞ்ச நாமரூபந் தேர்ந்தறியில் பூதமைந்தின் கூற தாகும், தேகாதி பிரபஞ்ச நாமரூபந் தேர்ந்தறியில் நீயறிவா யவைநீ யல்ல, தேகாதி பிரபஞ்ச நாமரூபந் தேர்ந்தறியி லுயர்சாட்சி நீயாங் காணே."

அணுதிரண காஷ்டமுத லண்டபிண்ட மகண்டமெங்கு மன்னியமா யிருக்கை யாலே, அணுதிரண காஷ்டமுத லண்டபிண்ட மகண்டமெங்கும் பூதமைந்தின் கூற தாகும், அணு

திரண காஷ்டமுத லண்டபிண்ட மகண்டமெங்கும் நீயறிவா யவைநீ யல்ல, அணுதிரண காஷ்டமுத லண்டபிண்ட மகண்ட மெங்கு முயர்சாட்சி நீயாங் காணே.

(9) மேற்சொல்லிய பஞ்சபூதங்களும் மோகவடிவமாயை யையே விளையாட்டாயுடைய ஈசுவரனது கிருபையினல் ஜீவர்க ளனைவருக்கும் தனுகரணபுவனபோக முண்டாகும் பொருட்டுத் தோன்றிய தமோகுணப் பங்கிலொன்ருகிய விக்ஷேப சத்தியின் கூருகும்.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

பரமானந்த தீபம்.

"பிருதிவியப் புடன்தேயு வாய்வாகாயம் பிரிவைந்து மன்னி யமா யிருக்கை யாலே, பிருதிவியப்புடன்தேயு வாய்வாகாயம் பிரி வைந்தும் விக்ஷேப சத்தி யாகும், பிருதிவியப் புடன்தேயு வாய் வாகாயம் பிரிவைந்தும் நீ யறிவா யவைநீ யல்ல, பிருதிவியப் புடன் தேயு வாய் வாகாயம் பிரிவைந்துக் குயர்சாக்ஷி நீயாங் காணே."

"ஆருறு தத்துவமும் பெருக்கிப் பார்க்கி லவையனைத்தும் பிரமாண்ட மாகி நிற்கும், பூரான பிரமாண்ட மதனைப் பார்க்கில் பூதமைந்துக் குள்ளாகி யொடுங்கிப் போகும், வாரான பூதமைந் தஞ் சுருக்கிப்பார்க்கில் வலிதானவி க்ஷேபத்தி லொடுங்கிப் போகும், வேருன விக்ஷேப சத்திதானும் விபுவான பிரமத்தோ டொன்றிப் போமே."

கைவல்ய நவநீதம்.

"ஏமமா யாவிநோத வீசனு ருளினுலே
பூமலி யுயிர்கட்கெல்லாம் போகசா தனமுண்டாகத்
தாமத குணமிரண்டு சத்தியாய்ப் பிரிந்துதோன்றும்
வீமமா மூடமென்றும் விபுதமாம் தோற்றமென்றும்."

"தோற்றமாஞ் சத்தி தன்னிற் சொல்லிய விண்ணும் விண்ணிற்
காற்றதாங் காற்றிற் றீயாங் கனலநீர் நீரின் மண்ணும்
போற்றுமிவ் வைந்து நொய்ய பூதங்க ளென்று பேரம்
சாற்றுமற் றிவற்றிற் போக சாதன தனுவுண் டாகும்."

நான்காவது அத்தியாயம் தத்துவவியல்பு

முற்றிற்று.

ஐந்தாவது அத்தியாயம்

# பஞ்சாட்சர வியல்பு.

## முதல் அநுவாகம்.

### காப்பு.

அஞ்செழுத்தி னுருவாகி யறிவு மாகி
யாதிநடு வீறுகி பராதி யாகிச்
செஞ்சடையிற் கொன்றைதும்பை யணிந்தோ னாகித்
தேனுகிப் பாலாகிச் செகமே யாகி
மஞ்சுலவுங் குழலுமையோர் பாக னாகி
மகிழ்ச்சியுட னெனையாண்ட குருவு மாகி
வஞ்சமறத் தொழுமடியா ருளத்தின் மேவும்
வள்ளல்தனைப் புகழ்ந்தேத்தி வணக்கு வாமே.

(1) ஸ்ரீபஞ்சாட்சரமானது தூலபஞ்சாட்சரம், சூக்குமபஞ் சாட்சரம், காரண பஞ்சாட்சரமென மூன்று வகையாம்.

அவற்றுள், நகர முதலாயுள்ளது தூலபஞ்சாட்சரமாம்; சிகார முதலாயுள்ளது சூக்குமபஞ்சாட்சரமாம், ஓங்காரமாதியாயுள்ளது காரணபஞ்சாட்சரமாம்.

இவற்றுள், சற்சனர்களால் எடுத்துக்கொள்ளப்பட்டது (அஃதாவது சாதுக்களுக் குரியது) காரண பஞ்சாட்சரமாம்.

(2) இக்காரண பஞ்சாட்சரம் தன்னேடு உறவாடி வருபவர் களுடைய அறியாமையை நசிப்பித்து அவரைச் சிவசொரூபமா கச் செய்வதாம் அதனேடு பயின்று வருகிற மெய்யன்பர்க ளன்றி மற்றையவர் அதன்பெருமையை யறிதல் முடியாது.

(3) அன்றியும், ஸ்ரீகாரண பஞ்சாட்சரத்தை நம்பி அத னேடு பயின்று வருபவர் பஞ்சேந்திரியப் பகையைவென்று முத்தி வீட்டைப் பெறுவார்; மற்ற எந்நெறியினுலும் வீடடை வது எளிதல்லவாம். சிவாகமங்களனைத்தும் இவ்வாறு கூறு கின்றன.

(4) ஆனதுபற்றி ஸ்ரீகாரண பஞ்சாட்சரத்தி னிலைமையை உத்தம குரு முன்னிலையாகப் பெற்று அதனேடு பழகிவருதல் ஞானசாதகர்களுக்கு அவசியமாம்.

(5) இஃதன்றியும், ஓங்காரத்தைப் பரப்பிரஹ்மமாகப் பாவித்து உபாசிக்கவேண்டும், அஃது ஓம் என்ற சப்தமாத்திரமா யிருந்தாலும், பராபரப் பிரஹ்மத்தை யடைவதற்குச் சாதனமா யிருக்கிறது; அது பிரஹ்மத்தின் கவர்ச்சியாய், அஃதாவது பிரஹ் மத்தின் இருப்பிடமாய் இருக்கிறது.

அன்றியும், ஓம் என்ற சப்தரூபத்தைப் பிரஹ்மமாகத் தியா னிக்க வேண்டும்; அதற்குக் காரணம் ஜகத்தெல்லாம் ஓங்கார சொரூபமாக விருப்பதே யாம்; அஃதாவது ஓம் என்ற சப்தத் தால் உலகு வியாபிக்கப்பட்டிருக்கின்றது.

(6) மேலும், அஃது அங்கீகாரமொழியாம். ஒருவனை மற் றொருவன் ஒரு காரியத்தைச் செய்யும்படி ஏவினால், அதற்கு அவன் பிரதி யுத்தரமாக, ஓமென்று பகருவானாயின், அங்ஙனமே செய்வேனென்று ஒப்புக்கொண்டதாம்.

அன்றியும், ஒருவனால் விழித்துக்கொண்டவன் ஓம் என்று கேட்கிறான்; ஓம் என்று தொடக்கத்தில் ஸாமத்தைக் கானம் செய்கிறான்.

அன்றியும், ஓம் என்று ருக்குவேத ஸாஸ்திரங்களைச்சொல் லுகிறார்கள்.

(7) அன்றியும், யாகத்தின் அத்வர்யு ஓம் என்றுச்சரிக் கிறான்.

(8) மேலும், ஆதியில் பிர்மா ரித்விக் ஓம் என்றுச்சரித்துக் கர்மாவைச் செய்கின்றார்கள்.

(9) அன்றியும் ஓம் என்றுச்சரித்து அக்கினி வேதாத்தியா னஞ் செய்கின்றான்.

(10) அன்றியும், பிராமணன் தொடக்கத்தில் ஓம் என்றுச் சரித்துக்கொண்டு வேதாத்தியயனஞ் செய்கின்றான்.

(11) ஓம் என்ற காரணத்தால் பிரஹ்மத்தை யடைவோமெ ன்று கருதுகிறவன் அங்ஙனமே பிரஹ்மத்தை யடைகின்றான்.

முதல் அநுவாகம்

முற்றிற்று.

## இரண்டாம் அநுவாகம்.

(1) ஓங்கார பூர்வகமாய்த் தொடங்கிய கிரியை யாவும் பல சித்தியைத் தருதலால், ஓங்காரத்தைப் பிரஹ்மமாகப் பாவித்து உபாசிக்கவேண்டும்.

(2) இஃதன்றியும், ஓம் என்ற காரணத்தோடு பயின்று வருகிறவர் பிரஹ்மசொரூபமாகி விடுகிறார்கள்; அஃதாவது துன்புறும் பவக்கடலைத்தாண்டி அக்கரை யென்ற மோக்ஷவீட்டைப் பெறுகிறவர்களுக்கு ஓம் என்ற காரணமே இன்றியமையாத ஞான ஓடமா யிருக்கிறது.

(3) மேலும், பிரஹ்மத்தினின்றுந் தோன்றிய சர்வத்திரயங்களும் ஓம் என்றே தோன்றி, ஓம் என்றே அடங்குகின்றன.

(4) எத்துணைய கல்விவல்லமமாதியன இருப்பினும், எத்தனை யுட்டுறவு புறத்துறவு இருப்பினும், முன் ஜனனங்களில் செய்த பாவங்களை யொழித்தற்கும் ஜனன மரண வாதனைகளை யொழித்தற்கும், இன்னன பிறவைகளை யொழித்துச் சிவாநுபோகத்தைப் பெறுதற்கும், சிவமாய் விளங்குதற்கும் ஓம்என்ற காரணமே இன்றியமையாத சாதனமா மென்று சிவாகமங்கள் கூறுகின்றன.

(5) நகாரம் திரோதான சத்தி; இஃது ஆத்மாக்களுக்குப் பிரபஞ்சத்தில் இச்சையை வருவித்து மகாரத்தோடு கூடி நிற்பதாம்.

மகாரம் - மலம், கிரியாசத்தி; இஃது ஆத்மாக்களைப் பிரபஞ்சத்தை மெய்யென்று கருதச் செய்து சிவத்தில் ஆசையை வருவித்துச் சிகாரத்தோடு கூடிநிற்பதாம்; சிகாரம் சிவம்; இது பிரபஞ்சத்திலே மறைப்பாய் நின்று ஆத்மாக்கள் செய்யும் ஒவ்வொரு கிரியைக்கும் தான் முன்னின்று அவ்வாத்மாக்களை அக்கிரியையின் பலத்தை அநுபவிக்கச் செய்வதாம்.

வகாரம் அருள்; இது பிரஹ்மத்தினின்றும் உண்டாகிய சர்வத்திரயங்களுக்கும் ஆதாரமாய் நின்று, யகாரத்தோடு கூடி நிற்பதாம்.

யகாரம் சீவன். இது இந்தச் சீவன் ஓங்காரத்தை ஆதாரமாகக்கொண்டு மேற்சொல்லிய நான்கு பூதங்களோடுங்கூடி அவைகட்குரிய தொழில்கட்குச் சாட்சியாய் நிற்பான்.

இரண்டாம் அநுவாகம்
முற்றிற்று.

## மூன்றும் அநுவாகம்.

(1) சர்வத்திரயங்களுக்கும் சர்வசித்திகளுக்கும் ஓம் என்ற காரணமே காரியப்பட்டு நிற்கின்றது.

ஸ்ரீகாரண பஞ்சாட்சரத்தை ஞானசாரியரிடத்தில் நன்குணரப்பெற்று அதனோடு பயின்று வருபவர் சர்வபவங்களும் தீய்ந்து பரசிவத்தைச் சார்வார்கள்; அஃதாவது பராபரப் பிரஹ்மத்தினிடத்தில் லயப்பட்டிருப்பார்கள்.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

சிவ வாக்கியம்.

"சிவாயவஞ்செழுத்துளே தெளிந்துமுத்தி சேரலாம்
சிவாயவஞ்செழுத்துளே தெளிந்துவான மாளலாம்
சிவாயவஞ்செழுத்துளே தெளிந்துஞானம் சேரலாம்
சிவாயவஞ்செழுத்துளே தெளிந்துபாரு மும்முளே."

"சிவாயவஞ்செழுத்துளே தெளிந்துதேவ பாகலாம்
சிவாயவஞ்செழுத்துளே தெளிந்துவான மாளலாம்
சிவாயவஞ்செழுத்துளே தெளிந்துகொண்ட வான்பொருள்
சிவாயவஞ்செழுத்துளே தெளிந்துகொள்ளு முண்மையே."

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்.

நமச்சிவாயப் பதிகம்.

"விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழ
லுண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே."

ஒழிவிலொடுக்கம்

நிலையியல்பு.

"தாமருந்தல் போலத் தமைச்சிவனுக் கூணாக்கித்
தாமருளா லுண்டுபரை தாமாகித்—தாமான
அஞ்செழுத்தா லர்ச்சித் தடியார்க் கடிமைசெயில்
பஞ்சமலக் கொத்தறுபப் டா."

ஸ்ரீபஞ்சாட்சரத்தி னிலையை ஞானாசாரியரிடத்தில் பத்தி செய்தறிந்து கொள்ளவேண்டும்.

ஐந்தாவது அத்தியாயம் ஸ்ரீபஞ்சாட்சரவியல்

முற்றிற்று.

## ஆறாவது அத்தியாயம்.

## வேதாகமப் பொதுவிளக்கம்.

### கோச்சகக் கலிப்பா.

கண்ணுண் மணியைக் கருதரிய பேரொளியைப்
பெண்ணுருவிற் பாதிகனைப் பேசரிய முப்பொருளை
விண்ணுண் மணியை விளக்கொளியை வெங்கதிரைத்
தண்ணொளியை யுள்ளில்வைத்துச் சாயுச்சயஞ் சாருவனே.

### முதல் அநுவாகம்.

(1) இவ்வநுவாகத்தில் வேதாகமசாஸ்திர புராணங்களி லுள்ள விதிவிலக்குகள் சொல்லப்படுகின்றன.

நித்தியமாயும், நிர்க்குணமாயும், சர்வசாட்சியாயு மிருந்தும், சர்வத்தினும் உள்ளும்புறம்புமாயிருந்தும், சர்வ அவஸ்தாத் திரயங்களுக்கும் இடமாயிருந்தும், இவற்றோடு தாக்கற்றிருக் கின்ற பரமேஸ்வரனிடத்தினின்றும் விளைந்த சிருஷ்டி, திதி, லய, காரிய காரணம் என்ற பஞ்சகிருத்தியங்களால் வெளி யாய சீவர்களனைவரும் மாயாசம்பந்தத்தை வகித்தவர்களான படியால், இவர்களை யிம்மாயா சம்பந்தத்தினின்றும் விடுதலை யாக்கவும், சுவர்க்கலோகாதிபத முத்திகளையடையச் செய்யவும், பிறகு முத்திசாதனமென்னும் சத்சங்கவிதரணத்தால், தன்னை யும், தனக்காதாரமாயுள்ள பதியையு மறிந்துகொள்ளும் பொரு ட்டும் (அஃதாவது ஆத்மாவாகிய தன்னை யறிவினால் ஆராய்ந்தறி ந்து முத்திவீட்டைப்பெறும் பொருட்டும்), இவர்கட்கு ஆதார மாய்ச் சுயம்புவாய் ஆதியில் விளைந்த நான்கு வேதங்களும் இப் பூமியின்கண் தோன்றின.

(2) அவை அங்ஙனம் தோன்றிய காலத்து, அப்போதிருந்த பெரியோர்க ளவற்றை யெடுத்துப் பார்த்தனர்; பார்த்தபோது, அவை சுயம்புவாய் விளைந்த வேதங்களானபடியால், அவற்றின்

பொருளின்னதென்று அறியமுடியாது தத்தம் கருத்திற்குப் பட்டதையே பொருளாகக் கொண்டு கடவுள் நிச்சயஞ் செய்து கொண்டுவெவ்வேறு நாமரூபவடையாளங்களையும், ஆகமசாஸ்திர புராணங்களையும், ஏற்படுத்திக் கடவுளை வணங்கிவந்தார்கள்.

(3) அங்ஙனமாயினும், வேதம் பலவகைப்பட்டதாயினும், அதில் விளங்கும் பராபரவஸ்து ஒன்றே தவிர வேறல்ல. பெரியோர் கருத்து வெவ்வேறாய்த் தோன்றியபடியால், நிர்க்குணமாயுள்ள பரமேஸ்வரனிடத்தினின்று விளைந்த பஞ்சகிருத்தியங்களை அவரவர் கருத்தின்படி வெவ்வேறு நாமரூபவடையாளங்களாய் வெவ்வேறு தெய்வங்களாய்த்தோன்றி அவர்க்குக் கதியளித்தன; இவை தவிர வேறில்லை.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

தாயுமானவர்

கல்லாலின்.

"வேறுபடுஞ் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லான்
மாறுபடுங் கருத்தில்லை முடிவில் மோன
வாரிதியி னதித்திரள்போல் வயங்கிற் றம்மா"

கைவல்ய நவநீதம்.

"ஈன்றழித் தளிக்குஞ் செய்கைக் கேதுவா யயனுப் மாலாய்
ஆன்றவீ சனுமாய்த் தானே யனந்தமூர்த் தியுமாய் நிற்கும்
மூன்றமுத் தனுமா யின்பப் புணரியா தவனைப் நாளும்
தோன்றிய விமல போத சொரூபத்தைப் பணிகின் றேனே"

நெஞ்சறி விளக்கம்.

"பசும்பொன்னி னும மொன்றிப் பணிதிவே றுனாற் போல
விசும்பெல்லாங் கலந்த சோதி வெவ்வேறு தெய்வ மாகி
உசும்புசீ வாத்து மாக்க ளுடல்பல வான தன்னைக்
கசிந்துகண் டுருகி நாக விங்கரைப் பணிவாய் நெஞ்சே"

(4) மேற்கூறியபடி சுயம்புவாய் விளைந்த வேதங்களாவன இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்பனவாம்.

(5) இவ்வேதங்களினின்று முண்டாகிய ஆகமங்கள் இருபத்தெட்டாம். அவை காமியம், யோகஜயம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்ஷமம், சகஸ்ரம், அஞ்சுமான், சுப்ரபேதகம், விஜயம், நிசுவாசம், சுவாயம்புவம், அநலம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரக்கியானம், விம்பம், புரோர்க்கீதம், லளிதம், சித்தம், சந்தான சர்வோத்தமம், பாரமேசுரம், கிரணம், பேதம், வாதுளம் என்பனவாம்.

(6) இவற்றினின்றும் ஆறு சாஸ்திரங்களுண்டாயின:— அவை வேதாந்தம், வைசேஷிகம், பாட்டம், பிரபாகரர், பூர்வ மீமாஞ்சை, உத்தரமீமாஞ்சை என்பனவாம்.

(7) இனிப்புராணங்கள் பதினெட்டாம். அவை மார்ச்சியம், கௌர்மம், வராகம், வாமநம், பிராமம், வைஷ்ணவம், பாகவதம், சைவம், லயிங்கியம், பௌஷியம், நாரதீயம், காருடம், பிரமகைவர்த்தம், ஸ்காந்தம், மார்க்கண்டேயம், ஆக்கிநேயம், பிரமாண்டம், பத்மம் என்பனவாம்.

## இரண்டாம் அனுவாகம்

முற்றிற்று.

## மூன்றும் அனுவாகம்.

(1) மேற்சொல்லப்பட்ட வேதாகம சாஸ்திர புராணங்கள் கூறும் பதார்த்தங்கள் வருமாறு:—

அவை பதி, பசு, பாசமென்னும் மூன்றுவித பதார்த்தமும், சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சியமென்னும் நான்குவித பதவிகளும், சரியை, கிரியை, யோகம், ஞானமென்னும் நான்குவித சாதனங்களும் ஆம்.

(2) இவற்றுள், பதியாவது நிர்க்குணமாயும், நித்தியமாயும், சர்வ சாக்ஷியாயு முள்ள பரமேசுரனும்.

பசுவாவது பரசிவ சன்னிதானத்தில் விளைந்த பஞ்சகிருத்தியங்களை யேற்கும் சீவர்களாம்.

பாசமாவது பரமசிவன் செய்யும் பஞ்சகிருத்தியங்களுக்குக் கருவியாயிருக்கும் மும்மலங்களாம்.

(3) சாலோகபதமாவது கடவுளுலகத்தில் வாழ்தலாம்.

சாமீப பதமாவது கடவுளருகி லிருப்பதாம்.

சாரூபபதமாவது கடவுளுருவம்போன்றிருந்து வாழ்தலாம். சாயுச்சியபதமாவது அதீத சுத்தப் பிரஹ்மமாகிய பரிபூரண சிவத்தோடு இரண்டறக் கலந்திருப்பதாம்.

(4) சரியையாவது ஒருவன் பதினாறு வயதிற்குமேல் ஒரு கன்னிகையை வேத விதிப்படி விவாகம் செய்துகொண்டு அவளைக் கூடுங்காலமறிந்து கூடி, தருமத்தினின்றும் பொருளைச் சம்பாதித்து, பிரமசாரி, வானப்பிரஸ்தன், சன்யாசி யென இம் மூவர்களும், நோய் பசி பிணி முதலிய இடையூறுகளுற்றிருக்கத் தகுந்த முயற்சியிலிருந்து, அநாதயை யாதரித்து, ஆதுலர்க்களித்து, தன்னிடத்தில் வந்திறந்தவர்களுக்கு நீர்க்கடன் முதலியவற்றை நடத்தி, தேவாலயத்திருப்பணிவிடை, நித்தியபூசை, திருவிழா முதலியவற்றைச் செய்வித்து, தேவதைகளை யாகாதி கருமங்களாலும், பிதுர்க்களை நீர்க்கடன் முதலியவற்றாலும் திருப்திசெய்வித்து, வந்த விருந்தினரைப் பாதுகாத்து, இனி வரும் விருந்தினர்க்கு எதிர்பார்த்து நின்று, துறவிகளைப் பணிந்து, அம்மெய்யடியார்களுக்கு உள்ள மகிழ வேண்டியவற்றை உதவி, தானுந் தன் மனைவியும் ஒருவழிப்பட்டு, நடுநிலைமையை யனுசரித்து, அன்புடைமை, அடக்கமுடைமையிவற்றையுற்று, பிறர் பொருளைக்கவர்தலையும், புறங்கூறலையும், பயனில்லாதவற்றை யனுசரித்தலையும் நீக்கி, உலகநடை யறிந்து உதவி, புகழுடம்பினனாய், யாவரிடத்தும் அன்புடையவனாய் இனிய வசனங்களை வசனித்துப் புத்திரபாக்கிய முதலியவற்றைப் பெற்று இம்மையிற்றானே அதிக இன்பத்தை யனுபவித்திருப்பதாம்.

(5) மேற்சொல்லிய நெறிதவறாது இந்தச் சரியை நிலைமையை யனுஷ்டிக்கிறவர் சாலோகபதத்தைப் பெறுவார்.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

திருவாதவூர் புராணம்.

"ஆவ லாலெமக் காமலர் மாங்க ளாக்க லம்மலர் பறித்தலம் மலராற்,றுவி லாவவை தார்பல சமைத்த றணப்பி லெம்புகழ் சாற்றலன் புடனு, மேவு மாலய மலகிடன் மெழுகல் விளங்கநல்

விளக் கிடுதலெம் மடியார்க், கேவ லானவை செய்தலிச் சரியை யியற்ற வல்லவர்க் கெம்முல களிப்போம்.

(6) மேற்சொல்லிய சரியை நிலையை யனுஷ்டிக்கவேண்டிய வன் வேத விதிப்படி ஒரு கன்னிகையை மணந்து அவளுடன் கூடுங்காலமறிந்து கூடவேண்டுமென்பதன் கருத்துவருமாறு:—

போகத்தைப் புகிக்கின்ற சீவர்களுக்கு நேர்ந்த பதார்த்தங் களை அருந்துதலும், நேரிட்டபெண்களைப் பொருந்துவதும் சுபா வமேயாம். அங்ஙனமாயினும் ஒருவன் நேரிட்டபெண்களைப் புணருவானாயின், அவனுக்கு இம்மையிற் பாவமும் பழியும், மறு மையில் நரகமும் துக்கமும் உண்டாகும். ஆதலால் அவன் வேத விதிப்படி ஒரு கன்னிகையை மணந்து அவளுடன் கூடுங்கால மறிந்து கூடவேண்டும்; அஃதாவது விதித்த தினத்திற் கூட வேண்டும்.

(7) விதியாத தினத்திற் கூடுவானாகில், துர்ப்புத்திரனுண் டாவன்; அவனால் இம்மையிற் பாவமும் பழியும், மறுமையில் நர கமும் துக்கமும் உண்டாகும்.

(8) ஆதல்பற்றி இருவரும் கூடுங்காலமறிந்து கூடினால் சற் புத்திரனுண்டாவன்; அவனால் குலத்திற்கு இம்மையிற் புகழும் மறுமையிற் சுவர்க்கமும் உண்டாகும் என்று சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கின்றது.

(9) அங்ஙனம் இல்வாழ்வான் மனைவியோடு கூடுதற்கு விதி த்த தினமாவன:—

மாதரைப் புணருங்காலம் வழக்கமாய்ப் பதினாறு நாட்க ளாம். அவற்றுள், அவர்கள் மாதவிடாயானது முதல் நான்கு தினம் பெரியோர்களால் நிந்திக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் அந்நான்குதினமும், ஏகாதசி, திரயோதசி, அமாவாசை, பூரணை யென்னும் இந்நாள்களும் ஒழிய ஏனைய எட்டுத் தினங்களில் அவர் களைக் கூடுவது முறைமையாம்.

மாதர்கள் மாதவிடாயான நாள்தொடங்கி, ஆறு, எட்டு, பத்து, பன்னிரண்டு, பதினான்கு, பதினாறு இந்தத் தினங்களில் அவர்களைப் புணர்ந்தால், பிள்ளைகளும், ஏனைய ஐந்து முதல் ஒற் றைப்படை நாட்களில் புணர்ந்தால் பெண்களும் பிறக்கும்.

ஆதலால், புத்திரவபேக்ஷையுள்ளவன் விதித்த தினத்தில் தன் மனைவியோடு கூடவேண்டும்.

(10) எவன் நீக்கவேண்டிய எட்டுத் தினங்களையும் நீக்கி,மற்றைய தினங்களி னிரவிற் றன்மனைவியோடு கூடுகின்றானோ அவன் கிருகஸ்தனாக விருப்பினும் பிரமசாரியென்றே சொல்லப் படுகின்றானென்று தர்மசாஸ்திரங்கள் கூறுகின்றன.

(11) ஆதலால், அத்தினங்களே கிருகஸ்தன் மனைவியோடு கூடுதற்கு விதித்த தினமாம்.

(12) இனிக்கிரியையாவது கிருகஸ்தன் மனைவியோடாவது அல்லது மனைவியை மைந்தர்பால் ஒப்புவித்தாவது வனத்திற்சென்று, மெய், வாய், கண், மூக்கு, செவி வழியாக வரும் சத்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தமென்பனவற்றின் ஐந்தாசைகளையும் நாளுக்குநாளடக்கி, விரதம், தேவதாபூஜை, மந்திரயந்திர ஜபம், யாகாதி கிருத்தியங்களை யனுசரித்து, ஓருயிர்க்கும் இடையூறு செய்யாமல் தவத்தில் நின்று, மனதை மிகவும் வருத்தாமற் சிறு பிள்ளைகளை விநோத முன்னிலையில் சமாதானஞ் செய்தணைப்பதுபோல நாளுக்குநா ளடக்கி, அறிவோடு கலந்து தற்பரத்தை யுணருகிற பரியந்தம் ஆசாரியன் கட்டுரையையும் சாஸ்திர விதியையுங் கைப்பிடித்துக் கோப முதலியவற்றை யடக்கியிருத்தலாம்.

(13) இந்தக் கிரியையைத் தவறாது யனுஷ்டிக்கிறவர்கள் சாமீப பதத்தைப் பெறுவார்கள்.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

திருவாதவூரர் புராணம்.

“கந்த வர்க்க முங் கிளர்மணப் புகையுங் கவின்கொ டீபமும் புனிதமஞ் சன முங், கொந்த விழ்ந்தநன் மலருமற் றுளவுங் கொண்டு மாண்யயின் குணங்கலொன் றிலரா, யைந்து சுத்தி செய் தகம்புற மிறைஞ்சி யங்கி யின்கடன்முடித் தருள் வழிநின், றிந்த நற்பெருங் கிரியையன் புடனே யியற்ற வல்லவ ரெம்மருங் கிருப்பார்.”

## யோகம்.

(14) யோகம்: இயமம், நியமம், ஆதனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதியென அஷ்டாங்க முடையதாம்.

(15) இவற்றுள், இயமம்: அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம், பிரமச்சரியம், தயை, ஆக்ஷேபம், சமை, திருப்தி, மிதாகாரம், சௌசம் எனப் பத்துவகையாம்.

(16) நியமம்: தபசு, சந்தோஷம், ஆத்திரம், தானம், ஈஸ்வர பூஜை, சித்தாந்த சிரவணம், இலஜ்ஜை, மதி, ஜபம், விரதம் எனப் பத்துவகையாம்.

(17) ஆதனம்: சுவஸ்திகம், கோமுகம், பதுமம், வீரம், சிங்கம், பத்திரம், முத்தம், தண்டம், மயூரம், சுகம் எனப் பத்து வகையாம்.

(18) பிராணுபாமம்: இரேசகம், பூரகம், கும்பகம், சர்ப்பீஜம், நிர்ப்பீஜம் என ஐந்து வகையாம்.

(19) பிரத்தியாகாரம்: சரீரம், சர்வகன்மம், இந்திரியம், பிராணம், அந்தக்கரணம், இயம் என ஆறுவிதமாம்.

(20) தாரணை: பூதம், பிராணம், கன்மம், பிரமம், தத்துவம், தேவம் என ஆறுவிதமாம்.

(21) தியானம்: அஷ்டதாரம், தேகம், பிரமம், மண்டலத்திரயம், பிர்ம்மா, விஷ்ணு, உருத்திரன், தேவதாரம், விஸ்வரூபம், பிராணம் எனப் பத்துவிதமாம்.

(22) சமாதி: தத்துவலயம், சவிகற்பம், நிர்விகற்பம், சஞ்சாரம், ஆரூடம் என ஐந்துவிதமாம்

இவற்றின் விளக்கம் வருமாறு:—

(a) இயமலக்ஷணம் கொல்லாமை, மெய்ம்மைகூறல், கள்ளாமை, பிறற்பொருளிச்சியாமை, இந்திரிய மடக்கல் முதலியனவாம்.

(b) நியமலக்ஷணம் தவம், தூய்மை, தத்துவநூல் ஓர்தல், மனமுவந்திருத்தல், தெய்வம் வழிபடல் முதலியனவாம்.

ஆதனபேதம்.

(c) i. சுவஸ்திகம்—தொடைக்கும் முழங்காலுக்கும் நடுவே இரண்டுள்ளங்காலையும் செலுத்தி யிறுமாந்திருத்தலாம்.

ii. கோமுகம்—சகனபக்கத்தில்இருகால் பரட்டையும் மாறி வைத்து அவ்விருகால் பெருவிரலையும் கையாற் பிடித்திருத்தலாம்.

iii. பதுமம்—இருதொடை மேலும் இரண்டுள்ளங்காலையு மாறித்தோன்ற வைத்தலாம்.

iv. வீரம்—வலத்தொடையி லிடக்கால் பரட்டைச் சேர்த்து இறுமாப்புற்றிருத்தலாம்.

v. சிங்கம்—பீஜத்தின்கீழ் சீவனிடத்துப் பரட்டை வைத்து இடதுமுழங்கையை முழந்தாளில் வைத்து அங்குலியை விரித்து நாசியைப் பார்த்திருத்தலாம்.

vi. பத்திரம்—பீஜத்தின்கீழ் சீவனிடத்தில் இருகால் பரட்டையும் வைத்திரண்டுபரட்டையும் இரண்டு கையாலு மிறுகப் பிடித் தசையாதிருத்தலாம்.

vi. முத்தம்—இடக்கால் பாட்டால் சீவநிலையை யமுத்தி வலக்கால்பாட்டின்கீ ழிருத்தலாம்.

vii. மயூரம்—முழங்கையிரண்டும் உந்திப்புறத்தி லழுந்தப் புவியிற் கையையூன்றிக் காலை நீட்டித் தலை நிமிர்ந்திருத்தலாம்.

ix. சுகம்—சுகமும் திடமும் எவ்வாறிருக்கின்றனவோ அவ்வாறிருத்தலாம்.

(d) பிராணுயாமம்—பிராணவாயுவை ரேசக பூரக கும்பகஞ் செய்தலாம். ரேசகம் இழுத்தலாம்; பூரகம் விடுதலாம்; கும்பகம் அடைத்தலாம்.

(e) பிரத்தியாகாரம்—உபாதியை நீக்கி யுண்மேணுக்கலாம்.

(f) தாரணை—கண்டம் இருதயம் நெற்றி கபாலம் நாபி இவற்றிலொன்றில் சந்ததம் சிந்தையை வைத்தலாம்.

(g) தியானம்—ஐம்புலனையுமடக்கிக்கடவுளைச்சிந்தத்தலாம்.

(h) சமாதி—இந்திரிய முதலிய தத்துவசேட்டைகட் கேதுவாய யாக்கையுணின்று, அவற்ருடு கூடினும் அவற்றிற் பற்றின்றி யிருக்குமான்மாவாகியதன்னைத் தான் கண்டிருத்தலாம். இவற்றுள், இயமம் நியமம் ஆதனம் பிராணுயாமம் என்பன யோகத்திற் சரியையாம்; பிரத்தியாகாரம் தாரணையென்னு மிரண்டும்

யோகத்திற்கிரியையாம்; தியானம் யோகத்தில் யோகமாம்; சமாதி யோகத்தில் ஞானமாம்.

(23) இந்த யோகத்தை யனுஷ்டிக்கிறவர்கள் சாரூப பதத்தைப் பெறுவார்கள்,

இதற்துப் பிரமாணம் வருமாறு.

திருவாதவூரர் புராணம்.

"முக்கு ணம்புல னைந்துட னடக்கி மூல வாயுவை யெழுப் பிரு வழியைச், சிக்கெ னும்படி யடைத்தொரு வழியைத் திறந்து தாண்டவச் சிலம்பொலி யுடன்போய்த், தக்க வஞ்செழுத் தோரெழுத் தருவாந் தன்மை கண்டரு டரும்பெரு வெளிக்கே, புக்க ழுந்தின ரெமதருப் பெறுவார் புவியில் வேட்டுவ னெடுத்தமென் புழுப்போல்."

(24) இனி ஞானமென்பதியாதெனிற் கூறுதும்:—தத்துவ ஸாஸ்திரங்கள் கூறும் பேதாபேதப் பொருள்களை யறிந்து, ஐம் புலன்களையும் அடக்கி, நானானென்று விகற்பித்து வருவதையும், அடுத்து வருகின்ற வூழையும், உற்ற வுறவினரையும், இரு வினைகளையும், மும்மலங்களையும் இகபரத்தினதிச்சையையும், சாக்கிரமுதலிய ஐந்தவத்தைகளையும் ஒழித்து, ஒன்றையுஞ் சுற்றிப் பாராமல் யதார்த்தசுத்தமே தானாக விளங்குவது ஞானமாம்.

(25) இந்த ஞான நிலையை யனுஷ்டிக்கிறவர்கள் சாயுச்சிய பதவியைப் பெறுவார்கள்.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

திருவாதவூரர் புராணம்.

"பரந்த வான்கலை முழுதுமா கமநூற் பகுதி யும்பல சமய சாத் திரமுந், தெரிந்து தேர்ந்ததில் வாய்ந்தமுப் பொருளின் செய்தி யேபொரு ளெனமனந் தெளிந்து, புரிந்து போந்துள சிற் றறி வனைத்தும் போக்கி யவ்வறி வெனச்சிவ போதம், விரிந்து தோன்றுநெஞ் சுடையவித் தகரே மேன்மை யானநம் மெய்ப்பதம் பெறுவார்."

சிவானந்தபோதம்.

"ஞான மேதெனக் கேட்டிடின் தத்துவ நானென வுணர்ந்திந்த
வூனை நானென வுரைத்ததை யகன்றுபின் னொளிர்வத னைக்கண்டு
மான வெட்கமுந் துக்கமுங் கவலையும் வஞ்சனை தான்போக்கி
யீன மற்றுநான் சிவமெனத் துணிந்தது மிழந்தது முடிவாமே"

மூன்றாம் அநுவாகம்

முற்றிற்று.

## நான்காம் அநுவாகம்.

(1) மேற்சொல்லிய சரியை முதலியவற்றை யனுஷ்டித்து, சாலோகசாமீபசாரூப பதவிகளைப் பெறுவதைக் காட்டிலும் இந்த மூன்று நிலைமையிலும் மேலானதும் அவற்றாலுறும்பதவிகட்கு மேலான பதவியைத் தாத்தக்கதுமான ஞான நிலைமையை யனுசரித்துச் சாயுச்சியத்தைப் பெறுவதே சிறந்ததாம்.

(2) அங்ஙனம் சர்வத்திலும் உயர்ந்ததும், சர்வபதவிகளிலும் உயர்ந்த பதவியைத் தாத்தக்கதுமான ஞான நிலையே மேலானதாயிருக்க, மற்றைய மூன்று நிலைமையையும் அனுசரிக்க வேண்டுமென்று வேதாகமங்கள் விதிக்கின்ற காரணம் என்னையெனின், கூறுதும்.

(3) நிர்க்குணமாயும், சர்வசாக்ஷியாயுமிருக்கின்ற பரசிவத்தின் சன்னிதானத்தில் விளைந்த பஞ்சகிருத்தியங்களுக்கேதுவான மீவேசுவரர்க ளனைவரும் மாயாசம்பத்தை வகித்தவர்கள் அவர்களுள் ஈசன் தன்னிலைமையை மறவாதவனுவன்; ஜீவர்களத் தன்மையரன்று. அவர்களின் மனம் பஞ்சேந்திரிய வழியினின்று சமுத்திரத்தின் அலையைப்போலவும், சுழற்காற்றைப்போலவும், குரங்கின் சேட்டையைப்போலவும் அலையுந் தன்மையுடையதாம்.

குழந்தையொன்று தனக்குத் தகாத வஸ்துவின்மீது இச்சைவைத் தழுமாயின், அக்குழந்தையின் தாய் தன் குழந்தை அறியாமையால் தகாத வஸ்துவின்மீது இச்சைவைத் தழுகிறதென்றறிந்து, நாநாவித அரும்பு,மலர்,காய்,கனிகளைக் காண்பித்து அக்குழந்தைக்குத் தகுந்த வஸ்துவைக் கொடுப்பது போல, ஜீவர்களின்மனதை ஹாலம்ப நிராலம்பத்தில் நிறுத்தும் பொருட்டு அவர்களுக்குச் சாஸ்திரங்கள் சரியை கிரியா யோகங்களை அனுஷ்டிக்கக் கூறி, பின் ஞானத்தைப் போதிக்கின்றன.

(4) அன்றியும், சரியை கிரியையோக மிம்மூன்றையு மனுசரித்துச் சாலோக சாமீப சாரூப பதவிகளைப் பெற்ற போதிலும், அவற்றால் ஜனனமரண வாதனை வந்தெய்துமே யல்லது இவைகளொழிதற் கேதுவாகிய ஆத்மாவாகிய தன்னை யறிவது கிட்டாதாம். ஆனல்,

சரியை கிரியை யோகமிம்மூன்றும், ஞானநிலையை யடைவதற்குச் சாதனமாம்; அதனால் மேற்சொல்லிய ஜனன மரணவாதனைக ளொழிதற் கேதுவாய ஆத்மாவாகிய தன்னை யறிவது உண்டாம். ஆனபடியினால் ஞானநிலையே மேலானதாம்.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

தாயுமானவர்

சின்மயாநந்த குரு.

"தாக்கும்வகை யேதினாட் சரியைகிரியாயோக சாதனம் விடுத்த தெல்லாஞ், சன்மார்க்க மல்லவிவை நிற்கவென் மார்க்கங்கள் சாராத பேரறிவதாய்"

பராபரக் கண்ணி.

"விரும்புஞ் சரியைமுதன் மெய்ஞ்ஞான நான்கு
மரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே.".

நிஷ்டானுபூதி விளக்கம்.

"சரியையின் றொழிலி னாலுஞ் சற்கிரி யையினும் யோகம்
புரிதரு முயற்சி யாலும் பொருந்தொணு தென்பர் மேலோர்
உரியதே சிகனு ரைக்கு மொருமொழி யுண்மை யாலே
அரிய மெய்ஞ் ஞான வீடுங் கடைவது திண்ண மாமே."

சிவானந்தபோதம்.

"சரியை யென்பது குறைவறச் செய்துமே தன்கடம் விழுந்திட்டால், கிரியை செய்யவே யெடுத்திடுங் கடமது கிரியையு முடிந்தேகில், உரிசை யாகிய யோகமே செய்யவு முடலெடுத்துழைக்குங்காண், பரிகொள் யோகமு முற்றவு முடிந்துடற் பாரினி லுருவாமே."

"ஞான மேபெற வெடுத்திடு மவ்வுட னழுவிடா துரைத்திட்டா, லீன மாகிய சனனமும் போக்கிடு மீசனே தானாகி, வான முற்றதோர் சச்சிதா னந்தமாய் வாக்குரைக் கெட்டாதே, மோன முற்றுதா னெங்குமாய் நிறைந்தது முத்தியென் றுணர்வாயே."

நான்காம் அநுவாகம்.

முற்றிற்று.

ஐந்தாம் அநுவாகம்.

(1) இஃதன்றியும், வேதமானது இம்மைக்கணுள்ள அனித்தியவின்பத்தை நீக்கற்பொருட்டு மறுமையின்பத்தைக் கூறியது; அம்மறுமை இன்பத்தையும் நீக்கிப் பரமசுகமாகும் பொருட்டுச் சரியை கிரியை யோகங்களை யனுஷ்டிக்க வேண்டுமென்று கூறியது.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

கைவல்லிய நவநீதம்

சந்தேகந் தெளிதற் படலம்.

"கள்ளு முணநீ விரும்பினன் மகங்கள்செய் காமத்தின் விருப்பானல், கொள்ளும் பெண்டொடு கலவிசெய் யெனிலிவன் குறையெலாந் தொடானென்றே, தள்ளும் வேதத்தின் சம்மதம் சகலமுந் தவிர்வதே கருத்தாகும், விள்ளு மிவ்விதி யென்னெனிற் பூருவ நியமமாம் விதியன்றே."

(இதன்பொருள்.) மதுவையும் மாமிசத்தையும் நீயுண்ண இச்சித்தால் யாகங்களைச் செய்து புசிப்பாய்; காமவேட்கை யுண்டானல் விவாகஞ் செய்யும் மனைவியோடு புணர்ச்சி செய்வாயென்றால், இக்காமிய புருஷன் மற்றவையெல்லாந் தீண்டாது நீக்குவானென்பதே வேதத்தினுடைய சம்மதம்; அப்படி அனைத்துநீங்கி நிற்பதே அதன் அபிப்பிராயமாகும்; சொல்லாநின்ற இக் கன்மகாண்டவிதி என்னவென்றால் பூர்வபக்ஷமாக நியமித்ததாம்; சித்தாந்தமாக நியமித்ததன்றாம், என்றவாறு.

இவ்விதிபூர்வ பக்ஷமென்பதை வற்புறுத்துதல்.

"மதுவி றைச்சிக ளுண்ணென்ற சுருதியின் மணந்துபாரெனல்பாராய், மிதுன விச்சையும் புத்திரோற் பத்தியால் விரும்பென்ற விதிபாராய், இதையும் விட்டொழி யதிநயிட் டிகவன்னிக் கிகழ்ச்சியற் றதும்பாராய், அதையறிந்துகன் மங்களா சைகளொழிந் தானந்த மடைவாயே."

(இதன் பொருள்.) மதுமாமிசங்களைப் புசியென்ற வேதமானது பின்பு ஆக்கிராணஞ் செய்தாற் போதுமென்பதைப்பார்; மனைவியோடு புணரவிச்சித்தலையும் மகப்பேறுண்டாகும் பொருட்டு இச்சிப்பாயென்ற விதியைப்பார்; இவ்விதியையும் விட்டொழிந்த சன்னியாசிக்கும் நயிட்டிக பிரமசாரிக்கும் நிந்தையில்லாத

தும்பார்; அக்கருத்தை யுணர்ந்து கன்மங்களின் மேல் வைத்த இச்சைகள் நீங்கி ஞானத்தினுற் பிரஹ்மாநந்தத்தை யடைவாய் என்றவாறு.

(!) இல்லற தருமஞ் செய்யாமை துறவிக்கும் பிரமசாரிக்கும் இழிவின்மை பாரென்பார், 'அதிநயிட் டிகவன்னிக் கிகழ்ச்சி யற்றதும்பாராய்' என்ருர்.

(5) வேதம் கன்மகாண்டத்திற் கூறும்வருணுச்சிரம கன்மங்கள் அவற்றினுலுண்டாகும் போகவின்பங்கள் அனைத்தும் பின்பு துன்பங்களாக வருத்துதலைக்கண்டு, அவற்றை விடுத்துப் பரம சுகத்தைத் தேடவேண்டுமென்பது அதன் அபிப்பிராயமாதலால், இவற்றை யொழித்துச் சுகத்தைத் தேடவேண்டும் என்பதாம். அஃதாவது பரமாத்மாவை ஞானத்தாலன்றிக் கன்மத்தால் அடைதல் கூடாது என்பதாம்.

(6) மேற்சொல்லிய சரியை கிரியை யோக மிம்மூன்றி னின்றும் ஞானநிலையை யனுஷ்டித்து, குருபாவனை, சொரூபபாவனை, பூரணபாவனை, அதீதபாவனை யென்னும் நான்குவிதபாவனையைய மனுஷ்டித்து வந்தால், மேற்கூறிய சனனமரண வாதனைக ளொழிதற் கேதுவாகிய ஆத்மாவாகிய தன்னை யறிவது உண்டாம்.

(7) மேற்சொல்லிய பாவனை நான்கனுள் குருபாவனை யாவது மனதில் தனது ஆசாரியரைப்போலப் பாவனை செய்து கொண்டு, அதற்குச் சோடசவுபசாரமுஞ் செய்து அதன்கண் மனத்தை அசைவின்றி நிறுத்துவதாம்.

(8) இரண்டாவது சொரூப பாவனையாவது

ஆலயங்களிற் பூசித்து வருகின்ற சொரூபங்களைப்போல மனதில் பாவனை பண்ணிக்கொண்டு, அதற்குச் சங்கற்பத்தால் அபிஷேக முதலியவைகளைச் செய்து அதன்கண் மனதை அசைவின்றி நிறுத்துவதாம்.

(9) மூன்ருவது பூரணபாவனை யாவது.

ஆசாரியன் சொல்லிய குறியைப்பார்த்து மனதைப் பஞ்சேந்திரிய வழியிற் செலுத்தாமல் அதன்கண் அசைவின்றி நிறுத்துவதாம்.

(10) நான்காவது அதீதபாவனையாவது

ஒன்றையுஞ் சுற்றிப்பாராது மனதைத் தற்சொரூபத்தி (சுத்தசிவத்தி)ல் சேர்த்து அசைவின்றி நிறுத்துவதாம்.

(11) மேற்சொல்லிய பாவனை நான்கனுள் அதீதபாவனையை யுணர்ந்து அதில் மனதை அசைவின்றி நிறுத்துவதே மேலான நிலையாம்.

(12) அதீதபாவனையில் மனம் பொருந்துவதே மேலானதா யிருக்க மற்ற மூன்று பாவனையையும் அனுஷ்டிக்க வேண்டுமென்ற தென்னையெனின், அவ்வதீத பாவனையில் மனம் நிலைபெறும் பொருட்டு அம்மூன்று பாவனையையும் அனுஷ்டிக்கவேண்டும்.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

வைராக்கிய சதகம்.

"நெஞ்ச மேயினிப் பாவனு தீதமாய் நின்றிடின் றெனி நிற்பா, யெஞ்சு ருதகல் பூரண பாவனை யோர்ந்திலை யெனினுல கெல்லா, மஞ்ச னக்களன் மேனியென் றோர்ந்திலை யெனினருள் சுரந்தெம்பால், வஞ்ச மற்றிடும் படிக்கிவ ணடைந்ததோர் வடிவை யோர்ந் துய்வாயே."

இந்நான்குவித பாவனைகளின் நிலைகளையும் ஞானசாரியரிடத் தில் பக்தி செய்துணர்ந்து கொள்ள வேண்டும்.

ஐந்தாவது அநுவாகம் வேதாகமப்போது விளக்கம் முற்றிற்று.

## ஏழாவது அத்தியாயம்.

## விசாரவிருத்தி யியல்பு.

### கோச்சகக் கலிப்பா.

ஆதி முதலை யகண்டப் பெருவெளியைச்
சோதியதாய் நின்றிலங்குந் தூவெளியை மாமணியை
வாதி முதற்சமய வழிகடந்த பரசிவத்தை
நீதியதாய் நெஞ்சிருத்தி நிந்தையற்று வாழ்வேனே.

## முதல் அனுவாகம்.

(1) இவ்வத்தியாயத்தில் இடையருத ஆத்மவிசார விருத்தியால் பேரின்ப நிலையைப் பெறலாமென்பதும், பகிர்முகமாகச் செய்யும் கன்மங்களாலதனைப் பெறுவது முடியாதென்பதும், அகமுகமின்றிப் பகிர்முகமாய்ச் செல்லுதற்குக் காரணம் அஞ்ஞானமென்பதும் சொல்லப்படுகின்றன.

(2) காலத்திரயத்திலும் கெடாத பேரின்ப நிலையை அகமுகமுடையவரே பெறுவார்களன்றிப் பகிர்முகமே தமக்குப் பயனுகக்கொண்டு இச்சைக்கேதுவாகிய விடயப் பயிற்சியிற் சுழலுகின்ற காமிகள் பிறவிச் சாகரத்தில் விழுந்துழலுவார்களேயல்லாமல் முத்தியைப் பெறமாட்டார்கள்.

(3) அஃதெங்ஙனமெனின், மார்க்கத்தில் செல்லுகின்றவர்கள் பராமுகமாகச் செல்லுவார்களானுல் கண்களுடையவராயிருந்தபோதிலும் எதிரேயுள்ள பள்ளத்தில் வீழ்வார்கள்; அங்ஙனம் பராமுகமாகாது செல்லுவார்களானுல் தடையின்றித் தாம் கருதிய ஊரைச் சென்றடைவார்கள்.

பகிர்முகமான மனத்தால் பாவிக்குந் தொழிலும், வாக்கால் ஸ்தோத்திரம் பண்ணுந்தொழிலும், காயத்தால் அர்ச்சனை செய்யுந்தொழிலும் ஆகிய இக்கிரியாமார்க்கமாகச் சென்று பரமசுகத்தைப் பெற விரும்புவோர்கள், கண்ணிருந்துங் குழியில் விழுவார்களைப்போலாவர்.

(4) அஃதாவது அந்தர்முகமாயுள்ள விருத்திஞானத்தினுல் மன முதலிய இந்தத் தேகத்திலிருக்கின்ற நான் யாவன்? சித்தென்பது யாது? சடமென்பது யாது? சித்துஞ்சடமும் ஒன்ருய்க் கூடப்பெற்ற பந்தம்யாது? அதனைவிடப் பெற்ற முத்தி யாது? என்று இடையருத ஆத்ம விசாரணையால் சிற்சட வேறுபாடுகளைப் பகுத்துணர்ந்தவர்களே தற்சொரூபாநந்தத்தைப் பெறுவார்கள்.

(5) இஃதன்றிப் பகிர்முகமாகச் செய்யும் கிரியைகள் (தொழில்கள்) பிறவித் துன்பத்திற் கேதுவாம்; அவற்ருல் ஆன்மலாபமாகிய தற்சொரூபாநந்தம் கிட்டாதாம்.

(6) ஆன்மலாபமாகிய பேரானந்தத்தைப் பெற ஆத்மாவாகிய தன்னையறிய விரும்புவோன் மேற்சொல்லிய விசாரணையாற் சிற்சட வேறுபாடுகளைப் பகுத்தறிதல் வேண்டும்; அதனாலவனுக்கு ஆன்மலாபமாகிய தற்சொரூபானந்தம் கிடைக்கும்.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

கைவல்லிய நவநீதம்

சந்தேகந்தெளிதற் படலம்.

"இந்த ஞானந்தான் வருவதெப் படியெனி னிடைவிடாவிசாரத்தால், வந்த டைந்திடும் விசாரந்தா னேதெனின் மாணுதியாஞ் சரீரத்தில், இந்த நானெவன் சித்தெது சடமெது இரண்டுமோன் றுய்க் கூடும், பந்த மேதுவீ டேதென வுசாவுதல் பகர்விசாரமதாமே."

'அசத்தி லெம்மட்டுண் டம்மட்டும் பராமுக மாகிறு யம்மட்டும் நிசத்தி லுள்விழிப் பார்வையா லிப்படி நிரந்தரப் பழக்கத்தால் வசத்தி லுன்மனம் நின்றுசின் மாத்திர வடிவமா கிடின்மைந்தா கசத்த தேகத்தி லிருக்கினு மானந்தக் கடல்வடி வாவாயே."

(7) சிற்சட வேறுபாடுகளைப் பகுத்தறியும் விசாரமே ஞானம் உதிப்பதற்கு மூலமாம்.

(8) ஆத்மவிசாரஞ் செய்து சகல சந்தேகங்களும் நீங்கி, தற்பரமான அத்துவித சொருபந் தானுய் விளங்குவதே முத்தியாம்.

(9) அஃதாவது உடம்பையுள்ளபடி யறிந்து நீங்கவே, பஞ்ச பூதகாரியமாகிய கருவிகளும் ஈடணைத்திரயங்களும் தசநாடிகளும் ஆத்மாவல்லவென நீங்கும்.

(10) ஞானேந்திரியங்களை யுள்ளபடி யறிந்து நீங்கவே, அவற்றாலுபகரிக்கப்பட்ட சத்தாதிகளைந்தும், அவ்விந்திரியங்களால் விடயங்களை யபகரித்தபோது தொழிற்படும் கன்மேந்திரியங்களைந்தும், விடயீகரிக்கப்பட்ட வசனுதிகளைந்தும், இவ்விருவகை யிந்திரியங்கட்கும்இடமாய் நின்ற பூதங்களைந்தும் ஆத்மாவல்லவென நீங்கும்.

(11) அந்தக்கரணங்களை யுள்ளபடி யறிந்து நீங்கவே, இம்முக்குணகாரமான மூலப் பிரகிருதி நீங்கும்; அஃதாவது சூக்

குணமையாதி வாக்கு ஆத்மாவல்லவென நீங்கும். முக்குணங்களை யுள்ளபடி யறிந்து நீங்கவே, இம்முக்குணகார மூலப்பிரகிருதி நீங்கும்.

(12) மூலப் பிரகிருதி நீங்கவே, இதாகிதமாய் வருங் கன்மஞ் சீவியாது நிற்கும்.

(13) அதனால் அக்கன்மத்தைக் கூட்டாநின்ற காலமும் அதனை வரைந்து நிற்கின்ற நியதியும் நீங்கும்; இவை நீங்கவே, ஆன்மாவிற்குப் புசிப்பின்மையா னிச்சாஞானக் கிரியை சீவியா வாம்; அதனால் கிரியையையெழுப்புங்கலையும், அறிவை யெழுப்பும் வித்தையும், ஆசையை யெழுப்பும் இராகமும், ஆசைப்பட்ட பதார்த்தத்தில் மயங்கும் புருடனும் நீங்கும்.

(14) இங்ஙனம் காலாதிகள் நீங்கவே, காலத்தையும் நியதி யையும் கலையையும் பிரேரித்த சத்திதத்துவமும், வித்தையைப் பிரேரித்த சுத்த வித்தையும், இராகத்தைப் பிரேரித்த ஈசுவர தத்துவமும், புருடனைப்பிரேரித்த சிவ தத்துவமும், மூலப்பிர கிருதியைப் பிரேரித்த சதாக்கியதத்துவமும் நீங்கும்.

(15) இங்ஙனம் சுத்த தத்துவங்கள் நீங்கவே, பிராணவாயு மாத்திரமியங்கும்; பிராணவாயு மாத்திர மியங்குவதை யுள்ளபடி யறிந்து நீங்கவே, தசவாயுக்களும் அசபைநாதமும் நீங்கும். இம் முறையே தத்துவம் தொண்ணூற்றாறும் நீங்கும்.

(16) இங்ஙனங் கருவி கரணாதிகளையுள்ளபடி விசார விருத் தியாலறிந்து நீக்கவே, முன் சடமாயுள்ளதான் இங்ஙனம் பகுத் தறிந்த அறிவேமயமாய் நிற்கும்படி வரும்.

(17) அஃதாவது முன்பு தானல்லாத தனுகரணங்களை யானெ ன்றும் தனதல்லாத புவனபோகங்களை யெனதென்றும் கருதி நின்ற போதங் கெட்டு இப்பொழுது அறிவு தானும் ஆநந்தம் தானும் நிற்கும்படி வரும்.

(18) மேலும், தேகத்தில் நிகழும் போகத்தையும் கருவி களையும் பூரண விசார விருத்தி ஞானமானது விழுங்கிக் கொண்டு எல்லாந்தானாய்ப் பிரகாசிக்கும் என்பது கருத்தாம்.

இரண்டாம் அனுவாகம்.

(1) அங்ஙனந் தானல்லாத தனுகரணங்களை யானென்றும் தனக்கன்னியமான புவனபோகங்களை யெனதென்றும் கருதச் செய்வது பரிபூரணமாய் நிர்விகாரியாய் நித்தியமாய் இருந்துள்ள சிவசத்தியாம். சிவம் அங்ஙனம் தனது சத்தியால் கருதச் செய்து தனது திருவருளாற் காரியப்படுத்தி நிற்குமென் றுணரவேண்டும்.

(2) அஃதெங்ஙனமெனின், நிமித்தகாரணமாகிய குலாலன் முதற்காரணமாயுள்ள மண்ணைத் துணைக்காரணமாகிய தண்டு சக்கரங்களைக்கொண்டு கடகலசாதிகாரியங்களை புண்டாக்குவான்.

(3) குலாலன்போலும் நிமித்தகாரணனாகிய சிவன், மண்ணைப்போலும் முதற்காரணமாகிய மாயையிலிருந்து தண்டு சக்கரம் போலும் துணைக்காரணமாகிய கிரியாசத்தியால், தனுகரண புவன போகங்களாகிய காரியங்களை யுண்டாக்குவான்.

கடகலசாதிகாரியங்களைக் கண்டு இவற்றைக் காரியப்படுத்தும் குலாலன் ஒருவனிருக்கிறனென் றறிவதுபோல, தனுகரண புவன போகங்களைக் கண்டு இவற்றைக் காரியப்படுத்தும் கர்த்தா ஒருவனிருக்கிறனென்று அறியவேண்டும்.

இதற்குப் பிரமாணம் வருமாறு.—

சிவஞான சித்தியார்.

“ காரியங் காரணங்கண் முதற்றுணை நிமித்தங் கண்டாம்
பாரின்மண் டிரிகை பண்ணு மவன் முதற் றுணைநி மித்தந்
தேரின்மண் மாயையாகத் திரிகைதன் சத்தி யாக
வாரியன் குலால னய்நின் றாக்குவ னகில மெல்லாம் ”.

(4) மேற்சொல்லிய கர்த்தாவே தனுகரண புவனபோகங்களைத் தனது திருவருளா லுண்டாக்கி அதனைத் தனது உயிர்க்குயிராய் இருந்து பெத்த முத்திகளிலும் ஊட்டி யுறக்குகிறதென்றறிய வேண்டும்.

(5) இத்தகையநிமித்த காரணனாகியசிவன் ஆன்மாக்களைமுத்தியிலே அடைவிக்க வேண்டுமென்று கருதித் தனது திருவருளால் அவைகட்கு இருவினை யொப்பு மலபரிபாகத்தை வருவித்து

விசார விருத்தியைக் கொடுத்துச் சடசித்துக்களைப் பகுத்தறிந்து கொள்ளும்படி செய்வனென்று அறியவேண்டியதே தவிரத் தற் சுதந்தாமா யொன்றையும் பகுத்துணருவது முடியாது; அஃதா வது மேற்கண்ட கர்த்தாவின் திருவருளைக்கொண்டு சடசித்துக் களைப் பகுத்துணராலா மென்பதாம்.

(6) அங்ஙனமுள்ள கர்த்தா ஆன்மாக்களைக் கன்மத்திற் கீடாய் இங்ஙனம் நடத்திக் காணங்களோடு கூடி யிந்திரிய வழி சென்று விடயங்களைப் புசிக்குமாறு செய்வரெனென்பது கூறப்படுகின்றது.

(7) கடல்போலும் சிவமாம்; அதனுள் பிரிபடாததுவா யிரு க்கும் நீர்போலும் ஆன்மாவாம்; அந்நீரில் பிரிபடாதிருக்கும் உப் புப்போலும் ஆணவமாம்; அந்நீர் மேல் வீசும் காற்றுப்போலும் கன்மமாம்; அக்காற்றாலெழும் அலைபோலும் போதமாம்.

(8) இவற்றுள் காற்றைப்போன்ற கன்மத்திற்கீடாக இச்சா ஞானக்கிரியைகள் பஞ்சமூர்த்தங்களைச் செலுத்தும். இந்தப் பஞ்ச மூர்த்தங்கள் அக்கர முதலிய வக்காங்களைச் செலுத்தும்; இந்த வக்காங்கள் மன முதலிய வுட்கரணங்களைச் செலுத்தும்; இந்த வுட்கரணங்கள் பொறிகளை இடைவிடாது பம்பரம்போலும் சுழல் விசிரிபோலும் சுழற்றி நிற்கும்.

இங்ஙனம் மேற்சொல்லிய பதியானது எல்லாவற்றிற்கும் இடங்கொடுத்து யாவுந் தானுகவே யிருக்கும்.

(9) அங்ஙனம் பதி தானே யெல்லாமாயிருந்து தனது திரு வருளால் இவ்வாறு காரியப்படுத்தி நிற்கும்பொழுது எங்ஙனம் ஆன்மாவிற்கும் சுதந்தரமாய்த் தன்னினைவாய் நிற்கவரும்?

(10) ஆகவே, காலத்திரயத்திலும்கெடாது தனதுள்ளும் புற ம்புமாய் எங்குமாய் நிறைந்துள்ளதும், அனைத்தையும் காரியப்படு த்துவதுமாயதிருவருளைக்கொண்டே ஆன்மா தன்னை யறியவேண்டு பதாயிற்று. அஃதாவது திருவருளறிவிக்க அறியவேண்டுமே யல்லாது ஸ்வதந்தரமா யறிய முடியாதென்பது கருத்து.

(11) இஃதன்றியும், பிருதிவி முதலிய பஞ்சபூதங்களும், சத் தாதி விடயங்களும், வாக்காதி கன்மேந்திரியங்களும், மனமாதி அந்தக்காணங்களும், காலமாதி வித்தியா தத்துவங்களும், சுத்த

வித்தை முதல் நாதமீருய்ச் சொல்லப்பட்ட சிவதத்துவங்களும் ஆகிய இம்முப்பத்தாறையும் அடிதொடங்கி வேறு வேருய் ரூப தரிசனஞ் செய்து இவைகளெல்லாம் தானன்றென்றும் கண்டு நீங்கி, அவற்றின் முடிவில் நின்ற சைதன்னியத்தை மெய்ப்பொரு ளென்றுணர்தற்குத் திருவரு ளுதவி வேண்டும்; திருவருளில்லா தவர் அவற்றை யறிதல் முடியாதென்பது இதன் தாற்பரியம்.

அஃதாவது திருவருளை முன்னிட்டுக்கொண்டு தானுகிய ஆத்மாவை யறியவேண்டுமேயன்றித் தற்போதத்தை முன்னிட் டறியத்தொடங்கின் அனுபவம் நிலைபெருதென்பதாம்.

## மூன்ரும் அனுவாகம்.

(1) இங்ஙனம் இடையருத ஆத்ம விசாரணையில்லாமையால் மெய்யாகத் தோன்றும் பொய்பாகிய கருவிக்கூட்டங்களி னுண் மையை நின்மலாவத்தையி னின்றும் விசாரித்தறிந்தால் அவை சுவரி லெழுதிய பாம்பைப்போலப் பொய்பாகத் தோற்றும்.

அஃதாவது சுவரிலெழுதிய பாம்பிற்குத் தோற்றவு மாத் திரமின்றிச் சேட்டையின்ருயதுபோல, சுத்தாவத்தையினின்று கருவிகளை யெதிரிட்டறிந்தபோது அக்கருவிக் கூட்டங்களாகிய தேகாதிப் பிரபஞ்சங்கள் தோற்றவு மாத்திரமாகவிருப்பதன்றி முன்போல வாதியாவாம்.

(2) கருவிக்கூட்டங்களை யெல்லாம் விசாரித்தறிந்து நீக்கா மல் வைத்துக்கொண்டு அக்கருவிகள் நீங்கற்பொருட்டுக் கிரியை யாதி தவத் தொழில்களைச் செய்யில் அவை எங்ஙனம் நீங்கும்?

(3) அன்றியும் கட்டையிற் கள்ளன் தீபங்கொண்டு வந்தா லன்றி நீங்கான். அக்கட்டையிற் கள்ளனைப்போ லுள்ள தே காதிப் பிரபஞ்சங்கள் விசார ஞானத்தாலன்றி நீங்கா. பொய்யா கிய தேகாதிப் பிரபஞ்சங்களைச் சுத்தாவத்தையினின்று ஆராய்ந் தறிந்து அவை தானன்றென்றும் தனக்கன்னிய மென்றுங் கண்டு நீங்கி அங்ஙனம் அறிவித்து நீக்கியது தன துயிர்க்குயிரா யிருந் துள்ள திருவருளென்றும் அறிந்து, அவ்வருளை வடிவாய் இருக் காமல், தனு கரண புவன போகங்களை நீக்கற்பொருட்டுக் கிரியையாதி தவத்தொழில்களை செய்யத் தொடங்குவது, கட் டையிற் கள்ளனை நீக்கற் பொருட்டுப் பறையறைவாரோடொக்கும்.

அஃதாவது நின்மலாவத்தையினின்றும் அருட்கண்ணலெதிரிட்டுப் பார்த்த பொழுது சடமாய் நீங்கும் கருவிகளை மெய்யாகக்கருதிக்கொண்டு அவை நீங்கற்பொருட்டுக் கிரியையாதி தவத் தொழில்களைச் செய்வோர்க்குத் தற்சொரூபாநந்தம் கிட்டாதென்பதிதன் தாற்பரியம்.

(4) இங்ஙனம் கருவிக்கூட்டங்களை அஃதாவது தனுகரணபுவன போகங்களை விசாரவிருத்தியால் ஆராய்ந்தறிந்து நீக்கின் ஞானந்தோற்றுமோ வெனின், கருவிக் கூட்டங்களெல்லாவற்றையும் பொய்யென்றும் அவைதானன்றென்றும் தனக்கன்னியமென்றும் உள்ளபடி திருவருளால் அறிந்து நீக்கித் தன்னையறிவதே ஞானமாம். இஃதன்றி வேறுஞான முண்டென்று தேடத்தொடங்குவது அஞ்ஞானமாம். ஞானத்திற்கு தடையாயுள்ளது அஞ்ஞானமாம்.

இதற்குப்பிரமாணம் வருமாறு:—

கைவல்ய நவநீதம்.

"எல்லாங்கண் டறியு மென்னை யேதுகொண் டறிவே னென்று
சொல்லாதே சுயமாஞ் சோதி சுடருக்குச் சுடர்வே றுண்டோ
பல்லார்முன் றசமன் றன்னைப் பார்ப்பதுந் தன்னைக் கொண்டே
அல்லாது பதினொன் றானு மவனிடத் துண்டோ பாராய்".

"அறிவுக்கு மறிவு செய்யு மறிவே றுண்டென் றெண்ணு
மறிவற்ற குதர்க்க மூடர்க் கனவத்தை பலமாய்த் தீரும்
அறிபடும் பொருணீ யல்லை யறிபடாப் பொருணீ யல்லை
அறிபொரு ளாகு முன்னை யனுபவித் தறிவாய் நீயே".

(5) அன்றியும், கருவிகளெல்லாம் பொய்யென் றுள்ளபடி தன்னறிவிற்குத் தோன்றுமெனின், அங்ஙனம் அனைத்தையும் பொய்யென்று தோற்றுவித்ததே ஞானமாகும். அஃதாவது பிரபஞ்சத்தினையும் உடம்பினையும் பொய்யென் றறிவித்ததே அறிவன்றி வேறின்று.

(6) அங்ஙனம் மயக்கமாகிய ஆணவவிருளைத் தீர்த்தஞானப்பிரகாசத்தை இஃதன்றோவாமோ வென்றையுறு தலினில் வியாபித்திருக்க வேண்டுமென்பதாம்.

(7) இஃதன்றியும், வைராக்கியத்தினல் அவித்தியாகாம கர்மவானகிய ஜிவனுக்கு உயிர்ச்சார்பு பொருட்சார்பாகிய இருவகைச் சார்புகளும் கழலும்; அவை நீங்கியபோது அவற்றின் மேலெழாநின்ற ஆவாவும் நீங்கும்; அவ்வவா நீங்கியபோது கண்ட பொருள்கள் மேல்சென்று பற்றுமிந்திரியங்கள் நீங்கும்; அவ்விந்திரியங்களடங்கியபோது முன்னேறியிருந்த வாசனையாலெழு மன நினைவு முதலியபாசங்களெல்லாம் கழன்றபோது இவற்றின் கண் நின்ற ஜீவனுக்குத் தனக்கு முதலாயுள்ள பதியே யிடமாகும்.

அஃதெங்ஙனமெனின் அந்தரமாநின்ற ஊசற்கயிற்றிலிருந்தோனுக்கு அல்லூசல் கயிறற்றபோது நிலமிடமானது போலுமாம்.

(8) இங்ஙனம் தேகபோகங்களாகிய துன்பசாதனங்களை யின்பமாகக்கருதச் செய்வது ஆணவமலமாம்; இவ்வாணவமலம் தற்போத மழியுமளவும் இருக்கும்; ஆதலின் அதன்காரியமாகிய ஆசை கெடவே காரணமாகிய ஆணவவாசனையும் கெட்டுத் தன்மயமாகும்படிவரும்; அஃதெங்ஙனமெனின், முன்னர்ப் பிஞ்சாயிருந்தபோது ஓடும் வித்தும் பிரிபடாதிருந்த புளியானது கன்றாய்ப் பழுத்தபிறகு அவ்வோடும் வித்தும் பிரிபட்டுத் தான் தனியானது போல முன்னர் அறிவு முதிராமையான் ஆணவவிருளாற் பொய்யிது மெய்யிதுவென்று தோன்றாதிருந்து அறிவு முதிர்ந்த பின்னர் விசாரவிருத்தியா லாராய்க்கறிந்து யதார்த்த சொரூபந் தானாய் விளங்கும். அஃதாவது பிஞ்சாயிருந்த புளிபோல, கருவிகரணாதிகள் தானாய்ப் பிரிபடாதிருந்த ஆன்மா அது பழுத்த பிறகு தான் தனியானதுபோல விசார விருத்தி ஞானத்தினல் சிற்சடபேதங்களைப் பகுத்துணர்ந்து நீக்கித் தானன்றிவேறொன்றுமில்லாதிருக்கும்; அஃதாவது யாவுந் தன்மயமாய் விளங்கும்.

(9) மேலும் கருவிகளின் குணங்களை யெதிரிட்டறியாத போது அவை தனக்கன்னியமாய் நீங்கா; அங்ஙனம் கண்டறிந்தபோது நீங்கும்; அவை நீங்கவே ஆன்மா அருள்வடிவாகும்; அவ்வருட் பூரணமெல்லாந் தானாய்த் தோன்றுமென்பதாம்.

நான்காம் அனுவாகம்.

(1) அங்ஙனம் ஆன்மா அருள் வடிவாயபோது சிருஷ்டியாதி ஐந்தொழில்களிலும் தோயாது அவ்வருளையும் மறவாது அவ்வருளில் இரண்டற நிற்பதுவே நடுவுநிலையாம்.

(2) அஃதாவது சிருஷ்டியாதி பஞ்ச விடயங்களையும் ஞானேந்திரியங்களா லறிந்து, கன்மேந்திரியங்களால் பற்றி, அந்தகரணங்களால் அவற்றுள் அழுந்தும் தற்போதத்தை ஆன்மாவினது இயற்கைக் குணமன்றென்றும் மதுபானங்கொண்டோனுக்கு லகிரிமேலிட்டுத் தோன்றுவதுபோல், இருவகை இந்திரியங்களோடும் கரணங்களோடும் கூடிய விடத்துத் தோன்றும் விடயபோத மீதென்றறிந்து அவ்விந்திரிய கரணங்களோடு அவ் விடயபோதத்தை நீத்து, தன்னை யுள்ளபடி அருளாலறிந்து அங்ஙனந் தன்னை யறிந்தபோது தனக்கிந்திரிய கரணங்களை வேறாக்கி, தன்னை யறிவித்த தருளென்று கண்டு அவ்வருளே வடிவாயிருந்து தான் மலமுமாகாமற் சிவமுமாகாமற் சிவானுபோகத்தில் இரண்டற வழுந்தி நிற்பது ஆன்மசுத்தியாம்; இவ்வான்ம சத்தியே சிவத்தில் வியாபகமாகிய பேறறிவாம்.

அங்ஙனம் வியாபகமாகிய தனக்கு வியாப்தியா யிருந்துள்ள சிவம் எல்லாவற்றோடும் பரிபூரணமாய் நிறைந்திருந்தும் ஒன்றோடும் தோயாது அவற்றுள் நின்றாற்போலத் தானும் சிருஷ்டியாதி ஐந்தொழில்களோடும் தோயாது நிற்பதுவே பரிசுத்த நிலையாம்.

(3) அங்ஙனம் சிருஷ்டியாதி ஐந்தொழில்களோடும் தோயாது நிற்கவேண்டு மென்பதாவது

ஓரிந்திரியத்தில் ஆன்மா பிரவேசித்தல் சிருஷ்டியாம்; அவ்விந்திரியத்தினின்றோர் விடயத்தைப் பற்றுதல் திதியாம். அங்ஙனம் பற்றிய விடயத்தி லிரண்டற வழுந்துதல் சங்காரமாம். அதில் இதம் பிறத்தல் திரோர்ப்பவமாம்; அதனைத் தெளிந்து கோடல் அநுக்கிரகமாம்.

(4) அன்றியும் ஓரிந்திரியத்தில் ஆன்மா பிரவேசித்தல் சிருஷ்டியாம். அதனாலறியும் விடயத்தை யனுபவித்தல் திதியாம். அவ்விடயம் விடயமயமா யழுந்துதல் சங்காரமாம். அதனை ருசிப்பித்தல் திரோர்ப்பவமாம். அதனைத்தெளிந்து கோடல் அநுக்கிரகமாம்.

(5) இஃதன்றியும் மனதால் ஒருபொருளை நினைத்தல் சிருஷ்டியாம், அப்பொருளில் பிரியம்பிறத்தல் திதியாம், அஃதெப்போது

வருமென்று திகைத்து நிற்றல் சங்காரமாம். அப்பொருளில் மய ங்குவது திரோர்ப்பவமாம்; அதனைத் தெளிந்துகோடல் அனுக் கிரகமாம்.

(6) இங்ஙனம் பஞ்சவிடயங்களையும் ஞானேந்திரியங்களா லறிந்து கன்மேந்திரியங்களாற்பற்றி அந்தகரணங்களால் அவற் றுள் அழுந்தும் சிற்றறிவைமாற்றி தனக்கனுபவமாய்த் தோன் றும் அருளில் மேற்குறித்த சிருஷ்டியாதி ஐந்தொழில்களோடும் தோயாது நிற்கவேண்டுமென்பது இதன்தாற்பரியமாம்.

## ஐந்தாம் அனுவாகம்.

(1) அங்ஙனம் சிருஷ்டியாதி யைந்தொழில்களோடுங் கூடாது திருவருளோடுங் கூடி நிற்கும் நெறியின னுமுண்டு.

அஃதாவது கருவிகளை யுள்ளபடி பொய்யென்று கண்டறி யில் திருவருள் நிலை காணவரும். அஃதெங்ஙனமெனின்,

சாக்கிராவத்தையிற் றோற்றும் போதச்சேட்டையுமற்று உண்டாகிய தேகாதிப் பிரபஞ்சங்களெல்லாம் மாயையிற் றோன்றி யழிவதென்றும் இவற்றிற்கெல்லாம் தாரகமா யுட்புறம்பாய்ப் பரி பூரணமாய் நிற்பது அருளென்றும் கண்டு, பின்னர் அப் பரிபூரண வருளே மெய்யென் றதனை நாடிநின்று விடயபோதத்தையும் பிர பஞ்சத்தினையும் சொப்பனம்போலப் பொய்யாகக்கண்டு இவற்றை யுள்ளபடி நீக்கி அவ்வருள் மயமாகுதலே தற்பரநிலையாம்.

(2) இங்ஙனம் விடயபோதத்தையும் தேகாதிப் பிரபஞ்சங் களையும் பொய்யென்றும் அஃதாவது சொப்பனம் போன்றதென் றும் அவை தனக்கன்னியமென்றும் கண்டு, அவற்றிற்குள்ளும் புறம்புமாய் நிறைந்துள்ள பரிபூரணமாகிய வருளை நாடிநிற்போர் இப்பொய்களனைத்தையும் உள்ளபடி நீக்கி அம்மெய்யாகிய திரு வருளே வடிவாயிருப்பார் என்பதாம்.

(3) அங்ஙனம் அருளைப்பெற்று அவ்வருளென்றும் தானெ ன்றும் பிரித்துக் காணாது அவ்வருளையும் மறவாது அத்திருவரு ளில் இரண்டறக்கலந்து நிற்றலே அஃதாவது அவ்வருளே வடி வாய் இருத்தலே நித்தியசுகமாம்.

இதற்குப்பிரமாணம் வருமாறு:—

### சிவஞான சித்தியார்.

"வாடாதே குழைந்திருப்பா யாகிற் பிறியாதசிவந்தானே பிரிந்துதோன்றும், பிரபஞ்சமெல்லாந் தானாய்த்தோன்றி, நெறியாலே யிவையெல்லா மல்லவாகி நின்றென்றுந் தோன்றிடுவை, நிராதார னாயே".

### திருவாசகம்.

"இரைதேர் கொக்கொத் திருவுபக லேசற் றிருந்தே வேசற்றேன், கரைசே ரடியார் களிசிறப்பக் காட்சி கொடுத்துன் னடியேன்பாற், பிரைசேர் பாலி னெய்போலப் பேசா திருந்தா லேசாரோ".

---

### ஆறும் அனுவாகம்.

(1) இஃதன்றியும் போதமாகியவரசன்புருடனாகிய புரவியின் மேலேறிக்கொண்டு பஞ்சேந்திரிய வீதிகளில் விடயங்களாகிய காட்சிகளைக்கண்டு கொண்டுவருவான். அஃதாவது சுழல் விசிறி போலப் பவுனிசெல்லுவன்.

(2) இங்ஙனமாகாது போதமாகிய புரவியின்மேல் அருளாகிய வரசன் ஏறினலப்போது போக்குவரவற்றமெள்ளனந்தமுண்டாகும். இதனைத் தனதனுபவத்திற்காண்க.

(3) அங்ஙனம் போதம் புருடனோடுகூடி பஞ்சேந்திரிய வீதி சென்று பற்றுவிடயங்களைப் பற்றும். அங்ஙனம்பற்றாது அவற்றை நீக்கியப்போதத்தை யுள்ளடக்கித் திருவருளை நாடவே அத்திருவருள் அப்போதத்தைக் கீழ்படுத்தித் தான் மேலீடாய்ப் பிரகாசிக்கும்; அப்போது ஆநந்தோதயமுண்டாகும்.

போதம் விடயானந்தம் பெறுதற் கேதுவாய் நின்றது புருடனாகலின், புருடன் புரவியாம்; அப்போதம் சொரூபானந்தம் பெறுதற் கேதுவாய் அருளைப் போத முன்னிட்டுக்கொண்டு சேறலின், போதம் புரவியாம். இந்த நாட்டம்வைத்தால் அந்த நாட்டம் மறந்து சுழல்வதையும் அந்த நாட்டம் வைத்தால் இந்த நாட்டம் மறந்து அசைவற்றிருப்பதையும் தனதனுபவத்திற் காண்க.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

ஒழிவிலொடுக்கம்.

போதப் புரவி புருட னதிலேந்து
வீதிப் புவனி விரிசாகும்—போதப்
புரவியரு ளேறினற் போக்குவர வற்ற
பரம சுகங்காணப் பா".

கைவல்யநவநீதம்.

"வாதனை வசத்தி ஞலே வருகின்ற விருத்தி யெல்லாம்
எதிஞ லடக்க லாகு மென்றுதான் விசாரஞ் செய்யின்
போதமாம் ராசன் தானைப் புந்தியைம் புலன்க ளெல்லாம்
தாதரா யிருக்கப் பெற்றால் சகலமு மடங்குந் தானே".

ஏழாம் அனுவாகம்.

(1) இஃதன்றியும் தமக் கனுகூலமாயிருந்த அன்னபானதி களைத் தாமருந்துதல் போலத் தற்போதஞ் சீவியாது நின்று தம் மைச் சிவத்திற்கு ஊணக உண்ணக்கொடுத்து, விடயங்கள் வந் தடுப்பினும் அவற்றைத் தற்போதத்தாற் சென்றுபற்றி அவற்று ளழுந்தாது, அருளை முன்னிட்டுக்கொண்டு அவ்வருள் தர வாங்கி யுண்கிறேமென்னும் ஞாபகம் மறவாமல், அவ்வருள் தரவாங்கி யுண்கிறேமென்னும் போதமும் சுருங்கிப் பரையேதாமாகி, தற் சுதந்தர வறிவுகெட்டுப் பின்ன ரானந்தானுபவத்திலழுந்தி யிருப் பவர்க்கு ஆணவம் மாயை காமியந் திரோதை மாமாயை என்னும் பஞ்சமலங்களுந் மறும்.

(2) இஃதெங்ஙன மெனின், தமதுடல் அருந்தக்கூடிய ஊணை அவ்வுடலுக்கு உண்ணக்கொடுத்து நிற்கவே அவ்வுடல் அதனைச் சிறுகச்சிறுக வுண்டு தான் மிகவும் பருத்தல்போல, தற் போத சேட்டையற்றுத் தம்மைச் சிவத்திற்கு ஊணய் உண்ணக் கொடுத்து நிற்கவே அச்சிவந் தன்னைச் சிறுகச்சிறுகவுண்டு தான் பரிபூரணமாய் விளங்குமென்பதாம்.

(3) அன்றியும், வலிய விடயங்கள் வந்தடுப்பினும் தற்போ தத்தைப் பின்னிட்டு அருளை முன்னிட்டு அவ்வருளால் அவ்விட யங்களை யறிந்துபற்றி அவற்றை யனுபவிக்கும்போதும், அவ்வரு ளை முன்னிட்டு நின்று அனுபவித்து அவற்றாலான்மாவுக்குச் சந் தோடம் பிறக்கும்பொழுதும், இச்சந்தோடம் அவ்வருளால் உண்

டாயதென்று அவ்வருளுக்காக்கி நிற்கவேண்டும். இங்ஙனம் நின்ருல் எல்லாம் தன்மயமாய் விளங்கும்.

(4) அன்றியும், சகல கேவலங்களை நீக்கிச் சுத்தாவத்தையினின்று தம்மைச்சிவத்திற்கு ஊணாக்கி நிற்போருக்கு முன்னரிதமாய்த் தோன்றிய விடயபோக மகிதமாய்த் தோன்றுமாகலின் அதனை ருசிப்பித்து நின்ற திரோதை சத்தி நீங்கும். அத்திரோதை சத்தி நீங்கவே, இருவினைப் பயன்களுஞ் சமமாய்த்தோன்றும். இவை சமமாய்த்தோன்றவே,இவ்விருவினைக்கீடாய்ச் சிவம் சுத்த மாயையினின்று செய்யும் பஞ்ச கிருத்தியங்களும் அசுத்த மாயையும் நீங்கும்.

(5) அன்றியும், அவ னவ ளது வென்னும் முன்னிலைச் சுட்டொழிந்து அவ்விருவினைப் பயன்களையும் தருவதருளென்றறிந்து அவ்வருளில் மறைந்து நிற்கவேண்டும். அங்ஙனம் நின்று அவ்விருவினைப் பயன்களையும் அவ்வருளால் தாமுண்டால் கன்ம மலம் நீங்கும். இது நீங்கவே பரையோக முண்டாம் ; அப்பரை யோகத்தில் இவ்வுடப்பு தானன்றென்று நீங்கவரும். அவ்வுடம்பு நீங்கவே மாயை நீங்கும்; ஆனந்தானுபவத்திற் தற்போதங் கெடும்;இத்தற்போதங்கெடவே தானல்லாதவுடம்பைத் தானென்றும் தனதல்லாத போகத்தைத் தனதென்றும் மாறுபாடாய்க் கருதப் பண்ணி நின்ற ஆணவமலம் கெடும்.

## எட்டாம் அநுவாகம்.

மேற்சொல்லிய விசார விருத்தியாலன்றிமற்றென்ருல், சடசித்துக்களைப் பகுத்தறிந்து நீக்கி ஆத்மாவாகிய தன்னை யறிதல் வாராதென்பதற்குப் பிரமாணம் கைவல்லியம் சந்தேகந் தெளிதற் படலமாம்.

கன்மம் முக்கியமென்னுங் கொள்கை நீங்கற்பொருட்டு ஞானம் உதிப்பதற்குச் சற்கருமம் இருக்க விசாரம் யாதினுக்கு என்ற வினவிற்கு உத்தரம் வருமாறு:—

“ போன சென்மங்க டமிலனுட் டித்தநல் புண்ணிய பரிபாகம்
ஞான மாக்குமே விசாரமே னென்றிடி னுமுரைத் திடக்கேளாய்
ஆன புண்ணிய மீசுரார்ப் பணஞ்செயி லகசுபோம் சுசிபாகும்
மான தம்பினை விசாரித்து ஞானததை மருவுமென் றறிவாயே. ”

(இதன் பொருள்) முற்சென்னனங்களி லப்பியாசஞ் செய்த சற்கரும பரிபாகம்ஞானத்தையுண்டாக்குமே; ஆன்மா அனுன்மா வென்கின்ற விசாரணை யாதினுக்கு என்று கேட்பாயாகில், யாம் சொல்லுகிற உத்தரத்தைக்கேட்பாய். தத்தம் வருணுச்சிரமங்கட் குரிய சற்கருமத்தைப் பலாபேட்சையின்றி யீசுவரப்பிரீதிசெயில் அந்தக்கரணத்திலுள்ள அசுத்தம் நீங்கும், சித்தசுத்திவரும், அம் மனம் பின்பு சிற்சட விசாரஞ்செய்து ஞானத்தைப் பொருந்தா நிற்கும் மென்றறிந்து கொள்வாயாக.

நிஷ்காமியமாகச் செய்யும் சத்கருமம் சித்த சுத்தியையும் விசார ஞானத்தையுங்கொடுக்கும். ஆகலால் விசாரமே வேண்டு மென்பதாம்.

பலபேற்றையுந் தரத்தக்க வலியுள்ள கன்மம் ஞானத்தை யுங் கொடுக்காதோ ? விசாரம் யாதினுக்கு என்று வினவுதல்.

"பத்தி யும்வயி ராக்கிய மும்பர லோகமு மணிமாதி
சித்தி யுந்தவ நிட்டையும் யோகமுந் தியான முஞ் சாரூப
முத்தி யுந்தரும் விசித்திர கன்மங்கண் மோகமாந் திரந்தன்னும்
புத்தி யுந்தர லருமைபோ விசாரமேன் புண்ணிய குருமூர்த்தி."

(இ - ள்) தருமஸ்வரூபமான ஆசாரியரே! ஈசுவர பத்தியை யும் நிராசையையும சுவர்க்காதி லோகங்களையும் அணிமா முதலிய அட்டமா சித்திக்களையும் தவமும் சமாதியையும் இயமமாதி அஷ்டாங்க யோகங்களையும் மூர்த்திபாதித்தியானங்களையும் சாரூப பதவி முத்திகளையும் ஆகிய இவற்றை யெல்லாங்கொடுக்கின்ற பல சித்தியையுடைய கன்மங்களானவை அஞ்ஞானத்தைக் கெடுக் கின்ற அறிவையுங் கொடுக்கின்றது அரிதோ! விசாரணை யாதி னுக்கு?

மேல் வினுவிற்கு உத்தரங்கூறுவான் தொடங்கித்
திருஷ்டாந்தங் கூறல்.

"வேட மாறிய பேர்களை யறியவே வேண்டினுன் மகனேகேள்
கூட மாமவர் சுபாவங்கள் சீலங்கள் குறிகளாய்ந் தறியாமல்
ஓடி யுங்குதித் துந்தலை கீழ்நின்று முயர்ந்தகம் பத்தேறி
ஆடி யும்பல கன்மங்கள் செய்யினு மவருண்மை தெரியாதே."

(இ - ள்) மாணாக்கனே கேட்பாயாக! மாறுவேடங் கொண்டவர்களை யறிய விரும்பினால் மறைந்திருப்பவைகளான அவர்களுடைய குணங்களையும் நடைகளையும் அடையாளங்களையும் ஆராய்ந்து அவர் இனையரென்றறியாமல்,ஓடியும் குதித்தும் தலைகீழாக நின்றும் உன்னதமான ஸ்தம்பத்திலேறி ஆடியும்இவ்வாறான பல கன்மங்கள் செய்யினும் அவர்களினது எதார்த்த வடிவம் தெரிய மாட்டாது.

தாஷ்டாந்தங் கூறல்.

"இன்னவாறந்தப் பிரமத்தை யறிவிக்கு மிலக்கணத் தால்வேதம், சொன்ன ஞானமும் விசாரத்தால் வருமன்றிச் சுருதிநூல் படித்தாலும், அன்னதானங்க டவங்கண்மந் திரங்களா சாரங்கள் யாகங்கள், என்ன செய்யினுந் தன்னைத்தா னறிகின்ற திவைகளால் வாராதே."

(இ - ள்) இத்தன்மையைப்போல, பிரஹ்ம சொரூபத்தைத் தெரிவிக்கும் லக்ஷணைத்தால் சுருதி சொல்லிய ஞானமும் விசாரணையினால் வருமே யல்லாமல் வேதாந்த சாஸ்திரங்களை வாசித்தாலும் அன்னதானங்களும் தவங்களும் மந்திரங்களும் ஆசாரங்களும் வேள்விகளுமாகிய இவைகளில் எந்தக் காரியங்களைச் செய்தாலும் ஆத்மாவாகிய தன்னைத்தெரிந்து கொள்வது இக்கன்மங்களால் வாராது.

ஒருவன் உண்மையைத் தெரிவிக்குஞ் சத்தி யுணர்வினுக்கேயன்றித் தொழிற்கு இன்மைபோல, ஞானத்தை யறிவிக்குஞ் சத்தி விசாரத்திற்கேயன்றிக் கன்மத்திற்கின்றென்பதாம்.

ஒன்பதாம் அநுவாகம்.

(1) மேற்சொல்லிய விதிப்படி விசார ஞானத்தால் திருவருள் நிலையைப்பெற்று ஆத்மாவாகிய தன்னை யுணர்ந்த மெய்ஞ்ஞானிகள் மோக்ஷத்தையும் அட்டமா சித்திகளையும் பெறுவார்கள். முன்புள்ள ஞானவான்களும் அவ்விதமே மோக்ஷத்தையும் அட்டமாசித்திகளையும் அடைந்திருந்தார்கள் என்று ஆகமப்பிரமாணத்தால் கண்டிருக்கின்றோமே; அவ்விதமிருக்க, இக்காலத்தில் விசார ஞானத்தால் திருவருள் நிலையைப் பெற்ற மெய்ஞ்ஞானிகட்கு

அச்சித்துக்கள் சிறிதுங் காணேமே; அஃதின்ன காரணம் என்பதற்குப் பிரமாணம் வருமாறு.—

(முன்புள்ள ஞானிகளைப்போல இவர்கட்கு அணிமாதி சித்திகள் ஏன் இல்லையென வினவுதல்)

கைவல்லிய நவநீதம்.

"சிவசொ ரூபமாந் தேசிக மூர்த்தியே சித்தி முத்திக ளிரண்டும்
தவமு ளோரடை குவரெனி லவர்கள்போற் சகலரு மடையாரோ
அவர்கள் பூருவ சித்தியு ஞானமு மடைந்ததுங் கண்டோமே
இவர்கண் ஞானிக ளென்றிடில்சித்திக ளிவர்க்கிலாவகையேதோ"

(இ - ள்) சிவாகாரமாகிய குருமூர்த்தியே! அணிமாதி சித்தியும் மோக்ஷமும் ஆகிய இவ்விரண்டினையும் தவத்தை யுடையவர்கள் அடைவார்களென்றால், வியாசர் முதலான தவத்தரைப் போல இக்காலத்துள்ள ஞானவான்களனைவரும் அடைவார்களா? அத்தவமுடையவர்கள் முன்புள்ள அணிமாதி சித்தியையும் முத்தியையும் பெற்றது ஆகமப்பிரமாணத்தால் பார்த்தோம். இவர்களை ஞானவான்களென்று சொன்னால், அணிமாதிகள் இவர்கட்கு இல்லாத விதம் யாது?

மேல் வினவிற்கு உத்தரம் வருமாறு.—

"காமி யத்தவங் காமிய மொன்றையுங் கருதிடாத் தவமென்றும்
பூமி யிற்றவ மிருவகை சித்தியும் போதமுந் தருமைந்தா
ஆமி வற்றிலொன் றிபற்றினு லொன்றையே யடைகுவ ரிதுதீர்வை
யாமு ரைத்தவவ் விரண்டையு மியற்றின ரன்றுள பெரியோரே"

(இ - ள்) மாணுக்கனே! இச்சிக்கப்படும் பொருளை யடையக் கருதுவதான காமியத்தவமெனவும் அப்படி இச்சிக்கப்படும் பொருளொன்றையும் அடையக் கருதாதான நிஷ்காமியத் தவமெனவும் உலகத்தில் தவம் இரண்டு விதமாம். அவற்றுள் காமியத்தவம் சித்தியையும் நிஷ்காமியத் தவம் முத்தியையும் கொடுக்கும். ஆகிய இவ்விரண்டில் ஒன்றை யப்பியாசஞ் செய்தவர்கள் அவ்வொன்றையே அடைவார்கள்; இது நிச்சயமாம். பூர்வத்திலுள்ள வியாசர் முதலான மகான்கள் யாம் சொன்ன அக்காமியத்தவம் நிஷ்காமியத்தவம் இவ்விரண்டையும் செய்தார்கள்.

இதன் தாற்பரியம் முன்புள்ள ஞானவான்களிற் சிலர் இரண்டு தவத்தினையும் அனுசந்தித்ததினுல் சித்தி முத்திகள் இவ்விரண்டனையும் பெற்றூர்கள் என்பதாம்.

" அனக மைந்தனே முத்திஞா னத்தையே யடைந்தன ரல்லாமற்
சனகன் மாபலி பகீரதன் முதலியோர் சித்திகள் படித்தாரா
இனிய சித்தியை விரும்பினர் சிலர்சில ரிரண்டையு முயன்றூர்கள்
முனிவர் சித்திகள் விளையாட்டிரந்தரு முத்தியைத் தாராவே"

(இ - ள்) களங்கமற்ற மகனே! சனகராஜன் மகாபலிச் சக்ரவர்த்தி பகீரத ராஜன் முதலானவர்கள் ஞானத்தை யப்பியாசித்து மோக்ஷத்தைப் பெற்றூர்களேயன்றி அணிமாதி சித்தியை யப்பியாசஞ் செய்தார்களா? சில முனிவர்கள் இனிமையான அணிமாதி சித்தியை மாத்திரம் விரும்பினுர்கள்; சில முனிவர்கள் சித்தி முத்திகள் இரண்டினையும் அப்பியாசித்தார்கள். முனிவர்கள் அப்பியாசித்த அணிமாதி சித்திகளானவை காலம் போக்கும் விளையாட்டை மாத்திரம் கொடுக்கும்; மோக்ஷத்தைக் கொடுக்க மாட்டா.

இதன் தாத்பரியம் யோகத்தினுல் அணிமாதிகளைப் பெற்றும் அவை மெய்ப்பயனுகாமையால் பின்னர் ஞானப்பேற்றினுல் முத்தியைப் பெற்றூர்கள்; ஆதலால் அச்சித்திகளை மெய்ஞ்ஞானிகள் விரும்பவில்லையென்பதாம்.

மேற்சொல்லிய அஷ்டமாசித்களாவன :—

அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராப்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பனவாம்.

இவற்றுள், அணிமா—மிகவுஞ் சிறிய வுயிர்தோறும் தான் மிகவும் நுண்ணியதாய்ச் சென்றிருக்கும் அதிநுண்மை.

மகிமா—பிருதிவு முதல் சிவமீறுன முப்பத்தாறு தத்துவம் உள்ளும் புறம்புமாய் வியாபித்து நீக்கமறநிருக்கும் பெருந்தகைமை.

இலகிமா—மேருமலை போலக் கனமாக விருப்பினும் பரமாணுக்கள்போல எடுத்தற் கெளிதாய் இருப்பது.

கரிமா—பரமாணுப் போன்ற வடிவுடையதா யிருப்பினும் மேருமலை போல எடுத்தற்கு அரிதாயிருப்பது.

பிராகாமியம்—பரகாயப் பிரவேசஞ் செய்தலும், விண்ணுலகத்திற் சஞ்சரித்தலும், விரும்பிய போகமனைத்தையும் நினைத்தபடி யெல்லா மிருந்தவிடத்திலேயே வருவித் தனுபவித்தலு முதலியனவாம்.

பிராப்தி—எண்ணி விரும்பிய போகங்களனைத்தையும் விரும்பியபடி யனுபவிப்பது.

ஈசத்துவம்—சிருஷ்டியாதி முத்தொழில்களை நடாத்துதலும் சூரியன் முதலிய கிரகங்களைத் தன்னேவற்படி நடக்கச் செய்தலுமாம்.

வசித்துவம்—அசுரர், பக்ஷி, மிருகம், பூதம், மனிதர், இந்திரன் முதலிய அஷ்டதிக்குப் பாலர் இவர்களெல்லாரையும் தன் வசமாக்கிக் கொள்ளுதலாம்.

ஏழாவது அத்தியாயம்.

விசார விருத்தி யியல்பு முற்றிற்று

## எட்டாவது அத்தியாயம்

## அருள்நிலை பெற்றோர் மகிமை.

### முதல் அனுவாகம்.

இவ்வத்தியாயத்தில் தனுகரண புவனபோகங்களைக் கடந்து, திருவருள் ஞானம் பெற்றனுபவானந்த முடையராய் நின்மல நிலையில் நிற்போர்களது தன்மை கூறப்படுகின்றது.

தேகாதிப் பிரபஞ்சங்களைக் கடந்து பரிபூரண ஞானசாதகர்களுக்குண்டாகும் குணங்கள் வருமாறு:—

அவர்கள் ராசத தாமத காரியங்களை யெல்லாம் நீக்கிச் சாத்துவித காரியமாகிய நிராசை முதலிய வெண் குணங்களையுடையவராகியும், அருகிய நோக்க முதலிய பத்தவத்தையுமுடையவாகியும், இந்தச் சத்குணங்களால் தத்துவ முப்பத்தாறையும் கடந்து தன்னை (ஆத்மாவை) யறிந்து அருளைத் தரிசித்துத் தற்போத மடங்கினவராயும், பின்னர்ப் பரையே தாமாகினவராயும், பின்னர் நேயத்தழுந்தினோராயுமிருப்பர். இக்குணங்களெல்லா முடைமையே சுத்தத்திருப்போர்களது அனுபவங்களாம்.

(2) மேற்கூறிய சாத்துவித மெட்டாவன:—

நிராசை, தவம், பொறுமை, கிருபை, சந்தோடம், வாய்மை, அறிவுடைமை, அடக்கமுடைமை யென்பனவாம்.

(3) தச அவத்தைகளாவன:—

பிரபஞ்சத்தை மாயாவடிவமாகக் காணாது, அருள் வடிவமாகக் காணும் அருகிய நோக்கமும், கருவிகளை நியதிகளையுஞ் சிந்தனையும், முற்பிறப்பிற்பட்ட துன்பங்களை நினைத்து நெட்டுயிர்ப்பெறிதலும், ஒருவரோடும், வார்த்தையாடாது மவுனமா யிருத்தலும், பிராணவாயு விறந்து மூர்ச்சித்தலும், போதமிறந்து நிற்றலுமாம்.

(4) இராசத காரியமாவன:—லோக வாசனை, தேகவாசனை, சாத்திரவாசனை முதலியவைகளாம்.

தாமத காரியமாவன:—அசுரச் செல்வங்களாம்.

## இரண்டாம் அநுவாகம்.

(1) மேற்சொல்லிய திருவருளால் ஞானிகட்குக் கருவிகளெல்லாம் தமக்கன்னியமாய் நீங்கும்; நீங்கவே மலைமேலேறி நின்றோர் கீழே நோக்கும்பொழுது அவர்கட்கு நிலத்தின்கண்ணுள்ள வஸ்துக்கள் அருகிற் றோற்றுவதுபோலப் பிரபஞ்சமெல்லாம்பொய்யாய்த்தோற்றுவதாம். பின்னர் அவர்கள் அருட்டரிசனமுண்டாய்ப் பின்னரவ்வருளே தமக்கு வடிவாகி யிம்மாயாவுடலம் வெதும்பியதனை வெறுப்பார்கள்;

(2) பின்னர் ஆனந்தமுண்டாகி அவ்வானந்தப் பயித்திய மேலீடாகிய வுன்மத்தந் தலைமீக்கொண்டு மவுனமாயும் இருப்பார்கள். இஃதன்றியும், அவர்கட்குப் பிரபஞ்சத்திற்கு நாணுவதாய நாணமும் நீங்கும்.

(3) இஃதன்றியும், அம்மெய்ஞ்ஞானிகள் பொய்யாகிய கருவிகளை அஃதாவது கருவிக்கூட்டங்களாகிய தேகாதிப் பிரபஞ்சங்களை யுள்ளபடி பொய்யென்று அறிவர்; அறியவே, அவர்கட்கு மெய்யில் வேர்வையரும்பும், விழி நீர்ததும்பும்; எல்லாம் பொய்

யென்று கண்டு கொண்டோமென்று உடம்பில் இளஞ்சூடு உண்டாகும்; அஃதாவது ஆரவாரிப்பாம்.

பின்னர் அவர்கள் தம்மையுள்ளபடி கண்டுகொண்டு ஒன்றையும் நாடாது உடம்பு அசைவற விருப்பார்கள்.

பின்னர் அருள்தோற்றுமிடத்து அவர்கட்கு வாக்கு மனங்களில் அவ்வருள் பூரணமாய்த் தோற்றும்; பின்னரவர்கள் இதற்கு முதலாயுள்ள நேயத்தை யென்றைக் கடைவோமென்று அந்நேயத்தை நாடி மேகம்போ லுளங் குமிரி யுளம் வெதும்புவர்; அவருடலத்தில் ரோமாஞ்சலியாம்.

அங்ஙனம் வாக்குமனங் களி லருள்பூரணமாய்த் தோன்றுவதாவது மனத்தால் நினைத்த நினைவு நினைந்ததில்லையாம்;

வாக்காற் சொன்ன சொற்கள் சொன்னதில்லையாம்; இவை அவர்க்கனுபவமாய்த் தோன்றுவனவாம்.

## மூன்றும் அனுவாகம்.

(1) திருவருள் மேலீட்டைப் பெற்ற காலத்து நடக்கும் குணங்களாவன:—

திருவருள் மேலீட்டைப் பெற்றவர் பெண்களைப் பேய்கள் பிடிப்பதுபோலப் பிடித்து வாதிப்பதாயும், பித்தனுக்குப் பித்தனை பொன்போலத் தோன்றுவதாயு முள்ள உதரவெறியால் தோன்றும் மயக்கத்திற்கு அஃதாவது பசிநோய்க்குத் தமக்குக் கிடைத்த காடி கூழ் முதலிய ஊண்களுள் யாது கிடைப்பினும் அதனை வாங்கி யுண்டு அதன்மேல் வைத்த மையலும் நீங்கி, அவற்றை மெய்ப்பொருளாகக் காணும் மனமுமிறந்து, அப்பொருந்த லருந்தல் முதலியவற்றிற் கேதுவாகிய பொன்னையே தேடி நெடுநாட் பிறவித்துன்பத்தால் வருந்தினேமே யென்னும் திடுக்கம் விடாது அறிவுப் பயித்தியங் கொண்டோமே யென்று நகைத்திருப்பர்.

(2) பேய்ப் பிடியுண்டு விடப்பட்டவனுக்கு ஓர் காலத்து அதனைக் கண்டபோது பயந்தோற்றுவதுபோல, முன் பெண்களால் வருந்திய வருத்தத்தை நோக்கி அவர்களைக் காணுந்தோறும் சாதக புருஷர்கட்குப் பயந்தோற்றும்.

(3) அஃதன்றியும், மெய்ஞ்ஞானிகள் அருள் எங்கும் பரிபூரணமாய் இருத்தலால் பொன், பெண், மண், உடலென்னும் இவைக ளனைத்தையும் வெறுத்து உலகத்தாரோடு மாறுபட்டிருப்பார்கள்.

(4) இஃதன்றியும், நெடுநாள் பிள்ளையில்லா திருந்து பின்னரிதாய்ப்பெற்ற தன் புதல்வன் தன் மனையைவிட்டு நீங்கி அயல் மனையில்சென்று நெடுநேரம் வராதிருந்து பின்பு வரக்கண்ட தாய் அவனை எதிர்சென்று ஓடி யெடுத்து மார்போடணைத்து முன்னரவனைப் பெறாதிருந்த காலத்தையும் பின்னரவனைப் பெற்ற காலத்தையும் நினைந்து தாலாட்டுதலோ டழுது அவ்வழுகை யோடும் சிரிப்பாளாம்; அதுபோலத் திருவருள் நிலைமையைப் பெற்ற மெய்ஞ்ஞானிகள் அத்திருவருளைப் பெறாது அளவிறந்த காலம் பிறவியில் வீணாள்கழித்ததையும், அக்காலங்களில் ஓர் காலத்திலும் காணாத அத்திருவருளை யிப்போது கண்ட களிப்பாலும் அவ்வருளைத் தோத்திரம்பண்ணி அத்திருவருளை ஸ்தோத்தரித்தலோடழுது அவ்வழுகையோடுஞ் சிரிப்பார்கள்.

## நான்காம் அநுவாகம்.

### அருளானந்தம் பெற்ற காலத்து நடக்கும் அநுபவ குணங்களாவன:—

தாம் அறிந்த பாட்டுக்களுள் சில பாட்டால் அருளைத் தோத்திரம் பண்ணுவதற்கரிய குறும்பாட்டும், ஆனந்த மகிழ்ச்சியாற் றோன்றும் புன்சிரிப்பும், உட்புறனும் அவ்வானந்த பூரணத்தை நுண்ணியதாய்ப் பார்த்துக் கொண்டிருப்பதாய இமையா நாட்டமும், தாமொன்றையும் நினையா திருப்பினும் தமது சன்னதியிற் பொய்ப்போகங்கள் மிகவும் சாய்ந்து வந்து கிடப்பினும் இத்துன்பங்க ளீண்டு ஏன் வந்தனவென்றவற்றைச் சிறிதும் நினையாத திகைப்பும், அவற்றைக் கணடபோதுடல் நடுக்குறுதலும், பஞ்சேந்திரியங்கட்குரிய விடயங்க ளேற்படின் அவ்விடயச்சுவை தோன்றாத திமிர்ப்பும், பூதம்பேய் காடி முதலியனவந்தகாலத்தும் கற்றூண்போல் றேகமசைவற விருக்கும் விரைப்பும், ஆனந்த மிகுந்து வந்து தாமாதலால் எழுந்து கூத்தாடுதலுமாகிய உகப்

பும் அங்ஙன ஆடிபவானந்த மேலீட்டாற் றோன்றுது அவ்வான ந்த மேலீடு சிறிது நீங்கியபோது இப்போது நாமென்ன செய்தோமென்று தெளிந்து கோடலும், அறிந்து கோடலுமாகிய இக்குணங்களெல்லாம் அருளானந்தம் பெற்ற நாதாக்களுக்குத் தோன்றுவனவாம்.

இதற்குப் பிரமாணம் வருமாறு:—

ஒழிவி லோடுக்கம்.

"குறும்பாட்டும் புன்சிரிப்புங் கூர்த்திமையா நோக்கும்
வெறும்போகஞ் சாய்ந்து விழினும்—மறந்த
திகைப்பும் விதிர்ப்பும் திமிர்ப்பும் விரைப்பும்
முகைப்புந் தெளிந்தறித லும்."

தாயுமானவர்

பராபரக்கண்ணி.

"ஆடுவதும் பாடுவதும் ஆனந்தமாக நின்னைத்
தேடுவதும் நின்னடியார் செய்கை பராபரமே."

ஐந்தாம் அநுவாகம்.

(1) இங்ஙனம் பரிபூரணனந்தம் பெற்றோர்க்கு ஆடலும் பாடலு முண்டாவது என்னையெனின், சிவஞானிகள் பரிபூரண வடிவம் பெற்றமையால், அவர்கட்கு ஆடலும், அருளானந்தம் பெற்றமையாற் பாடலுமுண்டாகும்.

(2) அஃதெங்ஙனமெனின், பிறவிமுடவராயிருந்து, இடையில் ஈஸ்வரகடாக்ஷத்தால் கால்நடக்க வந்தவர்களுக்கு ஆட்ட முண்டாவதுபோலும், கைவராதிருந்து இடையில் தெய்வ கதியால் கைவந்தவர்களுக்கு ஆட்டமுண்டாவதுபோலவும், தாம் கூடியநுபவித்த பெண்ணின்மேலாசை தலைமீக்கொண்டு வந்தவர் வாய்விட்டுப் பாடுவதுபோலும், தம்மைமறைத்து மேற்கொண்டெழுந்த வானந்தவதிசய வுல்லாசத்தால் அவர்க்காடலும் பாடலு முண்டாகும். அவ்வானந்த வதிசயத்தை அதனைப்பெற்ற மெய்ஞ்ஞானிகளறிவதன்றி மற்றையர் அறிவரோ? அஃதன்றி அவரது ஆடல்பாடல்களை அவர்க்கிருக்கும் பயித்தியமிகுதியா லுண்டாயினவாமென்று காண்பார் உலகத்தார்.

(3) இஃதன்றியும், நெடுநாள் காலுங்கையும் வாராதிருந்து இடையில் அவை வந்தவர்க் காட்ட முண்டாவதுபோல, அள விறந்தகாலம் மலச்சிறையிற் கிடந்தோர் இப்போதச்சிறை விடுதலையாய்ப் பரிபூரணவடிவம் பெற்றமையால் அவர்க் காட லும், தாமனுபவித்தபெண்ணினின்ப வாசனையுள்ளத் திருப்பவர் க்குப் பாடலுண்டாவதுபோலப் துன்பபோகத்தையே யளவிறந்த காலம் புசித்தோர் இப்போது நிரதிசயானந்தம் கிடைத்தமை யால், அவர்க்குப் பாடலு முண்டாகுமென்பதாயிற்று.

(4) ஆயின், ஆனந்தமௌனத்தைப்பெற்ற மெய்ஞ்ஞானிகள் தற்போதமிறந்தோராகலின், நிர்விகாரிகளாவரன்றோ? அங்ங னம் நிர்விகாரிகளாயிருப்போர்க்கு மற்றவிகாரிகள்போல எங்ங னம் ஆடல்பாடல் உண்டாகுமெனின், அவர்கள் நிர்விகாரிகளா யிருந்தே ஆடுவார்கள் பாடுவார்கள் என்பது கூறப்படுகின்றது.

(5) அஃதெங்ஙனமெனின், முன்னர் விடயானந்தத்திற்குத் தமதறிவைப்பறிகொடுத்ததுபோல இப்போது சொரூபானந்தத் திற்குப் பறிகொடுத்து, முன்னர் கூடியிருந்த இம்மாயா உடல் வடிவம் மறந்துபோக இப்போது அருள்வடிவம் பெற்று அவ்வரு ளே வடிவாயிருப்போர்க்கு ஒரு பொருளைப்பெற்றோமென்னும் பெறுதியும் ஒரு பொருளையிழந்தோ மென்னும் இழப்பும் இவற் றான்வரும் இதாகிதங்களும் தோன்றா. அவ்வருளானந்தப் பயித் தியமீக்கொண்டு இருப்போர்க்கோ ரிடத்தும் சிறிதும் விகாரந் தோன்றாது. இதனையறிவிற்சென்று பார்க்கின் அனுபவமாய்த் தோன்றும்.

## ஆறும் அனுவாகம்.

இஃதன்றியும், பரிபூரணானந்தம் பெற்றோர்க் காடல் பாடல் உண்டாயினும் அவர்களறிவிற்குச் சிறிதும் விகாரம் உண்டாகாது. அஃதெங்ஙனமெனின், உலகநடைதெரியாத பேயரென்று சகத் தோர் தம்மைப்பார்த்துச் சிரிப்ப, ஞானநெறிதெரியாத மலப்பேய ரென்று தாமும் அவரைப்பார்த்துச் சிரித்து, புறந்திண்ணை பொ துச் சாவடிகளிலே ஏகாந்தவறிவோடுங் கூடியிருப்பர் மெய்ஞ் ஞானிகள், அவர்கள் தாமிருந்த விடத்திற் சகத்தோர் வந்து சீ பேயரே போமென் றோட்டினாராயின், யாதொன்றுங் கூறாது அவ்

விடம் விட்டு நீங்கிப் புறங்காட்டை நன்மணைபோற்கண்டு, இஃது அசுத்தமென்றும் அருவருப் புடையதென்றுஞ் சிறிதுங்கருதாது திகம்பரிகளாய், அவ்விடத்திருந்து தமது அருள்ஞானப் பாடலைப் பாடி, சிதாகாச வெளியிற்பொருந்தி நின்று, ஆநந்த நடனமாடி, அவ்வருட் பூரணராயிருப்பர்.

## ஏழாம் அனுவாகம்.

(1) மேற்கூறியவாறே எல்லாந்துறந்து, சிவவேடம் பூண்டு, தவங்களைச்செய்து, சிவாலயந்தோறும் சென்று ஆடிப்பாடியழுது சிரிக்கின்றோர்களெல்லாரும் நிர்விகாரிகளாவரோவெனின், அவர்களுள் மெய்ஞ்ஞானிகள்போல நடிப்பவர் பொய்ஞ்ஞானிகளாவரென்று கூறப்படுகின்றது.

(2) அஃதெங்ஙனமெனின், பார்த்தவர்க்கு விபரீதமாய்த் தோற்றும்படி சிரஞ் செவி களங் கர மார்புகளில் உருத்திராக்கப் பூண்களும், மேனி முழுவதும் விபூதி உத்தூளனமும், மொட்டு வேட்டியுடையும், வார்த்தையினால் யாம் சிவமதமென்று பிடித்தது பேசும் அபிமானமும், ஆடல்பாடல்களும், தபசுபோற் செய்யும் ஞானசாரங்களு முடையவர் அகத்திற் பூரண ஞானஞ்சிறிதுமின்றித் திகைத்திருத்தல் சிதாகாசத்திற் பஞ்சகிருத்திய நடனம் பண்ணு நின்ற பரமசிவத்தின் திருவுள்ளத்திற்கே தெரியுமன்றி மற்றவருக்குத் தெரியாது.

119487

(3) அஃதாவது ஒருவர் வேடத்தால் மிகவுஞ்சிறப்புள்ளவராயிருப்பினும், அகத்திற் பரிபூரண ஞானமில்லாவிடின், அவர்க்குப் பயனொன்று மின்றாம்; அகத்திற் பரிபூரண ஞானம்பெற்ற மெய்ஞ்ஞானிகள் சிறிதும் வேடமில்லாராயினும், அவர்கட்குத் தேவர்களும் வணங்கிப் பணிவிடை செய்வார்கள்.

(4) அன்றியும், அகத்தில் ஞானமின்றிப் புறத்தில் வேடதாரிகளா யிருப்பவர்கள் காவி வேட்டியும், உருத்திராக்கத் தாழ்வடமும், மெய் முழுதும் பூசும் வெண்ணீறும், அடைக்காய் தின்னுத வெண்பல்லும் இவை முதலிய சிவவேடத்தை மெய்யிற் காட்டுவர். இவை பூரண ஞானத்திற்குத் திருட்டேயல்லது உண்

மையல்ல. ஒரு பொருளிலும் விருப்பற்ற சிவன் பூரணன்; சீவன் சிற்றறிவன்; பாசம்பொய் என்றறிந்த மெய்ஞ்ஞானிகட்கு ஒரு சமயவேடமும் அபிமானமும் இல்லையாம்.

(5) அகத்து ஞானமின்றிப் புறத்து வேடத்தாலும் வசனத்தாலும் ஞானிகள்போல் நடிக்கின்றவர்கள் ஒருவகைக் கள்வரேயாவர்.

(6) அகத்துப் பரிபூரண ஞானமும் புறத்துச் சிவவேடமும் இருப்பவரது பெருமையை அளவிட்டுச் சொல்வது முடியாது.

(7) மேலும், சிற்றறிவனாகிய சீவன் பொய்யாகிய பாசத்தை விட்டு நீங்கிப் பரிபூரண வறிவோடுங் கூடிக் கலந்தபோது, அப் பரிபூரண வறியாய் நிற்பனன்றி, அது விதுவென்று பகுத்துக் காணான்.

## எட்டாம் அனுவாகம்.

(1) பரிபூரண ஞானத்தைப் பெற்றோர் மௌனமாயிருப்பதன்றி ஆடல் பாடல் முதலியவற்றைச் செய்வதென்னை யென்று சரியை முதலியவற்றில் நிற்போர் சொல்லாரோ வெனின், மெய்ஞ்ஞானிகளது செயல்களைக் கண்டு கருமிகள் பழிப்பினும், அது கொண்டு அவர்க்கோ ரிகழ்ச்சியுமின்றாம்.

அஃதெங்ஙனமெனின், நாயின்மீது சவாரி செய்வோன் அதினின்றும் விழுந்தாலும் வீழாது அதனை நடாத்தினாலும் அதனாலவனுக்கு இகழ்ச்சியும் புகழ்ச்சியு மில்லையாம். அதுபோலப் பேய்க்கூத்துப் போற்றோற்று நின்ற இச்சகத்திலுள்ளார் மெய்ஞ்ஞானிகளை இகழ்ந்தாலென்னை? புகழ்ந்தாலென்னை? அதுகொண்டு அவர்கட்கொரு நஷ்டமும் இலாபமுமில்லையாம். அவர்கள் ஒன்றோடும் தோயார்கள்.

(2) மேலும், அவர்கள் உயர்ச்சி வந்ததென்று பெருமையும் இகழ்ச்சி வந்ததென்று சிறுமையு மடையார்கள்.

(3) அன்றியும், அவ்வருள் ஞானம் பெற்றோர்க்கு முன்னாகிய கேவலமும் பின்னாகிய சகலமு மில்லையாகலின், அவர் சுத்தமாகிய அருளே வடிவாயிருந்து அளவின்றித் தாம் வேண்டியவாறே திருவிளையாட்டல் செய்வார்.

(4) இஃதன்றியும், எற்கெனவே சிறப்புப் பொருந்திய யானை யானது மதமேறித் தடை கடந்து செல்லினும் முன்னினுமதிகச் சிறப்பைப் பெறும்; அதுபோல, சகல கேவலங்களைக் கடந்து எங்குந் தமது பிரியத்தடிப்பே வடிவாய் அஃதாவது திருவருளே தமக்கு வடிவாய் அவ்வருள் நிலைகெடாதிருப்போர் அவ்வருள் மேலீட்டால் விரகிகள்போலக் காணப்படினும் (மதமேறு முன்னும் பின்னும் சிறப்புப்பொருந்திய யானையைப்போல அருள்நிலை கெடாதிருந்த போதும் அவ்வருள்மேலீட்டைப் பெற்றபோதும்), சிறப்பையே பெறுவார்கள்.

(5) நாயானது எற்கெனவே யிழிவையுடையதாம்; அந்த நாய் அந்த யானையைப்போல மதப்பட்டு விட்டால் அஃதாவது பித்துகொண்டு விட்டால் முன்னினுமதிக இழிவைப் பெறும்; அதுபோல, எற்கெனவே யிழிவையுடைய குடும்ப சாகரத்தில் அழுந்திக் கிடக்கும் கருமிகள் தமக்கு மட்டிட்டு வைத்த நன்னெறிமார்க்கந்தவறி நடப்பாராயின் அஃதாவது இல்லற கருமத்தைக்கடந்து நடப்பாராயின், முன்னினும் அதிக இழிவைப்பெறுவார்கள்.

(6) இங்ஙனங் குடும்பசாகரத்தில் தலைதடுமாறிக்கிடக்குங் கருமிகளுள் சிலர் அருள்வெளிக்குள் தற்போதமாண்ட சுகமோடு கூடியுங் கூடாதிருக்கும் மெய்ஞ்ஞானிகளைப் புகழ்வர்; சிலர் இகழ்வர்; அவற்றால் அவர்க்கோர் இகழ்ச்சியும் புகழ்ச்சியு முண்டாவதில்லையாம்.

(7) அன்றியும், ஆனை மதமேறினல் மிகவுஞ் சிறப்புறும்; நாய் பித்தேறினல் மிகவும் இழிவுறும். அதுபோல, மெய்ஞ்ஞானிகள் தடைமீறினல் மிகவுஞ் சிறப்புறுவர்; கருமிகள் தடைமீறினல் மிகவும் இழிவுறுவர்.

## ஒன்பதாம் அனுவாகம்.

(1) இங்ஙனமுள்ள மெய்ஞ்ஞானிகளின் மகிமையை உலக வாழ்க்கை யுடையாருஞ் சரியையாதியில் நிற்போரும் அறியாதிருப்ப தென்னை யெனின், அவர்கள் மெய்யுணர்ச்சியின்மையால் அதனை அறியாதிருக்கின்றனர்.

(2) அஃதெங்ஙனமெனின், பித்தமேறிய ஆமர்கள் நல்லறிவாளர் கூறும் அறநெறியை யுட்கொண்டறியவல்லரோ? அதுபோல, அஞ்ஞானிகள் மெய்ஞ்ஞானிகள் கூறுமுபதேசப் பொருளை யறிய வல்லவராகா திருக்கின்றனர். அதனுல் அவர்கள் அவர்களை ஞானிகளென்றறியா திருக்கின்றனர் அஃதன்றியும், அவர்கள் சாங்கற்ற நூலறிவும் சரியையாதிகளுமாகிய மாயாவிருளையே ஞானப் பிரகாசமாகக் கருதிக்கொண் டிருக்கின்றனர்.

(3) மேலும், மும்மலங்களையும் தற்போதத்தையும் கோபித்துத் திருவருளாகிய பூரணப் பேய் பிடித்த பேயரைப் பிறர் பேயரென்று சொல்லுவதும் ஓர் விந்தையே. அவரைப் பிறரிகழ்வதெனெனின், மதுரமாகிய பால் பித்தமேறிய நாவிற்குப் பகையாவதுபோல, ஆனந்தமும் திருவருளும் மலமேலீட்டால் அவர்களுக்குப்பகையாம். அதனுலவர் திருவருளையும் ஆனந்தத்தையும் பெற்ற மெய்ஞ்ஞானிகளைப் பேயரென்று கூறுகின்றனர். இதுவே அவர்கள் மெய்ஞ்ஞானிகளை யிகழ்வதற்குக் காரணமாம்.

(4) மெய்ஞ்ஞானிகளது மகிமையைப் பூவுலகத்தார் அறியாரெனின், மற்றை யாவர் அறிவாரெனின், மெய்ஞ்ஞானிகளது மகிமையைப் பூவுலகத்தா ரறியாராயினும், இந்திரன் முதலிய தேவர்களறிந்து அவர்களுக்குப் பணிவிடை செய்வார்களென்று வேதாகமங்கள் கூறுகின்றன.

இதற்குப் பிரமாணம் பின்வருமாறு:—

ஒழிவிலொடுக்கம்.

"அடைப்புள்ளா யாளடர்ந்த வாமையாய்த் திக்கே
யுடுப்பதா யோர்ந்துழல்வார்க் கூரார்—நடைப்பிணமே
யூமைப்பே யாரெனினும் மோலமிடுந் தேவர்குழாஞ்
சேமக்கோ ல்ளிந் திரர்".

பத்தாம் அநுவாகம்.

(1) இங்ஙனமுள்ள, மெய்ஞ்ஞானிகளடைந்த பேரின்பத்திற்கு உவமைசொல்லுமிடத்து, அரிபிரமருரித்திரர் முதலிய தேவர்களுடைய வின்பமெல்லாம் ஒன்றுய்க்கூட்டி இவர்கள்பெற்ற பேரின்பத்திற்கு உவமைசொல்லின், அவை அதற்கு, ஒருவகையால் ஒப்பாகும்.

(2) அஃதன்றியும், பரமசிவனது பரிபூரணனந்தத்திற்குத் தானே ஒப்பாம்; பின்னுஞ்சொல்லுமிடத்து, தன்னின்பத்திற்குத் தானே ஒப்பாம். எப்பொருட்களுக்கும் வேருய் நின்றின்பத்தையடைந்தோர்களது இன்பத்திற்கதுவே ஒப்பாம். அதனை வேதங்களு மிவ்வளவென் றளவிட்டறியாவாம்.

(3) பரமசிவனது பரிபூரணனந்த மெல்லாம் தாமாய்நின் றனுபவிப்பதாலும், மற்ற வின்பங்களை யெல்லாம் தன்னின்பமாக அனுபவிப்பதாலும், மெய்ஞ்ஞானிக ளாநந்தத்தை வேரு யெவ்வாறு அளவிட்டுக் கூறுதல் கூடும்?

பதினேன்றும் அநுவாகம்.

(1) இங்ஙனமிருந்த மெய்ஞ்ஞானிகளின் திருநாமம் அத்துவிதி, ஏகாந்தி, ஆநந்தி, சுத்தன், துரியன், அவதூதன், துறவி, சிவயோகி, நிர்வாணி, விரத்த னென்பனவாம்.

(2) பரிபூரணசிவத்தோடு அத்துவிதமாய் இருத்தலின் அத்துவிதியென்றும், அன்னியமில்லா திருத்தலின் ஏகாந்தியென்றும், பரிபூரணநந்தத்தைத் தாமாய் நின்றனுபவித்தலின் ஆநந்தி யென்றும், மலத்திரயங்களை நீக்கி நிற்றலால் சுத்தனென்றும், மேலாயபொருளை யடைந்திருத்தலால் துரியனென்றும், வருணச்சிரமங்களைக் கடந்து நிற்றலால் அவதூதனென்றும், தேகாதிப்பிரபஞ்சங்களை யெல்லாம் கடந்து நிற்றலால் துறவியென்றும், மற்ருென்ருேடுங் கூட்டுறவின்றிச் சிவத்தோடு கூட்டுறவாயிருத்தலிற் சிவயோகி யென்றும், அத்துவாவாறையுங் கடந்து நிற்றலால் நிருவாணி யென்றும், அச்சிவத்தோடு அத்து விதமாயிருக்கிறே னென்னும் வாசனையு மிறந்து நிற்றலால் விரத்தனென்றும் மெய்ஞ்ஞானிகள் சொல்லப்படுகின்றனர்.

(3) அஃதன்றியும், அவர்கள் பூத கஞ்சுகம், பிரகிருதி கஞ்சுகம், காலாதி கஞ்சுகம், வயிந்தி கஞ்சுகம், சத்தி கஞ்சுகம் என்னுமிப் பஞ்ச கஞ்சுகங்களையும் கடந்திருப்பரென்க.

பன்னிரண்டாம் அநுவாகம்.

(1) இங்ஙனமுடைய மெய்ஞ்ஞானிகளது பெருமையாதோவெனின், உள்ள முருகப்பண்ணு நின்ற பரமசிவவுல்லாசத்தோடுங்கூடிய திருநோக்கமும், அவ்வின்பக் களிப்பாற் றெய்வத்தாமரைமலர்ந்தாற்போலவிளங்காநின்றதிருமுகமும், அவ்வின்பம் பொங்கி மென்மே லெழுதல்போற் றோன்றும் மந்தகாசப் பிரகாசமும், மேனிமுழுவதும் பூசுவதாகிய திருவெண்ணீற்றழகும், பஞ்சபூத அபிமானகுணங்களாகிய தற்பாவமிழந்து நிற்றலுமாகிய இவையே மெய்ஞ்ஞானிகளது பெருமையாம்.

இங்ஙனமுடைய மெய்ஞ்ஞானிகள் வாடற்பூவின் கண் மணம் சிறிது தோன்றுவதுபோலச் சிறிதுதோன்றும் பிராரத்தவாசனையோடும், போதத்தால் வருந்திச்செய்யாத பாசவயிராக்கியத்தோடும், தளராநின்ற திருமேனியுடனே கூடியுங் கூடாராயிருப்பர். அம்மெய்ஞ்ஞானிகளது ஆநந்தத் திருநோக்கமும் திருமுகமும் எப்போதும் என்னுள்ளத்தைவிட்டு நீங்காவாம்; அவர்கள் திருவடிகள் என்முடிமேலிருப்பனவாம்.

எட்டாவது அத்தியாயம்

அருள்நிலைபெற்றோர் மகிமை

முற்றிற்று.

ஒன்பதாவது அத்தியாயம்.

## (நசிகேதஸ் சரித்திரம்.)

(1) கௌதமர் என்றநாமம்புனைந்த ஒரு ரிஷி விசுவஜித்என்ற யாகத்தைச்செய்து அதன்பலனையடைய இச்சித்தவராய்த் தமக்குள்ள எல்லாச்சொத்தையும் தானம் செய்தார். அவர்க்கு நசிகேதஸ் என்றுபெயருள்ள ஒரு புத்திரனிருந்தான்.

(2) மேற்படிரிஷி தக்ஷிணைகொடுக்கும்பொழுது அதிபாலியனுயிருக்கிற மேற்படிகுமாரனுக்கு ஒரு சிரத்தையுண்டாயிற்று; அஃதாவது அவனுக்கு நல்வழியில் புத்தியுண்டாயிற்று.

(3) அவன் ஜலத்தைக்குடித்தும் புல்லைத்தின்றும் பால்கறந்தும்இனிநசிக்கத்தக்க இப்பசுக்களைத் தானம்பண்ணுகிறவன் அசுக

மாயிருக்கிறலோகங்களை யடைகின்ருன், என்பிதா நல்லதானம் செய்யவில்லை; அவர் இச்சித்தபலனை யெப்படியடைவார்? என்னை யாவது தானம்செய்து பலனையடையட்டுமென்று நல்லெண்ணங் கொண்டான்.

(4) பிறகவன் என்னையாருக்குக் கொடுக்கப்போகிறீர் என்று பிதாவைக்கேட்டான். பாலன்பிதற்றுகிருனென்று பிதா நினைத்து சும்மாவிருந்துவிட்டார். குமாரன் அந்தப்படியே பிதாவை இரண் டாந்தரம்கேட்டான். அதற்கும் அவர் சும்மாவிருந்தார். அவன் மூன்ருவது தடவையும் கேட்டான். அதற்குப் பிதா கோபங் கொண்டு உன்னை யமனுக்குக்கொடுக்கப் போகிறே னென்ருர்.

(5) இங்ஙனம் பிதாகூறலும், புத்திரன் தனிமையிலுட்கார் ந்து நம்முடைய பிதாவுக்கிருக்கிற அநேகர்களுள் புத்திரர் அல் லது சிஷ்யர்களுள் நான் முக்கினவன்; நான் உத்தமன் அல்லது மத்திமன் ஆகவிருக்கட்டும்; அதமனல்ல; அங்ஙனமிருக்க என்னை அவர்யமனுக்குக்கொடுத்தனரே! யமனுக்கு என்னுல் என்ன பிர யோஜனமுண்டு? கோபத்தினுல் அவர் அப்படிச்செய்தனரென்று தோன்றுகின்றது; ஆயினும், அவர் வாக்குப் பொய்யாதல் கூடாது என்று ஆலோசித்து, விசனமடைந்து தன்னைப்பற்றிப் பச்சாதாபப் பட்டுக்கொண்டிருக்கின்ற தன்பிதாவைப் பார்த்து

(6) நமது பூர்வீகர்களுடைய நடையையோஜித்துப் பாருங் கள்; இப்பொழுதுள்ளவர்களுடைய நடையையும் யோஜித்துப் பாருங்கள்; மனுஷ்யன் பயிர்போல நசிக்கிருன்; உண்டாகிருன். சத்தியம்பெரிது; விசனப்படவேண்டாம்; என்னை யமனுக்குக் கொடுத்து விடுங்களென்று தைரியம் சொன்னுன்.

அவன் இப்படிச்சொன்னவுடனே பிதாசந்தோஷமடைந்து புத்திரனை யமனிடத்திற்கு அனுப்பினுர்; அப்படியே புத்திரன் யமாலயத்திற்குவந்து மூன்றுதினம் காத்துக்கொண்டிருந்தான். யாதொருவிசாரணையு மேற்படவில்லை. யமன் தூங்கிக்கொண்டிருந் தான்; அவனைமந்திரிகள் எழுப்பி, அதிதியாயிருக்கிற ஒரு விப் பிரன் அக்கினிபோல வீடுகளில் பிரவேசிக்கிருன். அவனுக்குச் சாந்திசமாதானம் அல்லது உபசாரம் பெரியோர்கள் செய்கிருர் கள்; அதுபோல இப்பொழுது உமதுவீட்டுக்கு அதிதியாய் வந் திருக்கிற நசிகேதசுக்கு நீர் உபசாரம் செய்யும் பொருட்டு அர்க் கியபாத்திரம் கொடுக்க ஜலத்தைக்கொண்டுவாருங்கள்.

(8) யாருடைய கிருஹத்தில் ஒரு அதிதி சாப்பிடாமல்வசிக்கிறானோ அந்த அல்பபுத்தியுள்ள புருஷனுடைய ஆசையையும், இஷ்டப்பிராப்தியை எதிர்பார்த்தலையும், ஸத்ஸங்கபலத்தையும், நல்லவாக்கினால் உண்டாகும் பலத்தையும், யாகத்தினால் உண்டாகும் பலத்தையும், மற்றும் ஆசிரமாதிக்குரியபலத்தையும், தருமத்தினாலுண்டாகும் பலத்தையும், எல்லாப்புத்திரர்களையும்பசுக்களையும் அந்த அதிதி நசிக்கச் செய்கிறான் என்றவர்கள் சொன்னார்கள்.

(9) இவ்விதம் கூறியவுடன் யமன்எழுந்து, நசிகேதஸுக்கு மரியாதைசெய்து, ஹேபிராமண! நீ அதிதியாகவும் நமஸ்காரத்துக்கு அருகனாகவும் இருந்துகொண்டு, என்கிருகத்தின்கண் போசனம் செய்யாமல் மூன்றிரவு வசித்திருப்பதால், என்னுடைய நமஸ்காரம் உமக்கிருக்கட்டும்; எனக்கு மங்களமிருக்கட்டும். ஆகையால் மூன்றுவரங்களை கேட்டுக்கொள்ளும் என்று கூறினான்.

(10) அதற்கு நசிகேதஸ் (என்பிதா) கௌதமர் என்னைப் பற்றி விசாரமற்றவராயும் சந்தோஷமனமுள்ளவராயும் என்மீதிலிருந்தகோபத்தை விட்டவராயும் எப்படியிருப்பரோ உம்மிடத்தினின்றும் விடுபட்டுப்போகிற என்னை அவர் அலக்ஷியம் செய்யாமல் இவன் நம்முடைய குமாரனென்று பூர்வஞாபகத்தையுடைத்தானவராய் என்னைப்பார்த்துப் பேசுவாரோ அப்படியாகும்படி நீர் செய்யவேண்டுமென்று மூன்று வரங்களில் ஒன்றைக்கேட்கிறேன் என்று கூறினான்.

(11) அதற்கு யமன் உன்பிதா ஔத்தாலகி என்றும் ஆருணியென்றும் பெயருள்ளவர்; உன்னிடத்தில் முன்னிருந்த பிரீதியுள்ளவராயும் பூர்வஞாபகத்தையுடையவராயும் இரவில் சுகமாய் நித்திரைசெய்பவராயு மிருப்பார் (அஃதாவது விசாரமற்றுக்கோபமில்லாதவராயுமாவார்); மிருத்தியுவிடத்திலிருந்து திரும்பிய உன்னைப்பார்ப்பார் என்று கூறினான்.

(12) பின் நசிகேதஸ் சுவர்க்கலோகத்தில் யாதொரு பயமுமில்லை; அவ்விடத்தில் நீங்களில்லை (அஃதாவது உம்மால் பயமில்லை); கிழத்தனத்தால் ஒருவனுக்கும் பயமில்லை. அவன் பசிதாகம் இவ்விரண்டையும் கடந்தவனாயும் சோகத்தைக் கடந்தவனாயும் சந்தோஷத்தையடைகிறான்.

(13) அப்படிப்பட்ட ஸ்வர்க்கத்தைக் கொடுக்கத்தக்கதாயும் எதனல் சுவர்க்கத்திலுள்ளவர்கள் அமிர்தத்துவத்தை அடைகிறர்களோ அப்படிப்பட்டதாயு மிருக்கின்ற அக்கினியை நீர் ஸ்மரித்து, சுவர்க்கப் பிராப்தியில் சிரத்தையுள்ள என்னைப்பற்றி அதனிடத்திற்பேசுங்கள் (அஃதாவது சுவர்க்கம் எனக்குக்கிடைக்கும்படி செய்யுங்கள்). இதனை இரண்டாவது வரமாகக் கேட்கிறேன் என்று கூறினன்.

(14) யமன் ஹே நசிகேத! அப்படிப்பட்ட சுவர்க்கத்தைக் கொடுக்கத்தக்கதாயிருக்கிற அக்கினியை நான் அறிந்திருக்கின்றேன்; உனக்குச் சொல்லுகிறேன், அதைக்கேள். எது உன்னல் பிரார்த்திக்கப்பட்டதோ அது என்வசமென்று அறி (அஃதாவது நீகேட்டவரம் கொடுத்தேன்). இந்த அக்கினியைச்சுவர்க்கலோகப் பலப்பிராப்தி ஸாதனமாயும், ஜகத்துக்கு ஆசிரயமாயும், வித்துவான்களுடைய புத்தியில் வைக்கப்பட்டிருக்கிறதாயும் நீ அறிந்துகொள் என்று கூறினன்.

(15) மிருத்திய லோகத்திற்கு ஆதியாயிருக்கிற அந்த அக்கினியிடத்தில் இவனைக்குறித்து (நசிகேதஸைக்குறித்து)ச் சொன்னர்; சிபார்சுசெய்தார்; பிறகு அக்கினி சயனத்துக்கு எப்படிப்பட்ட கற்கள் எவ்வளவுவேண்டுமோ அவற்றைப்பற்றியும், எப்படி அந்த யாகம் செய்யவேண்டியதோ அதுபற்றியும், நசிகேதசுக்குச் சொன்னர். அவனும் (நசிகேதசும்) தனக்குத் தெரிந்ததென்பதைத் தெரிவிக்க, மிருத்தியுவால் சொல்லப்பட்டபடி சரியாய்த்திருப்பிச் சொன்னன். அவன் அப்படிச்சொன்னதால், மிருத்தியு சந்தோஷ மடைந்தார்.

(16) பிரீதியுள்ளவராயும் மாகாத்மாவாயு மிருக்கிற மிருத்தியு மறுபடியும் உனக்கு (நான்காம்) வரம் கொடுக்கிறேன்; அந்த அக்கினி உன்பேராலேயே அழைக்கப்படும்; விசித்திர ரூபமாயிருக்கிற இந்த மாலையைக் கிரகித்துக்கொள்; கர்மமாயிருக்கிற கதியைக் கிரகித்துக்கொள் என்று நசிகேதஸுக்குச் சொன்னர்.

(17) அவர் மறுபடியும் கர்மத்தை ஸ்துதிசெய்கிறர்:—மூன்று தடவை அக்கினிசயனம் செய்தவனும் (மாதா-பிதா-குரு என்னுமிம்மூவர் சொற்படிகேட்கிறவனும்), யாகம்-அத்தியயனம்-தானம் என்னும் இம்மூன்று காரியங்களையும் செய்தவனும் ஜன்மத்தையும் மிருத்தியுவையும் தாண்டுகிறன்.

சர்வஞ்ஞராயும் தூயராயு மிருக்கிற (அக்கினி) தேவனை யறிந்து பார்த்துரைத்தவன் இந்தக்கதியை (விராட்சம்பந்தமான கதியை) யடைகிறான்.

(18) எந்தவித்துவான் முன்சொல்லப்பட்ட மூன்றையுமறிந்து அக்கினிசயனத்தை மூன்றுதரம் செய்கிறானோ அவன் முன்னர் மிருத்தியுபாசங்களை யகற்றிக்கொண்டு சோகத்தைத்தாண்டி ஸ்வர்க்கலோகத்தையடைந்து சந்தோஷப்படுகிறான்.

(19) எந்த அக்கினியை நீ இரண்டாவது வரத்தால்கேட்டனையோ அந்த இந்த ஸ்வர்க்கியராயிருக்கிற அக்கினிவரம் ஹே நசிகேதஸ்! உனக்குக்கொடுக்கப்பட்டுப்போயிற்று. இந்த அக்கினியை உன்பேராலேயே ஜனங்கள் அழைப்பார்கள். மூன்றாவது வரத்தைக்கேள்.

(20) நசிகேதஸ் இறந்துபோன மனுஷ்யனுடைய ஆத்மா வேறு தேகத்தை யடைகின்றதென்று சிலரும் அப்படியல்லவென்றுசிலரும்சொல்லுகிறார்கள். இந்தச் சந்தேகத்தை நிவிர்த்தி செய்யும். இதுதான் மூன்றாவது வரம் என்று கேட்டான்.

(21) யமன் இந்தவிஷபம் பூர்வம் தேவர்களாலும் சந்தேகிக்கப்பட்டிருக்கின்றது; நன்றாக அறியப்படத் தகுந்ததல்ல; இந்த (ஆத்மவிஷய) தர்மம் மிகவும்சூக்ஷுமமானது. ஹே நசிகேதஸ்! வேறுவரத்தைக்கேள்; என்னை நிர்ப்பந்தப்படுத்தாதே; எனக்காகஇந்த வரத்தைக் கேளாதிருப்பாயாக என்று கூறினான்.

(22) அதற்கு நசிகேதஸ், இதுதேவதைகளாலுங் கூடச்சந்தேகிக்கப்பட்டதல்லவா? மிருத்தியுவே! நன்றாக அறியப்படத்தகாததென்று நீவிரும் சொன்னீரே. இதைச்சொல்ல உம்மைத் தவிரவேறொருவருங் கிடைக்கமாட்டார். இந்த வரத்துக்குச் சமமாக வேறேவரமுங் கிடையாது.

(23) மிருத்தியு சதாயுஸ்உள்ள புத்திர பௌத்திரர்களைக் கேள்; வெகுபசுக்களையும், யானைகளையும், அசுவங்களையும், தங்கங்களையும் கேள்; இராஜ்பத்தைக்கேள்; எவ்வளவு வருஷம் நீ இச்சிக்கிறாயோ அவ்வளவுகாலம் நீ ஜீவித்திரு.

(24) இன்னும் இதற்குத் துல்லியமான எந்த வரத்தை நினைக்கின்றனையோ அந்த வரத்தைக்கேள். பூமியில் அரசனாக

விரு; காமமுள்ளவர்களுள் காமத்தை யடைந்தவனாக உன்னைச் செய்விக்கிறேன்.

(25) மனுஷியலோகத்தில் எந்தெந்தக்காமங்கள் துர்லபங்களாயிருக்கின்றனவோ அவைகளையெல்லாம் உன்னிஷ்டப்படி கேட்டுக்கொள். இதோ அப்ஸரஸ்திரீகள் ரதங்களோடும் வாத்தியங்களோடும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஸ்திரீகள் மனுஷியர்களால் அடையப்படக்கூடாதவர்கள். இவர்களால் உனக்குச் சகல சிச்ருஷைகளையும் செய்வித்துக்கொள். ஹே நசிகேத! மரண விஷயமான பிரச்சனத்தைமட்டும் கேட்காதே என்று சொன்னார்.

(26) அதற்கு நசிகேதஸ் நாளைக்காலையிலிருக்கப்போகின்றனவோ, இல்லையோ வென்னும் சந்தேகத்துக்குரியனவாயிருக்கின்ற (அநித்தியமாயிருக்கிற) இந்தக் காமங்கள் சர்வேந்திரியங்களுடைய தேஜஸையும் பழுதுறச்செய்கின்றன. எல்லாஜீவிதமும் அற்பமே; ரதாதி வாகனங்களும் நிருத்தாதி கீதங்களும் உமக்கேயிருக்கட்டும். எனக்குவேண்டாம். நான் கேட்ட வரத்தையே கொடுக்கவேண்டும் என்றான்.

(27) எவனும் வித்தத்தினால் திருப்தியடைகின்றானில்லை; உம்மைப்பார்த்தால் பார்த்தமாத்திரத்தில் வித்தத்தையடைவோம். எவ்வளவுகாலம் கொடுக்க நீர் சக்தியுள்ளவராய் இருக்கிறீரோ அவ்வளவுகாலம் ஜீவனோடிருப்போம். அஃதிருக்கட்டும்; எனக்கு வேண்டாம், எனக்கு அந்தவரமே வேண்டும்.

(28) ஜரையற்றவர்களாயிருக்கிற தேவர்கள் முன்சென்று ஆத்மபாவத்தை அறிந்தவனும், பூமியிலுள்ளவனும், ஜரையுள்ளவனும், மனுஷியனும் வருணத்தினாலேயும், ரதியினாலேயும் சந்தோஷத்தைக்கொடுக்கத்தக்க அப்ஸரஸ் முதலானவர்களைத் துச்சமென்று அறிந்தவனுமாயிருக்கிற எவன் (எந்தவிவேகி) தீர்க்காயுளை யிச்சிப்பான்.

(29) எந்தப் பிரேதவிஷயத்தில் தேவர்கள் இந்தச் சந்தேகத்தையடைகிறார்களோ ஹேமிருத்தியுவே! மகாப் பிரயோஜனமாயிருக்கிற எந்தப்பரலோகம் (இந்தஆத்மஞானம்) உண்டோ அதனை எங்களுக்குச்சொல்லும் என்று கேட்டான்.

இந்தவரம் அதிரகசியமானது; இதில் பிரவேசித்தவனாகக் கொண்டு நசிகேதஸ் வேறுவரத்தைக் கேட்கமாட்டேன் என்று உறுதியாகக் கூறினான்.

மிருத்யு கூறுகின்றார்.

(1) சிரேயஸ் (நிராசை-மோட்சம்) என்பது வேறு, பிரேயஸ் (ஆசை-சம்சாரம்) என்பது வேறு. இவ்விரண்டும் நாநா விதமான பின்னார்த்தங்களையுடையவை. இவ்விரண்டும் மனுஷியர்களைக் கட்டுப்படுத்துகின்றன. அவைகளில் சிரேயஸைக் கொண்டவனுக்கு மங்களம் கிடைக்கும்; பிரேயஸை வரிக்கின்றவன் பாமார்த்திக அர்த்தத்தினின்றும் நழுவிப்போகிறான்.

(2) சிரேயசும் பிரேயசும் மனுஷ்யனை அடைகின்றன. விவேகி இரண்டையும் பகுத்தறிந்து பிரிக்கிறான். மந்தபுத்தியுள்ளவன்யோகக்ஷேம ஆசையினால் பிரேயஸை வரிக்கின்றான்.

(3) விவேகி நிராசையைக்கொள்ளுகிறான். அல்பபுத்தியையுடையவன் ஆசையைக்கொள்ளுகிறான். அப்படிப்பட்ட நீபிரியமுள்ளவர்களையும் (புத்திரபௌத்திராதிகளையும்) பிரியரூபர்களையும் (அப்ஸரஸ்திரீகளையும்) மற்றவர்களையும் பகுத்தறிந்துதள்ளிவிட்டனை. எதில் அதிகமனிதர்கள் மூழ்குகின்றார்களோ அலீதாகவும்வித்தத்தைக்கொடுக்கத்தகுந்ததுமாயிருக்கிற இந்த மாலையையும் நீயடையவில்லை.

(4) வித்தையென்றும் அவித்தையென்றும் அறியப்பட்டனயாவையோ அவை ஒன்றுக்கொன்று மிக்கதூரமாம்; ஒன்றுக்கொன்று விரோதம் உடையனவாம், பின்னபலத்தைக் கொடுக்கத்தக்கன. நீ வித்தையை யிச்சித்தவனாக நினைக்கிறேன். ஏனென்றால், உன்னை அதிக இச்சைகள் அணுகவில்லை.

(5) அவித்தையில் அகப்பட்டவர்கள் தங்களைப் புத்திசாலிகளாகவும் பண்டிதர்களாகவும்எண்ணிக்கொள்ளுகிறார்கள். கெட்டவழியில் செல்லுகின்றவர்கள் மூடர்கள்; குருடனால் வழிகாட்டப்பட்ட குருடர்களைப்போலிருக்கின்றார்கள்.

(6) சம்சார தர்மத்தில் ஆஸக்தியுள்ளவனும், வித்தமோகத்தினாலே மூடனாயு மிருக்கிற அவிவேகியினிடத்தில் பரலோகசாதகமான பிரஹ்மவித்தைவிளங்காது. இதோகாணப்படுகிற இதுதான் உலகம், பரலோகமென்பது இல்லை என்று நினைக்கிறவர் மீண்டும் மீண்டும் மிருத்தியுவாகிய என்வசத்தில் வந்து அடைகின்றார்கள்.

(7) எந்த ஆத்மா மிகுந்தகேள்விகளினாலும் அடையக்கூடியதன்றோ, இதனைக்கேட்டவர்கள் மிகுதியாக விருந்தாலும்

அவர்களால் எந்த ஆத்மா அடையப்படவில்லையோ அந்த ஆத்மாவைப்பற்றி நன்ருகச் சொல்லுகிறவன் கிடைப்பது அரிது. அத்தகைய குருவால் உபதேசிக்கப்பட்டு அறிந்தவன் கிடைப்பதரிதினு மரிது.

(8) தாழ்ந்தமனிதனுல் சொல்லப்படும் ஆத்மா நன்கு அறியப்படத்தக்கதன்று; பற்பலவிதமாக ஆலோசிக்கப்படத்தகுந்தது; பிரஹ்மஞானியால் கூறப்பட்டால்தான் விளங்கும். அஃது அணுவைக்காட்டிலும் அணு; தர்க்கத்திற் கிடங்கொடாதது; பிரஹ்மஞானியால் போதிக்கப்பட்டால் அதில் சந்தேகம் நிகழாது.

(9) ஹே சிரேஷ்ட! நசிகேத! இந்தப் பிரமஞானபுத்தியானது தர்க்கத்தினுலடையவு மியலாது, நீக்கவுமுடியாது; பிரமஞானியால் கூறப்பட்டால்தான் விளங்கும். அப்படிப்பட்ட புத்தியை நீ அடைந்திருக்கின்ருய்; சத்திய தைரியமுற்றவனுக விருக்கிருய். கேட்கின்றவன் உன்னைப்போல் யாவனுளன்?

(10) நிதியானது அநித்தியமென்று நானறிந்திருக்கின்றேன். அநித்தியவஸ்துக்களால் நித்தியவஸ்து ஸித்திக்காது. அநித்தியவஸ்துக்களால் அக்கினியாகம் செய்யப்பட்டது. அதனுல் புண்ணியமிருக்கிறவரையில் நித்தியமான (யம) அதிகாரத்தை (இந்தச்சுவர்க்கபதவியை) அடைந்திருக்கின்றேன்.

(11) கர்மத்தின் முடிவாயும், ஜகத்தின் பிரதிஷ்டையாயும், யாகத்தின் பலமாயும், அபயஸ்தானமாயும், ஸ்துத்தியமாயும், மகத்தாயும், விஸ்தீரணகதியை யுடையதாயு மிருக்கிற ஸ்திதியை (பிரமலோகாதி பதவியை) நோக்கி ஹே நசிகேத! விவேகியாயுள்ள நீ (மேற்கூறப்பட்ட) யாவற்றையு விலக்கி விட்டனே.

(12) கஷ்டத்துடன் அறியத்தக்கவரும் அதிரகசியமானவரும் (ஒவ்வொன்றினும்) பிரவேசித்திருக்கின்றவரும் புராணருமாயிருக்கிற அந்தத் தேவனே அத்தியாத்மயோகத்தினுல் (விஷயங்களைதள்ளி ஆத்மாவையே தியானிக்கிறதினுல்) விவேகி பரியாலோசித்து, சந்தோஷத்தையும் விசனத்தையும் முற்றும் விடுகிருன்.

(13) இதை (நான் சொல்லப்போகின்ற பிரஹ்மவித்தையைக்) கேட்டுக் கிரகித்து, (சரீராதி) தர்மத்தை விலக்கிவிட்டு, இந்த ஆத்மாவைச் சேர்ந்து (சந்தோஷகரமான ஆத்மாவைச் சேர்ந்து) மனு

ஷியன் சந்தோஷப்படுகிறான். நசிகேதஸின் பொருட்டு (மோக்ஷ) வீடு திறந்து வைக்கப்பட்டிருக்கின்றதாக நினைக்கிறேன்.

(14) நசிகேதஸ்—தர்மத்தைக்காட்டிலும் வேறு, அதர்மத்தைக் காட்டிலும்வேறு, காரியத்தைக்காட்டிலும் வேறு, காரணத்தைக் காட்டிலும் வேறு, இருந்ததைக்காட்டிலும்வேறு (இருக்கிறதைக் காட்டிலும்வேறு), இருக்கப்போவதைக்காட்டிலும் வேறு, இவ் விதமிருப்பதாக எதை நீரறிந்திருக்கின்றீரோ அதனையெனக்குச் சொல்லவேண்டும்.

(15) மிருத்தியு—எதனைப்பற்றிச் சர்வவேதங்களும் கூறுகின்றனவோ, எதனைப்பற்றிச் சர்வதபசுக்களும் சொல்லுகின்றனவோ, எதனை யிச்சித்துப் பிர்ம்ம சரியத்தை யனுஷ்டிக்கின்றார்களோ, அதனை உனக்குச் சுருக்கமாகச் சொல்லுகின்றேன்.

(16) அதுதான் பிரஹ்மம், ஓம் என்ற அக்ஷரம், இந்த அக்ஷரந்தான் பிரஹ்மம், இதுதான் பரவஸ்து. இந்த அக்ஷரத்தையறிந்தவன் எதனையிச்சிக்கின்றானோ அஃது அவனுக்குக்கிடைக்கும்.

(17) இந்த மோக்ஷத்துக்குப் பிடிப்பு உயர்ந்தது; இந்தப் பிடிப்புப் பரமானது; இந்தப்பிடிப்பை யறிந்தவன் பிர்மலோகத்தில் மகிமையையடைகிறான்.

(18) இந்தப்புருஷன் (ஆத்மா) இறப்பில்லாதவன், பிறப்பில்லாதவன், சர்வஞ்ஞன்; எதினின்றும் அவன் உண்டாகவில்லை, அஜன், நித்தியன், சாசுவதன், புராணன், ஹிம்சிக்கப்படத்தகுந்த சரீரத்தில ஹிம்சிக்கப்படத் தகாதவன்.

(19) கொல்லுகிறவன் கொலைசெய்ய நினைக்கின் (அஃதாவது நான் கொல்லுகிறேனென்ன றகம்பாவங்கொள்ளுகி) றான், (தான்) கொல்லப்படுகிறவனாக நினைக்கின்றான், கொல்லப்படுகிறவன் (தான்) கொல்லப்பட்டவனாக நினைக்கிறான். இவ்விருவர்களும் தெரியாதவர்கள். அவன்கொல்லுகிறவனுமல்ல; இவன்கொல்லப்படுகிறவனுமல்ல.

(20) ஆத்மா அணுவைக்காட்டிலும் சிறிது, பெரிதைக் காட்டிலும் பெரிது, பிராணிகளுடைய இருதயத்திலிருக்கிறது. (காமமில்லாதவன் அதனைப்பார்க்கிறான்), சோகமில்லாதவனாக விருக்கின்றான், (மனஸ்முதலான) கரணங்களுடைய பிரசாதத்தினாலே ஆத்மாவினுடைய மகிமையைப் பார்க்கிறான்.

(21) இந்த ஆத்மா உட்கார்ந்திருந்தே தூரத்தில்போகிறது; படுத்துக்கொண்டே எங்குஞ் செல்லுகின்றது; அப்படிப்பட்ட விருத்த தருமத்தையுடைய தேவனை யென்னை முதலானவர்களைக் காட்டிலும் அன்னியன் எவ்விதமறிவான்.

(22) சரீரங்களில் சரீரமற்றவனாயும், அநித்திய வஸ்துக் களில் நித்தியவஸ்துவாயும், மகானாயும், விபுவாயும் இருக்கிற ஆத்மாவை விவேகியறிந்து சோகத்தை யடையமாட்டான்.

(23) இந்த ஆத்மாவேதாப்பியாசத்தினாலாவது படித்ததை மறவாமலிருக்கும் புத்தியினாலாவது பெரும்பான்மையும் கேட்ட தினாலாவது அடையத்தக்கதல்ல. இந்தச் சாதகன் எதனைத் தன்னாத்மாவைப் பிரார்த்திக்கின்றான், அதனால் தன்னாத்மாவை யறிகின்றான்; அஃதாவது பரமாத்மாவைத் தன்னாத்மாவைக் கொண்டே யறியவேண்டும்.

(24) துர்நடத்தையை விடாதவனாவது இந்திரியங்களையடக் காதவனாவது, ஏகாக்கிரகசித்த மில்லாதவனாவது ஒழிவடைந்த மனமில்லாதவனாவது இந்த ஆத்மாவை யடையமாட்டான். அது பிர்மஞானத்தினால் மாத்திரம் அடையத்தக்கது.

(25) எந்த ஆத்மாவுக்குப் புண்ணியபாவங்கள் பூஜிக்கிற அன்னமாயிருக்கின்றன, மிருத்யு (மரணம்) ஊறுகாயாகவிருக் கின்றது? அதனை யாரிடத்தில் இந்தப்படி எவன் அறிகிறான் அவன்தான் ஆத்மா.

(26) ஜீவாத்மா, பரமாத்மா, இவ்விருவர்களும் சரீரத்தில் கர் மத்தினிடமிருந்து அவசியம் உண்டாகும் பலத்தைப் புசிக்கிறார் கள்; வெயிலும் நிழலும்போல (பரஸ்பரம் விருத்தர்களாயும்) இருக்கிறார்கள்; புத்தியில் பிரவேசித்தவர்கள், பரமாயிருக்கிற இருதயாகாசத்தில் பிரவேசித்தவாகள் என்று பஞ்சாக்கினி கிருகத்தை யுடையவர்களும் மூன்றுதரம் அக்கினிசயனம் செய்த வர்களுமான பிரஹ்மவாதிகள் உரைக்கிறார்கள்.

(27) கர்மிகளுக்கு எது ஸேதுவாகவிருக்கிறதோ அந்தநாசி கேதஸாக்கினியையறிய சக்தியுள்ளவர்களாக விருக்கின்றோம்; எது அக்ஷரமாயும் பரமாயும் அபயமாயும் (சம்சாரசாகரத்தைத் தாண்ட இச்சையுள்ளவர்களுக்குக் கரையாயுமிருக்கின்றதோ அந் தப் பிரஹ்மத்தைபறியவும் சக்தியுள்ளவர்களாக விருக்கிறோம்.

(28) ஜீவாத்மாவை ரதத்திலிருக்கிற யஜமானனாகவும், சரீரத்தை ரதமாகவும், புத்தியை ஸாரதியாகவும், மனதைக் கடிவாளமாகவும் அறி.

(29) இந்திரியங்கள் மேற்படி ரதத்திற்குக் குதிரைகளென்றும், அவற்றின் (ரூபாதி) விஷயங்கள் மேற்படி குதிரைகள் (போகிற) மார்க்கங்களென்றும், சரீரம் இந்திரியம், மநஸ், இம்மூன்றுடன்சேர்ந்திருக்கிற ஆத்மா சம்சாரியென்றும், ஜீவாத்மா போக்தா என்றும் விவேகிகள் சொல்லுகிறார்கள்.

(30) எந்தப் புத்தியாகிய சாரதியானவன் அவிவேகியாய் எப்பொழுதும் அடக்கப்படாத மனதுடன் (கடிவாளத்தோடு) இருக்கின்றானோ, அவனுக்கு இந்திரியங்கள் சாரதிக்கு முரட்டுக்குதிரைகள்போன்று வசப்படமாட்டா.

(31) எவன்விவேகியாயிருந்தும் எப்பொழுதும் அடக்கப்பட்ட மனதுடனிருக்கின்றனனோ, அவனுக்கு இந்திரியங்கள், சாரதிக்கு நல்லகுதிரைகள்போன்று வசப்படும்.

(32) எந்த ஆத்மாவாகிய ரதியானவன் அவிவேகியாயும் எப்பொழுதும் அடக்கப்படாத மனதுடன் கூடினவனாயும் அசுசியாகவும் இருக்கின்றானோ அவன் தன்சாரதியைக்கொண்டு அந்தப் பரமாத்மாவை (பிர்மத்தை) யடையமாட்டான்; மற்று ஜனனமரணபாவத்தையடைவான்.

(33) எவன்விவேகியாயும் எப்பொழுதும் அடக்கப்பட்ட மனதுடன் கூடினவனாகவும் (சுசியுள்ளவனாயு மிருக்கின்றானோ) அவன் எதினின்றும் பயம் ஜனிக்கவில்லையோ அந்தப்பதத்தை (பிர்மத்தை) யடைகின்றான்.

(34) எந்த விவேகியாயிருக்கிற சாரதியானவன் அடக்கப்பட்டமனதுள்ளவனாக விருக்கின்றானோ அவன் சம்சாரகதியாயிருக்கிற மார்க்கத்தின் முடிவை அஃதாவது விஷ்ணுவின் பதத்தை (வியாபக சீலாயிருக்கிற பரமாத்மாவின் பதத்தை) யடைகிறான்.

(35) இந்திரியங்களைக் காட்டிலும் அவற்றின் பொருள்கள் உயர்ந்தன; பொருளைக் காட்டிலும் உயர்ந்தது மனஸ்; இதனைக் காட்டிலும் உயர்ந்தது புத்தி; இதனைக் காட்டிலும் உயர்ந்தது ஆத்மா (மகத்தத்வம்), ஈசுவர தத்துவம், சூத்திராத்மா.

(36) மகத்தத்துவத்தைக் காட்டிலும் உயர்ந்தது அவ்வியக்த தத்துவம் (மாயை—பிரகிருதி). இதனைக்காட்டிலும் உயர்ந்தது ஒன்றுமில்லை. இதுதான் அடையவேண்டிய திக்கு. இதுதான் பரமான கதி மோக்ஷம்.

(37) இந்த ஆத்மா எல்லாப் பூதங்களிடத்திலும் மறைந்திருக்கின்றது; பிரகாசப்படுகிறதில்லை; சூக்ஷ்ம தர்சிகளால் (விவேகிகளால்) சூட்சுமமாயும் ஏகாக்கிரகமாயு மிருக்கிற புத்தியைக் கொண்டறியப் படுகின்றது.

(38) விவேகியானவன் வாக்கு முதலான இந்திரியங்களை மனதில் அடக்கவேண்டும்; மனதை புத்தி ஆத்மாவில் அடக்க வேண்டும். மகத்தாயிருக்கிற ஆத்மாவில் ஈஸ்வர தத்துவம் முன்னுண்டான மகத்தத்துவம் விஞ்ஞானம் அடக்கவேண்டும்; அந்த மகத் ஆத்மாவைச் சாந்த ஆத்மாவில் அடக்கவேண்டும்.

(39) ஹே ஜந்துக்களே! ஆத்மஞானம்பெற எழுந்திருங்கள்; அக்ஞானத்தூக்கத்திலிருந்து விழித்துக்கொள்ளுங்கள்; நல்லகுருவையடைந்து ஆத்மாவை யறியுங்கள். இந்தமார்க்கம் (தத்துவ ஞானலக்ஷணமார்க்கம்) கத்தியின் நுனி, கூர்மையுள்ளது, எளிதில் கிட்டக் கூடாதது, அடையத்தகாதவழி.

(40) எது (எந்தஆத்மா) அசப்தமோ, அஸ்பரிஸமோ, அருபமோ, அவ்வியயமோ அரஸமோ, நித்தியமோ, வாசனையற்றதோ, ஆதியந்த மில்லாததோ, மகத்துவத்தைக் காட்டிலும் வேறே, யாண்டுமுள்ளதோ, அதனையறிந்தவன் மிருத்தியுவினிடத்திலிருந்து விடுபடுவான் (ஸம்ஸிருதியில்லை,) என்று கூறினர்.

(41) மிருத்தியுவா லுரைக்கப்பட்டதும், புராதனமாயு மிருக்கின்ற நசிகேதோபாக்கியானத்தைச் சொன்னாலும், கேட்டாலும், விவேகி பிர்மலோகத்தில் (பரமாத்மாவிடம்) மகிமையை யடைகின்றான் (லயிக்கின்றான்.)

நசிகேதஸ் சரித்திரம்

முற்றிற்று.

## பத்தாவது அத்தியாயம்

## கிருஷ்ண யஜுர்வேதத்தைச் சார்ந்த கடோபநிடதம்.

### நான்காவது வல்லி.

(1) ஸ்வயம்பூ (பரமாத்மா) தன் தன் விஷய பரங்களாயிருக்கின்ற இந்திரியங்களை அடைகிறது; (அஃதாவது ஆத்ம ஞானிகளால் மட்டும் இந்திரியங்களை அடக்கமுடியும்). ஆகையால் உலகத்தவர் சாமானியமாய் அநாத்ம பூதங்களைப் பார்க்கிறார்களே யன்றி அந்த ராத்மாவை (பரமாத்மாவை)ப் பார்க்கிற தில்லை; ஆனல் எந்தத் தைரியஸ்தன் அமிருதத்துவத்தை இச்சித்தவனுகவும் அடக்கப்பட்ட சக்ஷுராதி இந்திரியங்களை யுடையவனுமாக விருக்கின்றானே, அவன் பிரத்தியக்ஆத்மாவை (பரமாத்மாவைப்) பார்க்கிறான்.

(2) அவிவேகிகள் அநாத்ம பூதங்களாயிருக்கிற விஷயங்களைப் பின்றொடர்க்கின்றார்கள்; அதனுல் அவர்கள் எங்கும் பரவி நிற்கின்ற மிருத்தியுவின் பாசத்தை யடைகிறார்கள். அதுபற்றித் தைரியசாலிகள் நித்தியமாயுள்ள அமிர்தத்துவத்தை (பிர்மத்தை) அறிந்து அநித்தியமான வஸ்துக்களைப் பிரார்த்திக்க மாட்டார்கள் (அந்த வஸ்துக்களில் இச்சையடைய மாட்டார்கள்).

(3) (யாது காரணமெனின்), மிதுன நிமித்தங்களாகச் சுகத்தைக்கொடுக்கத்தக்கனவாக விருக்கின்ற ரூப ரச கந்த சப்த ஸ்பரிசங்களாகிய விஷயங்களை உலகத்திலுள்ளவன் இதனுலேயே (பரமாத்மாவினுலேயே விக்ஞானத்தைக் கொண்டே) பார்க்கிறான் (அறிகிறான்). (அறியவேண்டியவற்றுள்) இவ்விடத்தில் எஞ்சியுள்ளது யாதொன்றுமில்லை. எல்லாவற்றையும் பிர்ஹ்மம் அறிந்திருக்கிறது; இதுதான் அது.

(4) ஒருவன், சுவப்பன மத்தியத்தையும் (சொப்பனத்தில் அறியப்பட்டதையும்) ஜாக்கிர மத்தியத்தையும் (சாக்கிரத்தில் அறியப்பட்டதையும்) எதனைக்கொண்டு பார்க்கிறானோ அந்த மகானுயும் விபுவாயுமிருக்கும் ஆத்மாவை யறிந்து விவேகி விசனத்தையடைய மாட்டான்.

(5) கர்மபலத்தைப் புஜிக்கிறவனும் காலத்திரயத்துக்கு மீசனுமாயிருக்கிற இந்த ஜீவாத்மாவை (இன்னதென்று) எவன் அறி

கின்றானோ அவன் பிறகு ஜீவனை ரக்ஷித்துக்கொள்ள இச்சைப் பட மாட்டான். இதுதான் அது (இந்த ஜீவாத்மாவும் அந்தப் பிர்மந்தான்).

(6) எவர்(இந்தப் பிர்மா—ஹிரண்யகர்ப்பர்) ஆதியில் விஞ்ஞானத்தினின்றும் (பரமாத்மாவினின்றும் அது அதாகவே) பூதங்களுடன் உண்டாயினரோ, (சரீராதிகளை உற்பத்தி செய்த பிறகு பிராணிகளின்) இருதயத்தில் பிரவேசித்து இருந்துகொண்டிருக்கிறாரோ, அவரை எவன் பூதங்களுடன் அறிகின்றானோ அவன் பிர்மத்தை அறிகின்றான். இதுதான் அது (இந்த இரண்ணிய கர்ப்பரும் பிர்ம்மமே).

(7) எவள் சர்வதேவாத்மிகையாயும் (சப்தாதி விஷயங்களைப்) புஜிக்கிறவளாயு மிருக்கிறாளோ, (பிர்ம்மத்திட மிருந்து) ஹிரண்ணிய கர்ப்பரூபமாய் உண்டானவளோ, எவள் பூதங்களுடனுண்டானவளோ, இருதயத்தில் பிரவேசித்து நின்றவளாயிருக்கிறாளோ, அவளை (மாயையை) எவன் அறிகின்றானோ அவன் பிர்மத்தை அறிந்தவன். இதுதான் அது (இந்த மாயையும் அந்தப் பிர்ம்மந்தான்).

(8) கர்ப்பிணிகளால் கர்ப்பம் நன்றாகக் காக்கப்படுகிறது போல அரணிக்கட்டைகளால் காக்கப்பட்டிருக்கின்றதாயும், ஜாக்கிறதையுள்ளவர்களும் ஹவிஸ் முதலியவற்றை யுடைத்தாயிருக்கின்றவர்களுமான மனிதர்களால் தினந்தோறும் ஸ்துதி செய்யப்படுறதாயும் யாதொரு அக்கினியுளதோ அதுவும் அந்தப்பிர்ம்மந்தான்.

(9) எதி (ஆத்மாவி) லிருந்து சூரிய னுதயமாகின்றானோ, எதில் அஸ்தமயத்தை யடைகின்றானோ, அதில் எல்லாத்தேவதைகளும் பிரவேசிக்கிறார்கள், அதிலேயே அடங்கியிருக்கிறார்கள். ஒன்றும் அதைவிட அன்னியமா யிருக்கின்றதில்லை. இதுதான் அது (இந்தச் சூரியனும் அந்தப் பிரம்மமே).

(10) எது இவ்விடத்தில் காரிய காரணமாகத் தோற்றப்பட்டு விளங்குகின்றதோ அதுதான் அவ்விடத்திலுள்ளது (பரமண்டலத்தில் ஸ்வச்சமாக இருக்கும் பிர்ம்மம்). அப்படியே அவ்விடத்திலுள்ளதே இவ்விடத்திலு முள்ளது.

(11) இங்கு (பிர்மம்) பின்ன ரூபமென்று எவன் அறிகின்ருனே, அவன் மரணத்துக்குமேல் மரணத்தை யடைகின்ருன்.

இது (பிர்மம்) மனதினுல் (ஆசாரி யாகமங்களால் சம்சரிக்கப்பட்ட முனதால்) பெறப்படத்தகுந்தது. இங்கு அதற்குப் பின்னமாக ஒன்றுமில்லை. எவன் பின்னமாக அறிகின்ருனே அவன் மரணத்துக்குமேல் மரணத்தை யடைவான்.

(12) ஆத்மா அங்குஷ்டப் பிரமாணமுள்ள புருஷனுக மத்தியிலிருக்கிறது (அஃதாவது இருதய கமலரந்திரத்தி லிருக்கிறது); உண்டானதற்கும் உண்டாகப்போகிறதற்கும் ஈசானனுயிருக்கின்றது. (ஒருவன் அதனை யறிந்தால்) அவன் அதனிடத்தினின்றும் கூச்சத்தை யடையமாட்டான் (அதிலேயே சம்பந்தப்பட்டுப் போகிருன்). இதுவும் அது (இந்த ஜீவாத்மாவும் பிரஹ்மமே.)

(13) அங்குஷ்டப் பிரமாணமுள்ள புருஷன் புகையில்லாத ஜோதிரூபம் [அஃதாவது கர்மத்தில் சம்பந்தப்படாதவன், உண்டானதற்கும் உண்டாகப் போவதற்கும் ஈசானன், நாளைக்குமுள்ளவன் (நித்தியன் கூடஸ்தன்). இருதயத்தில் சாக்ஷி பூதமாயிருக்கின்ற பரமாத்மாவும் பிர்ஹமமே].

(14) கரடு முரடான விடங்களிலும் பர்வதங்களிலும் விழுகிற ஜலம் எங்ஙனம் சிதறிப்போகிறதோ (பலரூபமான) துளியாய் விழுகின்றதோ அங்ஙனமே (ஆத்மாவின்) தர்மங்கள் தனித் தனி யென்று எவன் அறிகின்ருனே அவன் அத்தகைய நாநா ரூப சரீரங்களை யடைகின்ருன் (ஜனன மரணத்தை யடைகின்ருன்).

(15) ஹேகௌதம (நசிகேத)! எப்படி சுத்தமான ஸ்தலத்தில் சுத்தமான ஜலம் ஏகரசமாகச் சிதறிப்போகாமல் ஒரேதாரையாக இருக்கிறதோ அப்படியறிந்த முனியினது (யோகியினது) ஆத்மா இத்தன்மையதாகவாகிறது (பிரஹ்மமாகவே யாகின்றது).

ஐந்தாவது வல்லி.

(1) பிறப்பில்லாதவராயும், வக்கிரமில்லாதவராயும், விஞ்ஞானமுள்ளவராயு மிருக்கின்றவர்க்கு (பிர்ம்மத்துக்கு) ஒரு பட்டணம் இருக்கிறது; அப்பட்டணம் (சரீரம்); அப்பட்டணத்திற்கு (11 துவா

ரங்களுண்டு; முகத்திலுள்ளவை 7, நாபி உள்படக் கீழ் உள்ளவை 3; சிரசில் பிர்மமந்திரம் 1 ஆக 11. இப்படிப்பட்ட வஸ்துவை ஒருவன் தியானம் செய்யின், அவித்தையிலிருந்து விடுபட்டவனாவன்; துக்கத்தை யடையமாட்டான். அவனுக்கு ஜனனமரணமில்லை; இதுதான் அது (இந்தப் பட்டணத்தை யுடையவனும் அந்தப் பிரஹ்மமே.)

(2) இது (பிரஹ்மம்) கமனமுள்ளது; சுவர்க்கலோகத்திலிருப்பது;(சூரியாதி ரூபமாக எல்லோரையும்) வசிக்கும்படி செய்யத்தகுந்தது; அந்தரிக்ஷத்தில் இருப்பது; (வாயுரூபமாக) அக்கினியாக விருக்கிறது; பூமியின்கணுள்ளது; அதிதி ரூபமாகக் கிருகங்தோறும் செல்லத்தக்கது; மனுஷியனிடத்துள்ளது; தேவர்களிடத்துள்ளது; சத்தியத்தில் அல்லது யஞ்ஞத்தில் உள்ளது; ஆகாயத்திலுள்ளது; பூமியி லுண்டாகின்றவையாக (பயிர் முதலியவையாக) இருப்பது; ஜல சந்துக்களாகவும் யஞ்ஞத்திலுள்ளவையாகவு மிருப்பது; பர்வதத்திலுண்டானவையாக (நதி முதலானவையாக) இருப்பது; சத்திய வஸ்து; மிகப்பெரிதானது.

(3) எது (பிரஹ்மம்) ஹிருதயத்துக்கு மேல் பிராணவாயுவை உயரக்கிளப்பி விடுகிறதோ, அபான வாயுவைக் கீழே தள்ளி விடுகிறதோ, ஹிருதய புண்டரீகாகாசத்தின் மத்தியிலிருக்கின்றதோ, பஜிக்கத்தக்கதா யிருக்கின்றதோ, அதனை யெல்லாத் தேவரும் (சக்ஷுஷ் முதலியசர்வ இந்திரியங்களும்) உபாசிக்கின்றனர் (அதற்குப்பயந்து தத்தம் வேலையைப் பரபரப்புடன் செய்கின்றனர்).

(4) தேகத்தையுடையவரும் சரீரத்திலிருப்பவரும் பிறகு நழுவிப் போகிறவரும் தேகத்தைவிட்டுப் போகிறவரும் ஆன இவர்க்கு (ஆத்மாவுக்கு) இவ்விடத்தில் (தேகத்தில்) எஞ்சியது யாது? (ஒன்றுமில்லை). (அஃதாவது ஆத்மா பிரிந்தால் எல்லாத் தத்துவங்களும் பின்பற்றுகின்றன) இதுதான் அது (இந்தத் தேகியும் அந்தப் பிரஹ்மம்).

(5) எந்த மனிதனும் பிராண வாயுவினாலாவது அபானவாயுவினாலாவது பிழைத்திருக்கவில்லை; எதினிடத்தில் அந்த இரண்டும் ஆசிருதங்களாக விருக்கின்றனவோ அந்தவேறு ஒன்றினாலே (ஆத்மாவினாலே) பிழைத்திருக்கின்றான்.

(6) ஹே கௌதம! இரகசியமாயும் நித்யவஸ்துவாயுமுள்ள இந்தப் பிரஹ்மத்தைக்குறித்தும், ஆத்மா விஞ்ஞானத்தால் மரணத்தையடைந்து பிறகு எப்படி ஆகிறதோ அதனைக்குறித்தும், உனக்குச் சொல்லுகிறேன். (சொல்லுகிறதும் அறிந்துகொள்ளுவதும் கஷ்டசாத்யம்).

(7) அவித்யா சம்பந்தமுள்ள தேகிகள் மரணத்துக்குப் பிறகு வேறு சரீரத்தை யடையும்பொருட்டுச் சுக்லபீஜத்தோடு கூடினவர்களாக யோனித்துவாரத்தை மீண்டும் அடைகிறார்கள்; இவர்களைக்காட்டிலும் அதமர்களாயிருக்கிறவர்கள் ஸ்தாவரபாவத்தை (கல்முதலான ஞானமற்ற ரூபங்களை) யடைகிறார்கள். அவரவர்க்குள்ள கர்மத்திற் கேற்றவாறு (கேள்வியினாலுண்டான) ஞானப்பிரகாசமும் இவ்விதமாகிறது.

(8) எந்தப் புருஷன் (ஆத்மா) பிராணாதிதத்துவங்கள் உறங்கும்பொழுதுஅவித்தியா சம்பந்த்தினால் மேன்மேலும்இச்சையை வளர்த்துக்கொண்டு, விழித்துக்கொண்டிருக்கிறானோ அவனே சுத்தவஸ்து; அதுதான் பிரஹ்மம்;இதுதான் அமிர்தம் என்றுரைக்கப்பட்டது. இதில் எல்லா உலகத்தவர்களும் ஆசிருதர்களாக இருக்கிறார்கள். அதனை ஒன்றும் தாண்டுவதில்லை (அதிலேயே அடங்கி யிருக்கின்றது). இதுதான் அது (இப்படிப்பட்ட ஆத்மாவும் அந்தப் பிரஹ்மமே).

(9) எங்ஙனம் ஒரே அக்னியானது புவனத்தில் பிரவேசித்து (அந்தந்தத்தாஹ்ய)வஸ்துவின் ரூபத்துக்குத் தக்கவாறு பிரதிரூபமாகின்றதோ, அங்ஙனம் ஒன்றாயிருக்கிற ஆத்மா சர்வபூதங்களினும் பிரவேசித்து அதனதன் ரூபப்படி பிரதிரூபமாகவும் (விகாரப்படாத ஸ்வரூபத்தையுடையதாகவும்) வெளியிலும்இருக்கிறது.

(10) (இவ்விதமே வாயு விஷயமாய்த் திருஷ்டாந்தமாம்).

(11) எப்படி யுலகத்திற்குச் சக்ஷுவாயிருக்கின்ற சூரியன் (நம்முடைய) நேத்திர திருஷ்டியிலுண்டான (மூத்திர புரீஷாதி பார்வையிலுண்டான) வெளிப்பட்ட தோஷங்களோடு சம்பந்தப் படுகிறதில்லையோ, அப்படி ஒன்றாயும் சர்வபூதாந்தராத்மாவாயும் (விபரீதபுத்தி அத்தியாசத்துக்கு) வெளிப்பட்டதாயு மிருக்கிற பரமாத்மா உலக துக்கங்களுடன் சம்பந்தப் படுகிறதில்லை.

(12) அவர் ஒருவரே; எல்லோரையும் வசப்படுத்துகின்றவர்; எல்லாப் பூதங்களிலுமிருக்கிற ஆத்மா. ஏகமாயிருக்கிற தன்னைப் பலவிதமாக எவன் செய்துகொள்ளுகிறானோ அவனை ஆத்மஸ்தனாக விருக்கிறவனை எந்தத் தைரியசாலிகள் பின்றொடர்ந்து பார்க்கிறார்களோ அவர்களுக்கே சாசுவதமான சுகமுண்டாம்; மற்றவர்க்கில்லையாம்.

(13) எவன் அநித்திய வஸ்துக்களுக்கு நித்திய வஸ்துவாயிருக்கிறானோ, சேதனமுள்ளவர்க்குச் சேதனத்தைக் கொடுக்கத்தக்கவனோ, ஒருவனாகவேயிருந்து அநேகர்க்கு (அவரவர்களுக்குத் தக்கபடி) இச்சைகளைக் கொடுக்கிறானோ ஆத்மஸ்தனாயிருக்கின்ற அப்படிப்பட்டவனை எந்தத் தைரியசாலிகள் பின்றொடர்ந்து பார்க்கின்றார்களோ அவர்களுக்கே சாசுவதமான ஒழிவாம்; (சம்சாரத்தின் ஒழிவுண்டாம்); மற்றவர்களுக் கில்லையாம்.

(14) நிர்த்தேசிக்கப்படக் கூடாததாயும், பரமாயும், சுகரூபியாயுமிருக்கின்ற பிரஹ்மத்தை அதுதான் இது என்று குறிப்பிட்டுக் காட்டி நினைக்கிறார்கள் பெரியோர்கள். யாங்ஙனமதையறியலாம்? எது விளங்குகிறது? எது ஸ்ப[illegible]மாய் விளங்குகிறது?

(15) அதினிடத்தில் சூரியன் பிரகாசிக்கின்றதில்லை; அப்படியே சந்திரனும் நட்சத்திரங்களும் மின்னலும்; (அங்ஙனமிருக்க), இந்த அக்னி எப்படி பிரகாசிக்கும்? எல்லாம் அதையேயனுசரித்து விளங்குகின்றன. அதனுடைய ஒளியினாலே இந்த ஜகத்தெல்லாம் விளங்குகின்றன.

## ஆறாவது வல்லி.

(1) இந்த அசுவத்த விருக்ஷம் (இந்தச்சம்சாரவிருக்ஷம்) எப்போதும் சலித்துக்கொண்டிருக்கிற சுபாவமுள்ளது; அதற்கு வேர் ஊர்த்துவம் (மேல்-பிரஹ்மம்); கிளைகள் கீழ் (சுவர்க்க நரகாதிகள்); நீண்ட காலமுள்ளது; அதுவே (அந்த வேரே) சுத்த வஸ்து; அதுவே பிரஹ்மம்; அதுவே அமிர்தம் என்று சொல்லப்படுகிறது. அதனிடத்து எல்லா உலகங்களும் ஆசிருதமாயிருக்கின்றன. ஒருவரும் அதனைத் தாண்டுகிறதில்லை (அதனுளடக்கமாம்). இதுதான் அது.

(2) பரப்பிரஹ்மம் இருக்கும்பொழுது இந்த ஜகத்தின்கணுள்ள யாவும் அசைகின்றன (தத்தம் தொழிலை நடத்துகின்றன). அதினின்றும் எல்லாம் வெளிப்பட்டன. அது மகத்தான பயம; வச்சிராயுதத்தைக் கொண்டது. எவர்கள் இதனை யறிகிறார்களோ அவர்கள் அமிர்தர்களாகிறார்கள்.

(3) அதனிடத்தினின்றுண்டான அக்கினி பயத்தால் சுடுகின்றது; சூரியன் சுடுகின்றான்; இந்திரனும் வாயுவும் ஐந்தாவதான மிருத்தியுவும் ஓடுகிறார்கள். (அவரவர் தத்தம் தொழிலை முயற்சியுடன் நடத்துகிறார்கள்).

(4) பிரஹ்மத்தை யறிந்துகொள்ள இவ்விடத்திலேயே ஒருவன் (ஜீவனுள்ளவனா யிருக்கும் போதே) சக்தியுள்ளவனா யிருந்தால், சரீரம் விழுதற்குமுன் சம்சார பந்தத்தி னின்றும் விடுபடுகிறான்; அப்படி சக்தியில்லா விடின் அதனாலே (அறியாமையினாலே) பிராணிகளிடத்திலேயும் பிருதிவியாதி யுலகங்களிடத்திலேயும் சரீரத்தை யடைதற்குரியவனாகின்றான் (மீண்டும் ஜனன மரணத்தை யடைகின்றான்); ஆதலால் அதனையடைய இப்பொழுதே முயலவேண்டும். அதனையடைவது கஷ்டம். அஃதெங்ஙன மெனின்;

(5) எப்படி கண்ணாடியில் பிரதிபிம்பம் தோற்றுகிறதோ அப்படி வியக்தமாய் ஆத்மாவில் (தனதாத்மாவில்) தோன்றும்; எப்படி சொப்பனத்தில் தோற்றுகின்றதோ அப்படி வியக்தமாய்ப்பிதிருலோகத்தில் தோன்றும்; எப்படி ஜலத்தில் பிரதி பிம்பம் தோற்றுகிறதோ அப்படி வியத்தமாய்க்கந்தர்வ லோகத்தில் தோன்றும்; வெயில் நிழல்போல வியக்தமாய்ப் பிர்மலோகத்தில் தோன்றும். (இப்படி பிரஹ்மம் பிர்மலோகத்தில் ஸ்பஷ்டமாகத் தோன்றினும் அந்த லோகத்தை யடைவது மிகு கஷ்டம்; அநேக கர்மங்களைச் செய்து முடிக்கவேண்டும். மற்றும் மேற்கூறிய வுலகங்களிலோ ஸ்பஷ்டமாகத்தோற்றவில்லை; ஆகையால் ஆத்மாவில் பிரஹ்மத்தைப் பார்க்க முயற்சிசெய்யவேண்டும்).

(6) அதனதன் காரணமாகிய ஆகாசாதி யிடத்தி னின்றும்) தனிப்பட்டுள்ள(சுரோத்ராதி) இந்திரியங்களின் தனிமையையும், அவைகளின் உத்பத்தி நாசத்தையும் அறிந்து தைரியசாலி துக்கத்தை யடையமாட்டான்.

(7) இந்திரியங்களைக் காட்டிலும் மனஸ் பெரிது; அதைக் காட்டிலும் புத்தி பெரிது; அதைக்காட்டிலும் மகத்துவம் பெரிது; அதைக்காட்டிலும் அவ்வியக்த தத்துவம் (பிரகிருதி) பெரிது.

(8) அதைக் காட்டிலும் வியாபகனுயும் லிங்காகிதனுயு மிருக்கிற புருஷன் (பிரஹ்மம்) பெரிது. எதனை யறிந்து ஜந்து சம்சாரபந்தத்தி னின்றும் விடுபடுகிறதோ அமிர்தத்துவத்தை யடைகிறதோ அது பிரஹ்மம்.

(9) அந்தப்பிரஹ்மத்தினுடைய ரூபம் திருஷ்டியில் நிற்காது; ஒருவனும் இதனைக் கண் முதலான இந்திரியங்களால் அறியமாட்டான்; அது இருதயத்தி லிருக்கிற புத்தியினுலும் (சங்கல்ப விகல்ப மில்லாமல்) ஒழிந்திருக்கிற மனஸினுலும் (நல்லமனசினுலும்) அடையத் தக்கது. எவர்கள் இதையறிகிறுர்களோ அவர்கள் அமிர்தர்களாகிறுர்கள்.

(10) பெரியோர்கள் எப்பொழுது ஐந்து ஞானேந்திரியங்களும் மனதுடன் ஒழிவடைந்து நிற்கின்றனவோ, புத்தியும் தன் வேலையை நடத்தாம லிருக்கின்றதோ அப்பொழுது அதனை (அந்த அவஸ்தையை)ப் பரமமான கதியென்று மொழிகின்றுர்கள்;

(11) ஸ்திரமாயும் இந்திரியங்களின் தாரணமாயு மிருக்கின்ற இந்த அவஸ்தையை யோகமென்று கருதுகின்றுர்கள். அப்பொழுது (யோகவிருத்தி காலத்தில்) யோகிபிரமாதத்தை யடையாதவனுகின்றுன் (இந்திரியங்களைக் கண்டவாறு வெளிப்படுத்துவதனுலுண்டாகும் அநர்த்தத்தை யடையாதவனுகிறுன்); ஏனெனின், யோகமென்பது உத்பத்தி நாசமல்லவா? (இந்திரியங்கள் தத்தம் தொழில்களைச் செய்யத் தொடங்குவதும் உடனே யவைகளை யடக்கி விடுவது மல்லவா)?

(12) ஆத்மா வாக்கினுலாவது, மனத்தினுலாவது, சக்ஷுஸ் முதலியஇந்திரியங்களாலாவது அடையத் தக்கதல்ல. இருக்கிறது என்று சொல்லுகிறவனைக் காட்டிலும் மற்றயாரிடத்தில் (நாஸ்திகளிடத்தில்) எப்படி அது (ஆத்மா) கிடைக்கும்.

(13) ஆத்மா இருக்கிறது என்று நினைத்தால் மாத்திரம் அது தத்துவபாவ ரூபமாக (யதார்த்தஸ்வரூபமாக) அடையத் தக்கது. (அஸ்தி - நாஸ்தி யென்னும்) இந்த இரண்டனுள் அஸ்தி

யென்றே யடையப்பட்ட ஆத்மாவுக்கு (ஜீவனுக்கு)த் தத்துவ பாவம் வந்து முன்னிற்கின்றது.

(14) (ஞானம் உண்டாவதற்கு முன்) புத்தியை யாசிரயித் துக்கொண் டிருந்த எல்லாக் காமங்களும் எப்பொழுது சிதறிப் போய் விடுகின்றனவோ, அப்பொழுது மனிதன் அமிர்தனுய் விடு கின்ருன்; இவ்விடத்திலேயே பிரஹ்மத்தை அடைகின்ருன் (பிரஹ்மமாகவே ஆகிவிடுகிருன்).

(15) (காமங்கள் எப்படி அற்றுப்போமெனின்) இவ்விடத் தில் புத்தியின் முடிச்சுகள் (அவித்தையினு லுண்டான நான், என் சரீரம், என் தனம் முதலிய அகம்பாவங்கள்) எல்லாம் எப்பொழுது அவிழ்ந்து போகின்றனவோ (இல்லாமல் போய் விடுகின்றனவோ), அப்போது காமங்கள் நசிக்கும்; மனிதன் அமிர்தனுகின்ருன். இது வரையிலும் உபதேசம் (இவ்வுபதேசம் போதுமானது).

(16) மந்தப் பிரஹ்ம வித்துக்களைக் குறித்துச்சொல்லுகிறதா வது) இருதயத்துக்கு (இருதயத்தி னின்று வெளிப்படும்) நூறும் (அநேகமும்) ஒன்றுமாக நாடிகளுண்டு. அந்த ஒன்று மூர்த்தாவி னின்றும் பிளந்துகொண்டு பிரம்மரந்திரத்தின் வழியாக வெளிப் படும்படியான சூழுமுனநாடி. அதனுல் உயரக் கிளம்பிச் சென் று அதன் வழியாய்ப்போய்ப் பிரமலோக முதலியவற்றை யடை ந்து அவ்விடத்தி லிருந்து பக்குவப்பட்டுப் பிறகு புருஷன் அமிர் தத்துவத்தை யடைகின்ருன். மற்ற நாடிகள் நாநாவிதமான கதியை யுடையன; உத்கிரமணத்தில் (மாரணத்துக்கு) நிமித்தமா யிருக்கின்ற சம்சாரஹேது.

(17) (இந்த உபநிஷத்தின் சாரம்யாதெனின்) புருஷன் (பிர ஹ்மம்) அங்குஷ்டமாத்திரன் (அங்குஷ்டப்பிரமாணமுள்ள இருதய த்தி லிருப்பவன்); அந்தராத்மா; எப்பொழுதும ஜனங்களுடைய இருதயத்தி லிருப்பவன், அப்படிப் பட்டவனை (ஆத்மாவை)த் தன் னுடைய சரீரத்தி லிருந்து தைரியத்துடன் முஞ்சத்தி னின்றும் ஈஷிகையைப் போல (முஞ்சம் என்ற ஒரு விதமான புல்லி லிரு ந்து அதனடுவி லிருக்கும் ஈர்க்கையெடுப்பது போல) வெளிப்படு த்தவேண்டும். சுத்தனுயும் அமிர்தனுயு மிருக்கின்ற அப்படிப் பட்டவனை யறிய வேண்டும்.

உபதேசத்துக்குப் பிறகு மிருத்தியுவால் சொல்லப்பட்டதி னின்றும் இந்த (பிரஹ்ரம)வித்தையையும் எல்லா யோகவிதிகளை யுமடைந்து (தெரிந்துகொண்டு) நசிகேதஸானவன் விரஜனுகவும் (தர்மாதர்மங்களை விட்டவனுகவும்) விமிருத்தியுவாகவும் (காமம் அவித்தை இவைகளற்றவனுகவும்) பிறகு பிரஹ்மத்தை யடைந்த வனுகவும் ஆனுன்.

இப்படியே எவன் அத்தியாத்மத்தைத் (ஆத்ம பாவத்தைத்) தெரிந்து கொள்ளுகின்றவனே, அவனும் இப்படிப்பட்ட பலனை யடைவான்.

பத்தாவது அத்தியாயம்

முற்றிற்று.

## இந்நூற்பயன்

ஆனைமுக னறுமுக னம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுண் ணுறுடு.
நித்தன் மலரடி நெஞ்சி னிறுத்துவோர்
முத்தியைப் பெற்று முதல்வனு மாவர்.

நேரிசை வெண்பா.

இந்நூ றனைப்பார்ப்போ ரிங்கிதமா கப்படிப்போர்
நன்னூ லெனமனதி னுடிடுவோர்—பன்னூநூல்
கற்றுணர்ந்த மேலோராய்க் காண்பர் திருவருளைப்
பெற்றிடுவர் மெய்ஞ்ஞானப் பேறு.

சந்தேக மாதிகளைச் சாராம லேயகற்றிப்
பந்தபா சங்கடமைப் பாழாக்கும்—இந்தநூல்
எந்நா ளும்மழியா வேகாந்த வீடதனைச்
சொந்தமென வாக்குந் தொடர்ந்து.

அல்லல் வலையறுத் தாணவங்க ளையகற்றித்
தொல்லைப் பிறவி தனைத்தொலைக்குஞ்—சொல்லரிய
சிற்பரமா நிற்குந் தெளிவைத் தருமிந்நூல்
முற்பட் டுணர்தன் முறை.

## சரணம்.

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

நித்திய பிரமப் பொருளே சரணம்
நிர்க்குண நிராமய நிமலா சரணம்
மித்தியா ரகிதப் பொருளே சரணம்
மீட்சியி லாவரு ளிறையே சரணம்
சத்திய பஞ்சாக் கரமே சரணம்
சச்சிதா நந்த சிவமே சரணம்
முத்தியாய் நின்ற முதல்வா சரணம்
முன்னு கியபாஞ் சுடரே சரணம்
கருணு நிதியே சரணம் சரணம் கனகா பரனே சரணம் சரணம்
அருணு டகனே சரணம் சரணம் அமலா விமலா சரணம் சரணம்
மருவே திலதாய் நின்றாய் சரணம் மகிழ்வா யெனையாள் குருவே [சரணம்
தெருணு டுறவா சரணம் சரணம் சிற்றம் பலவா சரணம் சரணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய வாழி விருத்தம்.

நித்திய பிரமம் வாழி நீள்பஞ்சாக் கரமும் வாழி
சத்திய வேதம் வாழி தகைமைசே ரன்பர் வாழி
சித்தர்கள் முனிவர் வாழி சீர்நிறை யமரர் வாழி
சுத்தமெய் யோகர் வாழி சுயம்பிர காசர் வாழி.
வாழிமேல் வாழி வாழி மாஞானம் வாழி வாழி
வாழிமேல் வாழி வாழி மன்னருள் வாழி வாழி
வாழிமேல் வாழி வாழி மாண்புளோர் வாழி வாழி
வாழிமேல் வாழி வாழி வளர்குரு வாழி வாழி.

கவி விருத்தம்.

வாழி சோபனம் வாழிநல் லன்பர்கள்
சூழ வந்தரு டோற்றமுஞ் சோபனம்
ஆழி போலரு ளையன் மவுனத்தால்
ஏழை யேன்பெற்ற வின்பமுஞ் சோபனம்.

தத்துவ ஞானுபவ விளக்கம்
முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# சிவாநந்த சாரம்.

## விநாயகர் காப்பு

வெண்பா.

தஞ்சமென் றேபாசான் றன்கழலை யென்சிரமேல்
வஞ்சமற வேவைத்து வாழ்த்தியே—நெஞ்சுடனே
சீரார் சிவாநந்த சாரமதைச் செப்புதற்குக்
காராணை மாமுகன்றுட் காப்பு. 1

சுப்பிரமணியர் ஸ்துதி.

காப்பிட்டே னெந்நாளுங் கதிர்வேற்கை நாதனையான்
மூப்பில்லா மெய்ஞ்ஞான மூர்த்திதனை—மாப்புகழார்
குஞ்சரியா ளோடு குறமாது பாகனையே
நெஞ்சமதி னன்றாய் நினைந்து. 2

சிவஸ்திதி.

நினைந்திடுவ தெப்போது நீள்சடையான் றன்னை
யநந்தவடி வாயமர்ந் தானை—மனந்துணிந்து
பொய்வாழ்வைத் தள்ளிப் பொருந்துஞ் சிவாநந்த
மெய்வாழ் வுறவேண்டி மேல். 3

மேலாம் பரமசுக மேவுமே மேன்மேலுங்
காலன் வராமலென்றுங் காக்குமே—வாலாய
மானதொருகொடிய வல்வினைக ளையகற்றும்
ஞான நெறிநினைந்த நாள். 4

நாடறிய மன்று ணடிக்கும் பழம்பொருளை
நாடியறி வாலறிய நன்றாகத்—தேடரிய
விண்ணவருங் காணாத வித்தகனை நித்தியனை
எண்ணி யருள்பெறுவ தென்று. 5

என்றுந் துயரறவே யீரெழுத்தா யெவ்விடத்து
நின்றிலங்குஞ் சங்கரனை நேசித்து—நன்று
யவனருளைப் பெற்றவடி யார்பாதம் போற்றிப்
பவமறுக்க லாம்நெஞ்சே பார். 6

பரந்தபுவி யைப்படைத்திட் டுக்காத் தழிக்கும்
சிறந்தவிடை யேறுஞ்சி மானைத்—துறந்தமன
மெய்யன்ப ருள்ளத்து மேவுவா னைப்பணிந்தால்
அய்யமறு நெஞ்சே யறி. 7

அரியயனுங் காணாத வானந்த வாழ்வைத்
துரியவடி வாய்நிறைந்த சோதி—யிறையளவும்
மாசின் மனத்தின் மருவி யிருக்குமருட்
டேசிகனை யேதினமுந் தேடு. 8

தேடு மறைமுதலாத் தேடியின்னுங் காணாதே
யாடும் பரம்பொருளை யன்பாக—நாடிநெஞ்சே
உற்றுப்பார் ஞான வுண்மை நிலையதனைப்
பற்றிப்பார் மற்றெவையும் பாழ். 9

என்று முமையா ளிடப்பாகத் தேயிருக்க
மன்றதனி லாடுசிவ் மாமுதலை—என்றுமே
பாடி யுணர்ந்தால் பதம்பெறலா மேநெஞ்சே
கூடுந் தெருணெறியைக் கூடு. 10

கூறரிய தோற்றமெலாங் கூறரிய வஞ்செழுத்தே
கூறரிய நான்மறையு மஞ்செழுத்தே—கூறரிய
சித்திமுத்தி தந்துவினை தீர்ப்பதுவு மஞ்செழுத்தே
சத்தியத்தைச் சார்ந்தோர் தமக்கு. 11

அஞ்செழுத்துத் தானே யறிபொணு மெய்ஞ்ஞானம்
அஞ்செழுத்துத் தானே யடிமுடியு—மஞ்செழுத்தே
யெல்லாப் பொருட்கு மிடமா யிருப்பதுவும்
பொல்லா வினையறுப் போர்க்கு. 12

அஞ்செழுத்தை நெஞ்சழுத்தி யாராய்ந்த மாதவர்பால்
வஞ்சக னென்நாளும் வாரானே—நெஞ்சே
நமக்கு மதுவழி யாமென்று நாளு
மிமைப்பொழுதுஞ் சோரா திரு. 13

ஓம்நமசி வாயமென் றோதப் பிறவியறும்
ஓம்நமசி வாயமென் றோதனலம்—ஓம்நமசி
வாயமென் றோதினவர் வாழ்வார் பரகதியிற்
காயங் கெடாதென்றுங் காண். 14

தக்கதொரு வஞ்செழுத்தைச் சற்குருவி னாலறிந்து
துக்க வலையறுக்குந் தூயதவப்—பக்குவரே
வோயாப் பிறவி யொழிந்து சதாநந்த
நேயத் தழுந்த ளிசம். 15

நல்லார் தமக்கல்லார் நாடுவரோ முத்திநெறி
பொல்லார் தமக்குவினை போகுமோ—நல்லாய்
பொதுவா யிருந்தருளும் பூரணனை நோக்கித்
துதியாதார்க் கேது துணை. 16

இருவினையால் வந்த விழிவா முடலை
யுறவென் றனுதினமு மோர்ந்து—மருவியே
தேடி யுழன்றாயே தீதான பேய்மனமே
நாடியென்ன கண்டாய் நவில். 17

எண்ணும னீமனமே யீர்வினையி னாலலைந்து
புண்ணாகி யேனோ புலம்புகின்றாய்—பண்ணாத்
தீவினையெல் லாஞ்செய்து தேடுகின் றாய்பொருளைப்
பாவியுனால் பெற்றேன் பழி. 18

மதியாது மாயா மயக்கத்தி லாழ்ந்து
நிதியாசை மேவியே நின்று—சதிசெய்தே
என்று மிருப்போமென் றெண்ணுகின் றாய்மனமே
பொன்றாதார் யாரோ புகல். 19

முத்தர்கள் சொற்ற முதுநூலை யோராமற்
பத்திநிலை சற்றேனும் பாராமற்—புத்தியினா
றோயாம னெஞ்சேநீ யோடியுழல் கின்றாயே
நாயோ வுனதுகுண நாடு. 20

நித்தியா நித்தியத்தை நிர்ணயித்துப் பாராமல்
சத்யமுறு மார்க்கமதைச் சாராம—லித்தபுமே
நைபு முடல்வளர்க்க நாடுகின்றாய் பேய்மனமே
அய்யனடி தன்னையறி யாது. 21

மறந்து மனமேநீ மண்ணாகும் வாழ்வைத்
துறந்துநிலை கண்டுசுகி யாமல்—பிறந்து
சுழற்காற்றி லுற்றதொரு செத்தைபோற் சுற்றி
யுழல்கின்றா யேயுடம்பி னுள். 22

உள்ளபொழு தென்னெஞ்சே யூழ்வினைக ளையகற்றிக்
கள்ளந் தனைக்கடிந்து காணாமல்—எள்ளளவும்
பாச வலையறுக்கப் பாரா துடலைநம்பி
மோசமேன் போனாய்நீ முன். 23

முறைபாக ஞான முனைந்துநோக் காமல்
இறைவனடி யெண்ணிப்பா ராமல்—விரிதலை
மாதுமக்க ளென்றுவீண் மையல்கொண் டேயலைந்தா
லீதுனக் காமோ வியம்பு 24

இயம்புவாய் நெஞ்சேநீ யேரி லுடம்பும்
நயஞ்செய் மனைவிமுத னாடும்—பயனோ
சதிசெய்நம னோலை சடுதியினில் வந்தா
லுதவுவ தொன்றுளதோ வோது. 25

நாடு நடுமனையு நன்னிதியும் பொன்னிலமுந்
தேடும் புதல்வரொடு சீருகளும்—கூடற்
றுயிர்போன பின்ன ருறுமோ துணையாய்
பயிலுவதேன் வீணாய்நீ பார். 26

தந்தை முதலெவருஞ் சந்தைதனிற் கூட்டமென்றே
சுந்தரஞ்சேர் நம்பெருமான் சொற்றிருக்க—நிந்தையதாய்
வீணாவல் கொண்டு விரிதலையுற் றாடுகின்றாய்
காணாதைக் கண்டு களி. 27

ஐம்பொறிக ளுங்கலங்கி யைம்புலன்க ளும்மொடுங்கி
நம்முணர்வ துங்கலங்கி நாவுலர்ந்தே—ஐம்பித்து
மாவிரு ளான்மயங்கி மாய்ந்துமே போனவுயிர்
வாவென்றா னெஞ்சே வரா. 28

வாராது நெஞ்சேகேள் வல்வினைதா னோர்காலுஞ்
சீரா ருநெறியிற் சென்றக்கால்—போராது
துன்பாக்கு மேமன் தொடர்பொழிவா யய்யனடிக்
கண்பாவா யாநந்த மாய். 29

அமர்வாய் மனமே யரனு ரடியி
னிபந்தனைக ளொன்றுநே ராது—பவமாற
நின்றனைப் போற்றியே நேசித் தவரருளைக்
கொண்டார்கட் குண்டோ குறை. 30

முக்கண் ணுடையான் முடிமே னதியுடையான்
செக்கென் றொளிர்மேனித் தீயுடையான்—பக்க
மிளங்கொடியா ளுக்குகந்த வெம்மா னருளைக்
களங்கமற நெஞ்சே கருது. 31

கருதும் வினையாற் கலங்காதே நெஞ்சே
பெரிதுசிறி தென்றுபே ணாதே—வருவதுவும்
போவதுவு மெண்ணிப் புலைத்தொழில் செய்யாதே
ஆவதெல்லா மாகு மறி. 32

அவனன்றி யொன்று மசையா தெனனீ
தவமென்று நாடித் தரியாய்—கவலையற
நில்லாயோ நெஞ்சேநீ நீயுநா னென்பதறக்
கல்லாயோ நல்ல கவி. 33

கற்றபடி யேநடக்கக் கல்லாத பேய்நெஞ்சே
உற்றவுனைப் போலுமுண் டோமூடர்—கற்றபடி
சென்றாற் கதிபெறலாம் சீர்பெற்றார் பின்சென்று
நின்றால் சுகம்பெறலா நில். 34

சுகமெல்லாந் துக்கமெனத் தோன்றுவதெந் நாளோ
தகவார் திருவருளிற் றங்கிப்—பகையறவே
மெய்த்துறவை யேபற்றி மெய்யடியா ரைச்சேர்ந்து
பொய்யுறவைத் தள்ளிநெஞ்சே போடு. 35

போதநெறி நில்லாத பொய்யுற வைத்தள்ளிப்
பாதகங்க ளெல்லாம் பரிந்துவிட்டு—நீதமுற
அஞ்செழுத்தைப் பற்றி யடியை யறிந்துகொண்டால்
வஞ்சவினை சேருமோ வந்து. 36

வேக மடக்கிநிதம் வெட்டவெளி யைப்பார்த்துச்
சோகமற வேயங்குச் சொக்கினால்—பாகமதாய்
வால வயதுவந்து வாய்க்குமே நன்னெஞ்சே
காலன் வாரானிதனைக் காண். 37

காக்கு மனு தினமுங் காலைப் பிடித்திழுத்து
நாக்குநுனி மேலோங்க நாட்டியே—நோக்கினு
லண்டபகி ரண்டமொன்றா யாடும் பாஞ்சுடராம்
கண்டுகொள்ள வும்மெளிதோ காண். 38

கண்ணுண் மணியைக் கருதொணா நற்பொருளைப்
பெண்ணுருவிற் பாதிதனைப் பேரொளியை—விண்முதலை
உள்வெளிக ளுட்மறியா வோங்கார சூத்திரத்தைக்
கள்ள மனமடக்கிக் காண். 39

காண்பவெலாம் பொய்யெனவே கண்டு களித்தற்குப்
பூண்பருவ மென்று பொருந்துமோ—காண்பவெலாம்
நில்லாவா நெஞ்சே நிமிடத் தழிந்துவிடும்
புல்லான நீர்க்குமிழி போல். 40

நீர்க்குமிழி யாக்கைதனை நித்தியமென் றேநினைந்தாய்
யார்க்கும் வெளிப்படையீ தாகாதோ—பார்த்திருந்தும்
கற்பனையைத் தள்ளிக் களிப்பா ருடன்சேராய்
விற்பனமி னெஞ்சே விளம்பு. 41

ஓமென் றொளிர்பொருளை யோதி வணங்குதற்குக்
காமக் குரோதமெலாங் கட்டவிழ்ந்து—போமாறு
தேடாயோ நெஞ்சே திரமா யருணெறியை
நாடாயோ சொல்லாய் நயந்து. 42

நத்தாதே நீமனமே நாய்போல மங்கையரைப்
பித்தாயக் கிடந்து பிணங்காதே—நித்தமுமே
பேய்போ லலையாது பேரின்பத் தேயிருப்பாய்
ஆய்வானைப் பற்றி யமர்ந்து. 43

பாழான மங்கையரைப் பற்றாதே நீமனமே
கூழாய் மனதைக் குமைப்பதற்குத்—தாழாத
முத்தாடி யைப்போற்றி முன்னாஞ் சுருதிவழிப்
பத்தியுடன் நிற்கவே பார். 44

பாங்கில்லாத் தோற்றத்தைப் பாராதே பாழ்நெஞ்சே
யேங்கி யெதற்கு மிளையாதே—வீங்கி
உடல்போகு முன்பேநீ யோரெழுத்தைப் பற்றி
நடனமிடு வாசிதனை நாடு. 45

நாடியே வாசிதனை நாளுக்கு நாளடக்கிக்
கூடிமேற் சென்றுசுழிக் கூச்சமறத்—தேடியே
வாமப்பா லுண்டு மயக்குமிரு ளைக்கெடுத்துச்
சேமத்தாழ் பெற்றுச் சுகி. 46

சுகமொன்று மில்லாத தோகையரைத் தேடிப்
பகலுமிர வாயுழன்றாய்ப் பாழாய்ச்—சுகமொன்று
மெய்யாத் தனியாய் விபுவா யிருக்கின்ற
துய்வாய்நெஞ் சேயதனை யுற்று. 47

ஆறுகி நெஞ்சே யலைகின்றா யையையோ
தேராய் சிவத்தைத் திகைக்கின்றாய்—தீராத
ஆசைக் கடலி லகப்பட் டலைமோதி
ஊசல்போ லானு யுழன்று. 48

உழன்றுழறு நெஞ்சேகே டுற்றதெல்லா மெண்ணிச்
சுழன்றபொருள் வாய்ப்பதுவுங் காணாய்—சுழன்ற
மனமாயை மாறவே மாசில் பொருளைத்
தினமுநீ தேடித் தெளி. 49

திரமா யனுதினமுஞ் சிந்தித் தரு[illegible]
குருவா லதனையே கூடித்—திரமாக
உற்றுணர்ந்தார்க் கேசிவத்தை யோயும் பிறவிதான்
மற்றவர்க்கெல் லாம்பிறப்பே மாண்பு. 50

திங்கட் சடையுடையான் தீயார்ந்த மெய்யுடையான்
பொங்கு மரவணிந்த பூரணன்காண்—மங்காத
மெய்யடியா ருள்ளத்தை மேவுங் குருபரன்காண்
வெய்ய வினையறுப்பான் மேல். 51

வெள்ளைவிடை மேலூர் விமலன் திருவருளைக்
கள்ளமற வேண்டியெக் காலுநெஞ்சே—யுள்ளபடி
மாறாத் தியானத்தை வாய்க்கப் பெறுவாயேல்
மாறா திருப்பாய் மகிழ்ந்து. 52

உருகி யுருகிநெஞ்சே ஓயா தருளை
யருகாது நோக்கி யமர்ந்து—பெருகுஞ்
சுகாநந்த ஞானச் சுடரொளியைக் கண்டால்
மகாகொடிய நோய்மாறு மே. 53

மாற்று மருந்திதுவே மாளாத பாழ்வினையைச்
சோற்றுத் திருத்திச் சுமைதனையே—மாற்றும்
இருள்கடிந்து கொண்டேநீ ஏகாந்த மானால்
அருளொளியைப் பெற்றிருக்க லாம். 54

ஆமென் றிருமனமே யன்பினரைப் போற்றியே
காமக் குரோதங் கடிந்துவிட்டுச்—சேமமுறும்
சுந்தரனை வாழ்த்திநீ சொல்லா லளப்பரிய
தந்தரத்தைப் பெற்றுத் தனி. 55

தானென் றிருவினையிற் றங்காதே பொய்யுடலை
நானென் றொருநகணமு நாடாதே—தானென்று
தங்குமிடத் தைநன்றாய்ச் சற்குருவா லேயறிந்
தெங்குஞ் சிவமென் றிரு. 56

இருக்கலா மென்று மிடர்செய் மனத்தின்
றிருக்கறுத்துக் கொண்டு சுகமா—யுருக்கமுடன்
நாதாந்த மோன நடுநிலையி னின்றகுரு
பாதார விந்தம் பணிந்து. 57

பணிந்துருகு நெஞ்சேயுன் பாவமிலா மாயத்
துணிந்து சிவனைத் தொழுவாய்—இணங்கிநின்று
மண்ணு முடல்வாஞ்சை மாய்த்துண் முகமாகிக்
கண்ணார விண்ணொளியைக் காண். 58

கண்டபொரு ளத்தனையு மாய்நின்ற காரணத்தை
யெண்டிசையு நின்றிலகு மேகத்தைக்—கண்டால்
கவலையறு நெஞ்சே கடக்கமுடி யாத
பவக்கடலைத் தாண்டலாம் பார். 59

பண்பான நெஞ்சேநாம் பற்றற் றிருக்கவென்றால்
விண்பார்வை யன்றிவழி வேறுண்டோ—மண்பார்வை
கொள்ளா திருந்து குருமொழியை யென்று
மெள்ளா திருப்பா யினிது. 60

வெட்டவெட்ட வேதளிர்க்கும் வெய்யமா யாமரத்தை
யெட்டுணையு மில்லா தினிதழிக்க—முட்டில்லா
ஞானவை வாள்கொண்டு நன்றாக வெட்டிடுவாய்
மோன வடிவாய் முனைந்து. 61

முத்திக்கு வித்தாய் முளைத்த செழுஞ்சுடரைப்
பத்திசெய்து நாளும் பரவியே—சித்தங்
குடிகொண் டிருந்த குருவைப் பணிவாய்
அடிஞான மாவா யமர்ந்து. 62

இல்லாத மாயைதனை யுண்டெனவே யெண்ணிநெஞ்சே
பொல்லா வுடலைப் பொருந்தினாய்—தொல்லைக்
கருக்குழியை நாடிக் கடையானாய் வீணே
இருக்கின்ற தேனோ வியம்பு. 63

இழிவை யுணர்ந்தா லெவரு முயர்வர்
பழுதற் றிதனைநீ பாராய்—பழிநெஞ்சே
விட்டேறிச் சென்றேற வெளியிலொளி யைக்கண்டு
வட்டமதிப் பாலுண்ண வா. 64

வாராயோ நீமனமே வஞ்சவிரு ளைப்போக்கித்
தேராயோ சிந்தை தெளியாயோ—நேராக
வொன்றுக்கு ளொன்று மொடுங்கிக் கிடக்குமிடத்
தென்று மறைந்தே யிரு. 65

கள்ளக் கருத்தையெலாங் கட்டோட் வேரோக்கி
யுள்ளத் துறுமிருளை யோட்டியே—தள்ளித்
திருக்கருணை யூடுபோய்ச் சேர்ந்திரண் டில்லா
வருட்கடலின் மூழ்கி யமர். 66

வாழ்வா ரடியார் வளர்கூட்டத் தேயிருந்தால்
தாழ்வாக்கு மாசை தளர்வாகும்—பாழ்மாயை
யற்றபர மானந்த மாவாயென் னெஞ்சமே
சற்றிருந்து பாராய்நீ சார்ந்து. 67

முறையொன்று மில்லாத மூடனா யுள்ளேன்
கறையுற்ற காமக் கசடன்—பொறையற்றேன்
பவ்வவினை யேசெறிந்த பாவியேன் தீயனே
னெவ்வண்ண முய்வே னினி. 68

இனிதென்று பாழுடலை யெண்ணாதார் பாதங்
கனிவாய்த் தொழுதறியாக் கள்ள—னினிதொன்றுஞ்
செய்தறியாத் தீயனேன் செம்மை சிறிதில்லாப்
பொய்யனேற் குண்டோ பொருள். 69

பொருளறிந்த புண்ணியர்பாற் போமா றறியேன்
இருண்மயக்கி லேமாந் திருப்பேன்—மருளுறவு
கொண்டவர்க ளிற்பெரியேன் கோதி லருட்செயலைக்
கண்டியா னுய்வதெக் கால். 70

கால மறிந்து கடுகியமன் வந்திட்டால்
சீலஞ் சிறப்பவன்பால் செல்லுமோ—ஓலமிடு
மாமறையி னுட்பொருளை வாய்ப்பா யுணர்ந்தக்கால்
எமனென்றும் வாரானென் றெண். 71

எண்ணு முறை ஞான நூ லின்பமாக் கற்றறியேன்
வண்மையுடன் பூவைவலம் வந்திலேன்—நண்ணரிய
மெய்ப்பொருளைத் தேடிநெஞ்சே மேவா திருந்தக்கால்
உய்யும்வகை யாமோ வுரை. 72

உள்ள பொருளைநெஞ்சே யோதி யுணர்வாயேல்
உள்ளபடி சிந்தித் துணர்வாயேல்—உள்ளபொருள்
எப்பொருளுந் தானா யிருத்தல் வெளியாகும்
ஒப்பிலா ஞான முறும். 73

கல்விச் செருக்குற்றோர் காணாத் காரணத்தைச்
சொல்லவொண்ணா மெய்ஞ்ஞான சூத்திரத்தை—யெல்லையள
வற்றொளிரு மாமணியை யன்புற் றருட்குருவால்
பெற்றவரே பெற்றார்நற் பேறு. 74

கையார நின்கருணை காட்டியதற் கென்செய்வேன்
மெய்யார வெத்தைத விரும்புவேன்—அய்யா
உனக்கடிமை யாகியே யுன்பணியே செய்வேன்
எனக்குநீ தானே யிறை. 75

இயற்கையொன்று மில்லாத வேழையே னுய்யச்
செயற்கைகெட வந்தாண்ட தேவே—இயற்கையாய்
நின்வடிவ மேயாகி நிற்கு நிலையெனக்கிங்
கென்று வருமோ வியம்பு. 76

அய்யனே யுன்னையன்றி யாதரிப்பா ராரெனக்கு
நப்பும்வினை யேசெறிந்த நாயேனை—வய்யமதில்
இன்னும் பிறப்பிக்க வெண்ணாதே நாயேன்றன்
இன்ன லொழியுமா றெண். 77

அப்பனே நின்கருணை யல்லாற் கதியுளதோ
செப்பார் புகழ்வாய்ந்த தேசிகனே—கைப்பற்றி
யெளியேனை யாண்ட விறைவனே யென்றும்
ஒளியாகி நிற்பா யுவந்து 78

ஒன்றா யிரண்டாகி யோர்மூன்றாய் நான்கைந்தாய்
நின்றாடுஞ் சூத்திரத்தை நேசித்தே—என்றும்
உருகி யுருகிநெஞ்சே யுற்றுணர்ந்து பார்த்தால்
அருகி யொழியு மவம். 79

தேனிருக்கப் பாலிருக்கத் தித்திக்கு மூணிருக்க
ஏனிமல முண்கின்றா யேழைநெஞ்சே—நானிங்கே
உண்டதெல்லாம் போதுமினி யுத்தமத்தைத் தேடிநீ
கண்டுகொள்வாய் நல்ல கதி. 80

கன்னலமு தேசீனிக் கற்கண்டே சர்க்கரையே
இன்னலறும் விண்முதலே யெந்தாயே—வன்னிமத்தி
யூடிருந்த மெய்ப்பொருளே யோங்கும் பரஞ்சுடரே
நாடியெனை யாள்வாய் நயந்து. 81

பொன்னார்ந்த மேனியனைப் புற்றோ லுடையானைக்
கன்னிமதி சூடுமென் கர்த்தனை—என் னுடைய
சித்தத் திருந்தானைத் தேவர்க் கரியானைப்
பத்திசெய்வார்க் குண்டோ பயம். 82

மறந்துழலு நெஞ்சேயுன் மார்க்கமெலா மாயுந்
திறந்தெரிந்து கொண்டேன் றிசமாய்த்—அறந்துநின்
றல்லும் பகலு மறிவா யமர்வாரை
வெல்வ தெவரோ விளம்பு. 83

தத்துவத்தை யெல்லாஞ் சடமென் றறிந்துகொண்டு
நித்தமா யுள்ளதனை நேசித்திங்—கத்துவித
மார்க்கந் தவறாது மன்னி யனுபவத்தைக்
கூர்க்கத் தெரிந்து குறி. 84

கூர்த்ததெல் லாஞ்சிவமாய்க் கூர்ந்துநீ கண்டுநெஞ்சே
கூர்த்தவிட மற்றுநிற்குங் கொள்கையினைப்—பார்த்துநிதம்
ஆனந்த வெள்ளத் தழுந்தி யகண்டமதாய்
ஈனந் தவிர்ந்தே யிரு. 85

நாட்டாதே நெஞ்சேநீ நானென்று நம்மதென்றுங்
காட்டாதே பொய்யைக் கருதாதே—வாட்டமுட
னோடி யலையாதே யோங்காரத் துள்ளொளியை
நாடி யிருப்பாய் நயந்து. 86

நன்றென்றுந் தீதென்று நாடி யிருக்காதே
இன்றென்று நாளையென்று மெண்ணாதே—துன்று
மலகன்ம மாயா மயக்கறுத்தார் கூட்ட
நலமா யிருக்கநெஞ்சே நாடு. 87

எண்ணியெண்ணி நெஞ்சே யிடையறா தேசிவனைக்
கண்ணீரா றாகக் கசிந்தெண்ணி—வண்ண
வருளோடு கூடிநின் றாசை யகற்றி
யிருளில்லா தென்று மிரு. 88

இரந்துண்டு கொண்டுநித்த மேகாந்த மாகி
யாக்கையற் றுள்ளாரை யண்டி—நிரந்தரமாப்
பாடுபட்டார்க் கன்றோ பலனுண்டு பாழ்மனமே
வீடுபெற நாடு விரைந்து. 89

கொலைகளவு கட்காமங் கோபமெலாம் போக்கி
யலையு மனத்தை யடக்கி—நிலையாத
நாசச் சரீரத்தி னட்பையற வேவிடுத்துத்
தேசிகன் கூறுமொழி தேர். 90

திருவருளைக் கண்டு தெரிசித்த முத்தர்
மருளற்று வாடாரிம் மண்ணில்—பிரிவற்ற
ஆகாயம் போலிருப்ப ரச்சமில் லாதிருப்பர்
ஆகா ரழியாரிங் கார்ந்து. 91

எத்தனைநா ளாயசத்தை யின்பாய்க் கருதினையோ
அத்தனைநா ளும்மவத்தை யாலலைந்தாய்—நித்தம்
நிசத்தினையே நோக்கிநீ நிற்பாயே னெஞ்சே
கசத்தவுட லைக்கடப்பாய் காண். 92

நெஞ்சேநீ யென்வசத்தி னின்று நிராமயத்தில்
வஞ்சமற வேபழகி வந்தக்கால்—பஞ்சமலக்
கொத்தறுத்து விட்டுக் குலவுஞ் சிவானந்த
சித்துருவ மாவாய் தெளிந்து. 93

சித்துருவாய் நின்ற சிவாநந்த வாரிதியே
முத்தருள் ளத்திருக்கு மோனமே—அத்தா
கருணைத் திருவடியைக் காணா துலகி
லிரவுபக லாயலைந் தேன். 94

தேனார் மலர்க்கொன்றைச் செஞ்சடையான் பல்லுயிர்க்குங்
கோனாகி நின்றொளிருங் கொற்றவன்—வானாதி
பஞ்சவுரு வானவன் பாவையொரு பாகம்வைத்த
பிஞ்சக னென்றன் பிரான். 95

போத விண்ணொளியைப் பேரின்ப வாழ்முதலைப்
பாராதி யான பரஞ்சுடரைச்—சீரார்
சிவாநந்த போதமாஞ் செம்பொருளை நெஞ்சே
நவாநந்த வத்துதனை நாடு. 96

முத்திபெறு நெஞ்சேநீ மூர்க்கருற வைக்கொண்டு
சித்தங் கலங்கிச் சிதையாம—னித்தமுமே
சன்மார்க்கஞ் சென்று சதாநந்த மாகினார்
நன்மார்க்கந் தன்னையே நாடு. 97

வாக்குமன மும்மணுகா வாநந்தப் பேரொளியை
நோக்காது நோக்குவாய் நுண்ணறிவால்—நோக்குவா
வற்றபரி பூரணமே யாவாய் மடநெஞ்சே
சற்றிருந்து பாராய் தனித்து. 98

உரைக்குஞ் சிவாநந்த வோங்காரந் தன்னைத்
துரைக்குமுத லாய்நின்ற சத்தை—பரைக்கணமுந்
தாழாது சிந்தித்துச் சாதனைசெய் வாய்நெஞ்சே
பாழாகா யென்றும் பதைத்து. 99

வாழ்த்தியே யெந்நாளு மாசில் குருபதத்தைப்
பாழ்த்த பிறப்பறுக்கப் பாடிய—காழ்த்த
சிவாநந்த சாரந் தினமும் படிப்போர்
சிவாநந்த மாவர் திரம். 100

திருச்சிற்றம்பலம்.

சிவாநந்தசாரம்

முற்றிற்று.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# பரசிவ தோத்திரம்.

## விருத்தம்.

திங்களார் சடைமேற் கங்கை திகழ்வுற வைத்த நாதன்
மங்கையோர் பாகன் திவ்ய மழுப்படை யுடைய பெம்மான்
பொங்கர வணிந்தோன் முன்புப் புரமதை யெரித்த சோதி
துங்கநான் மறைக்கு மெட்டாச் சுடர்பதம் போற்றி செய்வாம். 1

முத்தனே முதல்வா ஞான மூர்த்தியே முக்கண் வாய்ந்த
வித்தகா விமலா விண்ணோர் விரும்புசெம் பொருளே வேத
நத்திட முடிமே னின்று நடமிடு வொளியாய்த் தோன்றுஞ்
சித்தனே சிவனே யிந்தச் சிறியனுக் கருள்செய் வாயே. 2

ஆதியு நடுவு மாகி யந்தமு மாகிச் செம்பொற்
சோதியு மாகி யீரேழ்த் தோற்றமு மாகி யெங்கும்
நீதியாய் நிறைந்து நின்ற நிமலனே யுமையாள் பங்கா
எதிலா வெளியே யுன்னை யெவ்வகை யறிவே னந்தோ. 3

காமனை யெரித்த முக்கட் கடவுளை யடைந்தோ ரெல்லாந்
தாமத முதற்கு ணங்க டன்மையைக் கெடுத்துண் ணோக்கால்
பாமரர் போலத் தோன்றிப் பலதிரு வாடல் செய்திங்
கேமனுக் கிடங்கொ டாம விருப்பர்க ளென்று மேலாய். 4

கரிபக டேறும் வஞ்சக் காலனைக் கடிந்த கோவே
உரியபல் லுயிர்கட் கெல்லா முணர்வதாய் நின்ற வொன்றே
அரியமெய்த் தவத்தோ ருள்ளத் தமர்ந்திடுங் கருணை விண்ணே
எரியனேற் குன்பா லன்றியெண் ணம்வே றில்லை கண்டாய். 5

ஆயநான் முகனு மாலு மடிமுடி காணொ ணாத
தூயனே பரமா னந்தச் சோதியே யாதி நாதா
நேயநின் னருளைப் பெற்ற நின்மல வடியா ரோடு
பேயனேன் கூடி வாழப் பெறுவனோ விந்நா டன்னில். 6

பிஞ்சகா பித்தா பேயோ டாடிய பெருமா னேமுன்
நஞ்சமு துண்டு விண்ணோர் நடுக்கமுந் தவிர்த்த நாதா
அஞ்செழுத் துருவாய் நின்ற வருட்பெருஞ் சோதி யேயிவ்
வஞ்சக நெஞ்சி னேற்குன் மலர்ப்பதங் கிடைப்ப தென்றோ. 7

வேறு.

முக்கணு யகனே முனிவர்கட் கிறைவ மோனமே ஞான வாரிதியே, தக்கன்றன் வேள்வி தனைக்கெட வழித்த தற்பரா சிற்பரம் பொருளே, மிக்கவ ருளத்தின் மேவுசெஞ் சுடரே மேன்மைசேர் நின்னடிக் கன்பாய்ப், பக்குவப் படுத்தி யென்றனை யாள்வாய் பரமனே பண்ணவர்க் கரசே. 8

வேறு.

நித்தனே நிமலா போற்றி நிட்களப் பொருளே போற்றி
சுத்தநிர்க் குணனே போற்றி தோகையோர் பாகாய் போற்றி
வித்தகா விமலா போற்றி விரிசடை யுடையாய் போற்றி
சித்தனே சிவனே போற்றி சின்மயா போற்றி போற்றி. 9

பன்னகா பரணு போற்றி பரமசற் குருவே போற்றி
வன்னியா ருடலாய் போற்றி வயங்குவெண் ணீற்றாய் போற்றி
கன்னலி னமுதே போற்றி கதிதருஞ் சுடரே போற்றி
என்னையா ளுடையாய் போற்றி யிறைவனே போற்றிபோற்றி. 10

வேறு.

பொய்கொடு மனத்தின் மாயையால் வருந்திப்
புண்படு பாவியேன் பேய்போன்
மையிடுங் கண்ணார் முயக்கத்தின் மயங்கி
மருவியே விழுந்துழ லுமேயேன்
உய்யநின் னருளைப் பெற்றமெய் யடியா
ருறவிலா வேழையே னென்னைக்
கைகொடுத் தாள வருவையோ சொல்லாய்
கர்த்தனே சிவபெரு மானே. 11

கவலைசேர் கொடிய பந்தவா ரிதியிற்
கண்ணிலாக் குழவிபோல் வீழ்ந்து
பவமிரு வினையி னலையினுன் மோதப்
பட்டுழல் பாவியேன் பலகால்
தவமுடைப் பெரியோர் தங்களை யணுகாச்
சண்டிமா டெனத்திரி வேனுன்

நவமுடை யுன்ற னருள்பெறு வேனோ
நாதனே சிவபெரு மானே. 12

தீங்கெலாங் கூடித் திரண்டுரு வெடுத்த
தீயனேன் பேயனேன் பொய்கோள்
நீங்கிடா மனத்தேன் கொலையருட் பெரியேன்
நீதியோர் கனவினு மறியாப்
பாங்கிலா வெறியேன் பாவியே னெந்தப்
பண்புகொண் டுன்றனை யடைவேன்
தேங்கிடுங் கங்கை சிரமிசைச் சுமந்த
செல்வனே சிவபெரு மானே. 13

வார்தருங் கூந்த லுடையதி மின்னார்
மயலிடைக் கிடந்துபன் னாளும்
பார்தனிற் பேய்போ லலைந்தலைந் துழன்ற
பாவியே னாயினுங் கடையேன்
நேர்திரு வருளை நினைக்கவுந் தகுமோ
நித்தனே நின்மலா நந்த
சீர்நிறை பழுதே வானவர்க் கரசே
சித்தனே சிவபெரு மானே. 14

ஐம்புல வேடர் கொட்டம டக்கி
யளவிலா வருளிடைக் கிடந்து
வெம்பிய மாயை யிருளறக் கடிந்த
மெய்த்தவர்க் குதவுசெம் பொருளே
கம்பமார் பெரிய வுலகிடை யெனக்குன்
கழலிணை யன்றிவே றுளதோ
எம்பெரு மானே யென்னுயிர்த் தலைவா
யிறைவனே சிவபெரு மானே. 15

எமனினுங் கொடிய வஞ்சமார் மடவா
ரிடுக்கண்பட் டுழன்றுமே சோற்றுச்
சுமைதனைத் தாங்கி மாடுபோற் றிரியுந்
துருசுறை மனத்தினேன் றனக்குச்
சமரச ஞான வனுபவ நிலையுந்
தங்குமோ வும்பர்கட் கரசே
யுமையொரு பாகம் வைத்தமெய்ப் பொருளே
யுண்மையே சிவபெரு மானே. 16

கல்லுமோர் போதிற் கரைந்திடுங் கரையாக்
கன்னெஞ்ச மானவஞ் சகனேன்
புல்லருண் மூத்த வம்பனே னந்தோ
புனிதனின் செயலறி யாது
அல்லல்செய் மனத்தா லழிந்திடு நாயேற்
கையனே யருடரு வாயோ
சொல்லுமெய்ஞ் ஞானச் சுகக்கட லமுதே
தூயனே சிவபெரு மானே. 17

மின்னைநேர்ந் தழியும் விடயவின் பத்தான்
மெலிந்துளம் வாடியே நானுன்
றன்னையே யடையக் கருதினே னென்னைநீ
தள்ளிடி லென்செய்வே னெளியேன்
பின்னையு மெந்தா யுனையலா லென்னைப்
பிரியம்வைத் தாள்வதார் சொல்வாய்
சின்மயா னந்தச் சுடர்மணிக் குன்றே
சித்தனே சிவபெரு மானே. 18

மாவுரி தரித்து மலைவனம் புக்கு
வண்மையா யிலைசரு கருந்தித்
திரமுற வுண்டித் தணவினை மாற்றிச்
சிற்சுகா நந்தமெய்ந் நிலையைப்
பாவுநின் னடியா ரடிதொழ வறியாப்
பாவியே னெவ்வகை யுறுவேன்
பொறிபுல னடக்கி யென்றனை யாள்வாய்
புனிதனே சிவபெரு மானே. 19

வேதநா யகனே விண்ணிறை யமுதே
விரிசடை யுடையமெய்ஞ் ஞானப்
போதநா யகனே போற்றுவார்க் கெளிய
புனிதனே பூரணா நந்த
நீதநா யகனே நின்மல வடிவே
நிர்க்குண மன்றுணின் றாடும்
பாதநா யகனே பாவியை யாள்வாய்
பரமனே சிவபெரு மானே. 20

வேறு.

உம்பர்களு மறியாதே யொளித்த பாத
மோரிரவில் சுந்தரர்க்குத் தூது செல்லச்
செம்பவள நிறமுடைய பாவை யார்பால்
செய்யதிரு வடிவருந்தச் சென்ற கோலம்
நம்பியா ரூரன்செய் தவமோ முன்னர்
நாதநீ யுரைத்தமொழி நழுவி டாமல்
எம்பிரா னேநின்து விளையாட் டெல்லாம்
எம்மனோர்க் கியம்புவதிங் கெளிதி லாமோ 21

வாதவூர் வருதேவு மற்று முள்ள
வல்லசித்து யோகிகளு மற்றை யோரும்
நீதமுறப் பணிந்தேற்று நிமலா வெங்கு
நீங்கியிரா நெடியபரஞ் சுடரே ஞான
போதமெனு மருநெறியை யுணர்த்தி நின்ற
பூரணனே புண்ணியனே புனித வாழ்வே
நாதவடி வானகுரு பரனே யெந்த
நாளுமெனை யாள்வதுன்றன் கடனே கண்டாய். 22

வேறு.

மூவாண் டுடைய விளங்கு முந்தை
மூழ்குந் துறையி னின்றழவே
தேவா யனைத்து மீன்றபர
தேவியுடனே தோன்றி யங்கு
நோவா திருக்க வருளமுத
நொடிக்கு ளளித்த விண்முதலே
காவா யென்னை யுடையவனே
கருணா நிதியே கற்பகமே. 23

வேறு.

அருண்மிகுத்த மெய்ஞ்ஞானத் துரையே யென்னை
யாண்டவனே தாண்டவனே யமரர் கோவே
மருள்விடுத்த மாதவத்திற் சிறந்த மேலோர்
வணங்குமெழி லப்பமுனி வள்ளற் காகக்
கரையடுக்கக் கல்லணையை மிதக்கச் செய்த
காரணனே பூரணனே கபால மூர்த்தி

பொருளறியத் தில்லை மன்று ளாடுகின்ற
புண்ணியனே கண்ணியனே புனித வாழ்வே. 24

வாழ்பெரிய சிறுத்தொண்டன் முதலா மற்றும்
வண்மைபெறு நாயன்மார் பலர்க டம்மைத்
தாழ்விலா தோங்குநின தருளி னாலே
தடுத்தாண்ட மெய்ப்பொருளே யெளியேன் றன்னைப்
பாழ்ம்பிறப்பா மிருங்கடலில் வருந்தா வண்ணம்
பரிந்துவந்து காவாயோ பரமா னந்தச்
சூழ்கருணை வாரிதியே நின்னை யன்றித்
துணையொன்று மறியேன்றால் லுலகிற் றானே. 25

தானாகி நின்றிலங்கு மொன்றாய் மோன
தற்பரனே தோன்றியபல் லுயிர்கட் கெல்லாங்
கோனாகி நின்றசிவக் கொழுந்தே வேதக்
கொற்றவனே நற்றவத்தோ ருளத்தின் மேவு
ஞானனந் தக்கடலே பலகா லுன்னை
நாரண னு நான்முகனுந் தேடிக் காணா
வானாதி யெங்குநிறை யொளியே யென்னை
வாழ்விப்ப துன்பரனே வள்ளா லென்றும். 26

எந்தையே நின்னடிக்கே யன்பு சற்று
மில்லாத நாயடியே னானு மையா
சந்ததமு நினதருளைச் சார்வேன் மற்றோர்
சார்பறியே னீயிதனை யறியாய் கொல்லோ
பந்தமறு மெய்ஞ்ஞான நெறியுண் மேலாம்
பரிசிலையுங் காட்டியெனை யாளா யானால்
எந்தவகை யுலகினிடை யிருப்பே னேழை
யீதறிந்திங் கித்தருண மருள்செய் வாயே. 27

வேறு.

வேதநெறி யாகமத்தி னெறிக ளுள்ளும்
விதித்தநெறி சாத்திரங்கள் பலவற் றுள்ளு
மோதுகின்ற பொருள்களெலா முணர்ந்த மேலோ
ருரைக்குநெறி தம்மையான் கற்றே னல்லாற்
பேதமறக் கற்றபடி மனதை நாட்டிப்
பேறுபெறக் கண்டறியே னாயேற் குன்ற

னீதமுற வருள்வருவ தென்ருே சொல்வாய்
நிர்க்குணனே சற்குருவே நிமல வாழ்வே. 28

பத்திநெறி யொருபொழுது மறியேன் மேலாம்
பரமார்த்த நெறிசிறிது மறியே னுன்னைச்
சித்தமிசை யெள்ளளவு நினையேன் நீயேன்
செய்பவரு ளடியாரைப் பணிந்தே னில்லேன்
முத்தர்களு மோதிவைத்த வருணூ றன்னை
முனைந்தறியே னலந்தெரியேன் முழுமூ டன்யான்
வித்தகனே நின்னருளைப் பெறுவ தென்ருே
வீணான நாயேற்கு விளம்பல் வேண்டும். 29

வேண்டுவே னெந்நாளு முனது பாதம்
வேண்டிடேன் மூவாசை யொருகா லத்துந்
தூண்டிடே னென்மனத்தைப் பொய்ம்மை தன்னிற்
ருெழுதழுது நின்னருளை வேண்டி நிற்பேன்
பூண்டிடேன் பொய்யுடலை யானென் றெண்ணேன்
பொருந்திடே னிருவினையின் வழியிற் செல்லேன்
ஆண்டவனே நின்கருணை வலுவைப் பெற்ற
வருளடியா ரொடுங்கூடி வாழ்வேன் கண்டாய். 30

வேறு.

வானிடை யொளியைப் பரப்புசெம் பொருளே
மன்னிய வுயிரினுக் குணர்வே
தானிடந் தனதா யமர்ந்தமெய் யறிவிற்
றங்கிய மாசிலா மணியே
கானலிற் சலம்போற் ருேன்றுபொய் யுலகைக்
கடந்தவ ரடைந்தநற் றவமே
பூணுறும் பாச வினைதனைத் தீர்த்தாள்
பூரணா நந்தமெய்ப் பொருளே. 31

உடலுயிர்க் குயிரா யுறைந்திடும் பொருளா
முண்மையே யுணர்விலேன் றனக்குத்
திடமுறக் காத லாமல கம்போற்
சின்மயச் சுடரொளி காட்டிச்
சடமது பொய்பொய் யென்றுயா னுணருந்
தன்மையை யுள்ளிருந் துணர்த்திப்

புடமிடு பொன்போ லென்றனை யாள்வாய்
பூரணா நந்தமெய்ப் பொருளே. 32

உன்றனா லறியப் படுபொரு ளெவையு
முனக்கனித் தியமென வுரைத்துச்
சந்தத முன்னைப் பரனெனக் காட்டிச்
சர்வத்தின் சாட்சிநீ யெனவே
தந்திர மாக வோர்மொழி பகர்ந்தாய்
தற்பரா சிற்பர சிவமே
புந்தியி னொளியாய் விளங்கிடுங் குருவே
பூரணா னந்தமெய்ப் பொருளே. 33

வாக்கொடு மனத்தான் மதித்திட வொண்ணா
வாநந்தப் பேரொளி யதுவாய்
நோக்கொணா நோக்கி னோக்குவா ரறிவாய்
நுட்பமா யகண்டமாய் வெளியாய்
நீக்கமற் றங்கிங் கெனாததா யெங்கு
நின்றொளிர் நிரஞ்சன நிலையாய்ப்
போக்கொடு வரவு மற்றதோர் வடிவே
பூரணா நந்தமெய்ப் பொருளே. 34

எனையொன்று மறியா விளம்பரு வத்தே
யென்னுள்வந் தமர்ந்தெளி யேற்கே
வினையினா லடுக்குஞ் சகலகே வலத்தை
விட்டியுள் ளிருளையு மாற்றி
மனநினை வனுகா மார்க்கமு முணர்த்தி
மகிழ்ந்துடல் பொருளுயிர் கொண்டாய்
புனிதமெய்ஞ் ஞான வருட்பெருஞ் சுடரே
பூரணா நந்தமெய்ப் பொருளே. 35

மன்னிய தவத்தோ ருளத்தைவிட் டகலா
மாசறு மானந்த வெளியே
என்னிரு கண்ணே யின்பவா ரிதியே
என்னுணின் றென்றனை யாண்ட
சின்மயா னந்த மவுனசற் குருவே
திவ்யமா மதுரத்தின் பெருக்கே

பொன்மய மன்று ளாடுசெஞ் சுடரே
பூரணா நந்தமெய்ப் பொருளே. 36

இகபர மிரண்டி னுயிரினுக் குயிரா
யிலங்கிய கருணைவா ரிதியே
சகமுக நிறைந்த சமயவா திகளாஞ்
சண்டிக டங்களுக் கெட்டா
தகமுகத் துறைந்த வன்பர்தம் மனத்து
ளானந்த வொளியதாய் நின்ற
புகலரு நிலையே செம்பொன்மா மணியே
பூரணா நந்தமெய்ப் பொருளே. 37

இலைசரு காதி கந்தமூ லத்தை
யெரிகும்பிக் கிரையென வடைத்திங்
கலைபுவி கான னீரெனக் கடிந்தே
யளவிலாச் சிற்சுகம் வேண்டிப்
பலபொழு துன்னைத் தொழுதுநின் னருளைப்
பாவியேன் பெறுவதெந் நாளோ
புலனொன்று மறியாச் சிறியனேற் குரைப்பாய்
பூரணா நந்தமெய்ப் பொருளே. 38

இறைவனே யுன்ற னருள்பெறக் கருதி
யிடையறு துருகியே கண்ணீர்
கரைபுரண் டோட வுடலது குழையக்
கம்பித்த லோடுவே சற்றுக்
குறைவற நிறைந்த வாநந்த நிலையைக்
கூடுவார்க் குதவிடுந் துணையே
பொறுமைசே ரின்பக் குணமணிக் குன்றே
பூரணா நந்தமெய்ப் பொருளே. 39

பதிதரு பரனே பரமசற் குருவே
பதந்தரு பரமனே ஞான
நிதி யெனு நிலையே நிதிநிறை யமுதே
நித்திய நின்மல வகண்ட
கதியுளார் கண்ணே யென்னுயிர்த் துணையே
கருணைசேர் மணிமன்றந் தன்னுள்
பொதுமையா யின்ப நடமிடு மரசே
பூரணா நந்தமெய்ப் பொருளே. 40

## வேறு.

மகமோங்க ஞானநெறி யகமோங்க மெய்ந்நிலையின்
மதியோங்க வழியு மோங்க
மறையோங்க வுண்மையது நிறைவுகுறை வற்றநன்
மாதவத் துறையு மோங்க
இகமோங்கு தொல்வினையி னிழிவோங்கு முலகநடை
யெதிரோங்கி டாம னடுவே
இனிதோங்கு மைம்பொறிக ளியல்போங்கு மைம்புலனெனன்
னிரைகெட்டு நிற்கு நிலையாய்
அகமோங்கு பாவிமன வலைவோங்கு பலநினைவி
னற்பநடை போக்கி யருள்வாய்
அறிவோங்கு மாதவர்க ளகமோங்கு முண்மையே
யானந்த மான பரமே
சுகமோங்கு மௌனவெளி தனிலோங்கு கர்த்தனே
சோதிமய மான பரனே
சொல்லரிய மெய்ஞ்ஞான வருளாக வெங்குநிறை
துரியவடி வான சிவமே. 41

இல்லாத மாயைதனை யுண்டென்று கருதிநித
மிருவினையி னலைகண் மோத
எனதுயா னென்கின்ற சுழலினிடை வீழ்ந்துமே
யிழிவுதரு முலக நடையால்
நில்லாத காயமிதை நிலையென்று நம்பியே
நிந்தனைசெய் தந்தி பகலாய்
நிட்டூர மாதர்கண் முயக்கிடை கிடந்துமே
நீள்பாச வலையிலார்ந்து
பொல்லார்க ணேசமே கொண்டுநல் லோர்தமைப்
புறக்கணித் தேய லைந்து
பொதிமா டெனுகார சுமைதனைத் தாங்கியே
புத்தியில் லாது முன்று
தொல்லுலக ணிறைந்தலையு நாயனேற் குன்கருணை
துன்னுமோ சிறிது புகலாய்
சோதிமய மானகுரு பரனேயெ னக்கருள்செய் 42
துரியவடி வான சிவமே.

வருவதா முத்திவழி தருவதோ நின்கருணை
வம்பனேற் கதுவாய்க்குமோ
வஞ்சியர்க ளாசையிற் றுஞ்சாத வென்னெஞ்ச
வஞ்சனையெ லாந்தொலையுமோ
பெருகுமோ வுள்ளன்பு மருவுமோ மெய்யருளை
பேரின்ப வீடணுகுமோ
பேருருவ மில்லாத சிவகருணை பெறுவனோ
பிரபஞ்ச வன்பொழியுமோ
உருகுமோ பாவிமன மொழியுமோ வென்கவலை
யுள்ளொளி கதித்தோங்குமோ
ஓயுமோ வென்பாச முண்மையறி வாவனோ
வோடென்ப னோபொன்னினைச்
சுருண் மாயை மாயுமோ வருமோக மேகுமோ
சுத்தவெளி சித்திக்குமோ
ஐயனே யுனைநம்பி னேனெனையு மாள்வையோ
துரியவடி வான சிவமே. 43

சந்ததமு நினதருளி லாசையுற் றழுதழுது
தங்காது நெக்குருகியே
சங்கையற வோங்கிவரு கருணையங் கடலிற்
சதாநந்த வமுதமுண்டு
பந்தமறு மெய்ஞ்ஞான வெளியிலொளி கண்டுயர்
பரமார்த்த நிலையைமருவிப்
பதியநின தருண்மயம தோங்கியன் பாகவே
பாடியா டிப்பணிந்து
சிந்தையொரு சிந்தனையு மில்லா தகண்டமாய்ச்
செப்பரிய நிட்டைகூடிச்
சிற்பர வெளிக்குணீ யானென்ப தறவெனைச்
சேர்ந்தணைவ தென்றுபுகல்வாய்
தொந்தமொடு நிர்த்தொந்த மானவெம் பரமனே
தொண்டருள மேவுபொருளே
சோகமறு மாநந்த வெளியே யெனக்கருள்செய்
துரியவடி வான சிவமே. 44

ஊனாகி யுயிராகி யூனிலுணர் வாகியே
யுலகமாந் தோற்ற மாகி
யுள்ளாகிப் புறமாகி யொன்றாகிப் பலவாகி
யொளியாகி வெளியு மாகிக்
கானாகிக் கடலாகி வனமலைக ளாகியே
கானிலுறை மிருக மாகிக்
கங்குல்பக லாகிமதி ரவியாகிச் சுழியாகிக்
கண்டபொரு ளவையு மாகிக்
கோனாகிக் குருவாகி நானாகி நீயாகிக்
குறியவனு மவனு மாகிக்
கோதில்வித மகிதமொடு குணமாகி மணமாகிக்
கோசமொடு பூத மாகித்
தோணாத பொருளாகித் தூரமொடு சமீபமாய்த்
தோன்றுமெய்ப் பொருளு மாகிச்
சோதிமய மாகியெனை யாண்டவனு மாகியொளிர்
துரியவடி வான சிவமே. 45

கண்டபொரு ளத்தனையு மாகியே யவைகளுங்
காணாத கருணை யுருவே
கருதரிய வஸ்துவே நிச்சயவ கோசரா
நந்தநிலை தந்த முதலே
அண்டபகி ரண்டமுந் தன்னருள் வெளிக்குள்வைத்
தாண்டருள்செய் பரம நிதியே
அத்துவித சுத்தநிலை பெற்றதிரு முத்தருள
மானசிவ ஞான குருவே
மண்டலமும் விண்டலமும் விளக்குமொரு வித்தாகி
மருவவிட மற்ற பொருளே
மாளாத பாழ்பிறவி மாளவரு மிர்தேசன்
மார்க்கத்தி லோங்கு துரையே
தொண்டரொடு தேவர்பணி கண்கண்ட தெய்வமே
தொல்லுடல் தரித்த பரனே
சுத்தநிர்க் குணமான பரமேயெனக்கருள்செய்
துரியவடி வான சிவமே. 46

வேதாந்த சாரமே சாரமதி னனுபோக
விளைவுதரு முத்தி முதலே
வேற்றொருவர் காணாத மாற்றரிய செம்பொனே
மேவுசிவ ஞான வெளியே
நாதாந்த மோனகுரு வானதவ ராஜனே
நவகண்ட யோக முடிவே
நானாவி தங்கொண்ட வாசாம கோசரா
நந்தமய மான பொருளே
நீதாந்த நயனநடு வணையிலொளிர் மூர்த்தியே
நெற்றிநே ரிட்ட பொருளே
நிர்க்குண நிராலம்ப வாலம்ப நிர்விஷய
நித்தியசுக முற்ற நிலையே
சோதிமய மாயண்ட பகிரண்ட மொன்றதாய்த்
தோன்றுசின் மயா நந்தமே
சொந்தமுட னென்றனையு வந்தடிமை கொண்டருள்செய்
துரியவடி வான சிவமே. 47

அன்பினிலை யறியாத வன்பனே னென்றனையு
னாளாகி நிற்கு வண்ணம்
அரியதிரு வருளுருவு பெற்றுநர தேகமா
யடிமைகொள வந்த திரமாய்
என்பருவ முற்றிலுஞ் சோதித்து மேன்மையா
யினியநற் கருணை யாலே
யேதுமத வானமெய்ஞ் ஞானநிலை காட்டியே
யின்னமுத மீந்து பின்னும்
வன்பிறவி நோய்கெட வகுத்திருளை யும்போக்கி
வருநெறி விருத்தி யாலே
வாட்டமுறு சந்தேக மாதிமுதல் மூன்றையும்
வண்மைபெற மாற்றி மேலாய்த்
துன்பமொரு சிறிதுமில் லாதுளந் தெளியவே
தெளியநிரை மவுன வெளியில்
தூக்கிவிட் டெனையாண்ட கர்த்தனே யானந்த
துரியவடி வான சிவமே. 48

வஞ்சனைப் புஞ்சனைக் கொடியனை மிடியனை
வசைபேசு சதிகேடனை
வாதாடு வம்பனைத் துன்பனைத் தீயனை
மாபாதகத் தொழிலனைக்
கொஞ்சனைக் கொலையனைப் புலையனை நுழையனைக்
குணக்கேடு செறிக தியனைக்
கோதைமய லகலாத நாயனைப் பேயனைக்
கூடாத புன்செயலனை
வெஞ்சனை நஞ்சனை வீணனைப் பாவியை
வெறிகொண்டு திரிமுண்டனை
வெட்டித்தனம்பேசு வில்லனைப் புல்லனை
வித்தைதெரி யாமுடனைத்
துஞ்சுமன மாயைபிற் றொல்லைபுறு சிறியனைத்
துஞ்சா தடா வென்றுமே
தூக்கியே கைகொடுத் தாண்டசிற் சோதியே
துரியவடி வான சிவமே. 49

இன்றுளோர் நாளைக் கிருப்பதும் பொய்யதா
மென்றெண்ணி நின்று நிசமாய்
இனிமையா யனுதினமு நினதன்ப ரடிதொழு
தேற்றிப் புகழ்ந்து வெகுவாய்
நன்றென்று மவர்பாத தொண்டுசெய் தன்பாய்
நயந்துசன் மார்க்கநெறியால்
நயனமுறு நினதுதிரு வருளொளி யறிந்துபின்
நட்டநடு நிலையதென்ன
மன்றதனில் நடனமிடு வஸ்துநீ யெனக்கண்டு
மருவியுடல் பொருளாவியை
மகிழ்ந்துநீ கைக்கொளவு மீந்துநா னற்றுமே
மாசறவ கண்ட நிலையில்
அன்றவெனை வலியவந் தாண்டுபர கதிதந்த
தூயமெய்ஞ் ஞான குருவே
துன்புறு பவக்கடல் கடத்துமெய்ப் போதமே
துரியவடி வான சிவமே. 50

திருச்சிற்றம்பலம்.

பரமசிவதோத்திரம்

முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பூரணமணிமாலைக் கண்ணி.

மூல முதற்பொருளே முத்திதரு மெய்ஞ்ஞானச்
சீலப் பரஞ்சுடரே தேவபரி பூரணமே. 1

நித்தியமே தத்துவமே நின்மலமே தன்மயமே
வித்தகனே மெய்ஞ்ஞான வெளியேபரி பூரணமே. 2

ஓங்கும் பராபரமே வொன்றான முச்சுடரே
நீங்காத் திருவருளின் நிலையேபரி பூரணமே. 3

வற்றா வருட்கடலே வாசாம கோசரமே
சிற்றம் பலத்தாடுந் தேசிகனே பூரணமே. 4

கண்ணுண் மணியே கருதரிய பேரொளியே
விண்ணாதி யெங்குநிறை வித்தேபரி பூரணமே. 5

அத்தனே யுன்றன் அருட்பதத்தை யென்முடிமேல்
வைத்தா லொழியமற்றோர் வகையறியேன் பூரணமே. 6

எந்தவித மாயென் னிதயங் தெளிந்திடுமோ
அந்த விதத்தையெனக் கருள்செய்வாய் பூரணமே. 7

பாச வினைகளெல்லாம் பறந்தோட நின்னருளின்
நேசம்வைப்ப தென்றோ நிகழ்த்துவாய் பூரணமே. 8

சிறக்கும் அருளன்றிச் சீயென்றே மற்றவையும்
துறக்கும் வழியெனக்குச் சொல்லுவாய் பூரணமே. 9

மட்டற்ற வேத மதிப்பிலடங் காமல்வெறும்
வெட்டவெளி யாகிநின்ற விதமருள்செய் பூரணமே. 10

வானவர்க்கு மெட்டாத வள்ளலே வான்பொருளே
மோன மணிவிளக்கின் முடிவேபரி பூரணமே. 11

அண்ட புவனமெங்கு மணுவுக்கு ளணுவாகி
நின்றாடுஞ் சூத்திரத்தின் நிலையருள்செய் பூரணமே. 12

அத்து விதப்பொருளி லாசையுற் றழுதழுதென்
சித்தந் தெளியவகை செய்குவாய் பூரணமே. 31

வஞ்சகமன் வாதனைக்கும் வஞ்சியர்செய் வேதனைக்கும்
அஞ்சி யுனையடைந்தே னாண்டருள்செய் பூரணமே. 14

அல்லல்தரு புன்மாயை யாவுமற மாதவஞ்சேர்
நல்லபத வியிலொளிரு நட்பேபரி பூரணமே. 15

பொய்யைத் துறந்து புறப்பட்டார்க் கல்லோவுன்
மெய்யாந் திருக்கருணை மேவுங்காண் பூரணமே. 16

அந்தரத்தி லானந்த வருள்நடன மாடுகின்ற
சுந்தரஞ்சேர் செம்பொற் சுடரேபரி பூரணமே. 17

மனவாக் கணுகாத மார்க்கமாய் நின்றவொன்றே
கனமாயை யற்றபர கதியேபரி பூரணமே. 18

நோக்குமிட மெல்லாம் நோக்குந் திருவருளாய்த்
தாக்கும் வகையெனக்குத் தந்தருள்செய் பூரணமே. 19

நண்ணரிய வேதாந்தம் நவின்ற வழிநடக்கப்
பண்ணுமொரு பக்குவத்தைப் பண்ணுவாய் பூரணமே. 20

அறிவுக் கறிவா யகண்டிதா கண்டமதாய்
நிறைவுகுறை வற்றமெய்ந் நிலையேபரி பூரணமே. 21

துன்புசெறி யென்னெஞ்சத் துக்கமெலாம் மாய்க்கவெனக்
கன்புருவாய் நின்ற வருளேபரி பூரணமே. 22

தேடக் கிடையாத செம்பொற் சுடரொளியே
யீடுனக் கேதுமுண்டே விபம்புவாய் பூரணமே. 23

நாட்ட முனதருளை நாடிநின்ற பாதவமாந்
தேட்டாளர் பெற்ற திரவியமே பூரணமே. 24

பேரறிவே யின்னமுதின் பெருக்கேயிப் பேதைதனக்
காரிருந்து மென்னபல னாகுங்காண் பூரணமே. 25

கன்ன றருமமுதே கற்கண்டே சர்க்கரையே
என்னுளிருந் தெனையாண்ட இறையேபரி பூரணமே. 26

பசுபதிபா சச்செயலைப் பறக்கவிட்ட வன்பருக்கு
வசமாகு மெய்ஞ்ஞான வழியேபரி பூரணமே. 27

தத்துவத்தை யெல்லாஞ் சடமென்று தாக்கறுத்தார்
சித்த முனதருளாய் நிற்பர்காண் பூரணமே. 28

பற்றற்ற கண்ணே பாழ்ம்பிறவி போமெனக்காண்
நற்றவர்க ளன்றோ நயம்பெறுவார் பூரணமே. 29

வஞ்சநம னேடி வருகும்போ தெவ்வுயிர்க்கும்
தஞ்சமுனை யன்றியுண்டோ தாயேபரி பூரணமே. 30
பார்க்கப் பலவிதமாய்ப் பல்கோடி யண்டமதாய்
எற்கையுட னின்ற யிறையே பரிபூரணமே. 31
மனமாயைக் கன்ம மயக்கமெல்லாம் விட்டகன்ற
இனமோடு மென்னை யிருத்திவைப்பாய் பூரணமே. 32
பொய்ப்பொருளை மறந்துநிற்கும் பொன்போன்ற நெஞ்சினர்க்கு
மெய்ப்பொருளுந் தானே மேவுங்காண் பூரணமே. 33
சோற்றுத் துருத்தியுடற் சுமையை யிடிசுவரை
நாற்றப் புழுக்குரம்பை நம்பிடேன் பூரணமே. 34
மிக்க படித்த வெறும்பாச மூடரெலாந்
தக்க நினதருளைச் சார்வரோ பூரணமே. 35
கற்றபடி யேநடக்கக் கல்லாத ஈனருக்கு
நற்றவத்தின் ஞானம் நண்ணுமோ பூரணமே. 36
வெம்புசெறி யப்புலனை வென்றிடுநல் லன்பர்களே
உம்பர்களுங் காணு வொளிபெறுவார் பூரணமே. 37
எத்தனையோ சித்தி யின்பமதாய்ப் பெற்றிடினும்
முத்திநிலை காண முடியுமோ பூரணமே. 38
சாத்திரங்க ளோதுகின்ற சழக்கருக்கு மெய்யறிவு
மாத்திரைப்போ தேனும் மருவுமோ பூரணமே. 39
எவ்வுயிருந் தன்னுயிரென் றெண்ணுந் திறமெனக்குச்
செவ்வையுடன் சேர்வதென்றோ செப்புவாய் பூரணமே. 40
சண்டித் தனமனதைச் சாத்திரப் படிதிருத்தித்
துண்டித்து நிற்கச் சுகம்வருங்காண் பூரணமே. 41
காற்றிற் றுரும்பாய்க் கவலையுறு பேய்மனதை
யேற்றபடி விட்டா லியற்கைகெடும் பூரணமே. 42
மோசவலை வீசுமின்னார் முயக்கை மறந்தருளில்
ஆசைவைப்ப தென்றோ வறைகுவாய் பூரணமே. 43
வஞ்சியருக் காளாய் வசமாக வைக்காமல்
தஞ்சமுனதருளைத் தந்தருள்செய் பூரணமே. 44
தொண்டருக்குத் தொண்டாய்ச் சுகித்திருக்க மாட்டாமல்
பெண்டாசை கொண்டு பிழைபுரிந்தேன் பூரணமே. 45

அத்தனே நானுன் னடிமையெனும் பேர்பெற்றால்
இத்தொண்டு போது மிறைவேபரி பூரணமே. 46

உடலுயிர்க்குள் நீயிருக்கும் உளவறிய மாட்டாமல்
கடலுலகெங் குந்தேடிக் காலலுத்தேன் பூரணமே. 47

தோன்று முயிர்க்குயிராய்த் தொந்தமதாய்ச் சிந்தையுற
வூன்றிநின்ற சித்தே யுணர்வேபரி பூரணமே. 48

வானாய் மலையாய் மறிகடலா யெவ்வுயிர்க்குங்
கோனாகி நின்றசிவக் கொழுந்தேபரி பூரணமே. 49

எல்லா முன்செயலே யெல்லா முனதருளே
யல்லாற் கதியுளதே லறைகுவாய் பூரணமே. 50

உளவறிந்து யாவுமீ யென்றுணர்ந்தா லென்னறிவைக்
களவுசெய்யு மஞ்ஞானங் கழன்றிடுங்காண் பூரணமே. 51

பந்த விருளைப் பரித்துவிட்ட வித்தகரே
சிந்தை தெளியும்வகை சேர்வர்காண் பூரணமே. 52

தனித்திருந்து தன்னைத் தானறிந்து கொண்டக்கால்
எனக்கொருகே டில்லையென வியல்பறிந்தேன் பூரணமே. 53

உள்ளுள்ளே நீயிருந்து ஒடுக்கியா சாண்டுமென்றன்
கள்ளமனந் துள்ளுவதேன் கண்மணிபரி பூரணமே. 54

மாக்கரிக் குள்ளேயோர் மானிட னிருந்தாட்டும்
வித்தை யறிகிலனென் செய்குவேன் பூரணமே. 55

தேருமோ வென்னெஞ்சந் திருக்கறுத்துக் கொண்டருளச்
சேருமோ சற்றே செப்பாய்பரி பூரணமே. 56

பொய்யைமெய் யென்றெண்ணிப் போதவழி யில்லாமல்
வய்யமதில் நாய்போல் வதிந்தலைந்தேன் பூரணமே. 57

கிளிஞ்சில்வெள் ளித்தோற்றங் கிளைத்திடும்பொய் புலகைக்
களங்கமறக் காணுங் கருத்தறியேன் பூரணமே. 58

வாதா டுஞ்சமய வழிகடந்த புண்ணியர்க்கு
யேதை யுவமைசொல்வே னெந்தையே பூரணமே. 69

நிற்கு நிலையே நிலையாகப் பெற்றவர்க்குத்
திர்க்கமில்லை யெங்கே தோன்றுங்காண் பூரணமே. 50

எப்பொருளும் நீயா யிருந்தசையக் கண்டவர்க்கு
ஒப்புவமை சொல்ல வொக்குமோ பூரணமே. 61

அய்யோஇவ் வடிமைதனக் காரிருந்து மென்னபலன்
உய்யும் நினதருளே யுதவிகாண் பூரணமே. 62

நம்பிக் கொலைசெய்யும் நாரியர்மை யற்சேற்றிற்
கம்பமது போலக் கலங்கினேன் பூரணமே. 63

எனைப்போ லொருபாவி யாருமுண்டோ வையகத்தில்
நினைக்கிலென் னுள்ளம் நடுங்குதுகாண் பூரணமே. 64

பொய்வேடந் தனைவிட்டுப் பொருள்பறிக்கக் கற்றதல்லாற்
செய்ய நினதருளின் செயலறியேன் பூரணமே. 65

சாத்திரத்தைக் கற்றுச் சந்தைதிரி நாயதுபோல்
வார்த்தை மிகப்பேசி வஞ்சித்தேன் பூரணமே. 66

மனதிலொன்றும் வாக்கிலொன்று மருவி யுரைத்துமென்றன்
நினைவிலொன்று மெண்ணி நிந்தைசெய்தேன் பூரணமே. 67

நம்பினவர்க் கன்பு நலம்பெறவே செய்யாமல்
வம்புசெறி தீங்கை வருவித்தேன் பூரணமே. 68

பட்டமது காற்றுற் பறந்தாடுஞ் சூத்திரத்தை
விட்டுவெறி நாயதுபோல் வீணானேன் பூரணமே. 69

நீட்ட நடுவணையின் நயமறிய மாட்டாமல்
பட்டப் பகலிராவாய்ப் பகர்ந்தழிந்தேன் பூரணமே. 70

பெண்ணு ணலியாய்ப் பிறந்திறந்து போயுமின்னம்
எண்ணுது மெண்ணி யிடர்புரிந்தேன் பூரணமே. 71

தேனிருக்கப் பாலிருக்கத் திரண்டதெள் ளமுதிருக்கக்
கானனீ ரையுண்ணக் கருதினேன் பூரணமே. 72

கய்யில்வெண்ணெய் தானிருக்குங் கணக்கறிந்தே யுண்ணாமல்
நெய்க்கலைந்து தேடி நிசம்விட்டேன் பூரணமே. 73

நூலேணி மேலேறி நட்பமதைக் காணாமல்
சாலப் பெருஞ்சிறையிற் றங்கினேன் பூரணமே. 74

எடுத்தஇம் மண்பாண்ட மிடியுமெனு மெய்யறிவால்
படைக்குமொரு பக்குவத்தைப் படைத்திலேன் பூரணமே. 75

கூடுபோ முன்னர்கதி குறித்திடுமெய் யன்பரொடு
பாடுபட்டார்க் கல்லோ பயன்தருவாய் பூரணமே. 76

இடிகரை யைநிசமென் றெண்ணியெண்ணி யிப்பாவி
தடித்தனங்கள் செய்தே தவித்தனன்காண் பூரணமே. 77

எத்தனையோ புத்தியெடுத் துரைத்து மென்மனது
பத்திநெறி நில்லாப் பாவமென்னே பூரணமே. 78

எள்ளளவு மெய்யன்பு இல்லாத பாவியெனக்
குள்ளந் தெளியவகை யுண்டோகாண் பூரணமே. 79

ஏவல் விலகல்முத லில்லையெனு நிலைக்கே
ஆவல்சற்று மில்லா தழிந்திட்டேன் பூரணமே. 80

இங்கிருக்க வென்னை யேன்பெற்றா யெந்தாயே
தங்குமுன தருளைத் தந்தருள்செய் பூரணமே. 81

ஆனாலு மென்னை யாள்வதனை யன்றியுண்டோ
தானே யிரங்கியருள் தந்தருள்செய் பூரணமே. 82

நீயே யிரங்கியெனை வந்தாண்டா லன்றியிந்த
தீயே னுனையடையுந் திறமுண்டோ பூரணமே. 83

சேய்புரியுங் குற்றச் செருக்கெல்லா மீன்றெடுத்த
தாய்பொறுக்க நீதி தருமேகாண் பூரணமே. 84

கன்றினுக்குச் சேதா கனிந்தருளு மாறதுபோல்
என்றனுக்கு நீயிருக்க என்னகுறை பூரணமே. 85

எல்லா முனதருளி னியல்பா யிருக்கவும்யான்
வல்லாண்மை பேச வாயுமுண்டோ பூரணமே. 86

இருவினையை வெட்டி யிவர்ந்துகரை காண்பதற்கு
அருமையுறு நின்னருளின் அன்பருள்செய் பூரணமே. 87

கூட்டமிடு தத்துவத்தின் குப்பையெல்லாங் கனல்கொளுத்தி
வாட்டந் தவிர்த்தருள்செய் வள்ளலே பூரணமே. 88

எனதுயா னென்னு மிடர்செய் மனமாயை
தனைக்கெடுக்க மெய்ஞ்ஞானந் தந்தருள்செய் பூரணமே. 89

வீட்டுக்குள் வைத்த விழுப்பொருளைக் காணாமல்
வாட்டமுற்றுத் தேடும் வகையென்னே பூரணமே. 90

உள்ளிலிருந் தன்பா யுலாவுஞ் சிவகுருவைக்
கள்ளமனத் தோர்காணக் கணக்குண்டோ பூரணமே. 91

பாட்டைப் படித்தும் பயனறியாப் பாமரற்கு
ஏட்டுச் சுரைகறிக்கு எய்துமோ பூரணமே. 92

இளமை தனிற்றுறவே யினிதாகு மென்றிரங்கிப்
பழமையுட னெனையாண்ட பாக்கியமே பூரணமே. 93

கயிற்றரவிற் கட்டையினிற் கள்ளனெனத் தோன்றுலகை
செயங்கொண்டு நிற்கவருட் டிரமருள்செய் பூரணமே. 94

என்னுடம்பு என்றன்மன மென்புத்தி யென்பவெல்லாம்
தன்னதல வேறென்னுஞ் சாக்ஷியருள் பூரணமே. 95

யாவு மருட்செயலா மன்றிவே றன்பரெலாம்
மேவுந்தீ நரகிற்கே வித்தென்றாய் பூரணமே. 96

எனதாவி யுட்பொருளாம் யாவையுநீ கைக்கொண்டு
உனதாவி யுட்பொருளை யுகந்தருள்செய் பூரணமே. 97

எட்டுத் திக்குமொன்றா யிருந்தாடுஞ் செஞ்சுடரே
கட்டிக் கரும்பேயென் கண்ணேபரி பூரணமே. 98

அன்பே யெனதறிவே யற்புதமே சிற்பரமே
யின்பவெளி யாகிநின்ற விறையேபரி பூரணமே. 99

கல்லா வறிஞன் கசட னெனக்குமொரு
சொல்லாற் சுகங்கொடுத்த துரையேபரி பூரணமே. 100

பாதகங்க ளேழும் பறந்தோட நன்மருந்து
ஈதென் றளித்தனையே யென்குருவே பூரணமே. 101

பிறவிநோய் தீர்க்கும் பெரியவொரு பண்டிதனைச்
சிறியேன்முன் வந்தாண்ட சிறப்பேபரி பூரணமே. 102

கடக்கவொண் ணாப்பிறவிக் கடலைக் கடக்கவென்னை
யடக்கி யடக்கி நன்றாய் ஆண்டவனே பூரணமே. 103

திடமாயை யெனுமிருளாஞ் சிறைதவிர்க்க மானிடனாய்
வடிவுகொடு வந்தாண்ட வருட்குருவே பூரணமே. 104

என்னையொன் றும்மறியா விளம்பருவத் தேபரிந்து
தன்னை யுணரவழி தந்தாயே பூரணமே. 105

உய்யும் வகைக்கான புட்பொருள்மெய்ஞ் ஞானமதைக்
கைக்கொண் டளித்தாயென் கர்த்தனே பூரணமே. 106

பித்தம் பிடித்த பேய்மனதைக் கொன்றுவிட்டுச்
சுத்தநிலை தந்தாயென் துரையேபரி பூரணமே. 107

கையார நின்கருணை காட்டியதற் கிவ்வடிமை
செய்யும் உதவியொன்றுந் தெரிந்திலேன் பூரணமே. 108

சுட்டுப்போ தங்கழன்ற சுத்த வருள்நிலையில்
வெட்டவெளி யாகிநின்ற வித்தேபரி பூரணமே. 109

தொல்லையறு நல்லறிஞர் சொல்லும் வழிநடந்தால்
எல்லையொளி தோன்றுமென்று மெந்தையே பூரணமே. 110

சாட்டையிற் பம்பரம்போற் றானேயிவ் வுலகமெல்லாம்
ஆட்டிவைக்கும் மெய்ஞ்ஞான வருட்கூத்தே பூரணமே. 111

பொங்குஞ் சிவஞான புண்ணியமே தேன்கடலே
பங்கமற வென்னையாண்ட பதியேபரி பூரணமே. 112

மாதா பிதாமுதலாய் மயக்கி மயக்கியென்னைக்
காதல்தரு பொய்வழியில் கடத்திவைத்தார் பூரணமே. 113

சிந்தையொரு சிந்தனையிற் சேர்ந்தசையா தின்புருவாய்ப்
புந்திதனி லொளியானாய் போதபரி பூரணமே. 114

தொல்லைவினைப் பெட்டகமாம் சோற்றுச் சுமையுடலாம்
அல்லலற்ற ஞானிகட்கு அருவருப்பாம் பூரணமே. 115

வருவதுவே வரும்வாரா வாராத வன்றறிஞர்
இருவினையுஞ் சமமாய்க்கண் டிருப்பவர்காண் பூரணமே. 116

என்பென்பாய்த் தேகமிளைத் திருக்குந் தேசிகரே
அன்புநிலை பெற்றாரென் றறிந்துகொண்டேன் பூரணமே. 117

முத்தர்களின் பொற்பதத்தை முனைந்தெடுத்து என்சிரமேல்
வைத்துத் தொழுதேத்தும் வழியறிந்தேன் பூரணமே. 118

கள்ள மனத்துறவைக் கடிந்தெல்லாந் துறந்து
உள்ளந் தெளியநின்றா ருனையறிவார் பூரணமே. 119

இப்பொழுதோ வின்னுஞ்சற் றே இரவிலெந் நேரத்தோ
செய்யாமற் சாகுமுடற் றிரமறியேன் பூரணமே. 120

ஆற்ற வுலகமுத லனைத்துநீ யாயிருந்தும்
தான்றனியாய் நின்ற தகைமையென்னே பூரணமே. 121

எங்கள் குடிக்காசே யிறையேயின் பக்கடலே
பொங்குஞ் சிவஞான புண்ணியமே பூரணமே. 122

வணங்குந் துறவோர் மனத்திலுறை மாவெளியே
இணங்குஞ் சுகாதீத யேகமே பூரணமே. 123

இகழ்வுதரு புறப்பற்று மிருசார் பகற்றிநின்றால்
அகப்பற்று னதுதானே யறுமென்றாய் பூரணமே. 124

பேசப் படாத பேரின்ப மாம்பொருளி
லாசையுற் றழுமவரே யருள்பெறுவார் பூரணமே. 125

தில்லைக் கனியே தேடரிய வாரமுதே
எல்லைக் கனியே யிறையேபரி பூரணமே. 126

நானுமுன் னடிமையெனும் நற்பெருமை பெறுவேனே
தானே யிரங்கியுளர் சாற்றுவாய் பூரணமே. 127

பெரியோ ரெவரும் புகழ்ந்தேத்து முன்னடிக்கே
சிறியேன் மதலைச்சொல் சிறக்குமோ பூரணமே. 128

நன்றுசெய் தாயெந்தாய் நாலஞ்சாம் பருவமதில்
என்னையுன் பொன்னடிக்கீ ழிருத்தினாய் பூரணமே. 129

உடல்பொரு ளாவியெனு மூன்றுமொன்றாய் நின்றிலங்கும்
நடுநிலையே மெய்யின்ப நாயகமே பூரணமே. 130

மதபேத மோதுகின்ற மட்டிகளுக் கேதுமோர்
இதம்பெருக ஞாயமுண்டோ எந்தையே பூரணமே. 131

நான்கண்டே னான்செய்வே னானறிவே னெண்ணாமல்
தானற்ற மெய்ந்நிலையைச் சார்வதென்றோ பூரணமே. 132

திருட்டு மனமாயைத் திருக்கறுத்துக் கொண்டாக்கால்
அருட்குரு வைக்காண லாகுமென்றாய் பூரணமே 133

நாசச் சரீரத்தின் நட்பையற வேவிடுத்த
தேசிகர்க ளன்றோ ஜெயம்பெறுவார் பூரணமே. 134

வஞ்சியெனு மெண்சாண் வாதனைசெய் புன்குரம்பை
நஞ்செனவே கண்டால் நலம்பெறுவேன் பூரணமே. 135

தோற்றமுத லைந்துடனும் தோயாமல் நிற்பதுவே
ஏற்றதொரு மெய்த்துறவி னியல்பென்றாய் பூரணமே. 136

நாடு மிருவினையை நழுவவிட்ட தேசிகரே
பாடு மறைப்பொருளைப் பரிந்துணர்வார் பூரணமே. 137

அனைத்துமீ யானவகை யறிந்துகொண்ட மேலவர்க்கு
நினைப்பு மறைப்புமெங்கே நிகழுங்காண் பூரணமே. 138

கண்டபொரு ளத்தனையும் நின்னருளாய்க் காண்பவர்க்கு
விண்ட பகையுறவும் விளங்குமோ பூரணமே. 139

துறவா யவாவறுத்த தூயதவப் புண்ணியர்க்கு
இரவும் பகலுமில்லை யென்றுரைத்தாய் பூரணமே. 140

நித்திரையிற் செத்துவிடும் நிந்தனைசெய் யிந்தவுடற்
கெத்தனைதான் றுன்ப மியற்றினாய் பூரணமே. 141

கூட்டிற் குரங்காகிக் கூத்தாடும் பேய்மனதை
ஆட்டி யடக்கிவிட லாகுமோ பூரணமே. 142

உடல்பொரு ளாவிமுத லுன்னதென்றே யீந்தவர்க்கு
மடமைதரு மஞ்ஞான மருவுமோ பூரணமே 143

இட்டமுட னென்றலையி லின்னபடி யென்றெழுதுங்
கட்டளையை வெட்டிவிட்டாய் கண்மணியே பூரணமே. 144

ஐம்புலனைம்பொறிக ளான கரணமுதல்
வெந்து தணியவென்னை வெளியில்விட்டாய் பூரணமே. 145

கொல்லா விரதங் குவலயத்தோ ரெல்லோர்க்கும்
புல்ல வெனக்கும்வகு பூதிகாண் பூரணமே. 146

ஆளாயோ வய்யா வடிமை புலம்புதலைக்
கேளாயோ ஞானக் கிளரொளியே பூரணமே. 147

வாழ்த்துவார் வாழ்த்தும் வாழ்வுக் குரியவுன்னைத்
தாழ்ந்தசிறி யேன்வாழ்த்தத் தகுமோகாண் பூரணமே. 148

கண்ணே கருத்தே கதிர்க்கான சின்மயமே
தண்மதியே மெய்ஞ்ஞானத் தாயகமே பூரணமே. 149

முக்கட் சுடரொளியே முத்திதருஞ் சித்துருவே
தக்கவன்பர் கட்குதவு தாயேயரி பூரணமே. 150

எள்ளளவு மென்றன்மன மிணங்கவில்லை யையாவென்
கள்ளவிருள் போவதென்றோ கண்மணியே பூரணமே. 151

வேர்க்கச் சிலிர்க்க விளகி மனமுருகப்
பார்க்க வென்னுள்ளே பார்த்திலேன் பூரணமே. 152

சோற்று லெடுத்த சுமையை யிடிகரையை
மாற்ற வெனக்குமொரு மருந்தருள்செய் பூரணமே. 153

புண்ணுளர் போலப் புலம்பியே யுள்ளுருகிக்
கண்ணீர் ததும்பவென்னுள் கண்டிலேன் பூரணமே. 154

பொன்னிலொளி போலவெங்கும் பொருந்திநின்ற நின்னருளை
யென்னுளுறக் காண்பதெப்போ தியம்புவாய் பூரணமே. 155

பத்துத்திக்கு மொன்றாய்ப் பரவும் பரஞ்சுடரை
வைத்து என்னுள்ளே வணங்குவேன் பூரணமே. 156

பொய்ப்பிடித் தாரெல்லாம் புறத்திருக்க யான்போகக்
கைப்பிடித்துக் கொண்டாயென் கதியேயரி பூரணமே. 157

நானென்ன தென்பவெல்லாம் நன்றாய் விடுத்தவரும்
கானனீ ரையுண்ணக் கருதுவரோ பூரணமே. 158
வன்னப்பட் டும்மணமும் வஞ்சனைசெய் வஞ்சியரும்
கன்ன மிடுமேமன் கைவலைகாண் பூரணமே. 159
அளவிடுதற் கொண்ணு அருள்வெளியாய் நின்றவுன்னைத்
தெளிந்தவர்க ளுண்டேல் செப்புவாய் பூரணமே. 160
அருள்வெளியாய் நின்ற வடியறிந்து கொண்டபின்னும்
திருட்டுக் கருவியிங்குத் திரிவதென்னே பூரணமே. 161
மெத்தவே தாந்தம் மேன்மையதாய்க் கற்றிருந்தும
சித்தந் தெளிகிலையென் செய்குவேன் பூரணமே. 162
பகலிரவு மற்ற பரவெளியி லேயிருக்கச்
சகமுகத்தோர் யார்க்கும் தகுமோகாண் பூரணமே. 163
பொன்னாசை கொண்டு பொருந்திப் பலநாளும்
என்ன பலன்கண்டே னேதுமில்லை பூரணமே. 164
எத்தால் பிழைக்க வெண்ணியே யிவ்வடிமை
செத்திறந்து போகச் செய்வையோ பூரணமே. 165
உண்டுறங்கிப் பூண்டு உலாவுவது மாகிநின்ற
தொண்டருக்குக் காண்பவெல்லாம் சொர்ப்பனங்காண் பூரணமே.
பெற்றவர்கள் பெற்ற பெரும்பேறே பேரொளியே
வற்று வருட்கடலே வானமுதே பூரணமே. 167
சத்துவ மேயுருவாய்த் தங்கிநின்ற மெய்யடியார்க்
கெத்திர முஞ்சொல்ல வியலுமோ பூரணமே. 168
காண்பவெல்லாங் கனவாய்க் கண்டுகொண்டா வென்னறிவில்
வீண்படுகே வலசகலம் விளங்குமோ பூரணமே. 169
அறிஞ்ஞ ரிடுஞ்செருப்பா லடித்தாலு மெனக்கறிவு
வருகுமென்று நம்ப வழியிலைகாண் பூரணமே. 170
ஐயோநா னென்செய்வே னனைத்துங் கனவெனவே
கையுமெய் யும்மாகக் கண்டிலேன் பூரணமே. 171
பட்டிநாய் போலப் பருகிருசி கொண்டுநின்று
வெட்டித் தனம்பேசி வீணானேன் பூரணமே. 172
விரும்புமு வாசைதனை வெட்டிவெளி யேறாமல்
கரும்புதின்ன வுங்கூலி கருதினேன் பூரணமே. 173

மானாபி மான மடமைதனைப் போக்காமல்
தானே யழிந்துவிடத் தலைப்பட்டேன் பூரணமே. 174
தாயென்று பெண்ணைத் தக்கபடி யெண்ணாமல்
நாய்போலப் பேதமெண்ணி நாசமுற்றேன் பூரணமே. 175
பிரபஞ்ச வுறவைவிட்டுப் பிரிந்துநின்ற அன்பரொடு
விரவித் தினபலையும் விதமறியேன் பூரணமே. 176
நல்லா ருறவுங் கவிலவொணா ஞானமுமே
யல்லாமல் மற்றெவைவு மழியுங்காண் பூரணமே. 177
உன்னி யிவ்வுலகி னுழன்றுழன்று கேடுகெட்டும்
இன்னம்புத்தி வரவில்லையே யென்செய்வேன் பூரணமே. 178
சந்ததமும் வேதாந்தத் தன்மையை யுணர்ந்துமின்னம்
புந்தி மயக்கம் போகவில்லையே பூரணமே. 179
என்செய்வே னேழைக் கிரங்கி யுனதருளை
நன்மையுடன் தந்தால் நான்பிழைப்பேன் பூரணமே. 180
பந்தவுடற் சாகுமுன்னே பரமார்த்த மாம்பொருளைத்
தந்தருள்செய் யென்னையீன்ற தாயேபரி பூரணமே. 181
பெற்றா ளிருக்கப் பிள்ளைக்குண் டோகேடு
சற்றே மனமிரங்காய் தாயேபரி பூரணமே 182
உன்னை மறந்தா லுயிர்பிழைக்கே னையடியேன்
என்னையென்னா[illegible]வைத்தாள் எந்தையே பூரணமே. 183
மோசநமன் வந்து முடுகிப் பிடிக்குமுன்னே
பாச மறுக்கவருட் பண்பருள்செய் பூரணமே. 184
தன்னை மறந்து சாகுநின்ற பேய்மனதுக்
கென்ன மருந்தையிட்டா விதுபிழைக்கும் பூரணமே. 185
ஐம்புலனுக் கென்னை யாளாக்கி டாதருள்செய்
கம்பமற்ற பாற்கடலே கண்ணேபரி பூரணமே. 186
போதப் பரவொளியே பொங்குகரு ணைக்கடலே
நாத வொளியேயென் னையகமே பூரணமே. 187
நாலாம் பதிக்கரசே நண்ணரிய செம்பொருளே
மூல மணிவிளக்கே மோனமே பூரணமே. 188
நஞ்சுண்ட கண்டா நாயடியே னென்றனையும்
அஞ்சலஞ் சேலென்றே யாண்டவனே பூரணமே, 189

தீது நலமறியாச் சிறியேன் றனையுனது
பாதத்துக் கடிமைகொண்ட பண்பென்னே பூரணமே. 190
எனக்கு முனதுபத மெய்துமோ வென்றெண்ணி
மனக்கவலை யாய்வெகுநாள் மயங்கினேன் பூரணமே. 191
ஆரிருந்து மென்ன வார்போயு மென்னவுனைப்
பூரித்துக் கண்டுகொண்டேன் புண்ணியமே பூரணமே. 192
உண்ணவுண் ணத்தெவிட்டா துள்ளூறிறைந்த இன்னமுதைத்
தின்னருசி கண்டுகொண்டேன் தேரினேன் பூரணமே. 193
ஆண்டோ னளித்த வருளமுத முண்டிருக்கத்
தாண்டிநமன் கிட்டிவரத் தகுமோகாண் பூரணமே. 194
நித்தமென் னுள்ளம் நெக்குருகி வேசறவுச்
சித்தம்வெளி யாய்த்தெளியச் செய்தனையே பூரணமே. 195
வீணாவல் கொண்டு வெளிமுகமாய்ச் சாகாமல்
காணா ததைக்கண்டு கதிபெற்றேன் பூரணமே. 196
ஓடினேன் பாடினேன் ஓயாக் கவலையினால்
வாடினேன் மெய்ஞ்ஞான வழியறிந்தேன் பூரணமே. 197
அவனன்றி யோரணுவும் அசையா தெனும்நெறியைத்
தவமென்று என்சிரமேற் றரித்திட்டேன் பூரணமே. 198
பத்துமொரு பத்தாம் பருவமதி லென்றனுக்கு
அத்துவிதஞ் சொல்லவந்த வடிவென்பே... பூரணமே. 199
சிறுபருவத் தென்னை ஜெயங்கொண்ட வருளாசான்
வருகவென்ன என்புண்ணியமோ வறிந்திலேன் பூரணமே. 200
முந்தைசெய் புண்ணியத்தின் முடிவோ வலதுனது
தந்திரமோ யானறியேன் தாயேபரி பூரணமே. 201
அற்பனெனையும் ஆள்வையோ வென்றிருந்தேன்
நற்பருவங் காணுமுன் நயமளித்தாய் பூரணமே. 202
ஏதையுவமைசொல்வேன் என்னவென்று யானுரைப்பேன்
போதவெனையாண்ட புண்ணியமே பூரணமே. 203
ஒருசமயத் தன்றிமற் றோர்சமயந் தன்னில்
குருவாகி வந்தாண்ட கொள்கையென்னே பூரணமே. 204
ஒன்றாய்ப் பலவா யுயிர்க்குயிரா யுள்ளுணர்வாய்
நின்றாடும் நித்தியமே நிர்க்குணமே பூரணமே. 205

வாட்ட மகன்ற வருள்ஞானி யாருலகின்
நாட்ட மகன்றிருக்க ஞாயமென்னே பூரணமே. 206

தன்னை யறிந்தார் தனக்கு விருந்தாடும்
உன்னையறி யுந்தாமு முண்டென்றாய் பூரணமே. 207

உள்ள துரியமெல்லா முன்றன்வச மாக்கியென்னைக்
கள்ளமில்லா வெளியில்விட்ட காரணமென் பூரணமே. 208

மெத்த விகாரம் விளைக்கும் வினைகளெல்லாம்
சத்துவத்தில் நின்றால் சாகுமென்றாய் பூரணமே. 209

உடல்பொறிக ளுட்கரணத் தோடு குணமுதலாய்
விடவிடவே நடுநிலையின் வீடென்றாய் பூரணமே. 210

வஞ்ச விருளை யகற்றியெக் காலுமென்றன்
நெஞ்சிற் குடிகொண்டாய் நித்தியமே பூரணமே. 211

வேக மடக்கி வெறும்வெளியி லேகிநின்று
சோக மடக்கிச் சுகங்கண்டேன் பூரணமே. 212

சடத்தைமித்தை யென்றறிந்த தக்கசிவ ஞானிகளின்
நடத்தைபித்தர் பேயரென நாட்டினாய் பூரணமே. 213

பாச மொழிந்து பதியறிவைக் கூடுதற்கு
வாச[illegible]கட்கு வருமோபரி பூரணமே. 214

என்னதான் [illegible]ற்றிருந்து மிதயந்தெளி யாமூடர்க்
குன்னையறி [illegible]ம முண்டோகாண் பூரணமே. 215

தத்துவமுந் [illegible]முந் தாக்கா திருந்துகொண்டாற்
சுத்தநிலை யாகுமென்றாய் சோதியே பூரணமே. 216

உளந்தெளிந்த படியிருந்தால் உலகம் இலை[illegible]
களங்கமற்ற சொல்லே கதியாகும் பூரணமே. 217

நானில்லை நீயெனவே நாட்டமுற் றிருக்காமல்
ஆணவ மும்மலத்தா லழிந்திட்டேன் பூரணமே. 218

தன்னை யறிந்துகொண்டால் தனக்கொருகே டில்லையெனச்
சொன்னசொல்லின் மார்க்கஞ் சுகமென்றாய் பூரணமே. 219

ஆயு மறைப்பொருளை யாராய்ந்த மாதவர்க்குப்
பேயுமா னந்தமழைப் பெருக்கேபரி பூரணமே. 220

பல்கோடி யண்டமெல்லாம் பரிந்துதன்னுள் பார்த்திருக்க
வல்லவர்க்கு வாய்க்கும் அருட்சுகமே பூரணமே. 221

படிக்கும் படிநடந்து பாக்கியத்தைப் பெற்றவர்க்குள்
நடிக்கும்பர மாநந்த நாடகமே பூரணமே. 222

மண்ணாதி பூதத்தும் வாக்கு மனமுதலா
எண்ணார் பொருளெங்கும் ஏபொளியே பூரணமே. 223

முத்திக்கு வித்தாய் முளைத்த செழுஞ்சுடரே
சித்தமிசை குடிகொண்ட சிவமேபரி பூரணமே. 224

பாரா விருளைப் பறித்துவிட்ட சற்குருவே
தாரா வருள்தந்த தந்தையே பூரணமே. 225

நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுவில்நட மாடுகின்ற
எல்லையற்ற சுடரேபே ரின்பமே பூரணமே. 226

வன்பனே னென்றனையும் வலியவந் தணைத்தாண்ட
இன்ப வுறவே யிறையேபரி பூரணமே. 227

வாக்கு மனாதீத மாமவுன மாவெளியே
நோக்காது நோக்கிநின்ற நுண்ணறிவே பூரணமே. 228

தேராத வென்சிந்தை தெளியத் தெளியவெனக்
காரா வமுதே அன்பேபரி பூரணமே. 229

நான்மறை யின்முடிவே நானென தற்றவர்க்குள்
தானே யிருந்துதவும் தயவேபரி பூரணமே. 230

எந்த முயிர்த்துணையே யிறைவனே யுன்பாதம்
சந்ததமும் வாழிகாண் தற்பரமே பூரணமே. 231

முத்தர்களும் வாழி முமுட்சுக் களும்வாழி
சித்தர்களும் வாழிபரா சிவமேபரி பூரணமே. 232

செய்ய மறையோடு தேவர்மற்றெல் லாம்வாழி
துய்யநிலை யும்வாழி சோதியே பூரணமே. 233

அருள்வடிவம் வாழி யருமையுட னெனையாண்ட
குருவடிகள் வாழிகுணக் குன்றேபரி பூரணமே. 234

சிவஞானம் வாழி சிவனடியா ரும்வாழி
தவநிலையும் வாழிபருட் டாயேபரி பூரணமே. 235

பூரணமணி மாலைக் கண்ணி
முற்றிற்று.